# 1. கேள்விகளே சாவிகள்!

**வா**ழ்க்கை என்பது ஒரு சூதாட்டம் என்றே பலர் கருதுகிறார்கள். இதன் வெற்றி, தோல்விகள் அதிருஷ்டத்தின் மூலமாகவே நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் நிறைய பேர் நினைக்கிறார்கள். வாழ்க்கையின் வெற்றி, தோல்விகள் தேர்தல் முடிவுகள் போல் குழப்பமானவை அல்ல. தேர்வின் முடிவுபோல் தீர்க்கமானவை.

வாழ்க்கையில் வெற்றிபெற நினைப்பவர்களுக்கு என் நல்வாழ்த்துகள். உங்களுக்கு நன்மை உண்டாகட்டும். உங்களால் வீடும் நாடும் விரிந்த உலகமும் நன்மை பெறட்டும். வெற்றிக்கு வழி என்ன? வெற்றி உலகின் மொழி என்ன? சொல்கிறேன்.

என்னிடத்தில் உதவிகள் கேட்டுச் சில இளைஞர்கள் வருவதுண்டு. அதில் அதிகமான பேர் வேலை வாங்கித் தரும்படித்தான் கேட்பார்கள். ‘‘என்ன வேலை?’’ என்றால், ‘‘ஏதாவது வேலை’’ என்பார்கள். வருத்தப்படாதீர்கள். இவர்கள் வெற்றி பெறுவது கடினம். என்ன வேலை என்கிற தெளிவு இல்லாமல் ஏதாவது ஒரு வேலை என்றால் நான் அவருக்கு எந்த வேலைக்கு முயற்சி செய்வது? என்னுடைய வேலையைத்தான் அவருக்குத் தரமுடியும்!

இது மிக முக்கியமான விஷயம். எதை அடைய வேண்டும் என்கிற தெளிவு உங்களுக்கு இருந்தால்தான் அதை நீங்கள் அடைய முடியும். அடைய வேண்டியது எது என்கிற முடிவே இல்லை என்றால் எதை அடைய முடியும்? நமக்கு எது வேண்டும் என்கிற தெளிவு இருந்தால்தான் அது கிடைக்கும். கிடைத்தாலும் ருசிக்கும். இல்லையென்றால் கிடைக்காது. கிடைத்தாலும் ருசிக்காது. காரணம், கிடைத்ததே தெரியாது.

ஹோட்டலில்கூட பல பேர் என்ன சாப்பிடுவது என்ற தெளிவேயின்றி மெனுகார்டை, பட்சணப் பட்டியலை வெறித்து வெறித்துப் பார்ப்பார்கள். எதையும் முடிவு செய்யமாட்டார்கள். இந்தக் குழப்பவாதிகள் முறையாக வெற்றிக் கனியைப் பறிப்பது கடினம். எனவே, வாழ்க்கையில் உங்களுக்கு என்ன வேண்டும் என்கிற தெளிவு கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? இனி அடைய வேண்டிய நிலை என்ன? அதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் எவை? எவை என்கிற விழிப்பு நம்முள் தோன்றிவிட்டால் நமக்கு வெற்றி நிச்சயம். எங்கே இருக்கிறோம்? எங்கே போகவேண்டும்? எப்படிப் போகப் போகிறோம் என்கிற தெளிவு பிறந்துவிட்டால் வெற்றி நிச்சயம்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் புகழுடன் விளங்கியவர் ஜான் எஃப். கென்னடி. அவர் வெள்ளை மாளிகையில் தம்மைக் காண வந்திருக்கும் பார்வையாளர்களுடன் நாள்தோறும் சில நிமிடங்கள் செலவிடுவார். தம்மைப் பார்க்க வந்திருந்த இளைஞர்கள், பள்ளி மாணவர்களுடன் சிறிது நேரம் பேசுவார். பார்வையாளர்களில் பளிச்சென்ற புன்னகையுடன் இருந்த மாணவன் கன்னத்தைத் தட்டி, ‘‘உன் எதிர்கால லட்சியம் என்ன?’’ என்றார் கென்னடி. பளீரென்று பதில் சொன்னான் அந்த மாணவன். ‘‘இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும். இதுதான் என் லட்சியம்’’ என்றான். விழிகளை உயர்த்திவிட்டு, ‘‘குட்’’ என்று வாழ்த்திவிட்டு கென்னடி நகர்ந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஆவதுதான் லட்சியம் என்ற அந்தச் சிறுவன் பிற்காலத்தில் அப்படியே ஆனான். அவன் வேறு யாருமல்ல... புகழ் பெற்ற பில் கிளிண்டன். அவர் எண்ணம் வெறும் ஆசையோ, கற்பனையோ அல்ல. தீர்க்கமான தீர்மானம். அதனால் அது நடந்துவிட்டது. எல்லோருக்கும் இப்படி நடக்குமா? இப்படி நடக்கிறதா என்று என்னை ஏளனமாகப் பார்க்கும் மூடர்களுக்கு ஒன்று சொல்கிறேன். நம்பிக்கைகள் நடக்காமல் போகும் பட்டியலில் நம் பெயர் ஏன் இருக்கவேண்டும்? பலித்தவர் பட்டியலில் நம் பெயர் இருக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாதா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

இந்த இளைஞனைப் பற்றிச் சொன்னேன். நான் சந்தித்த வேறு ஒரு இளைஞனைப் பற்றிச் சொல்லவா? செழிப்பாக விளைந்திருந்தான் அந்த இளைஞன். ஒரு கூட்டத்தில் என்னிடத்தில் சம்பந்தமில்லாமல் அபத்தமாகக் கேள்விகள் கேட்டான். பொறுமையாக, ‘‘தம்பி... என்ன பண்றீங்க?’’என்று நான் கேட்டேன். ‘‘அப்பாவுக்கு உதவி ஒத்தாசையாக இருக்கிறேன்’’ என்றான். இந்த நூற்றாண்டில் இப்படி ஓர் இளைஞனா என்ற இன்ப அதிர்ச்சியுடன், ‘‘அப்பா என்ன பண்றார்?’’ என்றேன். ‘‘சும்மா வீட்ல இருக்கார்’’ என்று

வெடிகுண்டு வீசினான் அந்த இளைஞன். தான் காலத்தை வீணாக்குகிறோம் என்ற குற்ற உணர்வே இல்லாத இவன் எப்படி முன்னேற முடியும்?

இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? நம் குடும்பத்தின் நிலை என்ன? நாம் வளர, முன்னேற என்ன செய்யலாம் என்கிற சின்னச் சின்னக் கேள்விகள் உங்களுக்குள் பிறந்துவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக விடைகள் கிடைக்கத் தொடங்கும். ஒன்றை மறந்துவிடாதீர்கள். எவ்வளவு பெரிய கதவுக்கும் தாழ்ப்பாள் சின்னதுதான். பூட்டோ அதை விடச் சின்னது. சாவியோ... பூட்டை விடச் சின்னது. சின்னச் சாவியால் பூட்டைத் திறக்கலாம். பூட்டைத் திறந்தால் தாழ்ப்பாளைத் திறக்கலாம். தாழ்ப்பாளைத் திறந்தால் பெரிய பெரிய கதவுகளையே சுலபமாகத் திறக்கலாம். எனவே சின்னச் சின்னக் கேள்விகள், பெரிய பெரிய கோட்டை வாயில்களைத் திறக்கப் போகும் சாவிகள். இதை நீங்கள் உணர்ந்தால் வெற்றி நிச்சயம்

## 2. ஏழ்மை வெட்கத்திற்குரியது அல்ல!

இந்தியா முழுவதும் இப்போது ஜகஜ்ஜோதியாய் நடப்பது கல்வி வியாபாரம். தனியார் சுய நிதிக் கல்லூரிகள் வந்த பின் மருத்துவம், பொறியியல் படிப்பவர்கள் எண்ணிக்கை பல மடங்காக ஆகிவிட்டது. இதில் பயிலும் எல்லோருமே கல்வி நோக்கோடு படிப்பில் அதிக அக்கறையுடன் படிப்பவர்களா என்பது சந்தேகம்.

நாளை கல்யாணச் சந்தையில் தன் மகளை நல்ல விலைக்கு விற்க விரும்பும் பேராசைக்காகப் பெற்றோர்கள், பணத்துக்குப் பஞ்சமில்லாத பணக்காரப் பெற்றோர்கள் கட்டாயப்படுத்தித் தங்கள் பிள்ளைகளைக் கொண்டு வந்து இந்தத் தொழுவத்தில் கட்டி விடுகிறார்கள்.

முன்பு அரசினர் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகள் நான்கைந்து மட்டுமே இருந்தபோது படிப்பார்வம் மிக்க மாணவர்கள் மட்டுமே மருத்துவம், பொறியியல் சேர முடிந்தது. இப்போது அப்படி இல்லை.

படாதபாடுபட்டுப் பணம் கட்டும் ஏழை, நடுத்தரக் குடும்பத்துப் பிள்ளைகளுக்கு இங்கே ஒரு புதிய சிக்கல் காத்திருக்கிறது. பணக்கார வீட்டுப் பிள்ளைகளும்

அதிகமாக இங்கே படிப்பதால் பொருளாதார இடைவெளி பூதாகரமாகத் தெரிகிறது. தினந்தோறும் ஒரு புதிய சுடிதாரில் வரும் பணக்கார மாணவிக்கும் வருடம் முழுமைக்கும் ஆறு சுடிதார் கூட இல்லாத ஏழை மாணவிகளுக்கும் பளிச்சென்று வித்தியாசம் தெரிகிறது. பைக்கிலும் காரிலும் வரும் பணக்கார இளைஞனுக்கும் பஸ்ஸிலும் ரயிலிலும் வரும் ஏழை இளைஞனுக்கும் இடைவெளி கூடிவிட்டது.

சத்தில்லாத கோக்கும் பெப்ஸியும் குடித்துக் கல்லூரியைக் கலக்கும் பணக்காரப் பிள்ளைகளுடன் நடுத்தர ஏழைக் குடும்பத்து இளைஞர்கள் ஈடு கொடுக்க முடியாத தாழ்வு மனப்பான்மை தலை எடுக்கிறது.

எவ்வளவு கெட்டாலும் தாங்கிப் பிடிக்கும் பணவசதி உடைய பிள்ளைகளைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நடுத்தர ஏழை வீட்டு மாணவ-மாணவியர் தாழ்வு மனப்பான்மை கொள்வது தடுக்கப்பட வேண்டும். விதம்விதமாக அவர்களைப் போல் உடை உடுத்த முடியவில்லையே என்று வருந்த வேண்டாம். நாம் படிக்க வந்தோமா? நடிக்க வந்தோமா என்று முடிவு செய்யுங்கள்.

காசைக் கொட்டி காண்டீனைக் கபளீகரம் செய்ய அவர்கள் போல் முடியவில்லையே என்று அழாதீர்கள். செலவு செய்யும் அவர்கள் பெற்றோருக்கு மோசமான பிள்ளைகள். நீங்கள் வருங்கால உங்கள் பிள்ளைகளுக்கு உயர்வான பெற்றோர்கள். புரிந்து கொள்ளுங்கள்.

பணக்காரப் பிள்ளைகளின் பெப்ஸியும் கோக்கும் பலரது ரத்தம். ஏழைப் பிள்ளைகளின் கல்லூரிக் கட்டணமே பெற்றோரின் ரத்தம்.

பணத்தை வீசியெறியும் ஒருவன் பின்னால் பத்துப் பேர் நிற்கிறார்களே என்று கூச்சப்படாதீர்கள். படிப்பில் கெட்டிக்காரராய் உங்களை நிரூபித்தால் அதே பத்து பேர் உங்கள் பின்னால் சந்தேகம் கேட்டு வருவார்கள். பணக்காரப் பிள்ளைகள் மகாலட்சுமியால் பலரை ஆளுகிறார்கள். ஏழைப் பிள்ளைகள் சரசுவதியால் பலரை ஆளட்டுமே!

இந்தத் தெளிவு பிறந்தால் வெற்றி நிச்சயம்.

ராமேஸ்வரத்தில் வீடு வீடாகப் பேப்பர் போட்டுக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். இன்று பேப்பர் பேப்பராக அவன் படத்தைப் போட்டுப் பெருமைப்படுத்துகிறது. அந்த உலகப் புகழ் பெற்ற சிறுவன் யார் தெரியுமா? பாரதப் பிரதமரின் அணு விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் அப்துல் கலாம்.

எனவே ஏழ்மை குறித்து எப்போதும் வெட்கப்படாதீர்கள். அது குறித்து அவமானப் பட வேண்டியது அரசும், சமூகமுமே.

வயலில் வேலை பார்த்தபடியே மண் வெட்டியில் கரித்துண்டால் எழுதி, எழுதிப் படித்த ஒருவன் பின்னாளில் அமெரிக்காவின் தலையெழுத்தையே மாற்றி எழுதினான் தெரியுமா? அவர்தான் ஆபிரஹாம் லிங்கன். ஆபிரஹாம் லிங்கனின் தாடியைப் பற்றித் தெரிந்தால் போதாது. அவர் தன்னம்பிக்கையைப் பற்றித் தெரிய வேண்டாமா?

ஆபிரஹாம் லிங்கனின் தந்தை ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி. ஆனால் தமது உழைப்பாலும் முயற்சியாலும் அமெரிக்க ஜனாதிபதியானார் லிங்கன். அவரை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் ஒருவர் பேசினார்...

''மிஸ்டர் லிங்கன், உங்களைப் பல பேர் இங்கே பாராட்டிப் பேசினார்கள். அது குறித்து நீங்கள் மகிந்துவிட வேண்டாம். உங்கள் பழமை, வறுமை குறித்து நான் நினைவூட்டவேண்டும். உங்கள் அப்பா தைத்துக் கொடுத்த ஷூ இன்னும் என் காலில் இருக்கிறது. ஞாபகம் இருக்கட்டும்'' என்று லிங்கன் தந்தை செருப்புத் தைப்பவர் என்று குத்திக் காட்டினார் ஒருவர்.

ஆப்ரஹாம் லிங்கனோ பதட்டப்படாமல் எழுந்து, ''நண்பரே, என் தந்தை மறைந்து பலகாலம் ஆயிற்று. ஆனால் அவர் தைத்துக் கொடுத்த ஷூ இன்னும் உங்களிடம் உழைக்கிறது என்றால் அவர் எவ்வளவு தேர்ந்த, சிறந்த தொழிலாளி என்பது தெரிகிறது அல்லவா? அப்படி ஒரு சிறந்த தொழிலாளியின் மகனாகப் பிறந்தது குறித்து நான் பெருமை அடைகிறேன். அது மட்டுமல்ல. இப்போது உம் ஷூ கிழிந்து போனாலும் என்னிடம் கொடுங்கள். நான் அதைச் சரி செய்து தைத்துத் தருவேன். அந்தத் தொழிலையும் நான் நன்கு அறிவேன். எனக்குச் செருப்புத் தைக்கவும் தெரியும். நாடாளவும் தெரியும். ஒரு முக்கியமான விஷயம், இரண்டுமே நன்றாகத் தெரியும்'' என்று ஒரு போடு போட்டார்.

ஏழ்மையோ வறுமையோ வெட்கத்திற்குரியது அல்ல. தாழ்வு மனப்பான்மையைத் தூரம் தள்ளினால் வெற்றி நிச்சயம்.

## 3. உங்களுக்குள்ளே ஒரு கொலம்பஸ்!

**அ**வன் ஒரு உறுதியான இளைஞன். நிறைய சாதிக்க வேண்டும் என்கிற வெறி அவனுள் இருந்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவன் அப்பா சாதாரணமான நெசவாளி. ஒரு சராசரி அப்பாவின் மனநிலையில் ஆடைகளை நெய்யும் தனது தொழிலில், தன் மகனையும் சிக்க வைக்க அவர் தீர்மானித்தார். அவனும் சிக்கிக் கொண்டான். ஆனால் அவன் கைகள் ஆடைகளை நெசவு செய்தபோதும் மனமோ கனவுகளை நெசவு செய்தது!

என்றாவது, எப்படியாவது, எதையாவது சாதிக்கப் போவதாகக் கற்பனையாக, திசை தெரியாது பேசித் திரியும் வெற்று இளைஞனாக அவன் இல்லை. அவனது எண்ணம் தெளிவாக இருந்தது. தீர்க்கமான திட்டம் தயாராக இருந்தது. கடல் மார்க்கமாக இந்தியாவை அடைய வேண்டும் என்ற கற்பனை, கடலைவிடப் பெரிதாக அவன் வசம் இருந்தது.

ஆம்... அவனது பூமியில் இருந்து கிழக்குத் திசையில் இருக்கும் இந்தியாவுக்குத் தரை மார்க்கம் தவிர, கடல் மார்க்கம் கண்டுபிடிக்கும் வெறி ‘கப்பல்’ கப்பலாக அவனிடம் குவிந்திருந்தது. அந்த இளைஞன்தான் கிறிஸ்டோபர் கொலம்பஸ்.

உலகம் கடலுக்குள் மீனையும் முத்தையும் தேடியபோது புதிய நாட்டையே தேடும் எண்ணம் அந்த இளைஞனுக்கு இருந்தது. உதவத்தான் ஒருவரும் இல்லை! அவனோ அசரவில்லை!

பல நாட்டு அரசர்களை நாடி உதவி கேட்டும், கப்பலும், கப்பல் கப்பலாக உணவும், இதர பொருளும், கப்பலைச் செலுத்தும் மனிதர்களையும் கொடுக்க எந்த அரசும் துணியவில்லை. அந்தத் தோல்விக்கு அவனது மனமோ பணியவில்லை. பத்து வருடக் காலம் தொடர்ந்து போராடிய பின் ஸ்பெயின் நாட்டு அரசி இஸபெல்லாவுக்குக் கொலம்பஸ் மீது நம்பிக்கை பிறந்தது. மூன்று கப்பல்களையும், பயணத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களையும் இஸபெல்லா தந்து உதவினாள்.

அடுத்த பிரச்சினை ஆரம்பம் ஆயிற்று. கப்பலைச் செலுத்த, கடல் பயணம் மேற்கொள்ளத் தேர்ந்த மாலுமிகள் வேண்டுமே! கொலம்பஸுக்கு உதவ எந்தத் தேர்ந்த மாலுமியும் தயாராக இல்லை. முன்பின் தெரியாத கடல்வழிப் பயணத்திற்கு உயிரைப் பணயம் வைக்க ஒருவரும் தயாராக இல்லை. அனுபவம் உள்ள மாலுமிகள் மட்டுமல்ல, தின்று கொழுத்த தண்டச் சோறுகள் கூட அவருடன் வரத் தயாராக இல்லை. ஆனாலும் கொலம்பஸ் நம்பிக்கையை விடவில்லை.

சிறைக் கைதிகளை… மரணத்தின் விளிம்பில் நின்ற குற்றவாளிகளை… கொள்ளைக்காரர்களை… அழைத்துப்போக விரும்பினார்… எதிர்பார்த்த மரணம்… அல்லது எதிர்பாராத பயணம்… என்பதில் மரணத்தைவிடப் பயணம் பரவாயில்லை என்று முடிவு செய்த எண்பத்து ஏழு தண்டனையாளர்களை உடன் அழைத்துக் கொண்டு கொலம்பஸின் கப்பல் பயணித்தது. தண்டனை பெற்றவர்களை அழைத்துப்போவது எத்தனை கொடிய தண்டனை? கொலம்பஸ் அசரவில்லை. காற்றையும் கடலையும் கிழித்துக்கொண்டு அவனது கனவுகளின் நனவான கப்பல் கரையில் இருந்து மறைந்தது.

அடுத்த குழப்பம் ஆரம்பமானது. கிழக்கே இருக்கும் இந்தியாவை அடையப் புறப்பட்ட பயணம் தவறாக மேற்கே நோக்கி நிகழ்ந்துவிட்டது. அந்தத் தவறுதான் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்தது. வீரர்களையும் தீரர்களையும் கடவுள் கைவிடுவதில்லை என்பது உண்மையாயிற்று. நம்பிக்கை உள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பது நிரூபணமாயிற்று. மேற்கு நோக்கிய தவறான பயணம்தான் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கக் காரணம் ஆயிற்று. ஏழை நெசவாளியின் கனவு நெசவு - நினைவு நிஜமாய் அமெரிக்கா அவன் வசப்பட்டது.

அடடா… கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த மாதிரி இனிக் கண்டுபிடிக்க பூமியில் என்ன இருக்கிறது? ஐந்து கண்டங்களையும் அதன் உள் உறங்கும் எண்ணெய், நிலக்கரி, வைரம் உட்பட அனைத்தையும் அமெரிக்காவின் சாட்டிலைட்டுகள் கண்டுபிடித்துவிட்ட பிறகு நாங்கள் கண்டுபிடிக்க இனி என்ன இருக்கிறது? என்று யோசிக்கிறீர்களா? பொறுங்கள்… பொறுங்கள்…

கொலம்பஸைப் போல நீங்கள் அமெரிக்காவைக் கண்டுபிடியுங்கள் என்று சொல்வது என் நோக்கம் அல்ல! உங்களுக்குள்ளே ஒரு கொலம்பஸ் இருக்கிறாரே! அவரை நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்களா?

எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற வெறி உங்களுக்குள் ஒளிந்திருக்கும்... மறைந்திருக்கும்... அந்தக் கொலம்பஸை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டாமா? இனிக் கொலம்பஸ் மாதிரி அமெரிக்காவைக் கண்டுபிடிக்க வேண்டாம்... கொலம்பஸைக் கண்டுபிடியுங்கள்... உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம்!

## 4. தூங்காதே தம்பி தூங்காதே!

**மீ**ன் கண்ணைத் திறந்து கொண்டே தூங்கும் என்று படித்தேன். 'ஆச்சரியமாக இல்லையா?' என்று ஒரு நண்பர் கேட்டார். ''இல்லை... ஆச்சரியமே இல்லை... மனிதர்களில் பல பேரும் விழித்திருக்கும்போதே தூங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்'' என்றேன் நான். இதுதான் உண்மை.

நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது? எப்படி எப்படி எல்லாம் நாம் ஏமாற்றப்படுகிறோம்? சுரண்டப்படுகிறோம், கொள்ளையடிக்கப்படுகிறோம்... என்ற விழிப்புணர்வே பல பேருக்கு இருப்பதில்லை. ஒவ்வொரு கணமும் விழிப்பாக இருப்பவர்களே உன்னதமானவர்கள். சரியானவர்கள்.

நீங்கள் அப்படியா? நம் அனுமதியில்லாமல் நம்மைச் சிலர் அத்துமீறி ஆக்கிரமிப்பார்கள். நம்மைத் தங்கள் வசதிக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள். முட்டாளாக்குவார்கள். நாமும் கண்ணைத் திறந்துகொண்டே இவற்றைக் கண்டு கொள்ளாமல் தூங்கி வழிந்தால் என்ன ஆவது?

'பசித்திரு... தனித்திரு... விழித்திரு' என்றார் இராமலிங்கர். இப்படி மூன்றுமாக இருந்தால் மூன்றின் முதலெழுத்தும் ஆன பதவி நமக்கு உண்டு என்பார்கள். விழித்திரு என்ற சொல்லை 'உத்திஷ்ட' என்கிறது பகவத்கீதை. 'எழு... விழி' என்பதே இந்த அறைகூவலின் அர்த்தம். நமது அறியாமைகள் யாவும் இருளே. தூக்கமே. மரணத்தின் ஒத்திகையே. தாற்காலிகச் சாவுகளே! விழிப்பு ஒன்றே விடியல். வெற்றியின் பூபாளம்.

நான் சமயச் சொற்பொழிவும் செய்வதாலேயே பல சாமியார்கள் என்னை வளைத்துப் போட விரும்புவார்கள். அவர்களது பிரசார பீரங்கியாக இருந்து அவர்களுக்கு இல்லாத பெருமைகளை நான் முழங்கத் தயாரானால் தங்கமும் வெள்ளியும் தருவதாக ஆசை காட்டுவார்கள்.

அவர்கள் மாயாஜால மந்திர வித்தைகளைத் தமது சிஷ்ய கோடிகள் மூலம் எப்படியாவது எனக்கு விவரித்து என்னை மயக்கி என் வாயை வாடகைக்கு வாங்கி அவர்கள் புகழ் வளர்க்கத் திட்டம் தீட்டுவார்கள். நான் குழம்பியதும் இல்லை. மயங்கியதும் இல்லை.

மணிக்கணக்காக அவர்கள் மத்தியில் இருந்தபடி அவர்களை அணுஅணுவாக அளந்து பார்த்திருக்கிறேன். அதே நேரம் பல நீதிபதிகளும், தொழிலதிபர்களும், அரசியல்வாதிகளும் சாமியார்களின் சாம்ராஜ்யத்தில் ஏமாந்து போவதைக் கண்காணித்திருக்கிறேன். எச்சரித்தும் இருக்கிறேன்.

ஒரு சாமியார் பல பேர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பஞ்சாமிருதத்தில் இருந்து முருகன், விநாயகர் பொம்மைகளை எடுப்பார்... கொடுப்பார் என்று புகழ்ந்து தள்ளினார்கள். அகன்ற பாத்திரத்தில் பழங்களைப் போட்டார். வெல்லம் சேர்த்தார். தேனும் நெய்யும் ஊற்றினார்.

கொத்தாக இருந்த ஒரு கிலோ பேரீச்சம் பழத்தையும் உள்ளே போட்டுப் பிசைந்தார். 'இந்தா... இந்தா' என்று எதிரில் இருக்கிற மாஜிஸ்திரேட் கையில் முருகன் சிலையை எடுத்துக் கொடுத்தார். கண்ணில் நீர் வடியக் கன்னத்தில் போட்டபடி மாஜிஸ்திரேட், 'முருகா... முருகா' என்று வாங்கிக் கொண்டார்.

'முருகா... முருகா' என்று என் கண்ணிலும் நீர் வழிந்தது. கொத்துக் கொத்தாகச் சாமியார் உள்ளே போட்ட பேரீச்சம் பழத்தில் பத்து முருகன் பொம்மைகளை வைக்கலாம். இதற்கு அந்தச் சாமியாரையே மாஜிஸ்திரேட் உள்ளே வைக்கலாம். கண்ணைத் திறந்து கொண்டே கனவான்கள் தூங்கும் தூக்க தேசம் இது.

இதில் நாமும் உறங்கிவிட்டால் என்ன ஆவது? கண்ணைத் திற... தோளை நிமிர்த்து... உன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று எப்போதும் விழிப்பாக இரு. மதத்தின் பெயரால் ஏமாற்று வேலைகள். திருட்டுத் தனமாகக் கோழி பிடிக்கிறவன் துண்டை விரித்துக் கொண்டு காத்திருக்கிற மாதிரிக் கட்சிக்

கொடியை விரித்தபடி இளைஞர்களை அமுக்கப் பல அரசியல் கோஷ்டிகள் காத்திருக்கின்றன. சிக்கிவிடாதே இளைஞனே... விழிப்பாக இரு.

தாங்கள் உயர உயரப் பறப்பதற்கு இறகுகள் இன்றித் தத்தளிக்கும் சில ஜாதித் தலைவர்கள் உங்கள் தலைகளைக் கத்தரித்து இறக்கைகளாக்க வெறி பிடித்து அலைகிறார்கள். உஷாராக இரு இளைஞனே... கொஞ்சம் தூங்கினால் உன் தலை கத்தரிக்கப்படும்! இளம்பெண்ணே! சினிமாக் கனவுகளில் உன் சேலை நழுவும்போது உன் இளமையை விலை கூறி விற்க ஒரு கூட்டம் அலைகிறது. இளம்பெண்ணே... உறங்கிவிடாதே! விழிப்பாக இரு.

வெளிநாடுகளில் வேலை என்கிற மணி மகுடங்களைக் காட்டி, பரம்பரைச் சேமிப்பையும் கொள்ளையடித்து அநாதைப் பிச்சைக்காரர்களாய் உங்கள் கையில் ஓர் அலுமினியத் தட்டைத் திணிக்கும் அராஜகம் அரங்கேறப் பார்கிறது.

இளமையே... தூங்கி வழியாதே. விழிப்பாக இரு! காலையில் கண் விழித்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு விஷயத்திலும் விழிப்பாக இரு. அலர்ட், அவேக், அவேர், அரைஸ், அலார்ம் என்று ஆங்கிலத்தில் அடுக்கடுக்காக விழிப்பை உணர்த்தும் மொழிச் சொற்கள் உள்ளன.

ஒவ்வொரு சொல்லின் அர்த்தமாகவும் வாழ்ந்து பார். குழப்பம்கூட ஒரு தூக்கம்தான். மறதி, சோம்பல், தயக்கம் இவைகூட உறக்கத்தின் விதவிதமான புனைபெயர்களே. குழப்பத்தில் தத்தளித்த அர்ஜுனனை நோக்கி பகவத் கீதையில் கண்ணன் சொன்ன வார்த்தைகள்... ‘உத்திஷ்ட’.

அதையேதான் நானும் சொல்லுகிறேன். தூங்காதே... தம்பி... தூங்காதே. வெற்றி நிச்சயம்!

## 5. நேற்றைய சராசரிகள் இன்றைய சக்ரவர்த்திகள்!

**நீ**ங்கள் சராசரியா? சாதாரணமானவரா? சாமானியனா? பிறக்கும்போதே பேரறிவோடும் பெருந்திறனோடும் பிறக்கவில்லையே என்று வருந்துகிறவரா?

அப்படியானால் நான் சொல்லப்போகும் இந்த மனிதர் உங்கள் கட்சி. உங்கள் உறவு. உங்களை மாதிரி!

யார் அவர்?

ஐன்ஸ்டீன்.

யார் அந்த உலகம் புகழும் விஞ்ஞான மேதையா? ஆம் அவரேதான்!

அவர் வாழ்வில் நடந்ததைச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள்.

ஜெர்மானியராகப் பிறந்தவர் விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன். நாஜிகளால் நாடு கடத்தப்பட்டவர். அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்தவர்.

அமெரிக்காவில் பிரின்ஸ்டன் நகரில் உள்ள ஆராய்ச்சி சாலை அவருக்காக ஒதுக்கப்பட்டது. முதன் முறையாக அந்த ஆராய்ச்சி சாலைக்கு அவரை அழைத்துச் சென்று சுற்றிக்காட்டி அவருக்குத் திருப்திதானா? ஏதும் வசதிக் குறைவுகள் உள்ளனவா என்று அமெரிக்க விஞ்ஞானிகள் விசாரித்தனர்.

தயங்கித் தயங்கி மெதுவான குரலில் ஐன்ஸ்டீன் சொன்னார்.

‘‘இங்கு எல்லாம் வசதியாகவே இருக்கிறது. ஒரே ஒரு குறை’’ என்று இழுத்தார்.

‘‘என்ன என்று சொல்லுங்கள். உடனே சரி செய்யப்படும்’’ என்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.

அறை ஓரத்தில் இருந்த குப்பைக் கூடையைச் சுட்டிக்காட்டி, ‘‘இது ரொம்பவும் சிறியதாக இருக்கிறதே. கொஞ்சம் பெரிய குப்பைக்கூடை இருந்தால் நல்லது’’ என்றார்.

திகைத்துப் போய் ‘‘பெரிய குப்பைக்கூடையா? எதற்கு?’’ என்றார்கள்.

ஐன்ஸ்டீன் சொன்னார், ‘‘நான் என்ன மேதாவியா, எல்லா ஆராய்ச்சிகளையும் முதலிலேயே சரியாகச் செய்ய, தப்புத் தப்பாகச் செய்வேன். எழுதி எழுதிப் பார்த்தால் எல்லாம் தப்புத் தப்பாக இருக்கும். உடனே கிழித்து எறிந்து விட்டு மீண்டும் மீண்டும் எழுதுவேன். இந்த முட்டாளுக்கு ஒரு விஷயத்தைச் சரியாகச் செய்ய நிறைய சந்தர்ப்பம் வேண்டும். தவறுகளைப் புதைக்கக் கொஞ்சம் பெரிய குப்பைக் கூடையும் வேண்டும்’’ என்றார்.

அவரே அப்படி என்றால்... கொஞ்சம் நிமிர்ந்து உட்காருங்கள்.

சாதாரணங்களில் இருந்துதான் அசாதாரணங்கள் தோன்றுகிறார்கள். நாம் சாதாரணம் என்று சதா ரணமாகி விடாதீர்கள். நாம் ஜெயிக்கப் பிறவந்தவர்கள். சின்னச் சின்னத் தோல்விகள். சின்னச் சின்னச் சறுக்கல்கள்... வீழ்ச்சிகள் ஒரு பெரிய விஷயமே அல்ல. எதை இழந்தாலும் நம்பிக்கையை இழக்காதீர்கள். ஒரு பொன்னுலகம் நமக்காகக் காத்திருக்கிறது.

அது ஒரு நாலு வயதுக் குழந்தை. ஆசை ஆசையாய் அந்தக் குழந்தையை அலங்காரம் செய்துப் பள்ளிக்கூடம் அனுப்பினாள் அதன் அம்மா. அந்தக் குழந்தைக்குக் கொஞ்சம் காது மந்தம். ‘டாமி’ என்பது அதன் செல்லப் பெயர். மனம் நிறையக் கனவுகளுடன் அந்தக் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பிய தாயாருக்கு நெஞ்சு நிறைய சோகங்களைப் பரிசளித்தார் ஒரு ஆசிரியை. மூன்று மாதங்கள் பள்ளிக்கூடம் சென்று வந்த அந்தக் குழந்தையின் சட்டைப் பையில் ஒரு காகிதத்தைத் திணித்து அனுப்பியிருந்தார் ஆசிரியை.

‘‘படிப்பதற்கு இலாயக்கற்ற முட்டாள் உங்கள் டாமி. இவனை இனிமேல் பள்ளிக்கு அனுப்பித் தொந்தரவு செய்ய வேண்டாம்’’ என்று அதில் எழுதியிருந்தது.

குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு அந்தத் தாய் சொன்னாள், ‘‘என் மகன் அறிவாளி. அவன் ஒன்றும் முட்டாள் அல்ல. அவனை நானே படிக்க வைப்பேன். அறிவாளி ஆக்குவேன்’’ என்று ஆவேசமாக அறிவித்தாள்.

‘‘படிக்க லாயக்கில்லை’’ என்று முத்திரை குத்தப்பட்ட அந்தப் பையனைப் பற்றி அவன் கண்டுபிடிப்புகள் பற்றி இன்றைக்குக்கூடப் பிள்ளைகள் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். அந்த முட்டாள் டாமிதான் பல்பை கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன்.

பள்ளிக்கூடம் போகாத பையனைப் பற்றிப் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக இன்று பாடம் நடக்கிறது. போதுமா?

நேற்றைய சராசரிகளே. இன்றைய சக்ரவர்த்திகள்!

இன்னொரு முக்கியமான விஷயம். அதே எடிசன் பத்தாயிரம் தடவை தோற்றுப் போன பின்னர்தான் வெடிக்காத பல்பைக் கண்டுபிடித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

தோல்வி ஒரு பெரிய விஷயமே அல்ல நண்பர்களே.

அந்த எடிசனுடைய அறுபத்தி ஏழாவது வயதில் அவருக்கு நேர்ந்த விபத்து தாங்கக்கூடியதே அல்ல. பாடுபட்டு அவர் உருவாக்கிய பல லட்சம் பெறுமான அவரது ஆய்வுக்கூடம், தொழிற்சாலை பற்றி எரிந்தது. இன்ஷூரன்ஸ் தொகையோ அதிகம் வராது. பற்றி எரியும் தொழிற்கூடத்தைப் பார்த்து எடிசன் சொன்னார்.

''நல்லது. என் தவறுகள் யாவும் எரிந்து போயின. என் பிழைகள் யாவும் கருகி விட்டன. நல்லது. இந்த அழிவிலும் ஒரு நன்மை இருக்கிறது. கடவுளுக்கு நன்றி. இனி ஒரு புதிய தொடக்கம் உண்டு.'' என்றார்.

இந்தத் தீ விபத்து நடந்த மூன்றாவது வாரத்தில் அவர் 'போனோகிராப்' என்பதனைக் கண்டறிந்தார்.

இறையன்பு அவர்கள் புத்தகத்தில் நான் படித்த ஒரு செய்தி.

ஒரு ஜென் துறவியின் குடிசை பற்றி எரிந்தது. நெருப்பு தன் பல நாக்குகளைச் சுழற்றிச் சுழற்றித் தன் பசி ஆறியது. பலர் அழுதனர். ஆறுதல் சொல்லினர். எரிந்து முடிந்த சாம்பலுக்குள் நின்று கொண்டு கம்பீரமாக வானத்தைப் பார்த்தபடி துறவி சொன்னார், ''ஆஹா நிலவின் ஒளியை தடுத்து மறைத்த கூரை எரிந்துவிட்டது'' என்று கொண்டாடினார்.

எப்போதும் நம்பிக்கையோடு இருங்கள்.



## 6. காலத்தைக் கொண்டாடுங்கள்!

**க**ரண்ட் கம்பிகளில் காக்காய்கள் உட்கார்ந்திருக்கிறதே... அதைக் கவனித்தது உண்டா? அண்டங் காக்காய்களும் ஆர்டினரி காக்காய்களும் மூக்கை மூக்கைக்

கம்பியில் தேய்த்துக்கொண்டு தெருவில் கிடக்கிற குப்பை மேட்டை வெறித்துக் கொண்டு, எச்சில் விஷயங்களை எதிர்பார்த்து ஏங்கியபடிக் ‘கராபுரா’ என்று கத்திக்கொண்டு காலம் கழிக்குமே... கவனித்ததுண்டா?

இந்தக் காக்காய்களுக்குப் போட்டியாக - காலேஜ் கட்டடத்தின் காம்பவுண்டுகளின் குட்டிச் சுவர்களில் காலை, காலை விரித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிற கல்லூரிக் காளைகளையும் கவனித்தது உண்டா? எனக்கென்னமோ காக்கைகள் கௌரவமானவை என்றே தோன்றுகிறது. எச்சில் இலைகளை எதிர்பார்த்து கரண்ட் கம்பங்களில் காத்திருப்பது அவற்றின் வாழ்க்கைப் பிரச்சினை. ஆனால் குட்டிச் சுவர்களில் ‘குட்டி’களுக்காகக் குடியிருக்கிற கல்லூரிக் காளைகளோ நாட்டின் பிரச்சினை.

இப்படி நேரத்தைப் பாழாக்க, வெட்டியாய் வீணடிக்க எதிர்கால இந்தியாவால் எப்படி முடிகிறது! சீரழிவுச் சிற்பிகளான சினிமாக்காரர்கள் வேறு, காலேஜ் மாணவர்களின் இந்த காலக் கொலைகளைக் கலர்கலராய் வளர்க்கிறார்கள். கிளாஸைக் கட் அடிப்பதும், கிளாசிக்கான இளசை சைட் அடிப்பதும் ஏதோ வீரதீரச் செயல்போல் விவரிக்கப்படுவது வேதனை தருகிற விஷயம்.

கலர் பார்ப்பது, கலகலப்பாய் இருப்பது பெரிய பாவம் அல்ல! ஆனால் அது முழுநேர வேலையாய் இருப்பது நியாயம் அல்ல. ஜாலியாய் இருக்கலாம்... அதுவே ஜோலியாய் இருக்கலாமா? காதல் வசப்படலாம்... குற்றமில்லை. எப்போதும் காமவசமாகக் காரியம் செய்வதா? கேட்க முடியாத ஆபாச வசனங்கள், சேட்டைகள், சில்மிஷங்கள்... இவை பெருமைக்குரியவைதானா? நேரத்தை மிதிக்கலாமா? காலத்தைக் கொல்லலாமா? நிகழ்கால நிர்வாகமே எதிர்கால வெற்றி ரகசியம். காலத்தைக் கொண்டாடுகிறவரையே காலம் கொண்டாடுகிறது. மற்றையோரைக் காலம் கொண்டு போகிறது.

‘கழுதை கெட்டால் குட்டிச் சுவர்’ என்ற பழமொழியை நிரூபிக்கக் கல்லூரிக் காம்பவுண்டுகளைக் காவல் காக்கும் வேலையை விடலாம். அறிவுள்ள மனிதனாக நூலகத்தில் நேரம் போக்கலாம். படிப்பு உயரும். அப்துல் கலாமாகலாம். அணு விஞ்ஞானி ஆகலாம். ஆயிரம் ஆயிரம் சாதனைகள் புரியலாம்.

விருப்பமில்லையா? விளையாடப் போகலாம். விண் என்று இருக்கலாம். விறுவிறுப்பாக வியர்த்து வடியலாம். டெண்டுல்கர் ஆகலாம். பி.டி. உஷா

ஆகலாம். தங்கமும் வெள்ளியும் தட்டிப் பறிக்கலாம். டெண்டுல்கராகி பூஸ்ட் விளம்பரங்களில் பூரிப்பாய்ச் சிரிக்கலாம். ஆடுகளாய்த் திரியாமல் ஆடுகளத்தில் திரிவதன் மூலம் அகில உலகப் புகழ் பெறலாம். பாதி நேரம் கல்லூரி, மீதி நேரம் சின்ன வேலை என்று நமது படிப்புக்கு நாமே சம்பாதிக்கலாம்.

பண்ணை வேலை பார்த்தபடியே படிப்பு வேலையும் பார்த்த ஆபிரஹாம் லிங்கன் ஆகலாம். செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் பயின்ற மாணவர் டாக்டர் குமாரவேலு என்பவர் படிக்கப் பணம் கட்டப் பெற்றோரை எதிர்பார்க்கவில்லை. கராத்தே கற்றுக் கொடுத்துக் காசு சம்பாதித்தார். கல்லூரிப் படிப்பைக் காலத்தில் முடித்தார்.

‘தம்’ அடிப்பதைத் தவிர்த்துவிட்டு ‘ஜிம்’முக்குப் போகலாம்... ஜம் என்று ஆகலாம். நிஜமான ஆரோக்கியத்துடன் நிஜமான ஹீரோவாய் நிஜ வாழ்வு வாழலாம். கவிதை எழுதலாம். கட்டுரை எழுதலாம். கற்பனை இருந்தால் விற்பனை செய்து காசு சேர்க்கலாம். தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஆகலாம். வானொலி மூலம் வலம் வந்து பார்க்கலாம்.

காலத்தைக் கொலை செய்வது கடுமையான பாவம் அல்லவா? ஒரு வருடத்தின் அருமை யாருக்குத் தெரியும்? ஃபெயில் ஆன மாணவனுக்குத் தெரியும். தன்னோடு படித்தவர்கள் அடுத்த வகுப்பில் அணிவகுக்கும்போது அவமானம் அணி வகுக்கும்! என்ன செய்யப் போகிறீர்கள்?

ஒரு மாசத்தின் அருமை யாருக்குத் தெரியும்? குறைப் பிரசவத்தில் பிள்ளை பெற்ற குணவதிக்குத் தெரியும். ஒரு மாசம் குறைவாய்ப் பெற்ற பிள்ளை பிழைப்பதே துர்லபம். பாதுகாப்பதோ பணச் செலவு. தேறும் வரை பதைபதைப்பு.

ஒரு வாரத்தின் அருமை யாருக்குத் தெரியும்? வாரப் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரியும்.

ஒரு நாளின் அருமை யாருக்குத் தெரியும்? ஒரு நாள் முன்னதாகப் பதவியில் சேர்ந்து பதவி உயர்வு பெற்றவனைப் பார்த்த பதவி உயர்வு பெறாதவனுக்குத் தெரியும்.

ஒரு மணியின் அருமை யாருக்குத் தெரியும்? பரிட்சை எழுதும் மாணவனுக்குத் தெரியும். மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவருக்குத் தெரியும்.

ஒரு நிமிடத்தின் அருமை யாருக்குத் தெரியும்? ரயிலைக் கோட்டைவிட்டவனைக் கேட்டால் தெரியும்.

ஒரு விநாடியின் அருமை யாருக்குத் தெரியும்? விபத்தில் இறந்துபோனவனுக்கே விவரமாய்த் தெரியும்.

ஒரு மைக்ரோ செகண்டின் அருமை ஒலிம்பிக்கில் ஓடும் ஓட்டக்காரனுக்குத் தெரியும்.

காலத்தின் அருமை உனக்குத் தெரியுமா நண்பனே? தெரிந்தால் வெற்றி நிச்சயம்.

## 7. தினப் பத்திரிகைகள் படிக்கும் பெண்கள் எத்தனை பேர்?

ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஒரு வழக்காடு மன்றம் நடந்து கொண்டிருந்தது. எனக்கு நீதிபதி பொறுப்பு. ‘குடும்ப வாழ்வின் வெற்றியைத் தீர்மானிப்பவர் ஆண்களா? பெண்களா?’ என்பது தலைப்பு. பெண்களைத் தாக்கிப் பேசிய பேச்சாளர் ஒரு வெடிகுண்டை வீசினார். எப்படி?

‘‘பெண்களுக்குப் பொது அறிவு கிடையாது’’ என்றார். அதிர்ச்சியுடன், ‘‘என்ன?’’ என்றேன். பேச்சாளர் நிதானமாக, ‘‘பொது அறிவு என்ன பொது அறிவு...? பொதுவா அறிவே கிடையாது?’’ என்று குற்றம் சாட்டிப் பேசினார். சபை சிரித்தது. என்னால் சிரிக்க முடியவில்லை.

கோபம் வந்தது. ‘‘கவனமாகப் பேசுங்கள்’’ என்று எச்சரித்தேன். ஆனால் அவர் கூறிய காரணங்கள் என்னை அசைக்கத் தொடங்கின. ‘‘வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை படிக்கிற பெண்கள் அதிகம். ஆனால் தினப்பத்திரிகை படிக்கிற பெண்கள் எத்தனை பேர்..? நாட்டு நடப்பு பற்றி எத்தனை பெண்கள் அக்கறை காட்டுகிறார்கள்?’’ என்று கேட்டார். மிகவும் யோசிக்க வேண்டிய விஷயம்.

‘‘அதைவிட தொலைக்காட்சிப் பெட்டியில் சினிமா பார்க்கும்போது குடும்பமே பார்க்கிறது. ஆனால் செய்திகள் தொடங்கியதும் பெண்கள் அடுப்படிக்குள் பாய்ந்து உணவைத் தயார் செய்வது ஏன்? செய்தி நேரம் வந்ததும் சினிமாவில் இடைவேளை மாதிரி அதைச் சாப்பாட்டுக்குப் பயன்படுத்த பல பெண்கள் விரும்புவது உண்மைதானே! இது சரிதானா? செய்தி நேரம் என்ன சினிமா இடைவேளையா? இப்படி இருந்தால் நாடு உருப்படுமா?’’ என்றார்.

யோசிக்க ஆரம்பித்தேன். படித்த பெண்கள், அலுவலகம் போகிறவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்கு விதிவிலக்கு என்று நம்பினேன். ஆனால் என் நம்பிக்கையை உலுக்கிவிட்டது ஒரு ஃபோன் கால். ‘பொதிகை’யில் செய்தி பார்த்துக் கொண்டிருந்தேன். நம்ப முடியவில்லையா? ‘சன்’னிலும் ‘ஜெயா’விலும் நியூஸை விட ‘வியூஸ்’ அதிகம். எனவே ‘பொதிகை’யில் செய்தி பார்ப்பது வழக்கம். ஷோபனா ரவி செய்தி வாசித்தார். அவர் என் குடும்ப நண்பரும்கூட. அப்போது என் தொலைபேசி அலறியது. தில்லியில் இருந்து எஸ்.டி.டி. கால். என்னவோ ஏதோ என்று பரபரப்பாகப் பேச ஆரம்பித்தேன்.

எதிர் முனையில் என் நண்பரின் மனைவி, ‘‘ஷோபனா ரவி உங்கள் நண்பர்தானே..?’’ என்றார். ‘‘ஆம்... எதற்காகக் கேட்கிறீர்கள்?’’ என்றேன். ‘‘வழக்கமாகக் கழுத்தைப் போர்த்திக் கொண்டு செய்தி வாசிப்பார். இன்று அப்படிப் போர்த்தவில்லை. அவர் கழுத்தில் போட்டிருக்கும் ஒரு மணி மாலையைப் பார்த்தீர்களா? அது நேச்சுரல் ஸ்டோனா... அல்லது செயற்கையா? எங்கே கிடைக்கும்? என்ன விலை என்று விசாரிச்சுச் சொல்ல முடியுமா?’’ என்றார்.

செய்தியைவிட செய்தி வாசிப்பவரை வாசிக்கும் அம்மணி எம்.ஏ., பிஹெச்.டி., போதுமா? நான் அதிர்ந்து போனேன். பெண் விடுதலை, பெண் முன்னேற்றம் குறித்த முயற்சிக்கு இத்தகைய குணநலன்கள் நல்லதுதானா என்று இப்போது யோசிக்கிறேன். வாழ்க்கையை வண்ணப்படுத்துவது பெண்மை. அதற்கு அழகுணர்ச்சி இருப்பது அவசியம். அழகுப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் மீதான பெண்களின் ஈடுபாட்டை நான் இவ்வளவு நாளாக எதிர்ப்பது இல்லை. ஆனால் இப்போது என் கருத்து மறுபரிசீலனைக்குரியது என்றே கருதுகிறேன்.

பெண்களின் அழகுணர்ச்சிக்கான விலை இன்று மிக மிக அதிகம். காலக் கொலையோ அதைவிட அதிகம். எப்படி? நகங்களை வண்ணப்படுத்தி, பழைய வண்ணங்களை நீக்கிப் புதுவண்ணம் பூச நெயில் பாலிஷ், ரிமூவர்; உதடுகளை உயிர்ப்பேற்ற உதட்டுச் சாயம் (லிப்ஸ்டிக்), கன்னங்களில் கவர்ச்சி கூட்ட ரூஜ், கண்ணிமைகளைப் பெரிதுபடுத்தி அழகைக் கூட்ட மஸ்காரா, அழகாய்க் காட்ட ஐ லைனர், கழுத்தை, முகத்தைக் கழுவிக் காட்ட கிளென்சிங் மில்க், மாஸ்க் ப்ளீச், தோலின் இயற்கை மணத்தை வாசனையில் புதைக்க பாடி ஸ்ப்ரே மற்றும் சென்ட் வகைகள், கொண்டை தொடங்கி கெண்டைக்கால் வரை 'மாட்சிங்' பார்த்து அலங்கரிக்கத் தேவையான விதவிதமான உபகரணங்கள் (க்ளிப், ரிப்பன், பான்ட், விதவிதமான செருப்புகள்).

பொருட்செலவும் நேரச் செலவும் இவ்வளவு தேவையா? யோசியுங்கள். அறிவார்ந்த விஷயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள். அதற்காக மம்தா பானர்ஜியாகவும், மாயாவதியாகவும் மாறச் சொல்லவில்லை. கொஞ்சம் சிக்கனம்... தேவை இக்கணம்.

எல்லா நாடுகளிலும் இந்த வியாதி இருக்கிறது. உதாரணம் சொல்கிறேன். அமெரிக்காவில் பல விஞ்ஞானிகள் பங்கேற்ற விருந்து ஒன்றினுக்கு உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் போயிருந்தார். அவர் மனைவி அவருடன் போக வேண்டியவர். போக முடியவில்லை. கடைசி நேரத்தில் உடம்பு சரியில்லை. விருந்து முடிந்து வீட்டுக்குத் திரும்பிய ஐன்ஸ்டீனிடம் அவர் மனைவி கேட்டார்...

''விருந்து எப்படி நடந்தது?''

''நன்றாக இருந்தது'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு அங்கு தாம் சந்தித்த விஞ்ஞானிகள் பற்றியும் அவர்களுடன் விவாதித்த அறிவுபூர்வமான விஷயங்கள் பற்றியும் ஆவலுடன் ஐன்ஸ்டீன் சொல்லத் தொடங்கினார். அவர் மனைவிக்குப் பிடிக்கவில்லை. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, ''நான் இந்த அறுவையைக் கேட்கவில்லை. அங்கு விருந்துக்கு வந்திருந்த பெண்கள் எந்த எந்த மாதிரி கவுன் அணிந்திருந்தார்கள்... கவனித்தீர்களா?' என்று சீறினார்.

ஐன்ஸ்டீன் பொறுமையாக, ''இதோ பார்... விருந்து மேஜைக்கு மேலே பெண்களின் முகம் மட்டும்தான் தெரிந்தது. அதனால் அவர்கள் அணிந்து வந்த ஆடை எப்படிப்பட்ட ஆடை எனக்குத் தெரியாது. உனது விருப்பத்தை

நிறைவேற்ற வேண்டுமென்றால் நான் மேஜையின் கீழே குனிந்து பார்த்திருக்க வேண்டும். அது அவ்வளவு கவுரவமாக இருக்காது'' என்றார்.

பெண் பிள்ளைகளுக்கு ஒன்று சொல்கிறேன். நீங்கள் சில விஷயங்களுக்கு அடிமைகளாக இருக்கும் வரை ஆண்கள் உங்களை அடிமைகளாக வைத்திருப்பார்கள். அந்த அடிமைத்தனத்திலிருந்து நீங்கள் வெளிவந்துவிட்டால் ஆண்களால் உங்களை அடிமைப்படுத்தவே முடியாது. என் பெண்மக்களே... என் அக்கறையைப் புரிந்து கொள்ளுங்கள். புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்!

## 8. அந்த அதிசயக் கிழவர்!

**க**ட்சிகளிலும் சரி... கம்பெனிகளிலும் சரி... தலைமைக்கு வேண்டியவராகச் சிலர் விளங்குவார்கள். தலைமையின் நம்பிக்கைக்கு உரியவராகச் செல்வாக்கு உள்ளவராக வலம் வருவார்கள். இத்தனைக்கும் சீனியாரிட்டிபடிப் பார்த்தால் மிகப் பின்தங்கியவராக இருப்பார். ஆனால் அவர் செல்வாக்கு கொடிகட்டிப் பறக்கும். இது எப்படி நடக்கிறது?

இதைச் சிலர் கொச்சையாகக் ''காக்காய் பிடித்து முன்னுக்கு வருகிறான்'' என்கிறார்கள். ஆனால் நுட்பமாக, முன்னுக்கு வரும் இரகசியத்தைக் கவனிக்க மறுக்கிறார்கள். நீங்கள் முக்கியமான நபராக விளங்க நிறைய வழிகள் இருக்கின்றன. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

திருமண வீடுகளில், அலுவலகங்களில், விழாக்களில் சிலரைச் சுற்றிக் கூட்டம் எப்போதும் இருக்கும். அவர் இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும். குபீர் குபீர் என்று சிரிப்பலைகள் அவரைச் சுற்றி எழும். எந்த இடத்திலும் முக்கியத்துவம் பெற்றுவிடுவார். காரணம், சாமர்த்தியமாக, நகைச்சுவையாக அவர் பேசுவதே.

எனவே நல்ல நகைச்சுவைகளைச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன்படுத்துகிறவர்களை எல்லோரும் நேசிப்பார்கள். ஒரு முக்கியமான மனிதராகக் கருதுவார்கள்.

ஆனால் நகைச்சுவை தரம் உடையதாக, புதிது புதிதாக, நினைத்து நினைத்துச் சிரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பலர் மத்தியில் சொல்லத்

தகாத ஆபாசத் துணுக்குகளை, இடத்திற்குப் பொருந்தாத நகைச்சுவைகளைச் சொன்னால் இருக்கிற மரியாதையும் போய்விடும்.

இன்னும் கொஞ்சம் அதிக முக்கியத்துவம் பெறும் வழி என்ன? நகைச்சுவைகளைக் கடந்து அதிகத் தகவல்களைத் தெரிந்துவைத்திருக்கும் ஒருவர் இன்னும் முக்கியத்துவம் பெறுவார். ரயில் நேரம், விமான நேரம், பொருள்களின் விலை, எது எங்கே சுலபமாகக் கிடைக்கும் என்ற தகவல், நுட்பமான பல விவரங்களை அறிந்து வைத்திருந்தால் உங்கள் மேலதிகாரிகளால் நீங்கள் மிகவும் விரும்பப்படுவீர்கள்.

நிறைய விவரங்களைக் கை வசம் வைத்திருக்கும் நபர் தலைமையால் அதிகம் தேடப்படுவார். தலைமை அவரை அதிகம் சார்ந்திருக்க விரும்பும். புதிதாகப் பொறுப்பேற்கும் சூட்டிகையான கலெக்டர்கள் அலுவலகத்திலேயே விவரமான கிளார்க்கைக் கண்டுபிடித்துத் தம் அருகிலேயே வைத்திருப்பார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் விசாரணைப் பகுதியில் மிக நீண்ட காலம் ஒரு பெரியவர் பணி புரிந்தார். அவரை மிக நீண்ட காலம் பணி நீட்டிப்புக் கொடுத்து வைத்திருந்தனர். ஒரே காரணம்... அவர் பல்கலைக் கழகம், பரிட்சை, துறைகள் எது பற்றிய கேள்விக்கும் விரல் நுனியில் விடை வைத்திருப்பார்.

துல்லியமாக, கோபம், பதற்றம் இன்றி உடனுக்குடன் விடையளித்த அந்த அதிசயக் கிழவரை என்னால் மறக்கவே முடியாது. அதிக விவரங்கள் அறிந்த மனிதர் தன் முக்கியத்துவத்தை ஒரு போதும் இழக்க முடியாது.

நிரந்தர முக்கியத்துவம் பெறுவதற்கான உன்னத மாமந்திரத்தை இப்போது சொல்லுகிறேன் - Involvement makes you important. ஈடுபாடு ஆழமாக ஆழமாக மேம்பாடு நிச்சயம். இதனை உணர்ந்தவர்கள் தோற்பதில்லை. ஒரு திருமண வீட்டிற்கு ஆயிரம் பேர் வந்து போனாலும், அக்கறையுடன் பல விஷயங்களில் ஈடுபடுகிறவர் மறக்கப்பட முடியாதவராக மாறிவிடுகிறார்.

திருமணத்தின் ஒவ்வொரு சடங்கிலும், ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு இடத்திலும் அந்த நபர் தேடப்படுகிறார். அவரை மையப்படுத்தி அங்கு நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கும். கட்சியில் கடைசியில் சேர்ந்த ஒருவர்

அளவு கடந்த ஈடுபாடு காட்டும்போது அவர் முக்கியத்துவம் பெற்று முன்னேறுகிறார்.

தலைவருக்கு இரண்டாம் இடத்தில் இருக்கும் சிலர், தலைவரின் மறைவுக்குப் பின்னும் இரண்டாம் இடத்தில் இருக்க நேரிடும். ஆனால் கடைசியில் வந்தவர் முதல் இடத்தைப் பெற்றுவிடுவார். இரண்டாம் இடத்தார் புலம்புவார். 'நான்தான் சீனியர்' என்பார். என்ன பயன்? அவருக்கு எப்போதும் இரண்டாம் இடமே கிடைக்கும். கட்சியின் மீது அவரது ஈடுபாடு இரண்டாம் பட்சம். எனவே கட்சிக்கும் அவர் இரண்டாம் பட்சம்.

கல்லூரியில் வேலைக்குச் சேரும் ஒருவர், தனது துறையின் வேலைகளை மட்டும் அளந்து செய்தால் மானேஜ்மெண்ட் அவருக்குச் சம்பளம் கொடுக்கும். மரியாதை கொடுக்காது. தனது பணி, தனது துறையில் பிறரது பணி, மாணவர்கள் பிரச்சினை, கல்லூரி விழாக்கள், அட்மிஷன், கட்டட நன்கொடை இப்படி எல்லா வேலையையும் தனது வேலையாக இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிறவர் மானேஜ்மெண்டின் நம்பிக்கைக்குரியவர் ஆகிறார். நியமிக்கப்படாத முதல்வராக முக்கியத்துவம் பெறுகிறார்.

எந்த விஷயத்திலும் ஈடுபாடும் மேம்பாடும் கைகோர்த்து நிற்கின்றன. முக்கியதுவமும் முதலிடமும் முழு மூச்சுடன் ஈடுபட்டவருக்கான உரிமைச் சொத்து. புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்.

## 9. பின்பற்றாதே; முன்னேறு!

புத்தகங்கள் படிப்பதால் மட்டும் ஒருவர் அறிவாளி ஆகிவிட முடியுமா? முடியாது. முடியவே முடியாது. அறிவு என்பது புத்தகத்திலிருந்து ஒருவருக்கு வருவதா? கிடையாது. கிடையவே கிடையாது. புத்தகங்கள் படிப்பது என்பது மணற்கேணியைத் தோண்டுகிற மாதிரி. அறிவு பிறப்பது என்பது மணல் கேணியில் தண்ணீர் ஊறுகிற மாதிரி. மண்ணைத் தோண்டுவதால் மட்டுமே தண்ணீர் வந்துவிடாது. மண்ணின் மார்பகத்தில் நீரூற்று இருந்தால் மட்டுமே நீர் சுரக்க முடியும்.

அதனால்தான் நிறைய புத்தகங்கள் படித்தும், மனப்பாடம் செய்தும் பலர் அறிவாளிகளாக ஆகாமலேயே செத்துப் போகிறார்கள். அவர்கள் சுயமாகச்

சிந்திப்பதே இல்லை. தோண்டுவதால் மட்டுமே தண்ணீர் வந்துவிடுமா? பாலைவனங்களிலும் பாறை நிலங்களிலும் பல நூறு அடி தோண்டியும் தண்ணீர் வருவதே இல்லை. ஏன்? ஆனால் ஆற்றங்கரையிலும் கடற்கரையிலும் ஐந்தடியிலேயே தண்ணீர் வருகிறது.

ஏன்? பலநூறு தடவை பல நூறு புத்தகங்கள் படித்தும் சிலர் அறிவாளி ஆவதே இல்லை!

ஒரு புத்தகத்தை ஒரு தடவை படித்தாலும் சிலர் அதன் அடிஆழத்தை உணருகிறார்கள். எந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலும் இந்த உணர்வோடு எடுங்கள். வெற்றி நிச்சயம். திருக்குறள் படிக்கிறபோது இந்த உண்மையை நான் உணர்ந்து கொண்டேன். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு' என்பது தமிழ் மறை. 'அறிவு புத்தகத்திலிருந்து வருவதில்லை. அது கற்பவன் மனத்தகத்தில் இருந்து வருகிறது' என்று உணர வேண்டும்.

'தாய் சொல்லைத் தட்டாதே' என்று புத்தகத்தில் உள்ளது. வரதட்சிணை கேட்கச் சொல்கிறாள் தாய். தாய் சொல்லைக் கேட்கிறவன் மூடன். மறுக்கிற மகன்தான் அறிவாளி. 'மருமகளை மதிக்காதே... மண்ணெண்ணெயை ஊற்று' என்கிறாள் தாய்! தாய்மையே அன்பு... அன்பே தாய்மை. அன்பே இன்றி ஒரு பெண்ணை அழிக்க நினைக்கும் தாய், தாயே இல்லை என்று அறிவது நுட்பமான அறிவு.

'கட்டினவள் கண் கலங்காமல் குடும்பம் நடத்த வேண்டும்' என்பது இல்லற தர்மம். 'இந்த நிமிடம் உன் அம்மாவை வெளியில் அனுப்பு' என்று மனைவி அழுது ஆர்ப்பரிக்கும்போது, கண்ணீரைக் காலால் எற்றும் கம்பீரமே இல்லற தர்மம். பெற்றவளை வணங்கி வீட்டில் வைத்திருப்பது நுட்பமான இல்லற தர்மம். இவை புத்தகம் படிப்பதால் வருவதில்லை. சுயமாகச் சிந்திப்பதால் மட்டுமே வருகிறது.

'முன்னோரை மதிக்க வேண்டும். மூத்தோர் சொல் பேண வேண்டும்' என்பது அவசியம். 'குரு வார்த்தைக்கு மறு வார்த்தை இல்லை' என்பது மகாவாக்யம். ஆனால் குரு தவறாகச் சொன்னால் மரியாதையோடு மறுக்கக் கூடாதா? மறுப்பது அகங்காரமா? மறுப்பதே மானுடப் பரிணாமம். இராமானுஜர் தமது குரு தவறாகச் சொன்னபோது உறுதியாக மறுத்தவர் தெரியுமா? சரியான

ஒன்றை அவமதிப்பது தவறு. தவறான ஒன்றை அனுமதிப்பதோ மிகமிகத் தவறு.

இராமனுடைய குலகுரு வசிட்டர். தந்தை ஆணையை ஏற்றுக் காடு போகும் இராமனைத் தடுக்கிறார். ‘நான் உன் குரு... மீறிப் போக வேண்டாம்’ என்கிறார். ‘குருவே... சத்தியம் எல்லா தருமங்களையும்விட மேலானது என்று போதித்தவர் நீர். இப்போது நீர் என் தந்தைக்குக் கொடுத்த சத்தியத்தை மீறச் சொல்கிறீர். நான் உம்மை மதிக்கிறேன். ஆனால் நீர் உணர்த்திய தருமத்தை உம்மைவிட மேலாக மதிக்கிறேன்’ என்று வசிட்டர் வார்த்தையை மீறுகிறான் இராமன். ஆஹா... ‘இராமன் குருவை அவமதிக்கிறான்’ என்று குமுற முடியுமா? குருவைவிட மேலாகத் தருமத்தை மதிக்கிறான் என்று கொண்டாட வேண்டும்.

பெரியோரை அவமதிப்பது அயோக்கியத்தனம். அதற்காகப் பெரியோர் சொல்கிற எல்லாமே சரி... சரி என்பது அசட்டுத்தனம். அயோக்கியனாக இருப்பது தவறு என்றால்... அசடாக இருப்பதுவும் தவறுதான். சுயம்... சுயம்... சுயம். இந்த விழிப்பு நிலையோடு எப்போதும் இருக்கப் பழகுங்கள். வெற்றி நிச்சயம்.

இன்றைக்கு உலகின் பெரும் பிரச்சினை என்ன? மதவெறி. என்ன காரணம்? தங்கள் மத நூல்களில் சொல்லப்பட்ட எல்லாமே சரி... என்கிற அசட்டுத்தனம். அதே சமயம் பிற மத நூல்களில் சொல்லப்பட்ட எல்லாமே பிழை என்கிற அயோக்கியத்தனம். அசட்டுத்தனமும் வேண்டாம்... அயோக்கியத்தனமும் வேண்டாம். சுயமாகச் சிந்திக்கப் பழகு. இந்த உலகத்தில் எல்லாமே விசாரணைக்குட்பட்டவை! விவாதத்துக்குட்பட்டவை.

எவ்வளவு பெரிய மனிதன் என்றாலும் - ஏன் கடவுளே என்றாலும்கூட விமர்சனத்துக்குரியவர் - ஆராய்ச்சிக்குரியவர். இதுதான் விவேகமான, விழிப்பான நிலை. ‘எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்...’ என்கிற குறளில், யார் யார் என்றால் என்ன பொருள்? அதில் திருவள்ளுவர் அடங்கமாட்டாரா? திருவள்ளுவரே சொன்னாலும் அப்படியே ஏற்பது கூடாது.

தனக்கு ஆமாம் போடும் கூட்டத்தைவிடத் தன்னை விழிப்புடன் விமர்சிப்பவனைத்தான் திருவள்ளுவர் விரும்புவார். காரணம் தன்னைப் பின்பற்றுபவனைவிடத் தன்னையும் தாண்டி முன்னால் போகிறவனையே

திருவள்ளுவர் தேடுகிறார். ஆதாரம் சொல்லட்டுமா? 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை' என்ற குறளுக்கு என்ன பொருள்? தம்மையும் தாண்டி அடுத்த தலைமுறை வளருவதையே வள்ளுவர் விரும்புகிறார்.

'திருக்குறளில் என்ன இருக்கிறது! எதுவுமே இல்லை' என்பது அயோக்கியத்தனம். 'அதில் எல்லாமே இருக்கிறது... அதைத் தாண்டி எதுவுமே இருக்க முடியாது' என்பது படு அசட்டுத்தனம். 'பரிமேலழகரும் மணக்குடவரும் என்ன உரை எழுதிக் கிழித்தார்கள்' என்று பேசினால் அயோக்கியத்தனம்! 'பரிமேலழகரும் மணக்குடவரும் சொல்வது மட்டும்தான் சரி... மற்ற எவனுக்கும் எதைச் சொல்லவும் உரிமை இல்லை' என்று எண்ணுவது அகில உலக அசட்டுத்தனம்.

நமது மத நூல்களில் சொல்லப்பட்ட சில விஷயங்கள் மறுபரிசீலனைக்குரியவை... தவறானவை என்கிற தெளிவு ஒவ்வொரு மதத்தவனுக்கும் ஏற்பட்டுவிட்டால் பூமியில் ரத்தம் பாயாது... யுத்தம் நேராது.

புத்தகங்களைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு சுயமாகச் சிந்திக்க மறுக்கும் மூடத்தனமே எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம்.

உண்மையைத் தேடும் நெருப்போடு நான் வள்ளுவரின் தாள்களை வணங்கினேன். வாரி எடுத்து இந்தப் பிள்ளையைத் தோள்களில் அமர்த்தினான் என் பாட்டன். பாசத்தின் பரிசு அது. அவனது தயவால் அவனைவிட அதிக தூரத்தை என்னால் பார்க்க முடிகிறது! நான் அசடுமல்ல... அயோக்கியனுமல்ல... வள்ளுவரால் ஆசீர்வதிக்கப்பட்டவன். அதனால் தமிழினத்தை உயர்த்தும் எனது போர் ஓயாது.

## 10. ராம ஜயமா? ராம் டீம் ஜயமா?

இந்தியாவின் 'நேஷனல் ஹீரோ' யார் தெரியுமா? ராமன். காரணம், அவரது வீரக் கதை. இந்திய மொழிகள் அத்தனையிலும் அந்தந்த மொழியின் தலைசிறந்த கவிஞர்களால் ராமாயணம் எழுதப்பட்டது. இந்தப் பெருமை ராமருக்கு முன்னும் பின்னும் எவருக்கும் கிடைத்திருக்க முடியாது. அப்படிப்பட்ட 'நேஷனல் ஹீரோ' ராமனுடைய படம் மட்டும் தனியாக

எங்காவது நீங்கள் பார்த்ததுண்டா? வெறும் ராமனுக்கு மட்டும் சந்நிதி எந்தக் கோவிலிலாவது பார்த்ததுண்டா? இருக்காது.

அவரது புகழ் பெற்ற படம் ஸ்ரீராம பட்டாபிஷேகப் படம். குறைந்த பட்சம் சீதை, லட்சுமணன், ஹனுமனோடு சேர்ந்துதான் ராமன் படம் இருக்கும்.

என்ன காரணம்?

எப்போதும் 'க்ரூப் ஃபோட்டோ'வில் மட்டுமே ராமன் காட்சி தரும் காரணம் என்ன என்று யோசித்தது உண்டா?

ராமனது வெற்றி ஒரு குழுவினரின் வெற்றி. எந்தச் சீதையை மீட்க ராமன் போராடினாரோ அந்தச் சீதை கற்புடன் காத்திருந்ததால்தான் ராமனது வெற்றிக்கு அர்த்தம் விளைந்தது. ராமன் எங்கே கடல் கடந்து வரப்போகிறார்... நாம் ராவணன் அரண்மனையில் அடைக்கலம் புகுந்தால் என்ன என்று சீதை நினைத்திருந்தால் ராமனது வெற்றி அர்த்தமற்ற அவமானமாகி இருக்கும்.

ராமன் காடு போனதும் மக்கள் மனத்தை மாற்றி ராஜ்ஜியத்தைத் தன்பக்கம் கொண்டுபோக பரதன் நினைத்திருந்தால், ராமன் நாட்டை விட்டுக் கொடுத்த தியாகம் கேலிக்குரியதாகி இருக்கும். பாதுகையுடன் பரதன் காத்திருந்த பண்புதான் ராமனது வெற்றியைக் கவுரவப்படுத்தியது... அர்த்தமுள்ளதாக ஆக்கியது.

காட்டில் பெண்ணுக்கும், நாட்டில் மண்ணுக்கும் இலக்குவன் ஆசைப்பட்டிருந்தால் ராமஜயம் காமஜயமாகக் களையிழந்து போயிருக்கும். இளைய பெருமாளின் இதயஉறுதியே ராமனது வெற்றியை உண்மையான வெற்றியாக்கியது.

சுயநலமற்ற, எந்த எதிர்பார்ப்புமற்ற தூய தொண்டன் அனுமன் கிடைக்கவில்லையென்றால் ராமன் இத்தனை வெற்றிகளை அடைந்திருக்க முடியுமா?

தற்கொலை செய்ய இருந்த சீதையைக் காத்தான். பிரம்மாஸ்திரத்தால் சாய்ந்து கிடந்த இளையவனைச் சஞ்சீவி மலையால் எழுப்பினான். ராமன் வரவேண்டிய பதினான்கு வருடம் முடிந்தது என்று நெருப்பில் விழ இருந்த பரதனைத் தடுத்து நெருப்பை அவித்துப் பலரை மரணத்திலிருந்து மீட்டான் அனுமன்.

சீதை, இலக்குவன், பரதன் இந்த மூவரில் யார் இறந்து போயிருந்தாலும் ஸ்ரீராமன் பட்டாபிஷேகத்தன்று சந்தனத்திற்குப் பதில் சாம்பலை அல்லவா முகத்தில் பூச வேண்டியிருந்திருக்கும்.

எனவே, ஸ்ரீராமஜயம் என்பது ஒரு தனிமனித வெற்றி அன்று. ஒரு குழுவின் வெற்றி. ஒரு கூட்டத்தின் வெற்றி.

குறிப்பறிந்த, கொள்கைப் பிடிப்புடைய ஒரு குழு நிச்சயம் வெற்றி பெற முடியுமா என்கிற 'டீம் வொர்க்' பற்றிய இந்தியப் பிரகடனம் ராமஜயம். அதனால்தான் ராமனுக்குத் தனியாகச் சந்நிதி இல்லை. ராமனுக்குத் தனியாகப் படமும் இல்லை. அறமே அவனது ஆத்மா. சீதை, பரதன், இலக்குவன், அனுமன் யாவரும் அவனது அங்க அவயவங்கள். அவர்கள் யாருமே தங்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பதே இல்லை. அந்தக் குழு பிரிக்க முடியாதது.

''எவ்வளவு பலசாலியும் தனக்கேற்ற குழுவுடன் இணைகிற போதுதான் அதி உயர்வான வெற்றி பெறுகிறான்'' என்கிற அற்புதமான 'மெஸேஜ்' ராமபட்டாபிஷேக 'க்ரூப் ஃபோட்டோ'வில் எழுதப்பட்டுள்ளது.

இந்தியாவில் பலர் தனித்தனியாகப் பலசாலி... திறமைசாலி... அறிவாளி. ஆனால் குழுவாகப் பணியாற்றத் தகுதி அற்றவர்கள். தன்முனைப்புக் காரணமாக ஒருவரை ஒருவர் வெட்கமில்லாமல் கவிழ்க்கும் இயல்பினர். ஒரு முழுக் குழுவும் வேலைகளைப் பங்குபோட்டால் சுலபமான வெற்றி பெறலாம் என்பதை உணராமல், யார் சிக்கினார்களோ அவர்களை அதிகம் வேலை வாங்கும் நீசத்தனம் நமது நிஜ குணம்.

அகப்பட்ட மருமகளை அதிகம் கசக்கியதால் கூட்டுக்குடும்பங்கள் அழிந்தன. உழைக்கும் தொண்டனை மட்டுமே ஓடஓட விரட்டியதால் கட்சிகள் கலை இழந்தன. களை அடைந்தன.

இந்தியக் கிரிக்கெட் டீமை எடுத்துக் கொள்ளுங்கள். தனித்தனியாக எல்லோரும் நட்சத்திரங்கள்தான். கூட்டமாக ஆடவந்தால் கூட்டு முயற்சி குழம்பிப் போவது ஏன்?

நான் கேள்விப்பட்ட ஒரு ஜோக். ஒரு டைவர்ஸ் கேஸ்... குழந்தை அப்பாவிடமா... அம்மாவிடமா என்பது பிரச்சினை. ''அப்பாவும் அடிப்பார். அம்மாவும் அடிப்பாள். போகமாட்டேன்'' என்கிறது குழந்தை. ''அடிக்காத ஒருவரிடம் குழந்தையை ஒப்படைப்பது என்றால் இந்தியக் கிரிக்கெட் டீமிடம்தான் ஒப்படைக்க வேண்டும். ஏன் என்றால் அவர்கள்தான் பந்தைக்கூட அடிப்பதில்லை'' என்கிறார் நீதிபதி.

இப்போது நிலைமை கொஞ்சம் மாறியிருக்கிறது. மகிழ்ச்சி.

கண்டம் விட்டுக் கண்டம் பறக்கும் பறவைகளிடமிருந்து 'டீம் ஒர்க்' பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படிப் பறக்கும் தெரியுமா? முதலில் ஒரு பறவை. அதன் இரண்டு இறக்கைகளையும் ஒட்டி இரண்டு. அவற்றின் இறகுகளை ஒட்டி நான்கு... இப்படி அவை அம்பு மாதிரி அணிவகுக்கும்.

ஏன் முதல் பறவையின் இறக்கைகளைப் பின்பற்றி நிற்கின்றன தெரியுமா? அதன் இறகு அசைப்பில் காற்று விலகுவதைப் பயன்படுத்திக் கொண்டு அடுத்த பறவை சுலபமாக முன்னேறிவிடலாம்.

ஆனால் அலகாலும் இறகாலும் காற்றைக் கிழிப்பதால் முதல் பறவை மிக விரைவில் சோர்ந்து விடும். ஆனால் கடைசிப் பறவை சுகமாகக் களைப்படையாமல் வரும். மனித இனமாக இருந்தால் முதல் பறவையைச் சாகும்வரை வேலை வாங்குவோம். ஆனால் பறவைகள் பண்பானவை. முதல் பறவை களைத்ததும் பின்னால் கடைசி வரிசைக்கு வந்துவிடும். அடுத்து நிற்கும் பறவை தலைமை ஏற்கும். களைப்பேற்பட்டதும், சுலபமாகப் பறக்கும் கடைசி வரிசைக்கு வந்துவிடும். இப்படி மாறிமாறித் துயரங்களைப் பங்கு வைத்து அந்தக் குழுவே சுலபமாக முன்னேறும்.

குடும்பம், அலுவலகம், பொது இயக்கம் எதுவானாலும் 'நானே எல்லாம்' என்று இழுத்துப் போட்டுக் கொண்டு துயரப்படாது கஷ்டங்களைப் பிறருக்கும் புரியவைப்பவர்கள், பிறரையும் பங்கேற்கச் செய்பவர்கள், அவர்கள் பங்களிப்பை மறவாது பாராட்டுபவர்கள் குழுவாக வெற்றி பெறுகிறார்கள். அந்தக் குழுவிற்கு வெற்றி நிச்சயம்!

## 11. அன்று நடராஜா; இன்று ஏழு கார்!

நீங்கள் அவமதிக்கப்பட்டவரா? பிறரால் அலட்சியப்படுத்தப்பட்டவரா? யாராவது உங்களை அவமானப்படுத்தியிருக்கிறார்களா? ‘ஆம்’ என்றால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. முன்னேறுவதற்கான மூலப்பொருள் உங்களிடம் உள்ளது. நம்ப முடியவில்லையா? இதிகாசங்களைப் பாருங்கள்.

தாய், தந்தை யார் என்று அறிய முடியாத அனாதை என்று கர்ணனைத் துரோணர் இகழ்ந்தார். ‘‘நீ என்ன ராஜகுமாரனா? தேரோட்டி மகன்’’ என்று அலட்சியப்படுத்தினார். விளைவு..? வளர்ந்தான்... வளர்ந்தான்... வானளாவ வளர்ந்தான். தேரோட்டி மகன் என்று கேலி பேசப்பட்டவன், சல்லியன் என்ற அரசன் தேரோட்டத் தேரேறி வந்தான். இகழ்ச்சியே அவனது வாழ்வைப் புகழ்ச்சி நோக்கிய பயணம் ஆக்கியது. எப்படி?

அள்ளிக் கொடுத்து, அள்ளிக் கொடுத்து வள்ளலாக வாழ்ந்தான். அவனிடம் மக்கள் கைஏந்தினர். புலவர்கள் கை ஏந்தினர். அனாதை ஆக்கிய அம்மா குந்தியே கை ஏந்தினாள். அடுத்து தேவேந்திரன் வந்து, அருமை மகன் அர்ஜுனனுக்காகக் கவசகுண்டலங்களைக் கை ஏந்தி வாங்கினான். அதுவும் போதாது என்று அண்டசராசரங்களின் அருமைத் தலைவனாம் ஆண்டவன் கண்ணனே வந்து கை ஏந்தி, ‘‘கொடையால் விளைந்த புண்ணியத்தைக் கொடு’’ என்று கேட்டான். அம்மா, அப்பா பெயர் தெரியாத அனாதை என்று அவமானப்படுத்தப்பட்ட கர்ணன், ‘அம்மா தாயே, நான் அனாதை’ என்று கை ஏந்தாது அம்மா முதல் ஆண்டவன் வரை கை ஏந்திக் கேட்ட வள்ளலான வரலாற்றுக்கான வீர்ய வித்து அவமதிப்பு.

அவமதிப்பு... அலட்சியம்... அவமானம். இவை யாவும் அக்கினிக் குஞ்சுகள். விண்ணில் பாயும் நம் வெற்றிக் கலனுக்கான எரிசக்திகள். பழைய ரயில் என்ஜினில் தகதகவென்று எரியும் நெருப்பைக் கண்டதுண்டா? அந்த நெருப்புதான் ரயிலை நகர்த்தும் ஜீவ சக்தி. அந்த என்ஜினின் நெஞ்சில் நின்று எரியும் நெருப்பு எத்தனை நெடிய பயணத்தை நிறைவேற்றும் தெரியுமா? அப்படியே உங்கள் நெஞ்சில் எரியும் நெருப்பை, அவமதிப்பை, வெற்றிக்கான எரிசக்தியாக்குங்கள்.

ஒரு நிமிடம்..! அவமதித்தவர்களைப் பழிவாங்கத் துடிப்பது அறிவீனம்... அகங்காரம். அவமதித்தவரும் வருந்தும்படியாக - ஏற்கும்படியாக வளர்வதே அங்கீகாரம். உன்னதமான முன்னேற்றம். தன்னை அவமதித்த பிரிட்டிஷ்

அதிகாரியும் மதிக்கும்படி விஸ்வரூபம் எடுத்தவர் மகாத்மா காந்தி. மாறாகப் பழிவாங்கத் துடித்தவர்கள் பாழானதுதான் மிச்சம்.

வேடிக்கையான கதை ஒன்று. ஓர் அரசர் அருமையாகப் பாடிய வித்வானிடம், ‘‘பரிசாக என்ன வேண்டுமானாலும் கேளும் தருகிறோம்’’ என்று அறிவித்தார். வித்வானோ, நாள்தோறும் அரசர் குளிக்கும் காவல்குளத்திற்கு அரசரை அழைத்துவந்து குளத்தில் இறங்கி வாய் கொப்பளித்துத் துப்பினார். காவலுக்கு நின்ற சேவகனைப் பார்த்து, ‘‘பார்... பார்... நன்றாகப் பார்த்துக் கொள்’’ என்று கத்தினார்.

அரசருக்கு ஒன்றும் புரியவில்லை. நடந்தது இதுதான். வித்வான் அரண்மனைக்கு வரும்போது, அது அரசர் குளிக்கிற குளம் என்று தெரியாமல் அதில் இறங்கிக் கைகால் கழுவிவிட்டார். காவலன் அவரை அடித்து, ‘‘ராஜா பார்த்திருந்தால் உன் தலையே போயிருக்கும்’’ என்று தள்ளிவிட்டான். தன்னை அவமதித்த காவலனை அரசர் முன்பு பழி வாங்கத் தமக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திவிட்டார் முட்டாள் பாகவதர். ஆனால் அது சரியல்ல. பின் எப்படி ஜெயிக்க வேண்டும்?

அண்மையில் கவியரசர் கண்ணதாசன் பற்றி அவரது அருமை மகன் காந்தி கண்ணதாசன் ஒரு செய்தி சொன்னார். செட்டி நாட்டிலிருந்து சினிமாக் கனவுகளுடன் பதினாலு வயதுப் பையனாகச் சென்னை வந்தார் கவிஞர். அன்று இரவு படுக்க இடமின்றி மெரினா பீச்சில் காந்தி சிலைக்குப் பின்னால் பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறார் கவிஞர்.

நள்ளிரவு. போலீஸ்காரரின் உருட்டுத்தடி அவரைத் தட்டி மிரட்டியது. காலையில் நகரத்தார் விடுதிக்குப் போக வேண்டும். இரவு மண்ணடி வரை போக முடியாது. அதனால் பீச்சில் படுத்துக் கொள்ள அனுமதி கேட்ட அந்தப் பதினாலு வயதுப் பையனின் கோரிக்கையைப் போலீஸ் நிராகரித்தது. ‘‘படு... படுக்கணும்னா நாலணா குடு’’ என்று காவல் மிரட்டியது. நாலணாவுக்கு வழியின்றிக் கலங்கிய கண்களுடன் காந்தி சிலையில் இருந்து நடந்திருந்திருக்கிறார் கண்ணதாசன்.

அவர் வளர்ந்து கவியரசாகி ‘சுமைதாங்கி’ என்ற சொந்தப் படம் எடுக்கிறார். கதாநாயகனாக நடித்த ஜெமினி கணேசனை எங்கிருந்து நடக்க விடுவது என்று யோசித்த கவிஞர் அதே காந்தி சிலையைத் தேர்ந்தெடுத்தார்.

நள்ளிரவு ஷூட்டிங். ஆனால் படத்தில் இரவு 7 மணி மாதிரி இருக்க பீச் ரோட்டில் நிறைய கார்கள் வரிசையாக வரவேண்டும். ஏழு கார்களை நிற்கவைத்து மாறிமாறி ஒன்றன்பின் ஒன்றாக வருகிற மாதிரி படம் எடுக்கிறார்கள். வீட்டில் இந்தப் படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர், பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். ‘‘இந்தக் கார்களை கவனித்தீர்களா? இவை எல்லாமே நம்முடைய கார்கள். வாழ முடியும் என்ற நம்பிக்கையோடு சென்னை வந்த என்னை இந்த இடத்தில்தான் நாலணா இல்லை என்று போலீஸ் நடக்கவிட்டது... இதே இடத்தில் இன்று என் ஏழு கார்களை ஓடவிட்டுப் படம் எடுத்திருக்கிறேன். நம்பிக்கை என்னை ஜெயிக்க வைத்துவிட்டது’’ என்றாராம்.

எங்கு அவமதிக்கப்பட்டாரோ, அங்கு கவிஞர் தம் வெற்றியை அரங்கேற்றியிருக்கிறார். அவமானம் ஒரு மூலதனம்... இது புரிந்தால் வெற்றி நிச்சயம்!

## 12. காதைத் திருகியவர் காது கொடுத்தார்!

**ஓ**ர் ஊதுபத்தியின் நறுமணம் எவ்வளவு தொலைவு பரவ முடியும்? ஒரு வீடு முழுவதும்..? சரி. எரிகின்ற சந்தன மரத்தின் நறுமணம் எவ்வளவு தூரம் பரவ முடியும்? ஒரு காடு முழுவதும்..? ரொம்ப சரி.

காய்ச்சுகிற நெய்யின் மணம் எவ்வளவு கிலோ மீட்டர் பரவ முடியும்? என்ன கிண்டலா? நெய்யின் நறுமணம் சாப்பிடுகிறவனுக்கும் பரிமாறுகிறவனுக்கும் இடையே பரவினால் அதுவே பெரிய விஷயம். அது எப்படிக் கிலோ மீட்டர் கிலோ மீட்டராகப் பரவ முடியும்..! முடியும் முடியும்... முயன்றால் முடியும்!

கோயமுத்தூரில் ஒரு சின்னக் கடையில் ஸ்ரீமான் மகாதேவ ஐயர் என்பவர் காய்ச்சிய நெய்யின் நறுமணம் கோவை, ஈரோடு, சேலம் வழியாகச் சென்னை, பெங்களூர், ஹைதராபாத் வரை பரவி தில்லி வரை பாய்ந்துள்ளது. நம்ப முடியவில்லையா?

ஆம்... நெய் மணம் கமழ ஸ்ரீமான் மகாதேவ ஐயர் கண்ட ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் ஓர் இனிப்புக் கடை என்ற எல்லையை உடைத்தெறிந்து இந்திய அளவிலான ஒரு தரமான தலைசிறந்த தொழில் நிறுவனம் என்பதற்காக விஸ்வேஸ்வரய்யா விருதினைத் தமிழக ஆளுநர் கைகளால் பெற்றுக் கொண்டது. இது எப்படிச் சாத்தியம் ஆனது?   முயற்சியில் தொடர்ச்சி... எனவே முன்னேற்றத்தின் வளர்ச்சி. கொஞ்சம் விவரமாய்ச் சொல்கிறேன்.

குறைந்த விலை... நிறைந்த விற்பனை என்கிற வணிக மொழியை வழித்தெறிந்து தரமான பொருள், திறமான விற்பனை. சுத்தத்தில் சுகாதாரத்தில் அக்கறை, வரவேற்பு முதல் வழியனுப்பு வரை வாயெல்லாம் சர்க்கரை, பொறுப்புடன் கூடிய பொதுஜனத் தொடர்பு இத்தனையும் இருந்தால் விலை என்ன விலை? விற்பனை அழகிய கலை(!) என்று நிரூபித்தவர்கள் அமரர் மகாதேவ ஐயரின் அருமைப் புதல்வர்கள் கிருஷ்ணன், முரளி. எந்தக் காரியத்தையும் தொடர்ந்து அக்கறையுடன் செய்தால் சமூக அங்கீகாரம் சாத்தியம்; வெற்றி நிச்சயம் என்பதை நிரூபித்து, சிறந்த தொழில் திறனுக்கான விஸ்வேஸ்வரய்யா விருது அண்மையில் பெற்றனர். வியப்பாக இல்லையா?

உடைக்க முடியாத மைசூர்பாகு பற்றிய ஜோக்குகளையெல்லாம் உடைத்தெறிந்தது ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ். ஒரு ஜோக் பாருங்கள். உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு. மனுதாரார், மனைவிக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கும்படி மன்றாடுகிறார். எதற்கு? ‘‘இனி எக்காலத்திலும் ‘பல்நலம்’ கருதி என் மனைவி மைசூர் பாகு செய்யக்கூடாது என்று என் மனைவிக்கு இந்த உச்ச நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும்’’ என்று கேட்கிறார்.

இன்னொரு ஜோக்.   ஒரு பேப்பர் விளம்பரம். ‘‘அன்புள்ள கணவருக்கு, தீபாவளிக்குச் செய்த மைசூர்பாகு முற்றிலும் தீர்ந்துவிட்டது. எனவே இனி அச்சம் இல்லாமல் தாங்கள் வீட்டுக்கு வரலாம். - தங்களைப் பிரிந்துவாடும் மனைவி, மக்கள்.

இப்படிக் கிண்டலடிக்கப்பட்ட மைசூர்பாகு விஷயத்தில் கரைந்து போகும் புதுமையைப் புகுத்தியது முதல் வெற்றி. முழு நெய் என்பது அடுத்து வெற்றி. ஒரு மிட்டாய்க் கடையைத் தொழில் நிறுவனமாக்கியது அதனிலும் பெரிய வெற்றி. எந்தத் தொழிலையும் வித்தியாசமாக, அக்கறையுடன் தொடர்ந்து செய்தால் வெற்றி நிச்சயம்.

இப்போது இன்னொரு ஒற்றை மனிதரின் வெற்றியைச் சொல்லுகிறேன். வானொலி மூலம் வரலாறு படைப்பவர். தமிழகத்தின் பட்டி தொட்டி முதல் பட்டணம் வரை சராசரி முதல் பிரபலங்கள் வரை அறிமுகம் ஆனவர். பல்லாண்டுக் காலத் தொடர்ச்சியான முயற்சியால் பெரும்புகழ் பெற்றவர். யார் தெரிகிறதா? தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

கிராமியமான குரல். எப்போது சிரிக்கலாம் என்று நம்மைத் தயாராக வைத்திருக்கும் பேச்சுப் பாணி. உலகம் முதல் உலோகம் வரை, மருத்துவம் முதல் மகத்துவம் வரை தினம்தோறும் வானொலியில் வாரி வழங்கும் வள்ளன்மை. பெரிய பெரிய விஷயங்களைக்கூடத் தெருவோரத்துக் கடையில் மசால்வடை போடும் அலட்சியத்தில் வாரிக்கொட்டுகிற வார்த்தை வளம். பல்லாண்டுக் காலத் தொடர் முயற்சி... தொடர்ச்சி... வளர்ச்சி என்கிற மூலமந்திரத்தின் சொந்தக்காரர் தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

வயலும் வாழ்வுக்குமான உபகரணங்களை வைத்துக் கொண்டு பொக்ரான் அணுகுண்டு வெடிக்கும் வித்தியாசமான விவசாய விஞ்ஞானி. ஒற்றை மனிதன்; ஆனால் வெற்றி மனிதன்!

பதினைந்து வயதுப் பையனாக அவர் பள்ளியில் படிக்கும்போது... ‘கண்ணன்’ என்ற சிறுவர் பத்திரிகைக்கு கதை எழுதி அனுப்பியிருந்தார். பள்ளிக்கூட முகவரிக்குத் திரும்பி வந்துவிட்டது. வகுப்பாசிரியர் கையில் கிடைத்துவிட்டது. அவ்வளவுதான். ஆசிரியர் காதைப் பிடித்துக் திருகி அவரைப் படாதபாடு படுத்திவிட்டார். ‘‘படிக்கிற வயசுல உனக்கெல்லாம் எதுக்குடா இந்தக் கதை எழுதற வேலை. படிப்பில அக்கறையில்லை. வாங்கற மார்க்கைப் பாரு’’ என்று கேலி செய்து அவர் காதைப் பிடித்துத் திருகியிருக்கிறார். அதன் பிறகு எதற்கெடுத்தாலும் காது திருகும் திருப்பணி ஆசிரியர் கைங்கர்யம். அடிக்கடி தென்கச்சியின் காதுகள் ஆசிரியர் வசம்.

பல்லாண்டுக்குப் பிறகு வானொலியில் சேர்ந்து ‘இன்று ஒரு தகவல்’ நிகழ்ச்சி மூலம் தென்கச்சி புகழ் பெற்ற பிறகு நிலையத்துக்கு ஒரு கடிதம் வருகிறது. ‘‘ஐயா... சென்னை வானொலி நிலையம் கடந்த சில வருடங்களாக ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் ‘இன்று ஒரு தகவல்’ என்ற நிகழ்ச்சியை நான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்று தற்போது இங்கேயுள்ள மடம் ஒன்றில் வேலை

செய்துவருகிறேன். தினம்தோறும் வானொலியில் தகவல் தரும் அந்த மதிப்புக்குரிய பெரியவருடன் தொடர்பு கொள்ள விரும்புகிறேன். எனவே அவருடைய பெயர் என்ன? முகவரி என்ன என்பதைத் தெரியப்படுத்த இயலுமா?'' என்று கேட்டு அடியில் கையெழுத்திட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தை எழுதியவர் வேறு யாருமல்ல. தென்கச்சி சாரின் காதுகளைத் திருகிய அதே ஆசிரியர். பிறகு தென்கச்சி கோ. சுவாமிநாதன் அவர்கட்கு அவர் எழுதியிருந்த கடிதத்தில், தனது மாணவன் என்ற நினைவின்றி ஒரு மகாபெரியவர் என்ற நினைவில், ''தினமும் தவறாமல் தங்கள் அறிவுரைகளைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்'' என்று எழுதியிருந்தார். ஒரு காலத்தில் தென்கச்சியின் காது ஆசிரியர் வசம் இருந்தது. தென்கச்சி ஜெயித்ததும் ஆசிரியர் காது இவர் வசம் இருக்கிறது.

வெற்றி நிச்சயம் தொடரில் மேற்கோளாகக் காட்டும் தகுதி ஆப்ரஹாம் லிங்கனுக்கும் ஜார்ஜ் வாஷிங்டன்னுக்கும் மட்டும் இல்லை. வானொலியில் வரலாறு படைக்கும் தென்கச்சிக்கும், இனிப்புத் தொழிலில் சாதனை செய்யும் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சகோதரர்களுக்கும் நிச்சயம் உண்டு.

தொழிலில் தொடர்ச்சி + முயற்சி = வளர்ச்சி என்ற சூட்சுமம் புரிந்தால் வெற்றி நிச்சயம்!

## 13. அச்சம் என்பது மடமையடா!

**வா**ழ்க்கையில் எப்போதோ ஒரு முறை மரணத்தைச் சந்திக்கிறவன் வீரன். மரணத்திற்கு மத்தியில் எப்போதோ ஒருமுறை வாழ்க்கையைச் சந்திக்கிறவன் கோழை. இந்தியா வீரர்களின் பூமியாக இருந்தது. இன்று கோழைகளின் சிறைக் கூடமாக இருந்து தொலைக்கிறது. இது அவமானப்பட வேண்டிய அசிங்கம்.

மொகலாயப் படைஎடுப்பையும் அதன்பின் நடந்த ஆங்கிலேய ஆக்கிரமிப்பையும் தொடர்ந்து அடிமைத்தனம் மக்கள் மனத்தில் வேரூன்றிவிட்டது. இந்த மண்ணின் மானப் பசை காய்ந்துவிட்டது. காயடிக்கப்பட்ட மாடுகளைப் போல ஆண்மை அழிந்தொழிந்த அடிமைப் புத்திக்காரர்களாக இந்திய ஜன சமூகம் இருந்தும் இறந்து கிடக்கிறது. இந்தியா

ஜனநாயக நாடு என்பதைவிட பிணநாயக நாடு என்றே எனக்குக் கோபம் கொப்பளிக்கிறது.

கூச்சம் இல்லாமல் கூட்டணி மாறும் அரசியல் வியாபாரிகள், தேர்ந்தெடுத்த மக்களுக்கும் தெரிவு செய்த கட்சிக்கும் துரோகம் இழைக்கும் அரசியல் வியாதிகள், ஊழலே உருவமான பல தலைவர்கள், உழைக்காமல் பிழைக்கும் பல அரசு ஊழியர்கள், அரசியல் வெறியர்களின் அராஜகம், அக்கிரமத்திற்கு அரசு எந்திரத்தைக் கூட்டிக் கொடுக்கும் சில மானம் கெட்ட அதிகாரிகள், வாதியும், பிரதிவாதியும் செத்த பிறகு தீர்ப்புச் சொல்லும் அதிமேதாவித்தனமான நீதிநியாயங்கள், எடை குறைவான ரேஷன், கண் எதிரில் கற்பழிப்பு, பேட்டை தாதாக்களின் ரவுடித்தனம், லஞ்சம், வஞ்சம், அநீதி, அக்கிரமம், அநியாயம் எதுவுமே இன்று இந்தியரைப் பாதிக்கவில்லை. மாறாகப் பயந்து சாகிறார்கள்.

அன்றைய பாரத புத்திரர் ‘‘சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்’’ என்று பாரதி பாடினார். இன்றும் அவனே போலீஸைக் கண்டு அஞ்சுகிறான். பண்ணையாரைக் கண்டு பயந்து நடுங்கிய காலம் போய் பாரத புத்திரன் பணத்தாசை பிடித்த பல அதிகாரிகளைப் பார்த்துப் பயப்படுகிறான்.

‘‘அச்சம் என்பது மடமையடா’’ என்று கையைக் காலை ஆட்டி யாராவது பாடினால் கையைத் தட்டுகிற தமிழ்நாட்டு மக்கள், அராஜகத்தின் முன்னால் கையைக் காலைக் கட்டிக்கொண்டு பயந்து சாகிறார்கள்..! பயம்... பயம்... பயம்... இதிலிருந்து வெளியே வா இந்தியனே..! வெற்றி நிச்சயம்.

ஒரு ரயில் நிலையத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். நான்கைந்து பிளஸ்டூ மாணவர்கள் என்னைக் காட்டிக் காட்டிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சன் டி.வி.யில் பார்க்கிற, தினமணி கதிரில் எழுதுகிற சுகி. சிவம் நான்தானா என்று அவர்களுக்குச் சந்தேகம். ஆனால் என்னிடம் வந்து பேசப் பயம்.

நானே அவர்களை அருகில் அழைத்து அறிமுகப்படுத்திக் கொண்டேன். என்னைப் பார்த்துப் பேச ஏன் பயப்பட வேண்டும்? இளையபாரதத்தைப் பார்த்து எனக்குக் கவலையாக இருக்கிறது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஒரு மாணவன் தயங்கித் தயங்கி autograph கேட்டான்.

பொதுவாக நான் autograph வாங்குவதை விரும்புவதில்லை. அதனால் எந்தப் பயனும் இல்லை என்பது என் கோட்பாடு. இருந்தும் அவனைக்

காயப்படுத்தாமல், ‘‘தம்பி autograph வாங்குபவனாக இராதே... அவசியம் என்றால் போடுகிறவனாக இரு’’ என்றேன்.

இதைவிட அந்த இளைஞனுக்கு நான் வேறு நல்லது என்ன சொல்ல முடியும்? மாணவன் முகம் வாடிவிட்டது. இன்றைக்கு மாணவர்கள் ஆசிரியரோடு பேசப் பயப்படுகிறார்கள். ஆங்கிலத்தில் பேச அதிகமாகவே பயப்படுகிறார்கள்.

பயப்படாதே! ஆங்கிலத்தைச் சரியாகப் பேச முயற்சி செய். தவறாக இருந்தாலும் கவலைப்படாதே... பேசு... அது அந்நிய மொழி. அதைச் சரியாகப் பேசாவிட்டாலும் குற்றம் இல்லை. யாராவது இந்தியருக்கு ஆங்கிலேயர் செய்த குற்றங்களோடு ஒப்பிட்டால் இது மிகச் சிறியது!

தவறைச் சுட்டிக் காட்டினால் வெட்கப்படாதே... நன்றி சொல். பிழையின்றி ஆங்கிலம் பேச அவர் உனக்கு உதவ முடியுமா என்று கேள். மகாத்மா காந்தியின் ஆங்கிலத்தில் ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி பிழை கண்டபோது காந்தி அப்படித்தான் உதவி கேட்டார்.

அப்படிக் கேள். உருப்படுகிற வழியைப் பார்... பயப்படாதே... வீரனாகவே இரு! அடிக்கடிச் சாகாதே! ஒரு முறைதான் சாக வேண்டும். எவ்வளவு பெரிய மனிதரைப் பார்க்க நேர்ந்தாலும் துணிவுடன், நேராகப் பார். குழப்பம், தலைகுனிதல், தயக்கம், பயம், உளறல் இவற்றைத் தூக்கிக் குப்பையிலே போடு.

இளையபாரதமே ஜெயிக்கிற வழியைப் பார். ஔரங்கசீப் டில்லி பாதுஷாவாக இருந்த போது அம்பர் என்கிற சின்ன நாட்டிற்கு ஜெயசிங் என்கிற பதின்மூன்று வயதுச் சிறுவன் பட்டத்திற்கு வந்தான். அவனைப் பயமுறுத்தி வைக்கும் எண்ணத்தில் டில்லிக்கு வரும்படி பணித்தார் பாதுஷா.

அவனது தாயும் அமைச்சர்களும் அஞ்சினர். ஆனால் சக்கரவர்த்தி முன்பு நடந்துகொள்ள வேண்டிய மரபுகள், முறைகளைக் கேட்டறிந்து ஜெய்சிங் டில்லி சென்றான். சிங்கக் குட்டியைப் போல் தன்முன் வந்து நின்ற ஜெய்சிங்கை ஔரங்கசீப் உற்றுப் பார்த்தார்.

நம்மைக் கண்டு இவனுக்குப் பயம் வரவில்லையே என்று கோபம் அடைந்த பாதுஷா, சிம்மாசனத்தில் இருந்து திடுமென்று குதித்து ஜெய்சிங் அருகில் வந்து

அவன் கைகளைப் பிடித்தார். பற்களை நறநற என்று பயமுறுத்தும் பாணியில் கடித்தார். ஜெய்சிங் அஞ்சவில்லை. அசரவில்லை! ஔரங்கசீப் ஆச்சர்யம் அடைந்தார். ஜெய்சிங் கைகளை இறுக்கியபடி, ‘‘சிறுவனே உனக்குப் பயமாக இல்லையா? இப்போது நான் உன்னைத் தண்டித்தால் என்ன செய்வாய்? எப்படிக் காப்பாற்றிக் கொள்வாய்?’’ என்றார்.

ஜெய்சிங் சிரித்துக் கொண்டு, ‘‘இத்தனை பெரிய டில்லி பாதுஷாவே என் கைகளைப் பிடித்து எனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கும்போது நான் எதற்குப் பயப்பட வேண்டும்? யாரிடம் பயப்பட வேண்டும்?’’ என்று சாமர்த்தியமாகப் பதில் கூறினான். அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, ‘‘பலே’’ என்று பாராட்டி பக்கத்தில் ஆசனம் அளித்தார் ஔரங்கசீப் என்கிறது வரலாறு!

அச்சத்தை வென்றால் வெற்றி நிச்சயம்.

## 14. நம்பினோர் கெடுவதில்லை!

**சி**ல நூறு மைல் பயணம் செய்வதானால் நீங்கள் எவ்வளவு முன் ஏற்பாடுகள் செய்துகொள்வீர்கள்? வாகன வசதி, உணவு ஏற்பாடு, வழியில் தங்க, ஓய்வெடுக்க வாய்ப்பு உண்டா, என்றெல்லாம் எவ்வளவு கவலைப்படுவீர்கள்?

உடைத்துச் சொன்னால், கார் ரிப்பேர் ஆகலாம்; உணவு கிடைக்காமல் போகலாம்; ஓய்வெடுக்க வசதியான இடம் இல்லாமல் போகலாம் என்று பயப்படுவீர்கள். சுகமாகப் போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையைவிடச் சிரமப்படுவோமோ, போய்ச் சேரமாட்டோமோ என்கிற அவநம்பிக்கைதான் பலருக்கு அதிகமாக இருக்கும். மனிதனுக்கு இயற்கை கொடுத்துள்ள அறிவு, வருமுன் காக்கும் திறன். ஆபத்துகளை எதிர்பார்க்கும் முன் எச்சரிக்கை இன்று அவநம்பிக்கையை உருவாக்குகிறது.

ஆனால் கனடாவிலிருந்து மெக்ஸிகோவுக்கு ஆயிரக்கணக்கான மைல்கள் நம்பிக்கையோடு ஆண்டுதோறும் கூட்டம் கூட்டமாக ஒரு பயணம் நிகழ்கிறது. பயம் இல்லை... அவநம்பிக்கை இல்லை... வழியில் உணவு கிடைக்குமா கிடைக்காதா என்கிற கவலை இல்லை... சுகமாக உற்சாகமாக ஆடிப்பாடி அந்தப் பயணம் நடக்கிறது. பயணம் செய்வது யார் தெரியுமா? பட்டாம்

பூச்சிகள். வண்ணத்துப் பூச்சிகள். கோடி கோடியாகப் பறக்கின்றன. பரந்து விரிந்து கிடக்கும் பிரபஞ்சத்தை அவை நம்புகின்றன. உணவளிக்கும், ஓய்வளிக்கும், நமக்கு மரணம் நிகழாது என்று உலகத்தின் மீது நம்பிக்கை வைத்துப் பட்டாம் பூச்சிகள் கனடாவிலிருந்து மெக்ஸிகோவுக்குக் கோடிக் கணக்கில் ஆண்டுதோறும் பறந்து செல்கின்றன.

நமது தாய்மண் நமக்கு வாழ்வு தரும் என்ற நம்பிக்கை நமக்கில்லை. ஆனால் வேடந்தாங்கலையும் அதில் உள்ள ஏரியையும் அதன் சுற்று மரங்களையும் நம்பி, கண்டம் விட்டுக் கண்டம் கடந்து பட்சிகளும் பறவைகளும் வருடம்தோறும் வருகின்றன. இந்த உலகம் நம்மைக் காப்பாற்றும்; உணவளிக்கும்; வாழ இடம் கொடுக்கும்; வழி கொடுக்கும் என்று பட்டாம் பூச்சிகளும் பறவைகளும் நம்பிக்கைப் பாடம் நடத்துகின்றன. அந்தப் பாடத்தை நீங்கள் படித்தது உண்டா? நம்புங்கள்... நம்புங்கள்... வெற்றி உண்டாகும்.

இன்று கணவன், மனைவியை நம்புவதில்லை. மனைவி கணவனை நம்புவதில்லை. அது வீடா... இல்லை. இல்லை. நரகம். நண்பர்கள் ஒருவரை ஒருவர் நம்புவதில்லை. நட்பா அது? இல்லை. இல்லை. அது வியாபாரம். வியாபாரத்திலேயே பங்குதாரர்கள் ஒருவரை ஒருவர் நம்புவதில்லை. தொழில் கூடமா அது? இல்லை துரோகிகளின் கூடாரம்.

கூட்டு வணிகம் செய்யும் இரண்டு பார்ட்னர்கள் இரவு ஒரு திருமண விருந்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் அலறினார். ''ஆ! வரும் அவசரத்தில் கடையில் பணப்பெட்டியைப் பூட்டாமல் வந்துவிட்டேன். எவனாவது திருடினா என்னாவது?'' என்றார். இன்னொரு பார்ட்னர் ''டேய்! நம்ம இரண்டு பேருமே இங்க இருக்கோம். அப்புறம் யாரு திருடப்போறா... கவலையை விடு'' என்றார். எப்படி இருக்கு கதை?

பல்லாண்டுகளாகப் பணிபுரிந்தாலும் தன் ஊழியர்களைச் சில முதலாளிகள் நம்புவதே இல்லை. கொட்டிக் கொட்டிக் கொடுத்தாலும் முதலாளிகளின் அன்பை, அக்கறையைச் சில தொழிலாளிகள் நம்புவதே இல்லை. நம்பிக்கை இல்லாத இடம் நரகமே! நரகம் மட்டுமே.

நாலு நண்பர்கள் ஓட்டலுக்குப் போனார்கள். கடைசியாக ஐஸ்கிரீம் வந்ததும் பில்லைப் பார்த்ததும் சுரீர் என்றது. கையில் உள்ள காசைவிட பில் இருபது ரூபாய் அதிகம். ஐஸ்கிரீம் வேண்டாம் என்றால் அசிங்கம். இருப்பதில் சின்னப்

பையனைப் பார்த்து ‘‘நீ ஓடிப்போய் வீட்டில் இருந்து இருபது ரூபாய் கொண்டுவா. பில் கொடுக்கலாம்’’ என்றார்கள். ‘‘முடியாது... நான் போனதும் நீங்கள் சாப்பிடுவீர்கள்... நான் வருவதற்குள் என் ஐஸ்கிரீம் உருகி இருக்கும். போகமாட்டேன்’’ என்றான். ‘‘நீ திரும்பி வரும் வரை சாப்பிடமாட்டோம்’’ என்றார்கள். ‘‘நிஜமா?’’ என்றான். ‘‘சத்தியமாக’’ என்றார்கள். அரை மனதுடன் பொடியன் புறப்பட்டான். கால்மணி ஆனது. அரைமணி ஆனது, பொடியன் வரவே இல்லை. ஐஸ்கிரீம் உருக ஆரம்பித்தது. எல்லோரும் தண்ணி ஐஸைக் குடிப்பதைவிட பொடியன் வந்ததும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அவரவர் ஐஸ்கிரீமை வாயில் வைத்ததுதான் தாமதம்... டபக்கென்று ஓடி வந்த பொடியன் லபக்கென்று தன் ஐஸ்கிரீமை எடுத்துக் கொண்டு ‘‘தெரியும்... நீங்க இப்படிப் பண்ணுவீங்கனு தெரியும். அதனாலதான் நான் போகவே இல்லை. கைகழுவுற இடத்திலேயே மறைஞ்சிருந்து உங்களை கவனிச்சுகிட்டே இருந்தேன்’’ என்றான். நாலு பேரும் ஹோட்டல்காரனிடம் உதைபட நேர்ந்தது.

மராட்டிய மன்னன் சிவாஜி வாழ்வில் ஒரு நிகழ்ச்சி. சிவாஜியைக் கொல்ல படுக்கையறைக்குள் வந்த சிறுவனைக் கைது செய்து மன்னர் முன் கொண்டு வந்தனர். ‘‘ஏன் என்னைக் கொல்லத் துணிந்தாய்?’’ என்றார் சிவாஜி. ‘‘வறுமை... என் தாய் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறாள். கையில் பணம் இல்லை. உங்களைக் கொன்றால் பணம் தருவதாக உங்கள் எதிரி ஒருவர் கூறினார். எனவே கொல்லத் துணிந்தேன்’’ என்றான். ‘‘மன்னனைக் கொல்ல முயன்றதால் உனக்கு மரண தண்டனை’’ என்றார் அருகிலிருந்த தாணாஜி. ‘‘சாவதற்கு முன் என் தாயைப் பார்க்க அனுமதி வேண்டும். ஒரு கைதியாக அல்ல... அவள் துன்பப்படுவாள். சுதந்திரமாக என்னை அனுப்ப வேண்டும்’’ என்றான் இளைஞன். ‘‘தப்பியோட எண்ணமா? அனுமதிக்க மாட்டேன்’’ என்றார் தாணாஜி. ‘‘நான் மானமுள்ள மராட்டியன். மராட்டியன் சொன்ன சொல் தவறுவதில்லை’’ என்றான் இளைஞன். சிவாஜி நம்பினார். அனுமதித்தார். குறித்த நேரத்தில் மன்னர் முன் வந்து மரண தண்டனை தரும்படிக் கேட்டான் இளைஞன். ‘‘உன்னை மாதிரி நம்பிக்கைக்குரியவர்களை யாராவது கொல்வார்களா?’’ என்று தன் படையில் இளைஞனைச் சேர்த்துக் கொண்டார் சிவாஜி.

பிறரை நம்புவதில் சில சிக்கல்கள் உண்டு. என்றாலும் நம்புங்கள். பிரபஞ்சத்தை நம்புங்கள். அது நமக்குச் சாதகமானது என்று நம்புங்கள். கடவுளுக்கே நம்பர்

என்று ஒரு பெயர் உண்டு. என்ன அர்த்தம் தெரியுமா? நம்மவர், நம்பிக்கைக்குரியவர் என்பதால் கடவுள் நம்பர் எனப்பட்டார். பெற்ற தாய், பிள்ளையை நம்பவில்லை என்றால் பெற்ற வயிறு சாக்கடைக்குச் சமம்! பெற்றோரை நம்பாத பிள்ளைகள் பிள்ளைகளே அல்ல. கொள்ளிகள்.

நம்பினோர் கெடுவதில்லை. நம்புங்கள். நம்புங்கள். வெற்றி நிச்சயம்!

## 15. தன்னம்பிக்கை என்பது சாராயம் அல்ல!

**த**ன்னம்பிக்கை, சுயமுன்னேற்றம் குறித்து இப்போது ஒரு விழிப்புணர்வு இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் நிறைய சொற்பொழிவுகள், வகுப்புகள், பயிலரங்குகள், பணிமனைகள் நடைபெறுகின்றன.

பயிற்றுநர்கள் பலர் தலைமைப் பண்பு, நிர்வாக இயல் குறித்துப் பயிற்சி தருகிறார்கள். இது நல்ல மாற்றம்தான். ஆனால்...

ஆனால் என்ன ஆனால்? பயிற்றுநர் பலர் வெற்றியாளரா என்றால், பதில் மௌனம். இன்னொரு பக்கத்தில் இன்னொரு ஆபத்து... வெறியேற்றுவது போல, ''முடியும்... முடியும்... எல்லாமே எல்லாராலும் முடியும்'' என்று 'மோட்டிவேட்' செய்கிறார்கள்.

பைத்தியக்காரர்கள். தன்னம்பிக்கை உரைகள், சுயமுன்னேற்றப் பயிலரங்குகள் சாராயக் கடை, கள்ளுக் கடை மாதிரி வெறியேற்றும் என்றால், போதை தரும் என்றால், அவை ஆபத்தில் கொண்டு போய்விடும் என்று எச்சரிக்கிறேன்.

எல்லாராலும் எல்லாமே முடியும். உண்மைதான். ஆனால் அதற்கு எவ்வளவு முயற்சி தேவைப்படும் தெரியுமா? கால விரயம் கணக்கில் கொள்ள வேண்டாமா? முதலில் அது அவசியமா? சுகி. சிவம் வெற்றிகரமான பேச்சாளர் என்று யாராவது சொன்னால் நான் மறுக்கமாட்டேன். ஒரு வெற்றிகரமான எழுத்தாளரும்கூட என்றால் அது நிரூபிக்கப்பட்ட விஷயம்... ஆனால் சிறப்பாகப் பரத நாட்டியம் ஆடுவார் என்றால் பொய்... பிரமாண்டமான பொய். அதை நிரூபிக்க நான் முயற்சி செய்ய வேண்டாமா? ஏன், ஆட

முடியாதா? முயற்சி இருந்தால் முடியாதா என்று கேட்டால் ஒரே பதில்... அது என்னளவில் வேண்டாத வேலை!

அதே மாதிரிதான்... ஒருவரால் எல்லாம் முடியும் என்று வெறியேற்றினால் ஒவ்வொன்றாக முயன்று காலத்தை வீணாக்கக் கூடாது. பிறகு தோற்றவர் பட்டியலில் உங்கள் பெயர் பதிவாகலாம்.

அவசியமான ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதிலும் 1, 2, 3 என்று முக்கியத்துவத்தை வரிசைப்படுத்திக் கொண்டு கவனமாக முயன்று ஒருவர் வெற்றியாளர் ஆக வேண்டும்.

கிராமப்புறங்களில் திட்டுவார்கள்... ‘‘நாய் வாய் வைத்த மாதிரி’’. ஒவ்வொன்றிலும் நுழைவது அநாவசியம். தேர்ந்தெடுத்துச் செயல்படுங்கள் - வெற்றி நிச்சயம்.

இன்றைய ‘மோட்டிவேஷனல்’ முயற்சிகள் சிலரை வெற்றிப் போதைக்குள் வீழ்த்தும் சாராயக் கடைகள் மாதிரிப் புறப்பட்டுவிட்டன. அவை குறித்த என் எச்சரிக்கைகளும் கண்டனங்களும் உண்மையானவை. சமூக அக்கறை மிக்கவை. அரைகுறை அறிவுடையவர்கள், வெற்றியின் சூட்சுமம் விளங்காதவர்கள், தோல்வித் தேவதையின் தூதுவர்கள் பலர் இன்று பயிற்றுநர்களாகப் பவனி வருகிறார்கள். எச்சரிக்கை!

யாரோ சொல்லிவிட்டார்கள் என்பதற்காக எல்லா விஷயங்களிலும் மூக்கை நுழைத்துக்கொண்டு எல்லாமே முடியும் என்று இழுத்துப் போட்டுக்கொண்டு நீங்கள் அவமானப்பட வேண்டாம். நம்மிடத்தில் உள்ள திறமைகளை முதலில் வரிசைப்படுத்திக் கொள்வோம். முன்னேற்றத்துக்குத் தேவைப்படும் திறமைகளையும் அடுத்து வரிசைப்படுத்திக் கொள்வோம். பிறகு இரண்டு பட்டியலும் சரி பார்க்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டிய திறமைகளில் கவனம் செலுத்தினால் நிச்சயம் வெற்றியைக் குவிக்கலாம்; தோல்வியைத் தவிர்க்கலாம்.

அரைகுறையான தன்முனைப்புப் பயிற்றுநர்கள் திருவள்ளுவரிடம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியச் செய்தி ஒன்று இருக்கிறது.

‘உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்’ என்பது அவரது ஆழம் மிக்க குறள்.

ஊக்கத்தின் ஊக்கி என்கிற வேலைதான் மேலே நான் விவரித்தது. அது தோல்வியில் முடியும் என்ற திருவள்ளுவர் கணிப்பு நுட்பமானது, திட்பமானது. அது அனுபவக் கொடை.

ஆஹா... திருவள்ளுவரை நான் வழிமொழிவதா என்று தமிழ்நாட்டின் வறட்டு அறிவாளிகள், செல்லாக்காசுகள் சிலர் புருவத்தை உயர்த்துவார்கள் என்பதை நான் அறிவேன். ஆம், என்னைத் திருவள்ளுவரின் துரோகியாகச் சித்திரித்து ஒரு தோல்வியாளர்கள் கூட்டம் எழுதியும் பேசியும் சந்தோஷப்படுகிறது. அவர்கள் கிடக்கிறார்கள்...

வள்ளுவக் கிழவனின் செல்லப் பேரனாகிய நான் என் வழிவழிச் சொத்தை, பரம்பரைச் செல்வத்தை உங்களோடு பங்கிட்டுக் கொள்கிறேன். இந்தக் குறள் Motivational Trainers சிந்திக்க வேண்டிய குறள்.

நடிப்பின் இமயமாக விளங்கிய மாபெரும் நடிகர் அரசியல் கட்சி ஆரம்பித்து பெரும் துன்பம் அடைந்தார், நினைவிருக்கிறதா?

உன்னதமான கர்நாடக இசையின் சக்கரவர்த்திகள் திரைப்படம் எடுத்துக் கையைச் சுட்டுக்கொண்டார்கள், நினைவிருக்கிறதா?

பாரம்பரியப் புகழ் மிக்க தொழில் நிறுவனங்கள் சில தங்களுக்குத் துளியும் சம்பந்தமில்லாத புதிய துறைகளில் காலடி வைத்துக் கல்லடி பட்ட கதை உங்களுக்கு மறந்திருக்காதே!

வாயும் வயிறும் வேகவேக ஊர் ஊராகப் போய்ப் பேசிச் சம்பாதித்த பணத்தை ஒரு பைனானஸ் கம்பெனியில் பார்ட்னர்ஷிப் வைத்து, புகழ் பெற்ற ஒரு சமயச் சொற்பொழிவாளர் தொலைத்தார்!

இது பலருக்கும் தெரியாத ரகசியம்! இப்போது வெளிப்படுத்தி இருக்கிறேன். இவை எதனால் நடந்தன? ஊக்கத்தின் ஊக்கி... இடைக்கண் நிகழ்ந்த முறிவுகள்!

எப்போதும் வெற்றியைப் பற்றி எழுதுகிற சுகி. சிவம் தோல்வியைப் பற்றி எழுதுகிறாரே என்று அஞ்ச வேண்டாம்.

கார் வாங்கும்போது என்ஜின் வேகம், குதிரைத் திறம், பறக்கும் பலம் பார்த்தால் மட்டும் போதாது. பிரேக் பற்றிய பிரக்ஞை வேண்டும்.

கிரேக்கத்திலிருந்து இந்தியா வரை படை எடுத்து வந்து இடையில் செத்துப்போய் நாடு திரும்ப முடியாமல் போன அலெக்ஸாண்டரின் தோல்வி வரலாற்றில் கவனிக்கப்பட வேண்டியது. அதே மாதிரி தெரியாத விஷயங்களிலும் புரியாத தொழில்களிலும் கவனத்தையும் காலத்தையும் தொலைத்துவிட்டு இடைக்கண் முறிதல் வாழ்க்கையில் கவனிக்கப்பட வேண்டியது. முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது.

எனது எழுத்தில் இம்முறை எதிர்மறைச் சிந்தனைகளின் நெடி வீசுகிறதே என்று கவலை வேண்டாம். குண்டும் குழியுமான தோல்வியின் பாதையே இது என்று கண்டுபிடித்து அதைத் தவிர்த்துவிட்டு நீங்கள் பயணம் செய்தால் வெற்றி நிச்சயம்.

## 16. கவலைப்படாதே சகோதரா!

வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறவர்கள் பிறரது கருத்துகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் இதற்கொரு எல்லை இருக்கிறது. அந்த எல்லையைத் துல்லியமாக அடையாளம் கண்டு கொண்டவர்கள் மட்டுமே பிறரால் பாதிக்கப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க முடியும். நினைத்த வெற்றிகளைக் குவிக்க முடியும். அளவுக்கு மீறிப் பிறரது விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தால் குழப்பம் வரும்; முன்னேற்றம் தடைப்படும்.

நமது தோற்றம், நாம் உடுத்தியிருக்கும் துணிகள், தலை அலங்காரம், பயன்படுத்தும் பொருள்கள், தனித் திறன்கள் இவற்றைப் பிறர் பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்குமே இருக்கும். அதிலும் இளைய தலைமுறைக்குச் சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால் அது நடக்கவில்லை என்றால் தளர்ந்து போவதோ, முகமும் அகமும் வாடுவதோ சரிதானா? பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, பிறர் கேலி செய்துவிட்டால் தளர்ந்து

போவது இளைய தலைமுறைக்குரிய இயல்பான விஷயம். இதிலிருந்து வெளியே வாருங்கள் என்று அழைக்கிறேன்.

ஒரு புகழ் பெற்ற டி.வி. விளம்பரம் பார்த்திருப்பீர்கள். கல்லூரிச் சிறுசுகளின் கலர் கலரான அணிவகுப்பு. ஒரு இளசைச் சில இளசுகள் கிண்டலடிக்கும் விளம்பரம்.

''இந்த வாட்டி நீ பர்ஸ்ட் ரேங்க் வாங்க மாட்ட போல இருக்கு'' என்று ஒருத்தி கேலி செய்ய, ''ஐ டோண்ட் கேர்'' என்று விட்டு விட்டுப் பதில் சொல்லும் ஒரு பாப்பா.

''இப்படித் தின்னுகிட்டே இருந்தா நீ குண்டாயிருவ'' என்று சொல்லிப் பலரும் சிரிப்பார்கள். அதற்கும், ''ஐ டோண்ட் கேர்'' என்பதே பதில்.

''இதென்ன உன் முகத்தில'' என்று ஒரு முகப் பருவை அவள் முகத்தில் சுட்டிக் காட்டியதும், ''அம்மா'' என்று அந்தப் பெண் சிணுங்கியதும் ஒரு முகப்பரு விளம்பரம் திரையில் ஜொலிக்கும்.

இந்த விளம்பரத்தின் முக்கியக் குறிப்பு - பிறர், தங்களது விமர்சனம் நம்மை மிகவும் பாதிக்க வேண்டும் என்ற ஆசையுடன் விமர்சனம் செய்கிறார்கள். இது உண்மை என்றால், நாம் பாதிக்கப்பட வேண்டும் என்றே பிறர் செய்யும் விமர்சனங்களால் நாம் பாதிக்கப்படக் கூடாது என்கிறேன் நான், சரியா?

நம் மீது அக்கறையுடன் விமர்சிப்பவர்கள் விமர்சனத்தை மதிக்கலாம். ஆனால் எல்லோருடைய விமர்சனங்களையும் பொருட்படுத்த வேண்டியதில்லை. இந்த அணுகுமுறை நமது வெற்றி மாளிகையின் முக்கியமான படிக்கட்டு என்று நான் கருதுகிறேன்! சரியா?

முற்றும் துறந்து முனிவராகப் போனால்கூட முட்டாள் உலகம் அவரை விடுவதில்லை. குறை சொல்லும்... கேலி பேசும்...

ஓர் உதாரணம் சொல்லட்டுமா?

பட்டினத்தார் எத்தனை பெரிய துறவி! கோடிக்கணக்கான சொத்தை அப்படியே விட்டுவிட்டுக் கோவணத்துடன் வெளியேறிய கடுந்துறவி. சோற்றாசைகூட இல்லாத சுத்தமான சன்யாஸி. கையில் ஓடு வைத்திருந்த பத்ரகிரியாரைச்

சொத்து வைத்திருக்கும் குடும்பஸ்தன் என்று கிண்டலடித்த அப்பழுக்கற்ற துறவி. அவரையே உலகம் என்ன பாடுபடுத்தியது தெரியுமா?

நடந்த களைப்பால் வயலில் படுத்திருந்தார் பட்டினத்தார். அறுவடை நடந்திருந்த வயல் அது... குச்சி குச்சியாய்ப் பூமியில் இருந்து கிளம்பி அறுபடாதிருந்த வைக்கோல் அவர் உடம்பில் குத்திக் கொண்டிருந்தது. அதைச் சட்டை செய்யாமல் (சட்டை இல்லாமல்) படுத்துக் கிடந்தார். இருக்கும் போதே இறந்து போன மாதிரி இருந்தார்.

அந்த வழியாகப் போன இரண்டு பெண்கள் வரப்பு வழியாக நடந்து போக முடியாதபடி பட்டினத்தார் வரப்பு மீது தலை வைத்துப் படுத்திருந்தார். ஒருத்தி, ‘‘யாரோ மகான்’’ என்று அவரை வணங்கி வரப்பிலிருந்து இறங்கி நடந்தாள். மற்றொருத்தியோ, ‘‘ஆமாம்... ஆமாம்... இவரு பெரிய சாமியாருக்கும்... தலையணை வைச்சுத் தூங்கற சுகம் மாதிரி வரப்பு மேல தலை வைச்சுத் தூங்கறான் பாரு... ஆசை பிடிச்சவன்’’ என்று கடுஞ்சொல் வீசினாள். அவர்கள் அங்கிருந்து போனதும் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார், ‘‘ஆஹா... நமக்கு இந்த அறிவு இது நாள்வரை இல்லையே’’ என்று வருந்தி வரப்பிலிருந்து தலையைக் கீழே வைத்துப் படுத்தார்.

சற்று நேரத்தில் அந்த இரண்டு பெண்களும் அதே வழியாகத் திரும்பி வந்தனர். வரப்பிலிருந்து இறங்கிக் கீழே தலை வைத்திருந்த பட்டினத்தாரைப் பார்த்து முதல் பெண் பரிதாபப்பட்டு, ‘‘பார்த்தியாடி... நீ சொன்னதைக் கேட்டு உடனே கீழே இறங்கிப் படுத்துட்டாரு... இப்பவாவது ஒத்துக்கோ... இவரு மகான்தானே..!’’ என்றாள்.

அவளோ, ‘‘அடி போடி... இவனெல்லாம் ஒரு சாமியாரா? தன்னைப் பத்தி யார் யாரு என்ன என்ன பேசுறாங்கன்னு ஒட்டுக் கேக்குறான்... அதைப் பத்திக் கவலைப்படறான் இவனெல்லாம் ஒரு சாமியாரா?’’ என்று ஒரு வெட்டு வெட்டினாள். பட்டினத்தாருக்குத் தலை சுற்றியது.

எப்படி இருந்தாலும் உலகம் நம்மை விமர்சிக்கும். இது பேருண்மை.

தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும். விமர்சிக்க வேண்டும் என்கிற வெறியுடன் விமர்சிக்கிறவர்கள் விமர்சனத்தைப் புறக்கணியுங்கள். வெற்றி நிச்சயம்.

## 17.வெறி முதல் வெற்றி வரை!

‘டேய்... வேலை விஷயமா எம்.பி.யைப் பார்த்துட்டு வான்னு சொல்றேன். போகலயா?’ அப்பா அலறுகிறார்.

‘‘போப்பா... அந்த ஆள் நூறு தடவை அலைய விடறான். செய்யறதா இருந்தா முதல் தடவையிலயே செய்யமாட்டானா?’’ பொருமுகிறான் மகன். ஒரு விஷயத்திற்காக ஒருவரிடம் மூன்று, நான்கு முறை போக நேர்ந்தால் இன்றைய இளைஞர்களுக்குக் கடுப்பாக இருக்கிறது. உண்மைதானே!

எந்த விஷயமும் எடுத்த எடுப்பிலேயே, முதல் முயற்சியிலேயே வெற்றியாகி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மிகவும் குழந்தைத்தனமானது. மீண்டும் மீண்டும் முயலும் விக்ரமாதித்த முயற்சியே இளமையின் இலக்கணம். அது இல்லாத இளைஞர்கள் மீசை முளைத்த பாப்பாக்கள். தாடி மழித்த குழந்தைகள். ‘‘நான் முயற்சி செய்தேன். வெற்றி கிடைக்கவில்லை’’ என்று சொல்லாதீர்கள். வெற்றி பெறும்வரை முயற்சி செய்தீர்களா? வெற்றி பெறும் வரை ஏன் நீங்கள் முயற்சி செய்யவில்லை? என் கேள்விக்குப் பதில் சொல்லிப் பாருங்கள்.

முயற்சி போதாது. விடாமுயற்சி வேண்டும். மந்திரத்தால் மாங்காய் காய்க்காது. மாறி மாறி முயன்றால்தான் நடக்காததும் நடக்கும்... கிடைக்காததும் கிடைக்கும். எனவே முதல் முயற்சியில் வெற்றியில்லை என்று வெளியேறி விடாதீர்கள். வெற்றி கிடைக்கும்வரை முயன்றுகொண்டே இருங்கள்.

தமிழக வரலாற்றில் புரட்சிச் சாமியார் ஒருவர் இருந்திருக்கிறார். இராமானுஜர் என்று பெயர். அவருக்குத் திருக்கோட்டியூர் நம்பி என்பவர் ஒரு குரு. அவரிடம் ‘நமோ நாராயணா’ என்கிற மந்திர அர்த்தத்தைப் பெற முதல் முறை போனார். ‘‘பிறகு பார்க்கலாம்’’ என்றார். ஒரு முறை... இருமுறையல்ல... பதினெட்டு முறை நடந்தார். உங்களுக்கு இப்படி ஒரு நிலை வந்தால் பதினெட்டு முறை படையெடுப்பீர்களா? ‘‘ஆமாம்... இவன் பெரிய இதுவாக்கும்’’ என்று அவரை அலட்சியப்படுத்துவீர்கள். ‘‘இந்த விஷயம் இல்லைன்னா என்ன? என்னால வாழ முடியாதா? இதென்ன அவ்வளவு பெரிய விஷயமா?’’ என்று இலட்சியத்தையே காலில் போட்டு மிதிப்பீர்கள். பதினெட்டு முறை படையெடுக்கும் ஆர்வம், ஆவேசம், வெறி, தீர்மானம் உங்களிடம் உண்டா? உண்டு என்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

அந்தத் திருக்கோட்டியூர் நம்பி மனசைக் கரைக்கச் சாகும்வரை உண்ணுவதில்லை என்று சாதனை செய்தார் இராமானுஜர். அவர் இறந்துவிடுவாரோ என்று அஞ்சி குருவிடம் பலர் போய் தகவல் தந்தனர். ''செத்து மேலே போனால் நாராயணனே மந்திரம் சொல்வார். தப்பி உயிர்பிழைத்தால் நான் சொல்லுவேன்'' என்று உறுதி காத்தார் குருநாதர். முடிவில் மனமிரங்கி உபதேசித்தார். இராமானுஜர் வெற்றி பெற்றார். ஒன்றும் வேண்டாம் என்று உதறிவிட்டுப் போன ஒரு சாமியாருக்குள் இவ்வளவு பிடிவாதம், உறுதி, வெறி இருக்கிறதே... எல்லாம் வேண்டும் என்று ஆசைப்படும் உங்களுக்குள் உறுதி, வெறி ஏன் இல்லை? இருக்கிறதா? அப்படியானால் நீங்கள் ஜெயிப்பது நிஜம். ஒன்றை அடையும் வரை ஓயாதீர்கள். பின்வாங்காதீர்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்'... யார்? 'திண்ணியர்' என்கிறார் திருவள்ளுவர். நீங்கள் திண்ணியரா?

'என்ன சார்... ஒரே சாமியார் சமாச்சாரமாகச் சொல்றீங்களே... வேறு யாரும் உங்களுக்குக் கிடைக்கவில்லையா?' என்னைக் கேட்கச் சிலர் நினைப்பது புரிகிறது. சக்ஸஸ்புல் சாமியார்களிடம் தெரிந்து கொள்ள வேண்டிய வெற்றி ரகசியங்கள் வேண்டுமளவு புதைந்திருக்கும். புரிகிறதா? இதைப் புரிந்து கொண்டதுதான் என்னுடைய வெற்றியின் ரகசியம்!

சரி... உங்களுக்காக ஒரு இன்னொருவர் - இல்லத்தார் - வெற்றிக் கதையைச் சொல்கிறேன். குறித்துக் கொள்ளுங்கள்.

வியாபாரத்தை 21 வயதில் தொடங்கினான் அந்த இளைஞன். தோற்றுப்போனான். மாகாண சட்டசபைக்குப் போட்டியிட்டான். மண்ணைக் கவ்வினான். தொழிலிலும் தோல்வி. காதலியும் மறைந்தாள்... அவன் அசரவேயில்லை. நரம்புத் தளர்ச்சி அவனுள் நாட்டியம் நடத்தியது. போராடி மீண்டு மறுபடியும் தேர்தலில் குதித்தான். தோல்விதான் அவனைத் தழுவியது. முதலில் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி. பின்னர் மக்கள் மன்றத் தேர்தலிலும் தோல்வி. நாற்பத்து ஏழாவது வயதில் துணை ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டுத் தோல்வி மேல் தோல்வி. ஆனால் 52-வது வயதில் ஜனாதிபதித் தேர்தலில் குதித்தான். வெற்றி அவனை முத்தமிட்டது. அதன் பிறகு அவன் புகழ் உலகெங்கும் பரவியது. அவன் தொட்டது துலங்கியது. அவனது பெயரை உலகில் உள்ள எல்லா நாடுகளின் வரலாற்று

ஆசிரியர்களும் உச்சரித்தனர். உலக வரலாற்றிலேயே அவனுக்கென்று ஓர் அத்தியாயம் ஒதுக்கப்பட்டது. அவன் பெயர்... மன்னிக்கவும்... அந்த மாமனிதர் பெயர் ஆப்ரஹாம் லிங்கன். அவனுள் கனிந்த அக்கினி - ஆங்கிலத்தில் சொன்னால் AGONY - உங்களுக்குள் இருக்கிறது. தப்பில்லை. இந்த நியாயமான வெறி கனிந்தால் வெற்றி நிச்சயம்.

## 18. எது வெற்றி?

வெற்றி பெறுவது என்பது வேறு. பிறரைத் தோற்கடிப்பது என்பது வேறு. இதற்கிடையில் உள்ள வித்தியாசத்தைப் பலர் உணர்வதில்லை. பிறரைத் தோற்கடிப்பது சுலபம். ஆனால் நாம் வெற்றி பெறுவது என்பது கடினமான காரியம். இந்த இரண்டையும் ஒன்றாகக் குழப்பிக் கொண்டவர்கள் பலர்.

இன்றைக்கு நம்முடைய அரசியல்வாதிகள் பலர், பிறரைத் தோற்கடித்த விஷயத்தை - பிறரது தோல்வியை - தங்கள் வெற்றி விழாவாகக் கொண்டாடுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

இப்படிச் சொல்லுகிறேன். நாம் அறிவாளியாவது என்பது வேறு. பிறரை முட்டாளாக்குவது என்பது வேறு. இரண்டும் ஒன்றாகிவிட முடியுமா? எத்தனை பேரை வேண்டுமானாலும் சுலபமாக நீங்கள் முட்டாளாக்கிவிட முடியும். ஆனால் நீங்கள் அறிவாளி ஆவது சுலபமான காரியம் இல்லை. முயற்சி, திறமை, இப்படி எவ்வளவோ அதற்குத் தேவை! ஓர் உதாரணம் சொல்லுகிறேன்.

பள்ளிக் கூடத்தில் படிக்கும் பத்து வயதுப் பெண், தன் முப்பத்து ஐந்து வயது அப்பாவிடம் வந்து நின்றாள். விழிகளை அகல விரித்தபடி அப்பாவிடம் ஒரு புதிர் போட்டாள். ‘‘அப்பா... ஒரு குட்டிக் குரங்கு... தனியா மரத்துல உட்கார்ந்து இருக்கு... அந்த மரத்துக்குக் கீழே திடீர்னு வெள்ளம் வந்துடுச்சு... காட்டாத்து வெள்ளம்... திரும்பின பக்கம் எல்லாம் ஓடுது... அந்தக் குட்டிக் குரங்குக்கு நீந்தத் தெரியாது... பயங்கர வெள்ளம் கீழே... அது எப்படித் தப்பிக்கும், சொல்லு?’’ என்று அப்பாவை அசர வைத்தாள் மகள்.

அரை மணி நேரம் மாறி மாறி யோசித்த அப்பா முடிவில் தன் தோல்வியை ஒப்புக் கொண்டார். ‘‘அந்தக் குட்டிக் குரங்கு எப்படித் தப்பிக்கும்... தெரியலை,

நீயே சொல்லு'' என்றார் மகளிடம். ''ஆங்... இவ்வளவு பெரிய குரங்கு உனக்கே தெரியலை... அந்தக் குட்டிக் குரங்குக்கு மட்டும் எப்படி தெரியும்?'' என்று கையை அப்பா முகத்துக்கு நேரே ஆட்டிவிட்டுச் சிட்டாய்ப் பறந்தாள் அந்தச் சின்னப் பெண்.

அவளிடத்திலும் கேள்விக்கு விடையில்லை; ஆனால் அப்பாவைக் குரங்கு என்று கேலி செய்ய, முட்டாளாக்க அரை மணி நேரம் செலவிட்டாள் அந்தச் சின்னப் பெண். இன்றைக்கு இந்தச் சின்னத்தனம்தான் எங்கும் நடக்கிறது.

பிறரை வாய் மூடச் செய்வது... செயலிழக்கச் செய்வது... தோற்றுப் போகச் செய்வது... ஆளவிடாமல் தடுப்பது... முன்னேற முடியாதபடி முதுகை முறிப்பது... இப்படிப் பிறரைத் தோற்கடிப்பதைத் தம்முடைய வெற்றியாகக் கருதுகிறார்கள்.

இந்தத் தவறுதலான எண்ணத்தில் இருந்து தயவு செய்து வெளியே வாருங்கள். பிறரைத் தோற்கடிப்பது லட்சியமல்ல... நமது வெற்றியே நமது குறிக்கோள்... என்கிற தெளிவு இருக்க வேண்டும். நாம் வெற்றி பெற்றால் நமக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள். பிறரைத் தோற்கடித்தால் நாம் ஒரு நிரந்தர எதிரியை ஏற்படுத்திக் கொள்கிறோம். நாம் யாரைத் தோற்கடித்தாலும் அவர் நம்மைத் தோற்கடிக்கவே தமது எஞ்சிய காலம் முழுவதையும் செலவிடுகிறார்.

பிறரைத் தோற்கடிப்பது நமது நோக்கம் அல்ல என்பதை இன்னொரு கோணத்தில் இப்போது சொல்கிறேன். ஒரு குழந்தையுடன் கடைவீதிக்குப் போகிறாள் அம்மா. அங்கு ஏதோ ஒரு தின்பண்டம் வேண்டும் என்று குழந்தை அழுதது. வாங்கித் தராமல் அம்மா பிடிவாதமாக வந்துவிட்டாள். குழந்தை முகம் வாடிவிட்டது.

உடனே அம்மாவுக்கு மனம் கேட்கவில்லை. மீண்டும் கடைவீதிக்குப் போய் குழந்தை கேட்ட தின்பண்டத்தை வாங்கி வந்து குழந்தைக்குக் கொடுக்கிறாள். அப்போது சில குழந்தைகள் மகிழ்ச்சியாக வாங்கிக்கொள்ளும்.

சில குழந்தைகளோ வம்பு செய்யும். தூக்கி எறியும். அது கேட்டபோது கிடைக்காததால், கிடைக்கிறபோது வேண்டியதில்லை என்று புறக்கணிக்கும். அம்மா கெஞ்சுவாள். தனக்குத் தராமல் துன்புறுத்திய தாயைப் பழிவாங்கும்

நோக்கில் தின்னாமல் துன்புறுத்தும் பிள்ளைகளும் உண்டு. நீங்கள் எந்த வகை யோசித்ததுண்டா?

கேட்டது கிடைப்பது வெற்றி. கொஞ்சம் முன் பின்னாகக் கிடைத்தாலும் வெற்றி வெற்றிதான். ஆனால் அந்த வெற்றியை அனுபவிக்க முடியாதபடி சிறுபிள்ளைத்தனமான அகங்காரத்தால் பிறரைத் தோற்கடிப்பவர் உண்டு.

வளர்ந்த பிறகும் இந்தக் குணம் பலரை விடுவதில்லை. கணவனிடம் புடவை கேட்பார்கள்... முதலில் மறுத்துவிட்டுப் பிறகு மனம் மாறிக் கணவன் வாங்கிக் கொடுத்தால் கட்டமாட்டேன் என்று சிலர் பிடிவாதமாக மறுத்துவிடுவார்கள். அவனை மனம் நோகச் செய்து தோற்கடிப்பதில் அலாதியான மகிழ்ச்சி அடைவார்கள்.

நாம் நோக்கத்தில் தெளிவாக இருந்தால் இந்தத் தவறு நடக்காது. நமது வெற்றிதான் முக்கியம். பிறரைத் தோற்கடிப்பதில் நமக்கு என்ன நன்மை விளையப் போகிறது? இன்று நமது அரசியல்வாதிகள் பிறரைத் தோற்கடிக்கவே, தேர்தல், பாராளுமன்றம், சட்டமன்றம் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

அதனால்தான் பகை வளர்கிறது. தாங்கள் வெற்றி பெறுவதற்காகப் பயன்படுத்தினால் தேசம் வளர்ச்சியுறும். பிறரைத் தோற்கடிப்பது வெற்றி அல்ல! நாம் வெற்றி பெறுவதே வெற்றி என்கிற துல்லியமான வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்!

## 19. பிடிவாதம்– வெற்றியின் அடிநாதம்!

குழந்தைகளை எல்லோருக்கும் பிடிக்கும். குழந்தைகளோ பிடிவாதம் பிடிக்கும். எனக்கென்னவோ பிடிவாதம் பிடிக்கும் குழந்தைகளை ரொம்பவும் பிடிக்கும். ஏன்? வெற்றி என்பது ஒரு கீதம். இந்தப் பிடிவாதம், வெற்றியின் அடிநாதம். பிடிவாதம் ஒரு தவறான குணம் அல்ல. எதற்காகப் பிடிவாதம் என்பதுதான் முக்கியமான விஷயம்.

இந்தியாவில் பிரபலமான துருவன் கதை தெரியுமா? அப்பாவின் மடியில் உட்காரப் போனான் குழந்தை. பிடித்துத் தள்ளினாள் சித்தி. அழுது கொண்டே அம்மாவிடம் போனான் துருவன். ‘கடவுளிடம் போய் முறையிடு’ என்று

கடவுளிடம் கை கழுவினாள் கையாலாகாத அம்மா. பிடி பிடி என்று கடவுளையே பிடிக்கிற பிடிவாதம் அந்தப் பிள்ளைக்கு இருந்தது. கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்து கொண்டிருக்கிற குழந்தையின் கன்னத்தைத் தன் சங்கினால் தட்டி எழுப்பினான் திருமால் என்கிறது ஸ்ரீமத் பாகவதம். அப்பாவின் மடியில் இடம் கேட்ட குழந்தை ஆண்டவன் மடியில் உட்கார்ந்து கொண்டான் என்கிறது கதை. இந்தக் கதையில் திருமாலின் கருணையைச் சிலாகிப்பது சமயச் சொற்பொழிவு. துருவனுடைய பிடிவாதத்தைக் கொண்டாடுவது சுய முன்னேற்றச் சிந்தனை. இரண்டையும் இரண்டு கண்களாகப் பார்ப்பது எனது லட்சியம்.

பிரகலாதன் சரித்திரம் தெரியுமோ? ஆசிரியர் கண்டித்தும், அப்பா தண்டித்தும், அம்மாவே விஷம் கொடுத்தும், மலையில் இருந்து வீசியும் உருட்டியும் மிரட்டியும் பிரகலாதன் தன் கருத்தில் இருந்து இம்மியும் மாறவில்லை. இந்தப் பிரகலாதப் பிடிவாதம் உங்களுக்கு உண்டா? பிரகாசமான எதிர்காலம் உண்டு.

மழைக்காகப் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. எல்லோரும் வெறும் கையை வீசிக்கொண்டு வந்தனர். பிஞ்சுப் பிள்ளை மட்டும் கையில் குடையுடன் வந்தது. பிரார்த்தனை முடிந்ததும் மழை வரும் என்கிற அந்தப் பிஞ்சு மனத்தில் முளைவிட்ட நம்பிக்கை, கடவுளையே யோசிக்க வைத்தது. அவநம்பிக்கையுள்ள ஆயிரம் பேரைத் தண்டிப்பதை விட நம்பிக்கை உடைய குழந்தைக்காக மழை பெய்விப்பது தன் கடமை என்று கடவுள் புரிந்து கொண்டார்.

குழந்தைப் பருவம் என்பது வெறும் அசட்டுத்தனத்தின் அரங்கேற்ற மண்டபம் அல்ல. அசைக்க முடியாத அஸ்திவாரத்தின் ஆரம்பப் பருவம்... அது உங்களுக்கு இருக்கிறதா? உங்களுக்கு வெற்றி நிச்சயம். ‘பெர்சீவியரென்ஸ்’ என்ற ஆங்கில வார்த்தைக்கு எலும்பும் சதையுமான மொழிபெயர்ப்பாக நீங்கள் இருங்கள். வெற்றி உங்கள் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே வரும். ஒரு வேளை கதவு தாளிடப்பட்டிருந்தால் தள்ளிக் கொண்டு வந்து வெற்றி உங்களைத் தழுவிக் கொள்ளும்.

அவள் ஒரு எட்டு வயதுக் குழந்தை. அவளுக்கு ஒரு சின்னத் தம்பி. தம்பிக்கு ஏதோ உடம்பு சரியில்லை என்பது மட்டுமே அவளுக்குப் புரிந்து கொள்ளும் வயது. என்ன நோய்? எப்படிச் சரியாகும் என்பதெல்லாம் புரியமுடியாத பருவம். திடீரென்று அவள் குடியிருந்த வீட்டை விட்டு அம்மாவும் அப்பாவும்

மிகச் சிறிய வீட்டுக்கு மாறினார்கள். தம்பியின் மருத்துவச் செலவு, மருந்துச் செலவு, உணவுச் செலவு இவற்றைச் சரிக்கட்ட பெற்றோர் வீடு மாற வேண்டி வந்தது. அந்தச் சின்னப் பையனைத் தக்க வைக்க ஆயிரம் ஆயிரமாய்க் கரைந்துகொண்டிருந்தது. இந்தக் கஷ்டம் அந்த எட்டு வயதுக் குழந்தைக்குத் தெரிய வேண்டாம் என்று பெற்றோர் நினைத்தனர்.

ஒரு நாள் பெற்றோர் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்த போது, ‘‘ஏதாவது அதிசயம் அல்லது அற்புதம்தான் இந்தச் சின்னப் பையனைக் காப்பாற்ற வேண்டும்’’ என்று அழுதனர். அடுத்த விநாடி அந்தச் சிறுமி தன் நெடுநாள் சேமிப்பு உண்டியலைக் கவிழ்த்தாள். ஒரு டாலர் ஏழு சென்ட் வரை சில்லறைக் காசு கிடைத்தது. அவசரமாக அதை அள்ளிக் கொண்டு வீட்டுப் பின் வாசல் வழியாக ஓடினாள். அடுத்த தெருவில் இருந்த மருந்துக் கடைக்குப் போய்ச் சில்லறையை மேசையில் கொட்டி, ‘‘அற்புதம் கொடுங்கள்... அல்லது அதிசயம் கொடுங்கள்’’ என்றாள்.

மருந்துக் கடைக்காரர் புரியாமல் விழித்தார். கடையில் ஏதோ வாங்க வந்திருந்த கனவான் ஒருவர் ஆச்சரியமாய் அந்தச் சிறுமியைக் கவனித்தார். முகம் வாடிப் போனவளைத் தேற்றி விவரம் கேட்டறிந்தார். உலகப் புகழ் பெற்ற நரம்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சார்ட்லன் ஆர்ம்ஸ்ட்ராங் அவர். தனது காரில் அந்தச் சிறுமியை ஏற்றிக் கொண்டு சிறுமியின் வீட்டுக்கு வந்தார். சிறுமியின் தம்பிக்கு நிகழ்த்த வேண்டிய அறுவைச் சிகிச்சையை உணர்ந்தார். அந்தச் சிறுமியிடம் ஒரு டாலர் ஒரு சென்ட் பெற்றுக் கொண்டு அந்த அறுவைச் சிகிச்சையைத் தமது மருத்துவ மனையில் இலவசமாக நடத்தினார். நம்ப முடிகிறதா?

பிள்ளைப் பருவத்தின் பிடிவாதத்தால் ஓர் அதிசயம் நடந்தேவிட்டது. அற்புதம் நிகழ்ந்தேவிட்டது. பிடிக்க வேண்டிய விஷயத்தில் பிடிவாதமாக இருங்கள். வெற்றி நிச்சயம்!

## 20. கறுப்பு நண்பர்களே, காலரை உயர்த்துங்கள்!

‘**ஆ**றே வாரத்தில் சிகப்பழகு’ என்று ஒரு விளம்பரம் தொலைக்காட்சியில் மின்னுகிறது. இது காதில் பூ சுற்றுகிற வேலையானால்கூட மன்னிக்கலாம். இளைய மனசுகளில் தார் பூசுகிற அசிங்கம் இது.

‘வெள்ளைக்காரன் ஒசத்தி’ என்கிற பழைய இந்தியப் பிச்சைக்காரத்தனத்தின் மிச்சசொச்சம் இது. சிவப்பழகு ஒரு முக்கிய உயர்ந்த விஷயம் என்று மூளைச்சலவை செய்கிற எந்த விஷயத்தையும் விரட்டி அடியுங்கள். காரணம், ‘கறுப்பு தாழ்ந்ததல்ல’ என்று இந்தியன் உணர வேண்டும்.

‘கறுப்பாக இருக்கிறோம். இது தாழ்வானது’ என்கிற அபிப்ராயத்தை மறைவாக உண்டுபண்ணும் இந்தக் கொடிய விளம்பரம் இளைஞர்களைப் பலவீனப்படுத்தும். கறுப்பு நிறம் வெட்கப்படவேண்டிய விஷயம் அல்ல.

காட்டிலும் மேட்டிலும் கழனிகளிலும் பாடுபடும் உழைக்கும் வர்க்கத்தின் தோல் கறுத்துப் போவது உழைப்பைப் பாராட்டிச் சூரியன் கொடுத்த பட்டமளிப்பு; அல்லது பாரம்பரியத்தின் பரிசளிப்பு. அது பழிக்கப்படும் என்றால், சூட்டிலும் கோட்டிலும் ஒளிந்து கொள்ளும் வெள்ளை கொண்டாடப்படும் என்றால் அதைச் சகித்துக் கொள்ளாதீர்கள்.

கறுப்பாக இருப்பது ஒரு பாவமல்ல... பழியல்ல... படுபாதகமான இழிவல்ல. பாரத கௌரவம். பாரம்பரியப் பண்பு.

வெள்ளைப் பணத்தைவிடக் கறுப்புப் பணத்தைக் கொஞ்சி மகிழும் இந்தியப் பொருளாதாரம் கறுப்பு நிறத்தை மட்டும் தாழ்வாக நினைப்பது தவறல்லவா? சலவைக்கல்லில் கிரானைட்டுகளில் ஜெட் பிளாக்தான் விலை அதிகம். சிலைகளில்கூடக் கறுப்புக் கல்லில்தான் கலை அதிகம்.

இந்தியத் தலைமகன் ராமன் கறுப்பு. கிருஷ்ணன் கறுப்பு. துரியோதனன் கனவிலும் நனவிலும் காமத்தை உண்டு பண்ணிய துருபதையோ கவர்ச்சிகரமான கறுப்பு. கிளியோபாட்ரா கறுப்புத்தானாம். அவ்வளவு ஏன்? ‘கன்னடத்துப் பைங்கிளி’ என்று கலையுலகைக் கலக்கிய நடிகையும் கறுப்பு. அப்புறம் என்ன கறுப்பின் மீது வெறுப்பு.

கறுப்பு இந்தியனின் சராசரி நிறம். நாம் ஒரு சராசரி இந்திய நிறத்தில் இருக்கும்போது வெட்கப்பட என்ன இருக்கிறது. பெருமையல்லவா அடைய வேண்டும்.

கறுப்பு நண்பர்களே... காலரை உயர்த்துங்கள். கண்களில் ஒளி உமிழுங்கள். பகல் மட்டும் உலகிற்குப் போதாது. இருட்டும்தான் உலகை வாழ்விக்கிறது.

வெள்ளை பகல் என்றால் கறுப்பு இருட்டல்லவா? கடவுள் குடியிருக்கும் கருவறையே இருட்டல்லவா? கம்பீரமாக நிமிர்ந்து உட்காருங்கள்.

நிறபேதம் உலகெங்கும் பரவிய நீச நோய்.

அமெரிக்காவில் ஒரு பள்ளிக்கூட வாசலில் நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒரு பலூன் வியாபாரி வண்ண வண்ண பலூன்களைப் பறக்கவிட்டிருந்தான். தன் வியாபாரம் குறையும்போதெல்லாம் கொத்துக் கொத்தாக பலூன்களைக் கட்டி இன்னும் உயரமாகப் பறக்கவிடுவான். வியாபார வித்தை இது. குழந்தைகள் குதூகலித்துக்கொண்டு இன்னும் கூட்டம் கூட்டமாக அவனை நோக்கி ஓடிவந்தன. வியாபாரம் பிரமாதமாக நடந்தது.

அவனது வண்டியில் பச்சை, நீலம், மஞ்சள், கறுப்பு என்று பலவித நிறங்களில் பலூன்கள் குதித்துக் குதித்து ஆடிக் கொண்டிருந்தன. குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கின. ஆனால் கறுப்பு பலூனை மட்டும் எந்தக் குழந்தையும் விரும்பிக் கேட்கவே இல்லை. அது சோகமாய் வண்டியில் குதித்துக் கொண்டிருந்தது.

ஒரு குழந்தை பலூன் வியாபாரியைப் பார்த்து, ‘‘உயரத்தில் பறக்கும் பச்சை, நீலம், மஞ்சள் பலூன் மாதிரி இந்தக் கறுப்பு பலூனும் பறக்குமா? அல்லது கறுப்பு உயரத்தில் பறக்க முடியாதா?’’ என்று சோகமாய்க் கேட்டது.

பலூன் வியாபாரி சிரித்துக் கொண்டே, ‘‘கறுப்பாக இருப்பது உயரப் பறக்க ஒரு தடையே அல்ல. மற்ற வண்ண பலூன்கள் மாதிரியே கறுப்பு பலூனும் உயரத்தில் பறக்கும். உயரே போக நிறம் ஒரு தடையே அல்ல... உள்ளே இருக்கும் சரக்குதான் முக்கியம்’’ என்றான்.

உள்ளே இருக்கும் காற்றுதான் உயரே பறக்க மூல காரணம். நிறமா காரணம்?

அந்தக் குழந்தை, ‘‘அப்படியானால் அந்தக் கறுப்பு பலூனைத் தாருங்கள்’’ என்று மகிழ்ச்சியாக வாங்கிக் கொண்டது. அந்தக் குழந்தைதான் அமெரிக்காவின் நிறவெறியை உலுக்கி அசைத்த மார்ட்டின் லூதர் கிங்.

இந்தியர்களின் கறுப்பு நிறத்தைக் கேலி செய்து ஒரு வெள்ளைக்காரர் பேசியபோது டாக்டர் ராதாகிருஷ்ணன் சொன்ன பதில் என்ன தெரியுமா?

‘‘கடவுள் கேக் செய்தார். அவசர அவசரமாக வெந்துவிட்டதா, வெந்துவிட்டதா என்று திறந்து திறந்து எடுத்த கேக்குகள் வெள்ளை வெள்ளையாக வந்தன. ஆனால் அவை அரைவேக்காடுகள். கொஞ்சம் முறுகிய பிறகு எடுத்த கேக்குகள் கொஞ்சம் கறுப்பாக இருந்தன. ஆனால் அவை வெந்து கமகமவென்று பக்குவமாக இருந்தன. நாங்கள் கடவுள் படைப்பில் கறுப்புக் கேக்குகள். ஆனால் பக்குவமாக இருக்கிறோம். வெள்ளைக் கேக்குகள்தான் அரைவேக்காடுகள்’’ என்றார்.

தாழ்வு மனப்பான்மையைத் தள்ளி வைத்துவிட்டால் வெற்றி நிச்சயம்.

## 21. விரல்களா, மோதிரங்களா – எது முக்கியம்?

‘**உ**ங்களுக்கு இன்னும் கலைமாமணி விருது கிடைக்கவில்லையா?’ என்று சிலர் கேட்கிறார்கள். இன்னும் சிலரோ குரூரமாக, ‘ஒரு கலைமாமணிகூட வாங்கலைன்னா எப்படி? உங்க பாப்புலாரிட்டியை வளர்த்துக்குங்க சார்’ என்று யோசனை சொல்வார்கள். நான் லேசாக ஒரு சிரிப்பு சிரித்துக் கொள்வேன்.

என் திறமை என்பது விரல்கள் போல. அதற்கான அங்கீகாரம் விரல்களில் மின்னும் மோதிரம் போல. எனக்கு வேலை செய்ய விரல்கள்தான் வேண்டுமே ஒழிய விரல்களில் மின்னும் மோதிரங்கள் அவசியமில்லை. நான் விரல்களை விரும்புகிறேன். ஆனால் மோதிரங்களை வெறுப்பதில்லை.

இதை எப்படி எல்லோருக்கும் புரியவைப்பது?

இன்றைக்குப் பட்டங்கள், பரிசுகள் என்கிற மோதிரங்களை வைத்திருக்கும் சிலருக்கு... பாவம், விரல்கள் இல்லை. இன்னும் சிலருக்கோ அவர்களது குழைந்து போன விரல்களில் மோதிரங்கள் அவமானத்துடன் அசிங்கப்படுகின்றன.

ஒரு முக்கியமான விளக்கம். பட்டங்கள் பெற்ற எல்லோரையும் காயப்படுத்தும் சிறுமையுடன் சொல்லவில்லை. பலர் தகுதியானவர்கள். சிலர் பட்டங்களை விடவும் பல மடங்கு மேலானவர்கள். அவர்களுக்கு வாய்த்த விரல்கள் மோதிரங்களைவிட அழகானவை. வெகு சிலரோ பட்டங்களுக்கு முற்றிலும் பொருத்தமற்றவர்கள்... தன் அளவு இல்லாத மோதிரங்களை நூல் சுற்றி

மாட்டிக் கொள்ளுகிற மாதிரி பலரது கால் சுற்றிப் பட்டம் மாட்டிக் கொள்கிறவர்கள். இருக்கிற மோதிரத்திற்கேற்ப விரல்களைத் தரித்துக் கொள்ளும் இவர்களைப்போல் இருக்க வேண்டுமா என்ன?

பிறரது அங்கீகாரத்திற்கு ஏங்கும் ஒவ்வொரு திறமைசாலிக்கும் என் ஆலோசனை இதுதான். விரல்களை நேர்த்தியாக வைத்திருங்கள். மோதிரங்களுக்கு ஏங்காதீர்கள். நம்மைப் புரிந்து கொள்வது, அங்கீகரிப்பது, பாராட்டுவது, பின்பற்றுவது இவையெல்லாம் சமூகத்தின் பொறுப்பு. அதை ஒரு போதும் எதிர்பார்க்காதீர்கள். ஆனால் அங்கீகாரம் கிடைக்கும்போது அதை எதிர்க்காதீர்கள். இந்தப் பட்டத்தைவிட, பாராட்டைவிட நான் பெரியவன் என்று உளறாதீர்கள். தன்னம்பிக்கைக்கும் தலைக்கனத்துக்கும் வேறுபாடு தெரியாமல் தாறுமாறாகப் புலம்பாதீர்கள்.

இன்றைக்குச் சிலர் ஒரு புது சுடிதார் போட்டால் ஒரு இருபது பேராவது தன்னைப் பார்க்க வேண்டும், பத்துப் பேராவது தன்னைப் பாராட்ட வேண்டும் என்று பரபரக்கிறார்கள். ‘மச்சி... இந்த டீ சர்ட்ல நீ அஜீத் மாதிரி அசத்தற...’ என்கிற நண்பர் படையின் பாராட்டைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு மாதிரி எதிர்பார்க்கிறார்கள். இது சரியா? பிறர் நம்மை அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அங்கீகரிக்காத போது உங்கள் நிலை என்ன? தோல்வியா? தோற்காதீர்கள். கலைஞர்கள், ஓவியர்கள், சிந்தனையாளர்கள், இப்படிப் பல்துறையில் வளரும் இளைய தலைமுறையினர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களைப் பற்றிய உங்கள் அங்கீகாரமே உங்கள் அஸ்திவாரம். பிறரது அங்கீகாரம் வெறும் அலங்காரமே.

ஒருகாலத்தில் என்னைப் பத்துப் பேருக்குத் தெரியும். பிறகு ஆயிரம் பேருக்குத் தெரியும். இப்போது பல்லாயிரம் பேருக்குத் தெரியும். ஆனால் அன்றும், இன்றும், என்றும் நான் - அதே நான்தான். அங்கீகாரத்தின் பரப்பளவு கூடியிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட விஷயம் அன்றும் இன்றும் என்றும் ஒன்றே! எனவே உங்களைப் பிறர் அங்கீகரிக்க வேண்டும், பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். கிடைக்காதபோது ஏமாந்து வருந்தாதீர்கள். இந்த எதிர்பார்ப்பு உங்கள் திறமையை வாட வைக்கும்.

மகாகவி பாரதியை அவரது சமகாலத்தில் மகாகவியாக யாரும் அங்கீகரிக்கவில்லை. ‘பிழைக்கத் தெரியாதவன்’ என்பதே சமூகம் அவர் மீது

வைத்திருந்த அபிப்ராயம். ஆனால், பாரதி தன் மீது வைத்திருந்த அபிப்ராயம் முற்றிலும் வேறு.

‘புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத் தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும் கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லையெனும் வசை என்னால் கழிந்தது’ என்பதே பாரதிக்கு, பாரதி மீதான அபிப்ராயம். பிறரது அங்கீகாரங்களைவிட அவரது அங்கீகாரங்களே, அபிப்ராயங்களே ஜெயித்தன. கடும் தமிழில் கொடும் தொனியில் இலக்கணச் செய்யுள் பாடிய தமிழ்ப் பண்டிதர்கள் பலர் பாரதியின் பாடல்கள் பாமரத்தனமானவை என்று எள்ளியபோது, ‘சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவ கவிதை’ என்று பாரதி தன் பாடல்களைப் பற்றிப் புரிந்துவைத்திருந்தார்.

பிறர் பாராட்ட வேண்டும் என்று ஒரு போதும் எதிர்பார்க்காதீர்கள். ஆனால் பாராட்டும்போது எதிர்க்காதீர்கள். மாலைகளை எதிர்பார்த்துக் குனிந்து, குழைந்து, வளைந்து, நெளிந்து, தலை தாழ்த்தி நிற்க வேண்டாம். ஆனால் மாலைகள் வரும்போது தலை குனிந்து வாங்கிக்கொள்ள மறுக்க வேண்டாம். நாம் யார் என்பது நமக்குத் தெரியும். பிறருக்கு எப்படித் தெரியும்? நம்முள் கனிந்துள்ள திறனைப் பிறர் உள்ளது உள்ளபடி ஒரு போதும் அறிந்திருக்க முடியாது. எனவே பிறரால் நம்மை ஒரு போதும் சரியாக அங்கீகரிக்க முடியாது. அவர்கள் அபிப்ராயங்கள் நம்மைப் பற்றிக் குறைவாக இருந்தால் அது குறித்து வருந்த வேண்டாம்.

நோபல் பரிசு பெற்ற உலகப் புகழ் பெற்ற வங்கக் கவி ரவீந்திரநாத் தாகூர் வாழ்க்கையைச் சொல்லட்டுமா? அவரது குடும்பம் கூட்டுக் குடும்பம். ஐம்பது அல்லது அறுபது பேர் கொண்ட பெரும் கூட்டம் அது. அதில் பிள்ளைகள் பிறந்தநாளைக் கொண்டாடுகிற முறையே புதுமையானது. ஒவ்வொரு பிள்ளை பெயரிலும் ஒரு நோட்டுப் புத்தகம் இருக்கும். அதில் அந்தக் குடும்பத்துப் பெரியவர்கள் பிள்ளைகளைப் பற்றித் தங்கள் பாராட்டை, விமர்சனத்தை, கருத்தை எழுதுவது வழக்கம். ரவீந்திரநாத் தாகூரின் பிறந்தநாள் அன்று அவன் பாட்டி எழுதிய வரிகள் என்ன தெரியுமா?

‘ரவியைப் பற்றிச் சொல்ல உருப்படியாக எதுவும் இல்லை. அவன் எதிர்காலத்தை நினைத்தால் கவலையாக இருக்கிறது. ஒரு டாக்டராகவோ,

என்ஜினியராகவோ, பெரிய ஆளாக அவன் வருவான் என்று தோன்றவில்லை. மற்ற பிள்ளைகள் மாதிரி அவன் புத்திசாலியாக இல்லையே என்று வருத்தமாக இருக்கிறது' என்று பாட்டி எழுதியிருந்தார். மற்ற பிள்ளைகள் என்ன ஆனார்கள் என்பதே இன்று தெரியவில்லை. உருப்பட மாட்டான் என்று பாட்டி பதிவு செய்தவர்தான் உலகின் புகழ்பெற்ற உருப்படியானார். பிறரது அங்கீகாரங்கள் பெரிய விஷயமல்ல... உங்களைப் பற்றிய உங்களது அபிப்ராயங்களே முக்கியம். புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்!

## 22. எதிர்ப்பிலேயே வாழுங்கள்!

ஒரு கப்பல் கடலுக்குள் போவதில் எவ்வளவு கஷ்டங்கள் காத்திருக்கின்றன. புயல் அடிக்கலாம். பாறையில் மோதிக் கப்பல் டைட்டானிக் மாதிரி உடைந்து போகலாம். திமிங்கிலங்கள், சுறா மீன்கள் கப்பலைக் கவிழ்க்கலாம். குடிநீர், உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம். திசை தடுமாறித் திண்டாடி வாடலாம். இப்படி எண்ணற்ற வாய்ப்புகள் - ஆபத்துகள் கடலில் காத்திருக்கின்றன. எப்போது அதற்கு ஆபத்து இல்லை? கம்பீரமாகக் கரையில் நங்கூரம் பாய்ச்சி நின்றுவிட்டது என்றால் அழிவில்லை; ஆபத்து இல்லை.

ஆனால் கரையில் பாதுகாப்பாக நிற்பதற்காகவா கப்பல் கட்டப்பட்டது! கடலின் ஆபத்துகளைக் கபளீகரம் செய்து கொண்டு கரை மாறிக் கரை சேர்ந்து கடலில் பயணிக்கத்தான் கப்பலே ஒழிய, கரையில் பாதுகாப்பாக நிற்க கோடி கோடியாகக் கொட்டி யாராவது கப்பல் கட்டுவார்களா? ஆகாய விமானம் ஆபத்து இல்லாமல் இருப்பது எங்கே? தரையில்தான். என்ஜின் கோளாறு வராது. தீப்பிடிக்காது. விண்நோக்கிப் பாயும்போது புவி ஈர்ப்புச் சக்தியால் விழுந்து நொறுங்காது. கடத்தப்படும் வாய்ப்புக் கிடையாது. இன்னொரு விமானத்துடன் மோதாது. தரையிறங்கும்போது அதன் சக்கரங்களை வெளித்தள்ளுமே... அப்படித் தள்ள முடியாமல் போனால் தரையில் மோதித் தீப்பிடிக்குமே! அந்த ஆபத்து துளிக்கூட இல்லை. எனவே விமானத்தை விண்ணிலே செலுத்தாமல் மண்ணிலேயே வைத்திருக்கலாமா?

தரையில் இருக்கும் விமானமும் கரையில் இருக்கும் கப்பலும் பாதுகாப்பானவைதான். ஆனால் அவை அதற்காக உருவாக்கப்படவில்லையே. ஆபத்துகளை எதிர்கொண்டு சவால்களைச் சந்தித்துச் சாதித்துக் காட்டவே கோடி கோடியாகக் கொட்டி அவற்றை உருவாக்கினோம். பய உணர்ச்சியும் பாதுகாப்பு

உணர்ச்சியும் தேவைதான். ஆனால் அது மானுட முன்னேற்றத்தை மழுங்கடித்துவிடக் கூடாது. தடைகளை விலக்கி ஜெயிக்கத்தான் மனிதப் பிறவி நமக்குத் தரப்பட்டுள்ளது. அதுவே மானுட மகத்துவம். தடைகள், சவால்கள்தான் உங்களை உங்களுக்கும், உங்களை உலகுக்கும் அடையாளம் காட்டும். எதிர்ப்பற்ற வாழ்க்கைக்கு ஒரு போதும் ஏங்காதீர்கள். விடுதலை இந்தியாவில் பிரதமராய்ச் சிரித்து ஜொலித்த ராஜீவ் காந்தியைக்கூட வரலாறு என்றைக்காவது விழுங்கி விடும். அடிமை இந்தியாவில் அணுஅணுவாய்ப் போராடி, அங்குலம் அங்குலமாக நாட்டை மீட்ட மகாத்மா காந்தியை வரலாறு ஒரு போதும் விழுங்காது. விழுங்க நினைத்தால் வரலாற்றை உலகம் விழுங்கிவிடும்.

ராஜகுமாரர்களின் மணி மகுடங்களைவிட தேவகுமாரனான ஏசுவின் முள்மகுடம் உலகப் புகழ் பெற்றது. அவ்வளவு ஏன்? இன்று ஏசுவின் பெயரால் போப்பாண்டவர் கழுத்தில் சுமக்கும் தங்கச் சிலுவையைவிட ஏசுபிரான் சுமந்த மரச்சிலுவையே மகத்துவம் மிக்கது. காரணம், தங்கச் சிலுவை, ஏற்பாளர்களின் பரிசளிப்பு. மரச்சிலுவை எதிர்ப்பாளர்களின் ‘அன்பளிப்பு’!

நண்பர்கள் நம்மைச் செதுக்குவதைவிடப் பகைவர்களே நம்மைச் செதுக்குகிறார்கள். சாதகமான விஷயங்கள் நம்மைச் சரி செய்வதைவிடப் பாதகமான விஷயங்களே நம்மைப் பாதுகாக்கின்றன. எனவே தடைகள், தடங்கல்கள், சவால்கள், இடையூறுகள், எதிர்ப்புகள், ஆபத்துகள் குறித்துக் கலங்க வேண்டாம். அவற்றைக் கொண்டாடுங்கள். குதூகலியுங்கள். குதித்து மகிழுங்கள்!

தேர்தலில் நின்று மக்களிடம் தீர்ப்புக் கேட்பது ஓர் அரசியல்வாதிக்கு ஆபத்தான வேலைதான். சிறந்த அரசியல்வாதி அதற்குத் தயங்கலாமா? ஜெயித்தாலும் சரி... தோற்றாலும் சரி... மக்கள் முன்பு தம்மைத் தயங்காது நிறுத்தி அக்னிப் பரிட்சைக்குத் தயாரான அரசியல்வாதிகளே அதிக உயரம் பறந்தார்கள். பாதுகாப்பான மேல்சபை உறுப்பினராக மட்டுமே இருக்க விரும்பிய தலைவர்களை மக்கள் முதல்வராக்கவில்லை. பிரதமராக்கவில்லை. இருக்க வேண்டிய இடத்தில் மட்டுமே இருக்க வைத்தார்கள். சவால்களை எதிர்கொள்ளும் மனோநிலையே வெற்றிக்கான வீரிய விதை.

ஒன்று சொல்கிறேன்... ஆபத்துகளைப் பற்றிய கற்பனைகளை விட்டொழியுங்கள். அவை ஆபத்துகளைவிட ஆபத்தானவை. அளவற்ற பாதுகாப்பு, பய உணர்ச்சியிலிருந்து வெளியில் வாருங்கள். அபிமன்யு போல வாழப் பழகுங்கள். இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கிய நேதாஜி தனது வீர உரையில், ''எனது ராணுவத்தில் சேர்ந்துள்ள உங்களுக்குச் சம்பளம் கண்டிப்பாக உண்டு. அந்தச் சம்பளம் மரணம்'' என்றார். அதனால்தான் அவர் மரணமே அடையவில்லை.

ஒரு மகத்துவம் மிக்க கவியாக வாழ்வதில் பாரதிக்குப் பல சிக்கல்கள் இருந்தன. பாதுகாப்பு உணர்ச்சியால் அவர் சில சமரசங்கள் செய்து கொண்டிருந்தால் பணம் கிடைத்திருக்கும். ஆனால் தமிழ்நாட்டின் எத்தனையோ 'சுப்புணி'களில் ஒருவனாகச் செத்திருப்பான் அந்தச் சுப்பிரமணியன். ஆபத்துகளை எதிர்கொள்ளும் ஆவேசம்... அந்த ஆனந்தப் பரவசம்... அதுவே அவனை மகாகவியாக்கியது.

தந்தை பெரியார் ஒரு தன்னிகரற்ற தலைவர். கடும் எதிர்ப்புகளுக்குக் கடுகளவும் கவலைப்படாது தன் கருத்துகளை மக்கள் முன் வைத்தவர். ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசும்போது ஒரு செருப்பு அவர் மீது வீசப்பட்டது. அவர் தயங்கினாரா? ''ஒரு செருப்பை வீசினா எப்படி? இன்னொன்றையும் வீசு... ஜோடியா வைச்சுக்கலாம். உனக்கும் பிரயோஜனம் இல்லாம, எனக்கும் பிரயோஜனம் இல்லாம ஒண்ணை வீசிறியே?'' என்றார். அவரல்லவா துணிவுடையவர். அந்தத் துணிவே அவர் வெற்றியின் ரகசியம். எதிர்ப்பிலேயே வாழுங்கள். வெற்றி நிச்சயம்!

## 23. தடங்கலுக்கு மகிழ்கிறோம்!

**அ**கில இந்திய வானொலி செல்வாக்காக இருந்தது ஒரு காலம். அப்போதும் அடிக்கடி மின்தடங்கல் ஏற்பட்டு, 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' என்று அறிவித்துக் கொண்டிருப்பார்கள்.

வானொலி அறிவிப்பாளர் ஒருவருக்குத் திருமணம் செய்ய வேண்டி ஒரு நண்பர் வீட்டில் பெண் கேட்டோம். பெண் மறுத்துவிட்டாள். ''தடங்கலுக்கு வருந்துகிறோம்'' என்று அடிக்கடி வருந்துகிற மாப்பிள்ளை வருந்தி வருந்தியே இளைத்துவிடுவார் என்று பெண் கிண்டலடித்தாள்.

தடங்கலுக்கு வருந்தும் வியாதி வானொலியில் இருந்து தொலைக்காட்சிக்கும் தொற்றிக் கொண்டது. நல்ல வேளை... இப்போதெல்லாம் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதோடு சரி... வருந்துவது இல்லை.

வாழ்க!

தடங்கலுக்கு வருந்த என்ன இருக்கிறது?

தடைகள் வெற்றியின் புதையல். தடங்கல் வெற்றியின் தடங்கள்.

அண்மையில் வேலூர் தந்தை பெரியார் பொறியியல் கல்லூரிப் பேரவை விழாவில் பேசிக்கொண்டிருந்தேன். வெற்றிகரமான என் உரையை மாணவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தபோது ஒரு தடங்கல். பொறியியல் கல்லூரிகளை எல்லாம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் ஆய்வுப் பணிக்காக அதன் துணைவேந்தர் திடீரென்று கல்லூரிக்கு வந்துவிட்டார். என் பேச்சை இடையில் நிறுத்தி, அவர் பேசிவிட்டுப் புறப்பட வேண்டும்.

என் பேச்சை இடையில் நிறுத்தும் எண்ணம் யாருக்குமே ஏற்பட முடியாது. என்றாலும் தவிர்க்க முடியாத நிலையில் ஒரு பேராசிரியர் தயங்கித் தயங்கி என்னிடம் மிக்க மரியாதையுடன் விஷயத்தை விளக்கினார். உணர்ச்சிமயமான பேச்சை இடையில் நிறுத்தி மீண்டும் தொடங்குவது உண்மையில் படு சிரமமான விஷயம். என்றாலும் துணைவேந்தரைக் காக்க வைப்பதும் தவிர்ப்பதும் கல்லூரிக்குக் கவலையளிக்கும் பிரச்சினை.

மாணவர்கள் நன்மை கருதி, துணைவேந்தரை இடையில் பேச அனுமதிப்பது என்று தீர்மானித்தேன்.

மாணவர்களைப் பார்த்து, ‘‘துணைவேந்தர் இப்போது பேச வந்துள்ளார். எமது நிகழ்ச்சியின் இடையில் ஏற்பட்ட தடங்கலுக்கு வருந்துகிறோம் என்று சொல்லமாட்டேன்... உங்களுக்கு நன்மை செய்ய அவர் வந்திருப்பதால் தடங்கலுக்கு மகிழ்ச்சி அடைகிறோம்’’ என்றேன்.

மாணவர்களின் கரவொலி வெற்றி முரசாக ஒலித்தது.

இன்னும் உயர்ந்த விஷயம் சொல்கிறேன்.

இயேசு பிரான் தமது இறைச்செய்தியை வழங்க நினைத்தபோது அது எளிமையாக முடிந்ததா? தடங்கல் வரவில்லையா? தச்சன் ஜோசப்பின் அதிகப்பிரசங்கி மகனாக அல்லவா உலகம் அவரை அடையாளம் கண்டது! முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டு முள்மகுடம் அல்லவா வைத்தது!

மறந்துவிடாதீர்கள்... சிலுவையில் அறைந்ததால்தான் இயேசு இன்னமும் ஜீவிக்கிறார்.

மிகச் சுலபமாக அவர் மதம் பரவியிருந்தால் கடவுள் பெயரால் வயிறு வளர்த்த சமயச் சொற்பொழிவாளனாக அந்த மரியாளின் மகன் மரித்திருத்துப்பார்.

கவனத்தில் வையுங்கள். தடைகள் வெற்றியின் புதையல். தடங்கல் வெற்றியின் தடங்கள்.

ஸல் அல்லாஹு ஸல்லம் நபிகள் நாயகம் மூலம் திருமறை தரையிறங்கியது. உலகு உடனே ஒப்புக்கொண்டதா? மெக்காவில் இருந்து மதீனா வரை அவரை ஓடவிட்டதே..! ஆனால் இன்றைக்கு... உலகமே அவர்களது புனித பூமியை நோக்கி ஓடுகிறதே!

கவனத்தில் வையுங்கள், தடைகள் தடைகளே அல்ல... தடங்கல் வெற்றியின் தடங்கள்.

கந்த புராணத்தைக் கச்சியப்பர் அரங்கேற்றியபோது இலக்கண விளக்கம் கேட்டு அரங்கேற்றத்தையே ஒரு தமிழ்ப் புலவர் தடுத்தார். ஆனால் முருகனே முன்வந்து விளக்கம் கூறியதால் கந்த புராணம் தமிழகம் எங்கும் தழைக்கத் தொடங்கியது.

கவனத்தில் வையுங்கள்... தடைகள் தடைகளே அல்ல... வெற்றியின் புதையல்.

ஒரு கதை சொல்லட்டுமா..?

அவர் ஒரு விசித்திரமான அரசர். தம் மக்களைப் பற்றியே எப்போதும் கவலை அவருக்கு! மக்கள் அதிகமாகக் கடந்து போகும் மலைப் பாதையின் குறுக்கே ஒரு பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தார். அந்த வழியில் பயணப்பட்ட பலர் கல்லைக் கண்டு எரிச்சல்பட்டார்கள். சிலர் வெகுதூரம் ஒதுங்கி வேறு வழியாகப் பயணப்பட்டார்கள். சிலர் ராஜாவை வெகுவாகத் திட்டினார்கள்.

‘‘என்ன அரசாங்கம்! பொறுப்பற்ற அரசு அதிகாரிகள்... மக்களுக்கு இடையூறு உள்ளதே... நீக்க வேண்டாமா?’’ என்று புலம்பினார்கள்.

சிலர் சிரமப்பட்டுப் பாறாங்கல் மேல் ஏறி இறங்கி அவர்களாகவே ஒரு வழியை உண்டாக்கிக் கொண்டார்கள்.

ஆனால் ஒருவருக்குக்கூடப் பாறாங்கல்லைப் பாதையைவிட்டு நகர்த்த வேண்டும் என்று தோன்றவில்லை. பலரோ, பாறாங்கல்லைப் பார்த்ததும் பயணம் தடைப்பட்டது என்று பயணத்தையே நிறுத்திவிட்டு, பாறாங்கல்லை நகர்த்திய பிறகு பயணப்படலாம் என்று சாலை ஓரத்தில் படுத்துவிட்டார்கள்.

ஆவேசமாக அங்கு வந்த இளைஞன் ஒருவன் மட்டும் அந்தக் கல்லை நகர்த்த முயற்சி செய்தான். பலர் பரிகசித்தார்கள். சிலர் ராஜதண்டனை கிடைக்கும் என்று எச்சரித்தார்கள். வெகுசிலர் உதவிக்கு வந்துவிட்டு, நம்மால் முடியாது என்று கைவிட்டனர். அவன் விடாப்பிடியாகப் போரடினான். கல் நகர்ந்தது. கல்லைச் சரிவில் உருட்டினான். கல்லுக்குக் கீழே ஒரு கடிதமும் பையும் இருந்தன.

‘இந்தக் கல்லை யார் நகர்த்துகிறார்களோ அவர்களுக்கு அரசரின் அன்பளிப்பு ஆயிரம் பொன்’ என்று இருந்தது!

கவனத்தில் வையுங்கள்... ஒவ்வொரு தடங்கலிலும் ஒரு புதையல் ஒளிந்திருக்கிறது. தேடி எடுத்தால் வெற்றி நிச்சயம்.

## 24. மரமா! மனிதனா?

கோபத்தில் திட்டுகிறபோது, ‘‘ஏன் இப்படி மாடு மாதிரி நிக்கறே!’’, ‘‘மரம் மாதிரி வளர்ந்துட்டே!’’ என்று ஏசுகிறோம். இது சரிதானா? இயற்கையையும், பிற உயிர்களையும் தகுதியற்ற மனிதனோடு ஒப்பிட்டுப் பேசுவது அநீதி அல்லவா?

காரணம்... மாடு இன்றைக்கு ஐயாயிரம் ரூபாய் விலை போகிறது. இவன் போவானா?

மரம் நிழல் தரும்... காய் தரும்... கனி தரும்... செத்தாலும் விறகாக தன்னையே தரும். ஆனால் இந்த மனிதன் செத்தாலும் தானாக எரியமாட்டான். கொஞ்சம் விறகு (மரம்) வைத்துதான் எரிக்க வேண்டியுள்ளது.

எனவே மரம் போல, மாடு போல என்று மனிதனைத் தாழ்த்துவதாக நினைத்துப் படைப்பைத் தாழ்த்தக் கூடாது.

எனக்கு இந்தக் கோபம் எப்போது ஏற்பட்டது தெரியுமா? திருக்குறள் படிக்கும்போது திருவள்ளுவர் மீது ஏற்பட்டது. உரம் என்கிற ஊக்கம் இல்லாத ஒருவனை மரம் என்று திட்டுகிறார் திருவள்ளுவர்.

‘உரம் ஒருவனுக்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார் மரம் மக்கள் ஆதலே வேறு’ என்பது குறள்.

ஒருவருக்கு ஊக்கம் மிகுதியே வலிமையாவது. அவ்வூக்கம் இல்லாதார் மக்களாகார். மரங்கள் ஆவார் (வடிவால் மக்களாய் இருப்பதே மரங்களில் இருந்து வேறுபட்ட தன்மையாகும்) என்பது பொழிப்புரை.

ஊக்கம் இல்லாத மனிதனை மரம் என்கிறார் வள்ளுவர்.

நியாயமா?

கண்டிப்பாக நியாயம் இல்லை!

ஏன்?

மரம்கூட உயிர் வாழ வேண்டும், உயர வேண்டும் என்ற வேட்கையும் முயற்சியும் ஆவேசமும் உடையது! அதுவும் இல்லாத மனிதனை மரம் என்று எப்படிச் சொல்லலாம்?

எல்லா மரமும் ஒளியை நோக்கியே தன் பயணத்தைத் தொடங்கும். எப்படியாவது வெளிச்சத்தில் பிரவேசிக்க ஏங்கும் தாவர தர்மம்கூட இன்றி இருட்டில் புதைய விரும்பும் மனிதன் மரமா? மரத்தைவிட மட்டமா?

மாமரத்தின் ஒரு கிளையை எப்போதாவது முறித்தது உண்டா? அப்படி முறித்தால் மாமரம் மௌனமாக உங்கள் அழிப்பை ஆமோதித்தது உண்டா?

எங்கு முறித்தீர்களோ அதன் அடிப்பகுதியில் இருந்து பத்துப் பதினைந்து கிளைகளாக ஆவேசமாக எட்டிப் பார்க்கும் தாவர அகங்காரத்தை நீங்கள் தரிசித்தது உண்டா?

‘‘படவா... என் ஒரு கிளையையா முறித்தாய்... பார்... பார்... பத்துக் கிளையாய்ப் படந்து பரப்பி நான் தழைத்து நிற்கிறேன் பார்’’ என்று காற்றில் தலையாட்டும் மாமரத்தின் மமகாரம் மகத்துவம் மிக்கது!

பலமற்ற மரம் முருங்கை. ஆடிக் காற்று ஆட்டிப் பார்ப்பது மட்டுமல்ல, அடியோடு அதை வீழ்த்தி விளையாடும். மொளுக்கென்று முறியும் முருங்கைக்குக்கூட மூர்க்கம் உண்டு. கவனித்தது உண்டா? வெட்டி எறிந்த வெற்றுத் துண்டுகூட வேர்விடத் துடிக்கும். தளிர்களை விரிக்கும். விருட்டென்று எழுந்து விருட்சமாய் விஸ்வரூபம் காட்டும். மாமரம் வெட்டிய இடத்தில் முளைக்கிறது! முருங்கையோ வெட்டி எறிந்த துண்டுகூட தழைக்கிறது!

வாழ வேண்டும் என்கிற வைராக்கியம், வெறி, வேகம் மரத்திற்கு இருக்கிறதே! எத்தனை மனிதருக்கு இருக்கிறது?

ஆஸ்திரேலியக் காடுகளில் ஒருவகைப் புல் மரம் இருக்கிறது. புல் மரமா? ஆம் புல் மரம்! கொடிய தீ பரவிக் காட்டையே அழித்தாலும், அத்தனை மரங்களும் செத்து விழுந்தாலும் தான் மட்டும் அழிவதில்லை... அந்தப் புல் மரம். மேல் பகுதி கருகினாலும் அதன் குருத்து மட்டும் அழிவதே இல்லை. என்றாவது மழை பெய்ததும் குருத்து கிளம்பும். தாவரம் சிலிர்க்கும்... புல் மரம் புத்துயிர் பெற்றுப் பூரித்து நிற்கும்!

எத்தனை மனிதர்களால் இப்படிச் சிலிர்க்க முடிகிறது? இந்த மரங்கள் என்ன மனிதனைவிட மட்டமா?

வாழ வேண்டும் என்கிற வைராக்கியம், ஆவேசம் மரம் நடத்தும் மகத்தான பாடம். இந்த உயர்ந்த மரங்களை ஊக்கம் இல்லாத மனிதனோடு வள்ளுவர் ஒப்புமை காட்டி விட்டாரே! வள்ளுவரை மறுக்கலாமா? ஏன் மறுக்கக் கூடாது?

ஒரு மருத்துவமனையில் இருந்து இறந்து போனவர்களின் பிணங்களை போஸ்ட் மார்ட்டம் செய்துவிட்டு வேனில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். பாதி வழியில்

ஒரு பிணம் எழுந்து உட்கார்ந்தது! டிரைவர் தோளைத் தட்டிக் குடிக்கத் தண்ணீர் கேட்டது! டிரைவர் அலட்சியமாக, ''செத்தவனுக்கு எதுக்குத் தண்ணீர்? பேசாமப் படு'' என்றார். பிணம் அலறியது... ''ஐயா... நான் சாகவில்லை. உயிரோடு இருக்கிறேன்'' என்றது. டிரைவர் அலட்சியமாக, ''எவ்வளவு பெரிய டாக்டர் அவரு... அவரே சொல்லிட்டார் செத்துட்டே அப்படீன்னு... அவரு சொன்னால் சொன்னதுதான். நீ உயிரோடு இருக்கேன்னு சொன்னால் நம்புவோமா?'' என்றார்.

இந்தக் கதை மாதிரி வள்ளுவர் சொன்னால் சொன்னதுதான் என்று சாதிக்க எனக்கு விருப்பம் இல்லை.

அழிப்பை எதிர்க்கும் ஆவேசத்தை மரங்களிடம் இருந்து படியுங்கள்..! ஒரு மரத்துக்கு இருக்கும் ஊக்கம் உங்களுக்கு இருக்குமென்றால் வெற்றி நிச்சயம்.

மாமுனிவன் வள்ளுவன் எதிர்பார்க்கும் ஊக்கம் உங்களுக்கு இருந்தால் வெற்றி சர்வ நிச்சயம்!

## 25. விஞ்ஞானி ஆன வேலைக்காரி!

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டில் விட்டுவிட்டு வெளியே போகவேண்டுமென்றால் இப்போதெல்லாம் யாரிடம் விடுகிறார்கள்? பாட்டி, தாத்தாவிடமா? இல்லை. பட்டணத்து வீடுகளில் பாட்டி, தாத்தாக்களுக்கு விசா கிடைப்பது கஷ்டம். வீடு கடத்தப்படுவார்கள். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள 'கிரெச்' வந்துவிட்டது. சில பெற்றோர்கள் தனி நபர்களைச் சம்பளத்துக்கு நியமிக்கிறார்கள். சென்னையில் அந்தப் பெண்மணிகளின் செல்லப் பெயர் 'ஆயா'.

கணவனும் மனைவியும் 'ஹாயா'க இருக்க வீட்டில் பிள்ளைகளைப் பேணும் பெண்மணியின் பெயர் ஆயா..!

பிரான்ஸ் நாட்டில் இப்படிப்பட்ட ஆயா ஒருத்தி உலகப் புகழ் பெற்றாள். மறக்க முடியாத மாமனிதர் பட்டியலில் இடம் பெற்றாள். சாதிக்க முடியாத சாதனைகளைச் சாதித்துக் காட்டினாள். யார் அவள்? மேரி...

தெரியவில்லையா? இன்னும் கொஞ்சம் சொன்னால், ஆம்... ஆம்... என்று தலையாட்டுவீர்கள்.

பிரான்ஸ் நாட்டில் ஒரு பணக்கார வீட்டில் குழந்தைகளைப் பேணும் (பேபி சிட்டர்) ஆக வேலைக்குச் சேர்ந்தாள் மேரி. பதினெட்டு வயது நிரம்பிய அழகிய பெண். அன்பு ததும்ப தன் பணிகளைப் புரிந்த அவள் மீது அந்த வீட்டின் மூத்த மகனுக்குக் காதல் அரும்பியது. அவ்வளவுதான். அந்தப் பையனின் பாணக்கார அப்பா நம்மூர் பண்ணையார்கள் பாணியில் ஆடித் தீர்த்துவிட்டார்.

கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கும் அந்தக் குடும்பத்துக்கு மருமகளாய், அடுத்த வீட்டில் சாப்பாட்டுக்குக் கையேந்தும் மேரி எப்படிக் குடியேற முடியும் என்று அவமானப்படுத்தினார். கேவலப்படுத்தினார். வீட்டை விட்டு வெளியேறினாள் மேரி. பாரீஸுக்கு வந்தாள். தனது நெடுநாள் கனவுகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சிகளைத் தீவிரமாகத் தொடங்கினாள். அவமானம் அவளை வீறு கொண்டு எழச் செய்தது. சாதிக்கும் வெறி அவளுள் ஊதி ஊதி உலை வைத்தது. உலகமே வியக்கும் யுரேனியக் கதிர் வீச்சைக் கண்டறிந்தாள். புற்று நோய்க்கான முறிப்புச் சக்தியை யுரேனியக் கதிர் வீச்சில் கண்டறிந்து முன் வைத்தாள். நோபல் பரிசு பெற்றாள். நினைத்தபடி தான் காதலித்த அந்தப் பணக்கார வாலிபனைக் கைப் பிடித்து உலகப் புகழ் பெற்றாள். யார் அவர்? மேடம் மேரி க்யூரி அம்மையார்! ‘‘

ஜாதகம் சரியாக இருந்தால் சாதிப்பேன்... சாதகமாகப் பலர் இருந்தால் சாதிப்பேன்’’ என்று நழுவாது விடாமுயற்சி செய்து வெற்றி பெற்றார், மேடம் க்யூரி. நீங்கள் எப்படி?

ஸ்காட்லாந்து மன்னர் புரூஸ் தமது அரண்மனையில் உட்கார்ந்திருந்தார். நாட்டை இழந்த சோகம் அவர் முகத்தில் வலை பின்னியிருந்தது. ஏன்..? தோல்வி... தோல்வி... எல்லாப் போரிலும் அவருக்குத் தோல்விக்கு மேல் தோல்வி! மேலும் மேலும் அவமானப்பட அவரால் முடியவில்லை. பல முறை முயன்றும் தோல்வி என்பதால் போர் முயற்சியைக் கைவிடலாமா என்று கவலையுடன் யோசித்தார். கன்னத்தில் கை வைத்தபடியே மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னருக்கு அங்கே ஓர் ஆச்சரியமான காட்சி காத்திருந்தது.

வீட்டு மேல் கூரையில் ஒரு சிலந்தி. தனது எச்சிலை நூலாக்கி வலை பின்னிக் கொண்டிருந்தது. மிகமிக மெல்லிய நூல் இழை. அதில் தொங்கிக் கொண்டே தன் எட்டுக் கால்களை அப்படியும் இப்படியும் அசைத்து அசைத்துத் தனது குடியிருப்பை... தனது உணவுகளைப் பிடிக்கும் படைக்கான அணிவகுப்பை... வலைப் பின்னலை உருவாக்கிக் கொண்டிருந்தது சிலந்தி. வலை அறுந்து அறுந்து போனாலும் கொஞ்சம்கூடக் கவலைப்படாமல், ஓய்ந்து ஓய்ந்து விடாமல் பாய்ந்து பாய்ந்து வலை பின்னியது சிலந்தி. தோல்வி அந்தச் சிலந்தியைப் பாதிக்கவே இல்லை.

மன்னருக்குப் பொறி தட்டியது. இத்தனை தோல்விக்குப் பிறகும் தளராமல் சிலந்தி செயல்படும்போது, காரிய சாதனை செய்யும்போது நாம் இப்படித் தளர்ந்து போகலாமா என்று தன் உணர்வு பெற்றார். சிலந்தியின் முயற்சி அவரைச் சிந்திக்க வைத்தது. போரைச் சந்திக்க வைத்தது! நாட்டை மீட்டு மீண்டும் அரியணை நாற்காலியில் ஏற வைத்தது!

முடியாது... என்று சிலந்தி கூட ஒதுங்குவது இல்லை. முதுகெலும்புடைய மனிதன் ஒதுங்கலாமா? அவமானப்படுத்தப்பட்ட மேரி... அங்கீகரிக்கப்பட்ட மேடம் மேரி க்யூரி ஆகவில்லையா? நீங்கள் அப்படி ஆக முடியாதா? முடியும்... முடியும்... உங்களால் முடியும். அதற்கு என்ன வேண்டும்? முயற்சி வேண்டும்.

தமிழ்க் கிழவன் வள்ளுவன் சொன்னது தெரியுமா?

*‘அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்’ என்றார். (குறள் - 611).*

தமிழ்நாட்டுப் புலவர்கள் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை எழுதினார்கள். பிரான்ஸ் நாட்டு மேடம் க்யூரியும் ஸ்காட்லாந்து புரூஸும் வாழ்வுரை வழங்கினார்கள். உங்கள் அபிப்ராயம் எப்படி? பொழிப்புரை எழுதி இரண்டு மதிப்பெண் பெற்றால் போதாது... வாழ்வுரை எழுதி வளமை சேருங்கள். வாழ்ந்து காட்டுங்கள். முடியாது... முடியாது என்று ஒதுங்காமல், முடியும்... முடியும்... என்று முயலுங்கள். வெற்றி நிச்சயம்.

# 1. முன்னேற்றத்தின் மூலமந்திரம்

‘‘**நா**ன் முன்னேற வேண்டும் என்று நினைக்கிறேன். ஆர்வமாக இருக்கிறேன். ஆனால் யாரும் எனக்கு எதையும் கற்றுத் தருவதில்லை’’ என்று சில இளைஞர்கள் புலம்புகிறார்கள்.

அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

உங்களுக்கு யாரும் எதையும் கற்றுத் தரமாட்டார்கள். நீங்களாக எவ்வளவு வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம்.

யாரும் உங்களுக்கு எதையும் ஊட்டமாட்டார்கள். ஆனால், நீங்களாக எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடலாம். யாரும் தடுக்க முடியாது.

தலைவராவது எப்படி என்று காந்திஜிக்கு யாராவது வகுப்பு நடத்தினார்களா? இராணுவம் அமைப்பது எப்படி என்று நேதாஜிக்கு யாராவது சொல்லிக் கொடுத்தார்களா?

கற்றுத் தரமாட்டார்கள்... நீங்களாகக் கற்றுக் கொள்ளுங்கள். இதுதான் முன்னேற்றத்தின் மூலமந்திரம்.

எனக்குத் தெரிந்த பெண்மணி ஒருவர் மிக நன்றாகச் சமைப்பார். ‘சமைப்பது எப்படி?’ என்ற புத்தகத்தை அவர் படித்ததும் இல்லை; அவரது தாயார் அவருக்குச் சமையல் சொல்லிக் கொடுத்ததும் இல்லை. அவருடைய தாயாரிடம் கோலம் போடுவதைச் சொல்லித் தரும்படி அவர் கேட்டபோது அவர் அம்மா சொன்ன வாசகம்ஃ

‘‘இந்தா பார்... கண் பார்த்ததைக் கை செய்யணும். இதுல கத்துக் குடுக்க என்ன இருக்கு?’’ என்றாராம்.

இது உண்மை. சொல்லிக் கொடுப்பதால் ஒருவர் திறமைசாலி ஆக முடியும். நான் மறுக்கவில்லை. ஆனால் சொல்லிக் கொடுப்பதால் திறமைசாலியாக ஜொலித்ததைவிட, கற்றுக் கொண்டதால் திறமைசாலியாக ஜொலித்தவர்களே அதிகம்.

ஒரே ஆசிரியர் பத்து மாணவருக்கு நாட்டியம் கற்றுத் தந்தால் பத்துப் பேருமா ஜொலிக்கின்றார்கள்? கிராஸ்பிங் என்கிற உள்வாங்குதிறன் - உறிஞ்சுதிறன் உள்ளவர்களே உயர உயரப் பறக்கிறார்கள்.

இன்றைக்குப் பல இளைஞர்கள் அரட்டை அடிக்கும்போது, பயணிக்கும் போது தங்களை வெளியிட, வெளிக்காட்டப் பரபரக்கும் அளவு, சுற்றி நிகழ்வதை, அதன் நுட்பங்களை உள்வாங்குவதில்லை. வெளிக்காட்டும் வேகத்தைத் தவிர்த்து உள்வாங்கும் திறனை அதிகரித்தால் வெற்றி நிச்சயம்.

பிறர் கற்றுத் தந்தால் என்ன என்கிற எதிர்பார்ப்பு சார்பு மனப்பான்மையை உருவாக்குகிறது. செயல்திறனைக் குறைக்கிறது. உங்கள் சிந்தனைச் சக்தியைக் குறைக்கிறது.

‘சமைத்துப்பார்’ புத்தகத்தை வைத்துக் கொண்டு ஒரு பெண் பூரி செய்தாள். புத்தகத்தில் போட்டிருந்தபடியே நடந்து கொண்டாள்.

‘‘எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் வை.’’ வைத்தாள்.

‘‘பிசைந்த கோதுமை மாவை உருண்டையாக உருட்டிக் கொள்’’. உருட்டிக் கொண்டாள்.

‘‘பலகையில் வைத்து வட்ட வட்டமாக இட்டுக் கொள்’’. இட்டுக் கொண்டாள்.

‘‘ஐந்து நிமிடம் கழித்து, வட்டமாக இட்ட பூரியை எண்ணெயில் போடு’’. போட்டாள்.

பூரி உப்பிக் கொண்டுவரும் என்று புத்தகத்தில் போட்டிருந்தது. ஆனால் அவளுக்குப் பூரி உப்பவேயில்லை.

ஏன்? அடுப்பு பற்றவைக்கவே இல்லை.

ஏன்? அடுப்புப் பற்றவை என்று புத்தகத்தில் போடவேயில்லை. புத்தகத்தில் போடாவிட்டாலும் அடுப்பைப் பற்ற வைக்காமல் சமையல் செய்ய முடியுமா? சமைத்துப்பார் புத்தகத்தில் ஒவ்வொரு ஐட்டங்களின் முன்னாலும் அடுப்பைப் பற்ற வை என்று போடுவார்களா?

எல்லா விஷயங்களையும் கற்றுத் தரமாட்டார்கள். நாமாகச் சிலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சீன தேசத்தில் ஒரு அரசர். வித்யாசமான பேர்வழி. மாமிச உணவின் ரசிகர். அதிலும் மாட்டு மாமிசம் மனிதருக்கு மிகமிக இஷ்டம். அவரே தினம்தோறும் மாட்டைத் தேர்ந்தெடுப்பார். அவர் எதிரிலேயே அந்த மாடு வெட்டப்படும். அந்த மாட்டை வெட்டுகிறவரும் ஒரே நபர்.

தினம்தோறும் அரண்மனைக்கு வருவார். அரசர் தேர்ந்தெடுத்த மாட்டை ஒரே வெட்டில் கோடாரியால் வெட்டி விடுவார். தலை வேறு, உடல் வேறாகிவிடும். எந்த மாட்டையும் அவர் அரைகுறையாக வெட்டி மறுமுறை வெட்டியதாக வழக்கமே இல்லை.

அரசருக்கு ஒரே ஆச்சரியம். ‘‘இந்தக் கோடாரியைத் தினம்தோறும் சாணை பிடிப்பாயா?’’ என்று கேட்டார். ‘‘இல்லை... சரியாக வெட்டுகிற பாணியில் வெட்டினால் கூர் மங்காது’’ என்றார்.

‘‘அது என்ன சரியான பாணி?’’ என்றார் அரசர்.

முதல் நாள் இடது கைப் பக்கமாகச் சரித்துக் கொண்டு வெட்டுவேன். அடுத்த நாள் வலது கைப் பக்கமாகச் சரித்துக் கொண்டு வெட்டுவேன். இப்படி மாறிமாறி வெட்டுவதால் இருபக்கமும் சமமான கூர்மையுடன் இருக்கும். அதுமட்டுமல்ல... வெட்டுகிறபோது கொடுக்கிற அழுத்தம் ஒரே மாதிரியாக இருக்கும். மாறாது. அதனால் இடது, வலது என்று மாறி மாறி வெட்டினால் கூர் தீட்டப்பட்ட மாதிரி ஆகிவிடும்’’ என்றார் மாட்டை வெட்டுபவர்.

‘‘இந்தக் கலையைக் கற்றுத் தர முடியுமா?’’ என்று கேட்டார் அரசர்.

‘‘மகாராஜா... அதுமட்டும் என்னால் முடியாது. காரணம் எனக்கு யாரும் இதைக் கற்றுத் தரவில்லை. என் தாத்தா வெட்டும்போது தள்ளி நின்று பார்த்தேன். என் தகப்பனார் வெட்டும்போது அருகில் நின்று கவனித்தேன். அவர்கள் யாரும் எனக்கு எதையும் சொல்லித் தரவில்லை. எந்தக் கலையுமே ஒருவர் மனசிலிருந்து அடுத்தவர் மனசுக்கு வருவது. இதை உள்வாங்கிக் கொள்ளலாமே ஒழிய சொல்லித் தந்துவிட முடியாது’’ என்றார் மாட்டை வெட்டுபவர்.

கண்ணையும் காதையும் கருத்தாகத் திறந்து வைத்துக் கொண்டு உள்வாங்கப் பழகுங்கள்

## 2. அனுமனிஸம் தெரியுமா?

சின்னஞ் சிறுசுகள் இருக்கிற இடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். 'குபீர் குபீர்' என்று சிரிப்பொலி, 'ஓ... ஆ...' என்கிற ஒலி அலைகள் இவையெல்லாம் இளசுகளின் முரசுகள். காரணம் இன்றியே கலகலப்பாக இருத்தல் இளமையின் இயல்பு. அதனால்தான் திருவெம்பாவையில் இளம்பெண்களை எழுப்பும் பாடல்களில், 'முத்தன்ன வெண்நகையாய்', 'ஒள் நித்தில நகையாய்' என்று நகையை, சிரிப்பைக் குறித்து விளிப்பதாக மணிவாசகர் பாடுகிறார். காசு கொடுத்தாலும் கலகலப்பு வராத காலம் முதுமை. சாப்பிடும்போது கூட, 'அந்தப் பாயசத்தைப் போட்டுத் தொலை', 'அந்தச் சனியனை எடு' என்று அலுத்தும் சலித்தும் உண்ணுவதே கிழத்தனம். வாழ்க்கை வறண்டுவிட்டது.

உற்சாகம் செத்துவிட்டது. மனம் மரணித்துவிட்டது. 'டிப்ரஷன்' என்னும் ஆழ்மனச் சோர்வு முதுமையில் ஆட்டிப் படைக்கிறது. இளமையில் உற்சாகமும் முதுமையில் சோர்வும் வாழ்வின் அமைப்பு. ஆனால் இளமையிலேயே சோர்வு இருந்தால் வாழ்க்கை என்னாவது? ரத்தத்தில் இரும்புச் சத்துக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, கண்களில் எரிச்சல் என்று இளைஞர்கள் சோர்ந்து வழிகிறார்கள். இத்தகைய உடற்குறைபாடுகள் காரணத்தால் வந்த சோர்வு எளிதாகக் களையத் தக்கது. முருங்கைக் கீரை, அகத்திக் கீரை, அரைக் கீரை, உளுத்தங்கஞ்சி, பேரீச்சம் பழம், முட்டை, பால், தயிர் என்கிற உயிர்ச்சத்தும் இரும்பு, கால்சியம் நிறைந்த உணவுகளையும் திட்டமிட்டுச் சேர்த்தால் உடற்சோர்வை விரட்டலாம். விசையுறு பந்தினைப் போல் விண்ணில் குதிக்கலாம்.

மனச்சோர்வு (டிப்ரஷன்) வந்தால் என்ன செய்வது? பூலோக சுவர்க்கமான அமெரிக்காவில் சின்னஞ்சிறிசுகள், பள்ளிப் பிள்ளைகள், கை நிறையக் காசு கொழிக்கும் இளைய தொழிலதிபர்கள், வாலிப வணிகர்கள்கூட இன்று டிப்ரஷனில் சோர்ந்து போகிறார்கள். சம்பாதிப்பதில் ஆர்வம் இல்லை. சம்சாரிப்பதில் அக்கறை இல்லை. எதிலும் அலட்சியம், ஈர்ப்பில்லை. மானுட மண்புழுக்களாக வட்டமடித்துப் புதைந்து கொள்ளும் மனச் சோர்வில்

தவிக்கிறார்கள். என்ன செய்யலாம்? எப்படி ஜெயிக்கலாம்? இரண்டாயிரத்து இருபதில் உலகம் ஒரு கொள்ளை நோயால் கொண்டு போகப்படும். அது எய்ட்ஸ் அல்ல. டிப்ரஷன் என்பது அமெரிக்க உளவியல் ஆய்வு! அதற்கு என்ன செய்யலாம்? எப்படி ஜெயிக்கலாம்? வாழ்வின் எதார்த்தமான உண்மைகளை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். எண்ணங்களின் அலை வீச்சே மனம்... மனத்தின் இயக்கம். ஒரு அலை எவ்வளவு உயரமாக எழுந்து ஆடுகிறதோ அவ்வளவு மூர்க்கமாகத் தரையில் எறியப்படும். ஓங்கி அடி விழும். எழுச்சியைத் தொடர்வது வீழ்ச்சி.

ஒவ்வொரு எழுச்சியும் வீழ்ச்சியில்தான் முடிவடையும். இந்த வீழ்ச்சியைத் தாங்க முடியாதவர்கள் சோர்வடைகிறார்கள். ஒவ்வொரு வீழ்ச்சியாலும் பாதிக்கப்படாமல் மறுபடியும் எழுவதே உயிர்ப்பு இயற்கை, வாழ்முறை. வீழ்ச்சியின் வேகத்தை மீண்டும் எழுவதற்கான வேகமாக மாற்றிக்கொள்வதே சாமர்த்தியம். சில சமயங்களில் இந்தக் கடல் அலைகளின் எழுச்சி, வீழ்ச்சியைப் பூமி தாங்கிக் கொள்ள முடியாத மாதிரி, மனசின் எழுச்சி, வீழ்ச்சியை உடம்பு தாங்க முடிவதில்லை.

எனவே உடம்பைப் பலப்படுத்தினால் பாதி வெற்றி. வாழ்வின் இயக்கத்தை விளங்ள்கிக்கொண்டால் மீதி வெற்றி. இதற்கு மேலும் சோர்வு தாக்காமல் இருக்க அருமையான யோசனை சொல்கிறேன். குறித்துக் கொள்ளுங்கள். ராமாயணத்தில் அனுமனுக்கு ‘மகா உத்சாகாய’ என்று ஒரு நாமம் உண்டு. மிகவும் உற்சாகம் - சுறுசுறுப்பு உள்ளவன் என்று பொருள். அவன் சோர்ந்த இடங்கள் இல்லையா? உண்டு. சீதையைத் தேடிப் போகும்போது கடல் கடக்க வேண்டிய இடம். எல்லோரும் நம்மால் முடியாது என்று சோர்ந்து சுருண்டபோது அனுமனும் சுருண்டு சோர்ந்தான். எவ்வளவு பெரிய மனிதனுக்கும் டிப்ரஷன் வரும் என்பதற்கு இதுவே அடையாளம். அப்போது ஜாம்பவன்தான் அனுமனைத் தட்டி எழுப்பினார். ‘‘அடேய்... இந்தக் கடலைக் கடப்பது உனக்கு சிறிய வேலை’’ என்று சொல்லிச் சோர்வை விரட்டினார்.

அனுமனது நம்பிக்கைத் தீயை ஊதி ஊதி உலை வைத்தார். விஸ்வரூபம் எடுத்து விண்ணில் பாய்ந்தான் ஆஞ்சநேயன். என்ன பொருள்? நாம் சோர்வடையும்போது நமது பலத்தை நினைவூட்டும் நல்ல நண்பர்கள் நம்கூட இருந்தால் வெற்றி நிச்சயம். தன்னம்பிக்கை தூண்டப்பட்டால் வெற்றி நிச்சயம். அதையும் தாண்டிக் கடலில் பறக்கும்போது அனுமனுக்கு மீண்டும்

சோதனை. சோர்வு. எப்படி? மைந்நாக மலை. அங்கார தாரை, சுரசை என்ற மூவரால் தொடர்ந்து தொல்லைகள் வந்தன.

தன்னம்பிக்கை தள்ளாடியதும் கடவுள் நம்பிக்கைக்குத் தாவுகிறான் அனுமன். ராம நாமத்தை ஜபித்தால் துன்பம் நீங்கும் என்று 'ராம என எல்லாம் மாறும்' என்று ராம நாமம் சொல்லுகிறான். கவலையைக் கடந்து இலங்கையை மிதிக்கிறான். தன்னம்பிக்கையும் கடவுள் நம்பிக்கையும் ஒன்றுக்கொன்று எதிரி அல்ல. அரிசியும் கோதுமையும் மாதிரி. ஒன்று இல்லாதபோது மற்றொன்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். காரில் மலைப்பாதையில் போகிறபோது ஒரே கியரில் வண்டி போகுமா? போகாது. கியர் மாற்றி கியர் போட்டுக் காரை மலைமீது ஓட்டவில்லையா? அப்படித்தான்.

வாழ்க்கைப் பாதையும் மலைப் பயணம் மாதிரிதான். கியர் மாற்றி கியர் போடுகிற மாதிரி தன்னம்பிக்கையையும் கடவுள் நம்பிக்கையையும் மாற்றி மாற்றிப் பயன்படுத்திப் பயணத்தை நிகழ்த்தலாம். 'தன்னம்பிக்கை உடையவன் கடவுளைக் கும்பிடக் கூடாது... கடவுள் நம்பிக்கை உள்ளவன் சுயமுயற்சி செய்யமாட்டான்...' என்கிற வெட்டி விஷயங்களை வெளியே வீசிவிட்டு முன்னேறுகிற வழியைப் பாருங்கள். தன்னம்பிகையோடு இரு... அது தளரும்போது தட்டிக் கொடுத்து முறுக்கேற்றும் நண்பர்களைப் பெறு... அதற்கும் வழியில்லையா? இறை நம்பிக்கையைப் பயன்படுத்து. தயக்கம் இன்றி மாறி மாறி இவற்றைப் பயன்படுத்தி வெற்றியைக் குவிக்கப் பார். இதுவே அனுமனிஸம்... நண்பனே... இதை நீ புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்!

# 3. நீங்கள் பணக்காரரா? பிச்சைக்காரரா?

பிறரிடமிருந்து நமக்கு ஏதாவது கிடைக்கிறதா? பிறர் நமக்கு எதையாவது தரமாட்டார்களா என்று எதிர்பார்ப்பது, ஏங்குவது பிச்சைக்காரத்தனம். காசு வாங்கும் பிச்சைக்காரர்கள்... சாப்பாடு எதிர்பார்க்கும் பிச்சைக்காரர்கள் மாதிரி, பிறர் உழைப்பை எதிர்பார்ப்பவரும் பிச்சைக்காரர்கள் என்கிறேன்! இது சரியா என்று யோசியுங்கள்.

‘‘அம்மா... என் பனியன் எங்கே..? துண்டு எங்கே..?’’ என்று பனியனுக்கும் துண்டுக்கும்கூட அம்மாவை எதிர்பார்க்கும் இருபது வயசுப் பாப்பாக்களாக இளைஞர்கள் இருக்கலாமா? எதெற்கெடுத்தாலும் இப்படி அம்மாவைச் சார்ந்திருப்பவர்கள் திருமணத்திற்குப் பிறகு பெண்டாட்டியைச் சார்ந்து விடுவார்கள். அதுதான் பிரச்சினை. அதனால் அம்மாவை ஓரம் கட்டுவார்கள். பிற்காலப் பிரச்சினைகளுக்கு இந்த அம்மா சார்பு ஒரு காரணம்.

தொலைக்காட்சி விளம்பரங்கள் வேறு இந்த மனோபாவத்தை வளர்க்கின்றன. படிப்பிலும் கம்ப்யூட்டரிலும் மூழ்கி இருக்கும் பிள்ளைகளுக்கு வீவாவும் காம்ப்ளானும் கொண்டுவந்து கையில் நீட்டும் விளம்பரத் தாய்மார்கள் எதிர்காலத் தலைமுறையை மெல்ல மெல்ல நாசமாக்குகிறார்கள். நமக்கு எல்லாமே பிறர்தான் செய்ய வேண்டும் என்கிற சார்பு மனோபாவம் இளைய தலைமுறையிடம் வளரக் கூடாது. அன்பும் உபசரிப்பும் குற்றம் அல்ல. ஆனால் சாக்ஸைத் துவைக்கப் போடுவது... தேடும்போது எடுத்துக் கொடுப்பது - யூனிஃபார்ம் அயர்ன் செய்ய ஞாபகமாகத் தருவது - புத்தகங்களையும் தொலைத்த பொருள்களையும் தேடித் தேடி எடுத்துக் கொடுப்பது, இவை யாவும் அம்மா, அக்கா, அண்ணா, அப்பாவின் வேலைகள் என்று பிறரைச் சார்ந்து வளரும் பண்பு வளரக் கூடாது.

நாம் நமது காலில் நிற்க முடியாமல் போனால் உடல் ஊனம் என்கிறோம். வாழ்க்கையில் பிறரைச் சார்ந்திருப்பதும் ஒருவகை ஊனமே. இந்த ஊனம் வெற்றியின் விரோதி. எனவே இதை விட்டு விலகிச் சொந்தக் காலில் நில்லுங்கள். இல்லையேல் தமிழ்நாடு காங்கிரஸ் மாதிரி நொந்து நூலாகி விடுவீர்கள்.

உழைப்புக்குத் தயாராக இருப்பவர்கள் ஒருபோதும் தோற்பதில்லை. இன்னொன்று... முதுமை அவர்கள் உடலில் இடம் கேட்பதில்லை. ‘திருச்சியின் அழகிய கிழவர்’ கேள்விப்பட்டதுண்டா? முத்தமிழ்க் காவலர் அமரர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள். நெடிய உருவம், அழகிய வடிவம். எண்பது வயதிலும் மிடுக்கான நடை. கம்பீரமான பிசிறில்லாத குரல்... தடுமாற்றம் இல்லாத பேச்சு... பல்லாண்டுகட்கு முன்பு ஒரு விழாவுக்காகச் சென்னை வந்த அவரை, ரயில் நிலையத்தில் வரவேற்று அழைத்துப் போகக் காத்திருந்தேன். பயணக் களைப்பே இன்றி ரயிலில் இருந்து இறங்கினார். கையில் இருந்த சின்னப் பெட்டியை, மரியாதை நிமித்தம் வாங்குவதற்குக் கை நீட்டினேன்.

‘‘விடு... பெட்டியைப் பிறரிடம் கொடுத்துத் தூக்கச் சொல்லுமளவு எனக்கு வயதாகவில்லை’’ என்று கூறியபடி விடுவிடு என்று நடந்தார். அப்போது அவர் வயது எழுபது! எழுபது வயதிலும் பிறர் உழைப்பை, உதவியை எதிர்பாராத பெருஞ்செல்வம் அவர் மனத்தில் இருந்தது. அதனால்தான் அவர் ‘திருச்சியின் அழகிய கிழவர்’ எனப்பட்டார். பிறர் உழைப்பை எதிர்பாராததே அவர் இளமையின் இரகசியம்.

அண்மையில் மூன்று திருமணமாகாத இளைஞர்கள் குடியிருக்கும் அறைக்குள் போக நேர்ந்தது. bachelors den என்பது சரிதான். களைந்த நிலையிலேயே சுருண்ட ஜட்டிகள் நாலைந்து ஆங்காங்கே. பூமியில் வட்ட வடிவில் கழற்றி விடப்பட்ட லுங்கிகள். அடைத்து வைக்கப்பட்ட ஜன்னல்கள். குடலைக் குமட்டும் விவரிக்க முடியாத வாசனைக் கலவை... ‘‘ஜன்னலைத் திறக்கக் கூடாதா?’’ என்றேன். ‘‘யாரு திறக்கறது... யாரு அடைக்கிறது... போர் அடிக்கிற வேலை சார்... அது... ஞாபகமா சாயங்காலம் சாத்தாட்டி கொசு வரும். மழைத்தண்ணி உள்ள வந்துடும்’’ என்று பெரிய பட்டியல் இட்டார்கள். ஜன்னலை நாள்தோறும் திறந்து சாத்துவது பெரிய வேலையாகத் தோன்றுகிறது அந்த இளைஞர்களுக்கு... இவர்கள் வெற்றி பெறுவார்களா? யோசியுங்கள். உழைக்கத் தயங்கலாமா?

ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த சமயம் நிதானமாகத் தமது ஷூவுக்கு பாலிஷ் போட்டு அதன் அழகை ரசித்துத் கொண்டிருந்தார். அவருடன் வெளியில் போக வேண்டி புகழ்பெற்ற பதவியாளர் ஒருவர் அங்கு வந்தார். அதிர்ச்சியுடன், ‘‘என்ன மிஸ்டர் லிங்கன்... உங்கள் ஷூவுக்கு நீங்கள் பாலிஷ் போடுகிறீர்கள்?’’ என்று இழுத்தார். ‘‘ஏன்... நீங்கள் வேறு யார் ஷூவுக்கு பாலிஷ் போடுவீர்கள்?’’ என்று கேலியாகத் திருப்பினார் லிங்கன். உடல் உழைப்பு கேவலமானது அல்ல. உழைக்க மறுப்பவர்கள் சோம்பேறிகள். பிறர் உதவியை எப்போதும் எதிர்பார்ப்பவர்கள் ஒருவகையில் பிச்சைக்காரர்களே!

உழைப்பை நேசிப்பவர்களுக்குப் பொற்காலம் காத்திருக்கிறது. வெற்றி நிச்சயம்.

## 4. திறமைக்கு ஏது தோல்வி?

அவர் ஒரு தமிழ்ப் புலவர். அரசரிடம் போய்ப் புகழ்ந்து பாடினால் பிழைக்க முடியும் என்கிற அந்தக் காலத்தில் வாழ்ந்தவர். அவர் பார்க்கப்போன அரசன் புலவரைப் புலவராகப் பார்க்காமல் பிச்சைக்காரனைப் போல எண்ணிவிட்டான். புலமையைக் கண்டறிந்து பரிசு தராமல் காவலனிடம் சிறிய பரிசைக் கொடுத்தனுப்பி விட்டான். கிடைத்தது போதும் என்று வாங்கும் இரவலன் இயல்பு இல்லாத புலவர் கொதித்துப்போனார். ''காணாது ஈந்த பரிசிலைப் பெறும் வாணிபப் பரிசிலேன் நான் அன்று'' என்று கோபித்துக் கொண்டு புறப்பட்டுப் போனார். போகிற போக்கில் புலவர் உலகத்தைப் பற்றிச் சொன்ன ஒரு சொல் அற்புதம்... அபாரம்... அருமையோ அருமை. உலகம் என்ன அவ்வளவு சிறியதா? பெரியது. காப்பாற்ற இவன் ஒருவன்தானா? பலர் இருக்கிறார்கள்... என்கிற அர்த்தத்தில், ''பேணுநர் பலரே... பெரிதே உலகம்'' என்று சிலிர்த்துக் கொண்டார்.

இந்த நம்பிக்கை உங்களுக்கு உண்டா? ''இருக்கிற இந்தச் சின்ன வேலையையும் விட்டுவிட்டால் நாளைச் சாப்பாட்டுக்கு நான் என்ன செய்வது'' என்ற கவலையோடு சின்ன வேலையிலேயே செத்துப் போவது புத்திசாலித்தனமா? இன்றைக்குப் பெரும் புகழோடும் பணத்தோடும் வாழும் பலர் துணிந்து முடிவு எடுத்ததால்தான் பெரிய மனிதர்களாக மலர்ந்து நிற்கிறார்கள். எழுத்தாளர் அமரர் அகிலன், டைரக்டர் கே. பாலசந்தர் ஆகிய பலரும் இத்தகைய பட்டியலில் அடக்கம்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். வறுமை மிகுந்த குடும்பம் அது. தகப்பனார் பெருங் குடிமகன்! குடும்பப் பொறுப்பில்லாத தப்பான அப்பா. தாயார் இசைப் பாடம் நடத்தி கைக்கும் வாய்க்குமாய் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாள். அவர்களது அழகு நிறைந்த அருமை மகன் படிப்புக்குச் செலவழிக்க அவளிடம் வசதி இல்லை. ஏதோ ஒரு அலுவலகத்தில் எடுபிடி வேலைக்குச் சேர்த்துவிட்டாள் அன்பான அம்மா. அம்மா படும் கஷ்டத்தை அந்த அன்பு மகனால் தாங்க முடியவில்லை. ஆனால் அவள் விருப்பத்திற்காக அந்த அசட்டு வேலையில் அவனால் தங்க முடியவில்லை. திட்டும் ஏச்சும் பேச்சும் வாங்கும் எடுபிடிப் பயலாய்த் தன் வாழ்வு வீணாகிவிடுமோ என்று அஞ்சினான். மனப் போராட்டத்தில் எதிர்கால வாழ்வு பாழாகிவிடும் என்கிற பயமே விஞ்சியது. வேலையை ராஜிநாமா செய்துவிட்டுத் தன் தாய்க்கு எழுதிய கடிதத்தில், ''அம்மா... கடவுள் கொடுத்தது ஒரே ஒரு வாழ்க்கை.

அதையும் ஆபீஸ் பையனாகவே வீணாக்குவது புத்திசாலித்தனமல்ல... அதனால் வேலையில் இருந்து விலகிவிட்டேன்'' என்று எழுதினான்.

வாழ்க்கை அவனைத் தோல்விகளால் வளைக்கப் பார்த்தது. அவன் அந்தத் தோல்விகளால் தழும்பேறி வாழ்க்கையைத் தன் வசம் வளைக்கும் வலிமையேறியவன் ஆனான். நாவல்கள் எழுதினான். தோல்வி. கலை, இசை விமர்சனகர்த்தாவாக அவதாரம் எடுத்தான். ஒன்றும் பயனில்லை. அவன் திறமைக்கேற்ற திருப்புமுனை திறக்கவேயில்லை. மீண்டும் அவன் ஒரு அவதாரம் எடுத்தான். நாடக ஆசிரியனாக மாறினான். அப்போதுதான் ஒளிவெள்ளம் அவன்மீது பாய்ந்தது. ஓஹோ என்று புகழ் பெற்றான்.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு அவனைச் சென்றடைந்தபோதுதான் அவன் அன்றெடுத்த முடிவு - ''ஆபீஸ் பையனாக என் வாழ்வை வீணாக்கமாட்டேன்'' என்ற தெளிவு - எவ்வளவு உன்னதமானது என்று புலப்பட்டது. யாரந்த நாடகப் புலவன்? பெர்னார்ட் ஷா. அவனது விடாமுயற்சியும் தளர்ச்சியற்ற தைரியமும் உங்களுக்கு உண்டா? உண்டு என்றால் வெற்றி நிச்சயம்.

'ஷா' அவர்களைப் பற்றி இன்னொரு செய்தி. பழைய நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் ஆதரவாளர்கள் இந்தப் புதிய நாடக ஆசிரியர் புகழை வெறுத்தனர். 'ஷேக்ஸ்பியர் நாடகங்களோடு ஒப்பிட்டால் இவர் எழுத்துகள் வெறும் குப்பை' என்றனர். ஷேக்ஸ்பியர் பற்றி 'ஷா'வைப் பேச வைத்து அவமதிக்க அழைப்பு விடுத்தனர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பற்றிப் பேசிய பெர்னார்ட் ஷா சில வசனங்களை, சொல்லாட்சியை ஷேக்ஸ்பியரிலிருந்து எடுத்துக் கூறிச் சபையை ரசிக்க வைத்தார். வசனங்களை ஆஹா... ஓஹோ... என்று சபை பாராட்டிக் கைதட்டிக் கொண்டாடி முடித்த பிறகு சபையின் பாராட்டுக்கு நன்றி தெரிவித்த ஷா, ''நீங்கள் முற்றிலும் பாராட்டி ரசித்துக் கைதட்டிய வசனங்கள் எவையும் ஷேக்ஸ்பியருடையவை அல்ல. முற்றிலும் அவை என் வசனங்கள். நான் எவ்வளவு பெரிய எழுத்தாளன் என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்'' என்று சொல்லிவிட்டு அமர்ந்தார். சபையோர் முகத்தில் ஈயாடவில்லை.

அழைத்து அவமானப்படுத்த நினைத்தவர்கள் அவமானப்பட்டார்கள். திறமைசாலிகள் தோற்பதில்லை. அவர்களைப் பிறர் தோற்கடிக்க முடிவதில்லை. உங்களுக்கும் இத்தகைய திறமை இருந்தால் வெற்றி நிச்சயம்!

# 5. அடிமையாகாதே... அடிமையாக்காதே!

**க**ண் விழித்துப் படிக்கும் அருமைப் பிள்ளைக்குக் காபி டம்ளரைக் கையில் கொடுத்துவிட்டு, காபி குடித்ததும் டம்ளரைக் கையில் வாங்கிப் போகும் இந்தியப் பெற்றோர்கள் எதிர்காலத் தலைமுறையை உருவாக்குகிறார்களா? இல்லை உருக்குலைக்கிறார்களா என்றால், உருக்குலைக்கிறார்கள் என்பதே என் கருத்து.

தன் வேலைகளைத் தானே பார்க்காதவனே தலைவன், மேலாளர், மேம்பட்டவன், மேஸ்திரி என்கிற அபிப்ராயம், அடிமைப் புத்தி இந்தியாவின் பலவீனம். வளர்ந்த நாடுகளில் இந்த அடிமைத்தனம் இல்லை. முன்னேறிய நாடுகளின் ஹோட்டல் அறைகளில் தவறாமல் ‘காபி மேக்கர்’ இருக்கும். அவரவர் காலைக் காபியை அவரவர் தயாரித்துக்கொள்ள வேண்டும். தனக்கான காபியைத் தயாரிக்கிற மாதிரியே தனக்கான வாழ்க்கையையும் அவர் அவரே தயாரித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் அங்கே இருக்கிறது.

அளவுக்குமேல் பிறரைச் சார்ந்திருக்கும் அடிமைத்தனத்தை விட்டு இந்தியர்கள் வெளியில் வர வேண்டும். அடிமையாய் இருப்பதில் இந்தியனுக்கு ஏனோ ஆனந்தம் இருக்கிறது. இல்லை என்றால், ‘என்று தணியும் இந்த சுதந்திர தாகம்’ என்ற பாரதி, ‘என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்’ என்று கொதித்துப்போய்ப் பாடியிருப்பானா? அடிமை மோகம்... அடிமை மோகம். இந்தியரின் சாபக்கேடு.

அண்மையில் மதுரையிலிருந்து ரயிலில் வரும் சமயம், ஒரு சுயமரியாதைச் சுடர் அதே ரயிலில் பயணம் செய்தது. முதல் வகுப்புப் பெட்டியில் எனக்கு அடுத்த பிரிவில் இருந்த அந்தத் தலைவருக்கு ஏ.சி. பெட்டியில் இடம் கிடைத்ததாகத் தகவல் தரப்பட்டது. தனது மெல்லிய துண்டை மட்டும் சுமந்தபடி இறங்கி, அடுத்த பெட்டியில் அந்தத் தலைவர் ஏறினார். பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த சுயமரியாதை ஜோதிகள் - தொண்டர்கள் தொண்டை கிழிய அடிவயிற்றில் இருந்து ‘வாழ்க’ என்று கோஷம் போட்டார்கள். அவரது கைப்பையில் இருந்து, புத்தகக் கட்டுகள் வரை, தொண்டர் படையால் ரயிலின் அடுத்த பெட்டிக்கு மாற்றம் செய்யப்பட்டன. தலைவர்கள் தங்களது எந்தச் சுமையையும் தாங்கள் சுமக்கக் கூடாது என்கிற இந்திய அடிமைப் புத்தி ஒளிவீசியது.

கொஞ்சம் யோசியுங்கள்... ஒரு தனிமனிதனின் வருகைக்கும் வழி அனுப்புதலுக்கும் நூற்றுக்கணக்கான தனிமனிதர்கள், அதுவும் இளைஞர்கள் தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கிக் காத்திருக்க வேண்டுமா? இதுதான் பகுத்தறிவா..? வேலைவெட்டி இருந்தால் இளைஞர்கள் இப்படி நேரத்தை வீணாக்குவார்களா? எங்கே போனாலும் பாழாய்ப்போன சாமியார்கள், சமயத் தலைவர்கள் தங்களுக்கு ஜே... ஜே போட, ஜெய... ஜெய பாட இப்படி ஒரு வெட்டிக் கூட்டத்தைக் கூட்டுவதை நம்மால் சகிக்கவே முடியவில்லை. அவர்களாவது சிந்திக்காத சமயவாதிகள். இதைக் கண்டித்து எழுந்த- மக்களைத் திருத்தப் பிறந்த- பகுத்தறிவுச் சிங்கங்களும் இந்தப் பாழாய்ப்போன வெட்டிவேலையில் வெட்கமின்றி இளைஞர்களை ஈடுபடுத்துவது சகிக்கும்படியாகவா இருக்கிறது?

என் இனிய நண்பர்களே..! எந்தத் தலைவனுக்கும் ஜே போடாதீர்கள். பெட்டி தூக்காதீர்கள். அடிமைகளாகிச் சுயமரியாதையை இழக்காதீர்கள். சமயத் தலைவர்கள் கடவுளின் பெயரால் சிந்திக்காத அடிமைகளை உண்டாக்கினார்கள். பகுத்தறிவுவாதிகளும் இயக்கங்கள் பெயரால் சிந்திக்காத அடிமைகளை இன்று உருவாக்குகிறார்கள்.

பிறருக்கு அடிமையாகும் நிலையை வெறுக்கிறேன். பிறரை அடிமையாக்கும் தலைமையை அறவே வெறுக்கிறேன். பிறருக்கு அடிமையாவது தவறு. பிறரை அடிமையாக்குவது பெரும் தவறு.

ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி. அவர் தலைமையில் அமெரிக்காவில் போர் நடந்து கொண்டிருந்த சமயம். பத்துப் பதினைந்து போர் வீரர்கள் ஓர் உத்திரத்தைப் படாதபாடுபட்டு நகர்த்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குழுவின் தலைவன் குதிரையில் அமர்ந்தபடி அவர்களை அதட்டி உருட்டி வேலைவாங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு அந்த உத்திரத்தை நகர்த்த முடியாதபடி அதிகச் சிரமப்பட்டார்கள். வேகமாக அதட்டினான் அந்தக் குழுவின் தலைவன்.

அப்போது அங்கு குதிரையில் வந்த வீரன் ஒருவன் தலைவனைப் பார்த்து, ‘‘அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே... நீயும் அவர்களோடு சேர்ந்து அதை நகர்த்தக் கூடாதா?’’ என்று கேட்டான். குழுத் தலைவன், ‘‘நான் யார்

தெரியுமா? அவர்களின் தலைவன்... அவர்களோடு சமமாக நான் வேலை செய்ய முடியுமா?'' என்று உறுமினான்.

குதிரையில் வந்தவன் இறங்கி, வீரர்களுக்கு உதவி, உத்திரத்தை நகர்த்தி அதன் இடத்தில் வைத்துவிட்டுப் பிறகு தனது குதிரையில் ஏறி அமர்ந்தான். அந்தக் குழுவின் தலைவனைப் பார்த்து, ''இனி இப்படிக் கடினமான வேலை ஏதாவது இருந்தால் எனக்குச் சொல்லி அனுப்புங்கள். அவசியம் நான் வந்து உதவுகிறேன்'' என்று உரக்கச் சொன்னான்.

''நீ யார்? உனக்கு எப்படிச் சொல்லி அனுப்புவது? உன் இருப்பிடம் எது?'' என்று அலட்சியமாகக் குழுத் தலைவன் கேட்டான்.

''நானா... ஜார்ஜ் வாஷிங்டன். உங்கள் தலைமைத் தளபதி'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டுக் குதிரையைத் தூண்டிச் சிட்டாய்ப் பறந்தார் ஜார்ஜ் வாஷிங்டன். அந்த நாட்டு வெற்றியின் ரகசியம் புரிகிறதா?

அடிமையாக ஆசைப்படும் மக்கள் நிலைமை அபத்தமானது! அடிமையாக்க ஆசைப்படும் தலைமை ஆபத்தானது! சுயமரியாதையுடன் வாழுங்கள். கௌரவம் நிச்சயம்... கௌரவமான வெற்றி சர்வ நிச்சயம்!

## 6. கமலைவிட ரஜினிக்கு செல்வாக்கு ஏன்?

**த**மிழ்நாட்டுத் திரைப்படங்களில் கதைக்கென்று வழக்கமான 'ஃபார்முலா' ஒன்று உண்டு. ஒரு கதாநாயகன்... கதை முழுவதும் அவனை எதிரியாக நினைத்துப் போராடும் ஒரு வில்லன். வில்லன் இல்லாத திரைப்படம் உண்மையில் அதிசயமே! ஆனால் நிஜ வாழ்க்கையில் கதாநாயகனுக்கு வில்லன் எதிரி அல்ல... இன்னொரு கதாநாயகனே எதிரி.

விடுகதை போடாமல் விஷயத்துக்கே நேரே வருகிறேன். ஒவ்வொரு திரைப்படத்திலும் அமரர் எம்.ஜி.ஆருக்கு அமரர் எம்.ஆர். ராதாவோ, அசோகனோ அல்லது நம்பியாரோ வில்லன். ஆனால் திரைத்துறையில் தொழில் ரீதியாக அவருக்கும் நம்பியாருக்கும் போட்டியே கிடையாது. அமரர் சிவாஜி கணேசன்தான் அவரது தொழில்முறை எதிரி. யார் படம் நூறு நாள்கள் ஓடியது? ஹவுஸ்புல் காட்சிகள் எத்தனை? மத்திய - மாநில அரசுகளின்

விருதுகள் யாருக்கு? ரசிகர் படை யாருக்கு அதிகம்? வசூல் அதிகம் எவருக்கு? - என்கிற போட்டி எப்போதும் இருவருக்கும் இடையே இருந்துகொண்டே இருந்தது. திரையுலக வளர்ச்சிக்கே இந்தப் போட்டி அவசியம் என்று பலர் கருதினார்கள். இருவரும் நட்பாக, அன்பாக நடந்துகொண்டாலும் ஒருவரை ஒருவர் வெற்றி பெறுவதற்கான அறிவிக்கப்படாத யுத்தம் எப்போதும் நடந்துகொண்டே இருந்தது. மாபெரும் திறமைசாலி, பிறவிக் கலைஞன், நடிப்பில் இமயம் என்று சிவாஜி வெற்றி பெற்றார்.

எம்.ஜி.ஆரோ, பல லட்சம் மக்களின் அபிமானத்திற்கும் அன்பிற்கும் உரிய 'எங்க வீட்டுப் பிள்ளை'யாகி, தலைவராகி, முதல்வராகி, கடற்கரையில் அறிஞர் அண்ணாவுக்கு நிகராக நினைவிடம் கொள்ளும் வெற்றி பெற்றார். இருவரும் வெற்றி பெற்றார்கள். ஆனால் எம்.ஜி.ஆரின் வெற்றி - அதன் அகல ஆழம் - சிவாஜி அடைய நினைத்து அடைய முடியாமல் போனது! தனிக் கட்சி நடத்தித் தலைவராகப் பயணம் செய்தும் எம்.ஜி.ஆர். அடைந்த அரசியல் உயரத்தை சிவாஜி எட்டாமல் போனதற்கு என்ன காரணம்? சிவாஜியின் கலை உலக இமயத்தை எம்.ஜி.ஆர். எட்டாதது வேறு விஷயம். இருவர் மீதும் முழு மரியாதையுடன் யோசித்துப் பாருங்கள். உண்மை புரியும்.

சரி, இதை விடுங்கள். சகலகலா வல்லவனாய்க் கலை உலகில் விதவிதமாய்த் திறமை காட்டும் கமலஹாசனைவிட, அப்படிப்பட்ட சகலகலா வல்லமை காட்டாத ரஜினிகாந்த் அதிக செல்வாக்குடன் இருக்க என்ன காரணம் என்று எப்போதாவது யோசித்தது உண்டா? காரணம் சொல்லுகிறேன்.

திறமைசாலிகள் தங்கள் திறமைகளை மட்டுமே நம்புகிறார்கள். தங்கள் திறமை மீதான மெல்லிய கர்வம் மற்றவர்களிடமிருந்து அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரித்துவிடுகிறது. மற்றவர்களின் லாப நஷ்டங்களை விடவும் தம்முடைய திறமையின் மீதான கவனம், கர்வம் அவர்களை மெல்ல மெல்லப் பிறரிடமிருந்து தனிமைப்படுத்துகிறது.

மக்கள் யாரைத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்கிறார்கள்? திறமைசாலிகளையா? இல்லை. உங்கள் திறமை யாருக்கு வேண்டும்..? நீங்கள் திறமைசாலியாக இருந்தால் மக்களுக்கு என்ன லாபம்? நீங்கள் மக்கள் மீது அன்பும், மரியாதையும், நட்பும் வைத்திருந்தால் மக்கள் உங்களை

நேசிப்பார்கள். ஒன்று சொல்லுகிறேன். நாம் திறமைசாலிகளாக மட்டும் இருந்தால் போதாது.. மக்கள் மீது அன்பும் அக்கறையும் நம்பிக்கையும் மரியாதையும் உடையவர்களாக இருப்பது வெகு வெகு முக்கியம். அதனால்தான் 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்' என்று பாடிய எம்.ஜி.ஆர். ரசிகனைப் பார்த்து, 'அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உன்னைச் சேரும்' என்று அறிவித்தார். புரட்சி நடிகராக இருந்தவரைப் புரட்சித் தலைவராக உயர்த்தியவர்கள் மக்கள்தானே!

காந்திஜியால் அறிவாளி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட ராஜாஜியின் பின்னால் மக்கள் திரளவில்லை! மக்கள் மீது எல்லை கடந்த பரிவு வைத்திருந்த காந்திஜி பின்னால்தான் மக்கள் திரண்டார்கள். பிறகு ராஜாஜிக்கும் காமராஜருக்கும் இடையே மோதல் நேர்ந்தபோது ராஜாஜியின் கூர்மையான அறிவைவிட காமராஜரின் மக்கள் அன்பே மக்களால் ஏற்கப்பட்டது! இது உலக இயல்பு. உலகத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.

இயேசு பிரான் தமது அறிவின் மூலம் உலகை வென்றார் என்பதைவிட ஆழமான அன்பின் மூலமே உலகை வென்றார் என்பதே உண்மை. காரணம், ஆற்றலுக்கு வெற்றி தோல்வி உண்டு. ஆனால் அன்புக்குத் தோல்வியே இல்லை.

பண்டித ஜவாஹர்லால் நேருவின் புகழுக்குக் காரணங்கள் பல நாம் சொல்லுகிறோம். ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சொன்ன காரணம் சுவையானது. ஒரு நாள் நள்ளிரவு... நேரு, மாடியில் உள்ள தமது தனியறைக்குப் போனபோது அவரது அறையைக் காவல் காத்துக் கொண்டிருந்த முதியவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். உடன் வந்தவர்கள் அவரை எழுப்பப் போனபோது, ''பாவம்... வயதானவர். அயர்ந்து தூங்கிகிறார். எழுப்ப வேண்டாம்'' என்று சொல்லிவிட்டுத் தமது பாக்கெட்டில் இருந்து மாற்றுச் சாவியைத் துழாவி எடுத்து, முதியவருக்குத் தொல்லை இன்றி ஓசைப்படாமல் கதவை திறந்தார் நேரு. இந்த மனிதாபிமானத்தையே மிகப் பெரிய வெற்றி ரகசியம் என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர் குறிப்பிடுகிறார்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை தமது அரசின் முரசுக் கட்டிலில் களைப்பால் உறங்கிய மோசிகீரன் என்ற தமிழ்ப் புலவனைக் கண்டதும் காவலனிடம் கையை நீட்டினான். 'வெட்டவோ' என்று நீட்டிய வாளைத்

தட்டிவிட்டுப் புலவனுக்கு ‘வீசவே’ என்று வெண்சாமரம் கேட்ட பண்பல்லவா பாட்டுப் பெற்றது... பாராட்டுப் பெற்றது.

ஒன்று புரிந்து கொள்ளுங்கள், திறமை உள்ளவருக்கு வெற்றி நிச்சயம். திறமை உள்ளவர்கள் மக்கள் சமூகத்தின் மீது அன்பும் நம்பிக்கையும் உள்ளவரானால் வெற்றி சர்வ நிச்சயம்.

**குறிப்பு:** இந்தக் கட்டுரை எவரையும் குறைவுபடுத்துவதாகத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். திறமையைவிட மக்களன்பு உள்ளவர்களையே மக்கள் வெற்றி பெறச் செய்கிறார்கள் என்கிற உண்மையை உணர்த்தவே எழுதப்பட்டது.

## 7. சொல்லத்தான் நினைக்கிறேன்!

**சொ**ல்ல வந்ததைச் சரியாகச் சொல்லுபவர்கள் எத்தனை பேர்? நூற்றுக்குப் பத்துப் பேருக்கு இந்தத் திறமை இருந்தால் ஆச்சர்யம்! உலகத்தில் தோற்றவர்கள் தொண்ணூறு பேர்; ஜெயித்தவர்கள் பத்து பேர் என்பதற்கான காரணம் இப்போது புரிகிறதா?

பேசும்போதும் எழுதும்போதும் உரையாடும்போதும் பட்டுக் கத்தரித்த மாதிரி, பளிச்சென்று சொல்ல வந்த விஷயத்தைப் பிறர் புரிந்துகொள்ளும்படிச் சொல்லுவது உன்னதமான கலை.

உச்சரிப்பில் பிழை; வார்த்தைகள் தேர்வதில் பயிற்சியின்மை; சொல்ல வந்த விஷயத்தில் தெளிவும் தீர்க்கமும் இல்லாமை; பதட்டம்; பரபரப்பு; கேட்டுக்கொண்டிருப்பவர் மீது நம்பிக்கையின்மை; கேட்பவர்களைக் குறைத்து மதிப்பிடுதல் இவை எல்லாம்தான் தோல்விக்கான காரணங்கள்.

Communication Skill, Art of Communication என்று மேலை நாடுகள் இவ்வாற்றலை வெகுவாகக் கொண்டாடுகின்றன. இந்தியாவிலும் இலக்கியங்களில் இத் திறன் கொண்டாடப்படுகிறது. நடைமுறையில் நம்மவர்கள் இந்தக் கலையில் அதிகக் கவனம் செலுத்துவது இல்லை.

ஒரு பள்ளிக் காலத்து அனுபவம்... ஆறாம் வகுப்பு சேர்ந்த புதிது. கையில் குச்சியுடன் வெள்ளை அங்கியுடன் கால் முளைத்த பூதமாய்த் தலைமை ஆசிரியர். புதிதாய்ச் சேர்ந்த மாணவர்கள் ஒவ்வொருவரையும் மதிய உணவு வேளையில் நிறுத்திப் ‘‘பெயர் என்ன?’’ என்பார். இது வெறும் சம்பிரதாயமான கேள்வியன்று. பள்ளிக்கூடத்தில் படிக்கும் அத்தனை மாணவர்கள் ஜாதகமும் அவருக்கு அத்துப்படி! அப்படி ஒரு பெர்சனல் அட்டென்ஷன் உடையவர். கிராமப்புறத்தில் இருந்து வந்திருந்த ஒரு மாணவனைப் பார்த்து ‘‘உன் பேரு என்ன?’’ என்றார்.

‘‘சொல்ல மாட்டேன்’’ என்று பதில் கணீரென்று வந்தது. தலைமையாசிரியரின் தங்கக் கிரீடம் தரையில் உருண்ட அதிர்ச்சியில் ‘‘என்ன சொன்னே?’’ என்று உறுமினார்.

‘‘சொல்ல மாட்டேன்’’ அழுத்தம் திருத்தமாகக் கையைக் கட்டிக்கொண்டு சத்தமாகச் சொன்னான் அந்த மாணவன். அடுத்த விநாடி தலைமையாசிரியர் அங்கிக்குள் குடியிருந்த கருநாகம் (மூங்கில் குச்சி) மாணவனைக் கொத்து கொத்து என்று கொத்தித் தள்ளிவிட்டது. பையன் கதறிவிட்டான். மீண்டும் அதே கேள்வி. மீண்டும் அதே பதில். இப்போது தலைமையாசிரியர் சுதாரித்துக் கொண்டார். வகுப்பாசிரியரை வரவழைத்து விசாரித்த பின்னர் தலமையாசிரியர் ஆடிப்போய்விட்டார்.

மாணவன் பெயர் சுடலைமாடன். அதைத்தான் அவன் அட்சரசுத்தமாய் ‘‘சொல்லமாட்டேன்’’ என்று ஒலி வர உச்சரித்திருக்கிறான். சுடலைமாடன் என்பதைச் சொல்லமாட்டேன் என்று உச்சரித்தால் பிறருக்கு எப்படிப் புரியும். communication skill என்பதில் உச்சரிப்பு மிக முக்கியம். இன்றைக்குப் பல தமிழாசிரியர்களே தவறுதலாக உச்சரிக்கிறார்கள்... அவர்களை எந்தக் குச்சியை வைத்து விளாசுவது?

உச்சரிப்பை அடுத்து வார்த்தைத் தேர்வு முக்கிய விஷயம். ஒரு திருமணம், பார்ட்டி போகவேண்டும் என்றால் இதைப் போடலாமா? அதைப் போடலாமா? என்று துணியை எடுத்து எடுத்து இறுதியாக ஒன்றைத் தேர்வு செய்கிறோம் அல்லவா? அப்படி யாருடனாவது பேசும்போது இந்த வார்த்தை சரியா? அந்த வார்த்தை சரியா? என்று மாறி மாறி மனசுக்குள் பேசிப் பார்த்தது உண்டா?

The Best வார்த்தையைத் தேடித் தேடிக் கண்டதுண்டா? உண்டு என்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

சிலர் பேச நினைப்பதே வேறு. பேசி முடிப்பதே வேறு. ஏன் இந்தக் கோளாறு? இதை எப்படித் தவிர்ப்பது? டாக்டர் அவ்வை நடராசன் என்ற வெற்றிகரமான பேச்சாளரை, தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரை பல்லாண்டுகளாக நான் அறிவேன். அவர் பேசப்போகும் விஷயங்கள் பற்றி மனசுக்குள் பலமுறை பேசிப் பேசிப் பார்ப்பார். அழகான, சரியான வார்த்தைகளைத் தேடிப் பிறகு மாற்றி அமைத்து மக்கள் முன் பேசுவார். மேடைப் பேச்சில் அவர் தோற்றதே இல்லை. இப்படிப் பேசினால் கல்லடி விழாது... வெற்றி காலடியில் விழும். அனுமன்கூட அசோகவனத்தில் சீதையிடம் பேசும்போது யோசித்து யோசித்து மனசுக்குள் ஒத்திகை பார்த்தான் என்று வால்மீகி ராமாயணம் சொல்லுகிறது, போதுமா?

அமைதியான ஒருவரை ''சார்... பசு மாதிரி சாது'' என்றால் சந்தோஷப்படுவார் அதற்குப் பதிலாக ''சார்... மாடு மாதிரி'' என்று சொல்லிப் பாருங்கள்... மனுஷர் உங்களை முட்ட வருவார்.

அடுத்து, தெளிவாகச் சொல்லுதல். ''ஏழு மணிக்கு உங்களைச் சந்திக்கிறேன்'' என்பதைவிடக் ''காலை ஏழு மணிக்கு'' என்று தெளிவுடன் சொல்லுவது அவசியம். அதற்காக ''ஆறு மணிக்கு அப்புறம் வருகிற ஏழு... எட்டு மணிக்கு முன்னால் வருகிற ஏழு...'' என்று படுத்தக்கூடாது. கூடுமான வரை குழப்பம் வராதபடி சொல்லுவது நல்லது.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு... இப்போதுள்ள Computer Reservation ரயில்வேயில் இல்லாத காலம். நான் திருநெல்வேலியில் இருந்து திருச்சி வந்து பிறகு வைகை எக்ஸ்பிரஸ் மூலம் சென்னை திரும்ப வேண்டும். அப்போது எனக்கு ஓயாத பயணம் இருக்கும். திருச்சியில் பேராசிரியர் அமரர் ராதாகிருஷ்ணன் என்ற பிரபல பேச்சாளருக்கு ''எனக்கு வைகையில் டிக்கட் எடுத்து வைக்கவும்'' என்று கடிதம் எழுதியிருந்தேன். திருச்சி வந்ததும் டிக்கட்டைக் கேட்டபோது அவர் சொன்ன பதில் அதிர்ச்சியாக இருந்தது.

''டிக்கட் எடுக்கலை... மொட்டையா வைகையில் எடுக்கவும் என்று எழுதினா எப்படி எடுக்கறது? வைகை திருச்சியில் இருந்து மதுரைக்குப் போகுது- சென்னைக்கும் போகுது. எதுக்கு எடுக்கிறதாம்?'' என்றார். எனக்கு அழுகை

வந்துவிட்டது. ஒரு மாசமாகச் சுற்றிக்கொண்டே இருக்கிறேன். அன்றும் வீடு திரும்ப முடியாது என்றால் என்ன ஆவது என்று வருத்தம்.

அடுத்த நிமிடம் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் இரண்டு டிக்கட்டுகளை எடுத்து என் முன் வேகமாகப் போட்டார். ‘‘ஒண்ணு மதுரைக்கு... இன்னொண்ணு சென்னைக்கு... இரண்டு Direction- லையும் டிக்கட் இருக்கு... எங்க போகணுமோ போ...’’ என்றார். நான் குழப்பமாகச் சொல்லியிருக்கிறேன் என்பதை அவர் தெளிவாகப் புரிய வைத்தார்.

இன்று என் பேச்சில் ஒரு தெளிவு (Clarity) இருப்பதாகப் பலர் பாராட்டுகிறார்கள். அதற்குக் காரணம் அமரர் ஆர்.ஆர். என்கிற பேராசிரியர் ராதாகிருஷ்ணன். எதைப் பேசினாலும் குழப்பம் வராதபடி தெளிவுடன் பேசுங்கள். வெற்றி நிச்சயம்.

இன்னொரு விஷயம். உடன்பாட்டையும் எதிர்மறையையும் எப்போதும் சேர்த்துப் சேர்த்துப் பேசாதீர்கள். கேட்பவர்கள் குழம்பிவிடுவார்கள். உங்கள் நோக்கத்திற்கு நேர்மாறாகக் காரியம் செய்துவிடுவார்கள்.

‘‘சாம்பார் வை... ரசம் வைக்காதே... நீலக் கலர் சட்டையைப் பெட்டியில் வை... சிவப்புச் சட்டையை வைக்காதே... காபி போடு... டீ போடாதே’’ என்று உடன்பாட்டையும் எதிர்மறையையும் மாறி மாறிச் சொன்னால் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதில் குழப்பம் வரும். ‘‘சாம்பார் வை’’ என்று மட்டும் சொல்லுங்கள். ‘‘நீலக் கலர் சட்டை கொண்டு போக வேண்டும்... காபி குடிக்கிறேன்’’ என்று உடன்பாடான விஷயங்களை மட்டும் சொல்லுங்கள். கேட்பவர்கள் மனதில் சரியாகப் பதியும். குழம்ப மாட்டார்கள். Clarity in Communication உள்ளவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம்.

\-------

# 8. நீங்கள் எந்த வகை?

**சு**யமாக முன்னுக்கு வருவதை விடப் பிறரைக் காப்பி அடித்து முன்னுக்கு வருவது சுலபம். பலர் இந்தப் பாதையைத்தான் விரும்புகிறார்கள். நான் இதை

வெறுக்கிறேன். வித்தியாசமாக விளங்குவதுடன் வேறுபட்டு அரசியல் தனித் தன்மை காட்டுவதும் அவசியம் என்கிறேன். அவர்கள் பெறுகின்ற வெற்றி அசைக்க முடியாதது என்று கருதுகிறேன். இதுதான் கௌரவம் என்கிறேன்.

தெருவோரத்தில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து மசால் வடைக் கடை போட்டு ஒருவர் காசு சம்பாதித்தால் இன்னொரு தமிழனுக்கு (இந்தியனுக்கு) பொறுக்காது. உடனடியாக அதே மாதிரி மசால் வடைக் கடையை எதிரிலேயே தொடங்கப் பார்ப்பான். உளுந்துவடை என்று கூட ஐட்டத்தை மாற்றமாட்டான். எதிர்க்கடை மசால்வடையை ஜெராக்ஸ் எடுத்த மாதிரி வடை போட்டு அடுத்தவன் வியாபாரத்தில் மண் அள்ளிப்போடுவார்கள். இந்த ஈனப்புத்தி தேவையில்லை.

‘பெரிதே உலகம்; பேணுநர் பலரே’ என்ற சங்கத் தமிழன் சொல்லை விளங்கிக் கொண்டு ஒன்றையே சாராமல் புதிது புதிதாகப் பலப்பல செய்து பணம் சம்பாதிக்கப் பழகுவது அவசியம்.

மனிதர்கள் மூன்று வகை.

1. எல்லோரும் செய்வதையே தானும் செய்து செத்துப் போகிறவர்.

2. எவரும் செய்யாததைத் தான் செய்து வாழ்ந்து காட்டுகிறவர்கள்.

3. எவரும் செய்யமுடியாததைச் செய்து மரணத்தைக் கொல்கிறவர்கள்.

இதில் நாம் எந்த வகை என்று பிரித்துப் பார்க்க வேண்டும்.

ஊரோடு ஒத்துவாழ், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்ற அறிவுரையைத் தவறுதலாக அர்த்தம் செய்து கொண்டு பிறரைக் காப்பியடித்து வாழும் வாழ்க்கையை நான் வெறுக்கிறேன். எல்லோரும் செய்யாததைச் செய்பவராக இருப்பவர்களை மதிக்கிறேன். எவரும் செய்யாததைச் செய்பவர்களைத் துதிக்கிறேன்.

பள்ளிக் காலத்தில் என் உடன்படித்த நண்பர் ஒருவர் மருத்துவம் படித்துவிட்டுப் பிறகு சட்டம் படித்தார். அவரை எல்லோரும் பிழைக்கத் தெரியாத பைத்தியம் என்றார்கள். அவர் இன்று ஐ.நா.சபையில் உலக நாடுகள் சுகாதாரம் பற்றியும் அது குறித்து அந்த நாடுகள் வகுத்துள்ள சட்டங்கள் பற்றியும் கண்காணிக்கும்

பெரும் பணியில் இருக்கிறார். அவருடைய படிப்புத் தகுதி Very Rare என்ற பிரிவு. உலக நாடுகள் முழுவதும் சுற்றுகிறார்.

வயலினை வெறும் பக்கவாத்தியமாக வைத்திருந்த இசை உலகில் வயலினுக்குப் பக்கவாத்தியமாக முரட்டு மேளத்தை வைத்துக்கொண்டு அமர்க்களப்படுத்தியவர் கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதன். தங்கள் அபூர்வ சாதனையில் வலையப்பட்டி சுப்பிரமணியன் அவர்களும் குன்னக்குடியும் ஈட்டிய புகழும் செல்வமும் ஏராளம். வித்யாசத்திற்கு உலகம் கொடுத்த வெகுமதி அது.

‘லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்’ என்று அமெரிக்காவில் அத்தனை பேரும் அரைத்த மாவையே அரைத்த போது ‘பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ்’ என்று வித்யாசமாக விளித்ததால்தான் விவேகானந்தர் கவனிக்கப்பட்டார். மதிக்கப்பட்டார். பின் துதிக்கப்பட்டார்.

எங்கும் எப்போது தனித் தன்மையுடன் வித்யாசமாக இருங்கள். நீங்கள் கவனிக்கப்படுவீர்கள்.

வித்யாசம் வேறு; விபரீதம் வேறு. வேறுபாட்டை விளங்கிக் கொள்ளவில்லை என்றால் வித்யாசமான விபரீதங்கள் உங்களுக்கு விளையும். அதையும் விளக்கிச் சொல்லிவிடுகிறேன்.

புது மணத் தம்பதிகள் தேனிலவுக்கு எங்கே போவது என்று பேச்சு வந்தது. ‘‘இதுவரை தேனிலவுக்கு வித்யாசமா எந்த ஜோடியும் போகாத இடத்துக்கு என்னைக் கூட்டிப் போகவேண்டும்’’ என்றாள் மனைவி. ‘‘ஸ்கூட்டரில் ஏறு’’ என்று மனைவியைக் கூட்டிக் கொண்டு சுடுகாட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து நிறுத்தினான் கணவன். ‘‘சீச்சீ...சுடுகாட்டு ஹனிமூனா?’’ சீறினாள் மனைவி. கணவன் ‘‘அ...இந்த இடத்தை என்ன அவ்வளவு மட்டமா நினைக்கிறே? இங்கே வர்றதுக்கு அவனவன் சாவுறான்’’ என்று சுடுகாட்டின் மேன்மையைச் சொன்னான். இது வித்யாசம் அல்ல. விபரீதம்.

உலக நாடுகளில் விடுதலைப் போர் நடத்திய எல்லாத் தலைவர்களும் கத்தி, துப்பாகிக்கி, பீரங்கி, கப்பல், விமானம் என்பதை நம்பிப் போராடினார்கள். குஜராத்திலிருந்து புறப்பட்ட அந்த ஒற்றை மனிதன் எந்த ஆயுதமும் எடுக்காமல் போர்க்களத்தில் புகுந்தான். ‘‘இந்த நாடு என்னுடையது. உன்னுடையது அல்ல...’’ என்ற ஒற்றை உண்மையை பிரிட்டிஷார் முன்

வைத்துப் போராடினான். அந்த சத்தியத்தின் முன் எல்லா ஆயுதங்களும் கூர் மழுங்கிப் போயின. யார் அவர்? மகாத்மா காந்தி.

‘‘நிராயுதபாணியாய் நின்று போராடும் ஒற்றை மனிதனின் போராட்டத்தை வலிமை வாய்ந்த ஆயுதங்கள் வைத்திருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரால் நசுக்க முடியவில்லையா?’’ என்று எதிர்க்கட்சிகள் பாய்ந்த போது சர்ச்சில் சொன்ன பதில் ஆழமானது. ‘‘அந்த மனிதன் கத்தியை எடுத்தால் நான் துப்பாக்கியை எடுப்பேன். துப்பாக்கியைத் தூக்கினால் நான் பீரங்கியால் நசுக்கியிருப்பேன். பீரங்கி எடுத்துப் போராடினால் நான் குண்டுமழை பொழிந்து அழித்திருப்பேன். அவர் சத்தியத்தை அல்லவா எடுத்துக் கொண்டு போராடுகிறார். சத்தியத்தை எதிர்க்கும் ஆயுதம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை நண்பருக்குச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்’’ என்றார் சர்ச்சில்.

வித்யாசமான ஆயுதத்தைக் கையில் எடுத்தார். காந்தி கவனிக்கப்பட்டார். உலகம் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை உலகத்தைப் பாதித்த 100 பேர் என்ற பட்டியல் எழுதினால் அதில் மகாத்மா காந்தியும் ஒருவர். உலக வரலாறு அவரை ஒருபோதும் ஒதுக்காது.

வித்யாசமாக விளங்குபவர்கள் கவனிக்கப்படுவார்கள். விபரீதமாக இருப்பவர்கள் விலக்கப்படுவார்கள்.

பத்தாயிரம் ரூபாய் பட்டுப் புடவையுடன் பல பேர் பவனி வரும் திருமண வீட்டில் பளிச்சென்று கைத்தறிப் புடவையைக் கஞ்சி போட்டு கட்டிக் கொண்டு ஒற்றை ரோஜாவைத் தலையில் வைத்திருக்கும் பெண்ணாக இருங்கள். சகோதரிகளே.... நீங்கள் கண்டிப்பாகக் கவனிக்கப்படுவீர்கள்.

வித்தியாசமாக இருங்கள். வெற்றி நிச்சயம்!

## 9. தோற்றவர் வென்றார்!

**வெ**ற்றி - தோல்விகளைப் பற்றி உலகம் வைத்திருக்கிற அபிப்ராயங்கள், அளவுகோல்கள் எப்போதும் சரியாக இருக்க வேண்டும் என்பதில்லை. உலகின் நடைமுறைகள், தோல்வியுற்றதாக அறிவித்தவர் வெற்றி பெற்ற வரலாறுகள்

உண்டு. சில சமயம் சிலரது வெற்றிகளைப் புரிந்து கொள்ளும் சக்தியே உலகத்துக்கு இல்லாமல் போவதும் உண்டு. எனவே உலகம் அறிவிக்கின்ற வெற்றி - தோல்விகளைப் பற்றிக் கவலையே இல்லாமல் உழைப்பதும் வெற்றி பெறுவதும் மிக மிக முக்கியம்.

மராட்டிய மாநிலத்தில் தேர்வில் தேர்ச்சி பெறாதவனாக அறிவிக்கப்பட்ட மாணவன் ஒருவன் மறுகூட்டல் கேட்டபோது அதிர்ச்சி காத்திருந்தது. அவன்தான் மாநிலத்திலேயே முதலாவதாக மதிப்பெண் பெற்றவன். சில நாள்களில் வெற்றி, தோல்வி தலைகீழாகிவிட்டது. பிறரது அளவுகோல்களால் நிர்ணயிக்கப்படுகிற வெற்றி - தோல்விகளால் தயவுசெய்து பாதிக்கப்படாதீர்கள்.

சென்னை விவேகானந்தா கல்லூரியில் நான் பி.ஏ. பொருளாதாரம் படித்தபோது நடந்த நிகழ்ச்சி. மாணவர் தலைவர் தேர்தல். போட்டியிட்டு 32 ஓட்டுகள் குறைவாகப் பெற்று நான் தோல்வி அடைந்தேன். நான் அறிவும் விழிப்பும் பெற்றதற்கு மூல காரணம் அந்தத் தோல்வி. எத்தனையோ வகையில் அந்தப் பதவிக்குத் தகுதி எனக்கிருந்தும் நான் மாணவர்களால் நிராகரிக்கப்பட்டேன். பிறரது அங்கீகாரம் அல்லது அனுமதி பெறுகிற வெற்றி ஒரு வெற்றியே அல்ல என்று அப்போதுதான் நான் முடிவெடுத்தேன். என் வாழ்க்கை மாற்றம் அதனால் நிகழ்ந்தது. நமக்குள்ள தகுதியைப் புரிந்து கொள்கிற தகுதி பிறருக்கு இல்லை என்றால் நாம் என்ன செய்ய முடியும்?

அந்தத் தேர்தலில் நான் வெற்றி பெற்றிருந்தால் அரசியலுக்குப் போய் நிறைய ஏற்ற இறக்கங்களைச் சந்தித்திருப்பேன். ஆனால் எழுத்தும் பேச்சும் சமூக விழிப்பும் என் வாழ்வாகித் தோல்வியே அற்ற வெற்றிகளை நான் இன்று சந்திக்கிறேன். தேர்தலில் என்னைத் தோல்வியுறச் செய்த என் நண்பர் அரசியல் கட்சிகளில் சிக்குண்டு அவதிப்பட்டார். சில ஆண்டுகளுக்கு முன் நான் அவரைச் சந்தித்தபோது கண்ணீருடன் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, ‘‘தேர்தலில் நான் வெற்றி பெற்றேன். ஆனால் நீ வாழ்க்கையில் வெற்றி பெற்றாய்’’ என்றார். எனவே வெளியில் நிர்ணயமாகும் வெற்றி - தோல்விகள் ஒரு பெரிய விஷயம் அல்ல என்று நான் புரிந்துகொண்டேன். நீங்கள்..?

பெருந்தலைவர் காமராஜர் இந்தியாவில் ஒரு தமிழனும் அடைய முடியாத பெரும் புகழ் அடைந்த தமிழன். இமயம் முதல் குமரி வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்த பல முதலமைச்சர்களையும் பிரதம மந்திரிகளையும் தன்

உத்தரவுக்குக் கட்டுப்பட வைத்த வலிமையான காங்கிரஸ் தலைவர் அவர். அவர் மட்டுமே. அவருக்கு முன்னும் பின்னும் அப்படி ஒரு மக்கள் தலைவரைத் தமிழ் மண் கண்டதில்லை. பின்னும் இதுவரை ஒரு தலைவனைத் தமிழ் மண் தரவேயில்லை. ஆனால் அவரை அவரது விருதுநகர் மண்ணிலேயே ஒரு கல்லூரி மாணவர் தோற்கடித்தார். எப்படி முடிந்தது?

உணர்ச்சி வசப்படுகிற மக்கள் தீர்மானிக்கிற வெற்றி - தோல்விகள் பெரிய விஷயமே அல்ல. அதை விளக்கியவர் பேரறிஞர் அண்ணா. ஒரு விழாவில் பேசிய ஒருவர், ‘‘பெருந் தலைவர் காமராஜரைத் தோற்கடித்த திரு. சீனிவாசன்’’ என்று பேசிய போது பேரறிஞர் அண்ணா குறுக்கிட்டு, ‘‘தேர்தலில் வெற்றி பெற்ற சீனிவாசன் என்று சொல்லுங்கள். ‘பெருந்தலைவர் காமராஜரைத் தோற்கடித்த’ என்று சொல்லாதீர்கள். அவரை ஒரு போதும் யாராலும் தோற்கடிக்க முடியாது. அவர் வெற்றியை வரலாறு சொல்லும்’’ என்று கூறினார். வாழ்வின் வெற்றி - தோல்விகள் ஒரு சில சம்பவங்களின் வெற்றி - தோல்விகளையே அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்பதைத் தயவு செய்து விளங்கிக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தோற்கவில்லை என்பதை இந்திய வரலாறு சொல்கிறது. நண்பர் ஒருவர் சொன்ன இன்னொரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். நண்பர் திருச்சியில் இருந்து நெல்லை செல்லும் தனியார் விரைவுப் பேருந்தில் பயணம் செய்திருக்கிறார். அவருக்குப் பக்கத்தில் இருந்த இருக்கையில் இருந்த பெரியவர் ஒருவர் கை கால் வலியால் அவதிப்படுகிறவர். பேருந்து எங்காவது நிற்காதா... கொஞ்சம் கையைக் காலை நீட்டிச் சோம்பல் தீர நடக்க மாட்டோமா என்று ஏங்கிப் புலம்பியிருக்கிறார். தனியார் பேருந்து... எனவே எங்கும் நிற்காமல் பேருந்து பறந்து போய்க் கொண்டே இருந்தது. முடிவில் ஓர் இடத்தில் இரவுக் கடை முன் பேருந்துகள் நிற்கும் இடத்தில் வண்டி நின்றது. ‘‘ஐயா... ரொம்ப நேரமா இறங்கணும்னு சிரமப்பட்டீங்களே... இங்க இறங்கி நிக்கலாம் வாங்க...’’ என்று பெரியவரை அழைத்திருக்கிறார். ‘‘இது எந்த ஊருப்பா...’’ என்றபடியே வெளியே எட்டிப் பார்த்த பெரியவர் ‘‘சே... இங்க மனுஷன் இறங்குவானா?’’ என்று மறுத்துவிட்டார். நண்பர் ‘ஏன்’ என்று திகைத்தவுடன் பெரியவர், ‘‘இது விருதுநகர். பெருந்தலைவரைத் தோற்கடிச்ச ஊருப்பா... இதுல கால் பட்டாக்கூடப் பாவம்’’ என்றாராம்.

இப்போது புரிகிறதா? ஊரும் உலகமும் நிர்ணயித்த வெற்றி - தோல்விகளுக்கு அப்பாலும் சில வெற்றிகள் இருக்கின்றன. இன்னொன்று சொல்கிறேன். தத்ரூபமாகச் சிலை வடிக்கும் போட்டி ஒன்று நடந்தது. இரு சிற்பிகள் ஒரே மாதிரி இரு சிலைகளைச் செய்திருந்தனர். அவர்களுக்குள் கடும் போட்டி நிலவியது. நடுவர் குழு ஒருவரை வெற்றி பெற்றதாக அறிவித்தது. காரணமும் சொன்னது. ஒரு இளம்பெண் தலையில் திராட்சைப் பழக் கொத்துகளைச் சுமந்து செல்வது போல் சிலைகள் இருந்தன. ஒருவர் சிலையில் இருந்த திராட்சைக் கொத்துகளை நிஜம் என நம்பிக் காக்கைகள் கொத்த வந்தன. அதனால் அவர் வெற்றி பெற்றார் என்றனர் நீதிபதிகள்.

ஆனால் மற்றவர் செய்த சிலையில் இருந்த பெண்ணையும் அவர் கையில் இருந்த குச்சியையும் நிஜம் என்று பயந்த காக்கைகள் அந்தச் சிலை மீதிருந்த திராட்சைகளைக் கொத்தாமல் விட்டன. இது நீதிபதிகளுக்குப் புரியாமல் போய்விட்டது. அந்த நீதிபதியைப் பார்த்துக் காக்கைகள் தமக்குள் கேலியாகச் சிரித்தன. யாருடைய வெற்றி உண்மையான வெற்றி?

வெற்றி - தோல்விகள் வாழ்வின் ஓரிரு சம்பவங்களை மட்டுமே சார்ந்தவை அல்ல. அவை முழு வாழ்வையும் சார்ந்தவை. இதைப் புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்!

## 10. என்ன படிக்கலாம்? எப்படி ஜெயிக்கலாம்?

**ஒ**ரு சின்னக் குழந்தையின் கையில் புத்தகம் இருந்தால் பார்ப்பவர்கள் என்ன சொல்லுவார்கள்? ‘‘குழந்தே... சமத்தா இருக்கணும். புத்தகத்தைக் கிழிச்சிடக் கூடாது’’ என்பார்கள். ஆனால் கவிக்கோ அப்துல் ரகுமான் வித்தியாசமாகக் கவலைப்பட்டார்.

‘புத்தகங்களே சமர்த்தாக இருங்கள்...

குழந்தைகளைக் கிழித்து விடாதீர்கள்’

என்று எழுதினார். இது நிரம்பவும் யோசிக்க வேண்டிய விஷயம்.

பாடத் திட்டத்தில் என்ன படிப்பது என்பது முதல் பிரச்சினை. பாடத்தைத் தாண்டிப் பாரத புத்திரன் என்ன படிப்பது என்பது அடுத்த பிரச்சினை. படிப்பதா, வேண்டாமா என்பதேகூடப் பலருக்குப் பிரச்சினை! முதலில் பாடத்தைப் படி... அத்தோடு வாழ்க்கைப் பாடத்தைப் படி... படி... படி... படிப்படியாய் வெற்றியடையலாம்!

பொறியியலும் மருத்துவமும் மட்டும்தான் படிப்பு என்பதில்லை. நூற்றுக்கணக்கான படிப்புகள் உலகத்தில் இருக்கின்றன. முதலில் இந்த விசாலமான பார்வை சின்னப் பிள்ளைகளுக்கு வேண்டும். அதைவிடச் சின்னப் பிள்ளைகளின் சின்னப் பெற்றோர்களுக்கு முக்கியமாக வேண்டும். வறுமையாலும் வாய்ப்பின்மையாலும், தான் படிக்க முடியாத படிப்பைத் தன் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று சில பெற்றோர்கள் பிள்ளைகளைக் கல்விச் சிலுவையில் அறைகிறார்கள். இது சரியல்ல.

மாணவனின் திறன், விருப்பம், கொள்ளளவு, படிக்கும் பழக்கம், இயல்பு என்று பல விஷயங்கள் படிப்பை முடிவு செய்யக் கூடியவை. கொஞ்சம் முன்பின்னான மணவர்களைப் பெற்றோர் தயாரிப்பது ஒன்றும் தவறில்லை. ஆனால் முற்றிலும் நேர்மாறான இயல்புடைய பிள்ளைகளைத் தங்கள் கனவுகளைச் சுமக்கும் பிணந்தூக்கிகளாகச் சில பெற்றோர்கள் செய்வது நல்லதல்ல.

நர்ஸிங் ஹோம்களைக் கட்டி வைத்துவிட்ட பெற்றோர்கள் அதைக் கட்டிக் காக்கும் ஆசையில் மட்டுமே பிள்ளைகளை மருத்துவக் கல்லூரிக்குள் நுழைத்த கதை உண்டு. தேர்வுத் தோல்விகள் மனத்தை வருத்த, பெற்றோர் படுத்தல் மகிழ்வைக் குறைக்க, போதை மாத்திரை தின்(ற)னும் மருத்துவ மாணவர் ஒரு சிலர் உண்டு!

பெற்றோர்கள் பிள்ளைகளை ஜிவ்வென்று உயர்த்தும் சிறகாக இருக்க வேண்டுமே ஒழிய அழுத்தும் சிலுவையாக இருக்கக் கூடாது. ஈடுபாட்டுடன் ஆர்வமாகப் பிள்ளைகள் படிக்க விரும்பும் படிப்பில் அடைகிற வெற்றியை ஆர்வமில்லாத படிப்பின் மூலம் அடைய முடியாது. அடிமை இந்தியாவில் நடந்த, பல்லாண்டுக்கு முந்தைய சுவையான செய்தி சொல்லுகிறேன்.

தலையில் கட்டுக் குடுமி, காதில் கடுக்கன். அவன் நெற்றியில் பளிச்சென்று திருநீறு. ஒளி உமிழும் கண்கள் கொண்ட சிறுவன் சாமிநாதன். அந்தப் பையன் மேலே என்ன படிப்பது என்பது விவாதப் பொருள்.

கூடத்தில் சேரில் சாய்ந்திருந்த குடும்பப் பெரியவர் குரல் ஓங்கி ஒலித்தது. ''இதபார்... ஒண்ணு சம்ஸ்கிருதம் படி... அல்லது இங்கிலீஷ் படி. இங்கிலீஷ் படிச்சா இந்த லோகத்திலேயே சவுக்கியமா இருக்கலாம். சம்ஸ்கிருதம் படிச்சா இங்க இல்லேன்னாலும் பரலோகத்துல சவுக்கியமா இருக்கலாம். நீ என்ன படிக்கப் போற?''

''தமிழ் படிக்கப் போறேன்'' என்றான் சிறுவன்.

''ஏன்?'' உறுமினார் பெரியவர்.

''இங்கிலீஷ் படிச்சா இங்க நன்னா இருக்கலாம். சம்ஸ்கிருதம் படிச்சா அங்க நன்னா இருக்கலாம். தமிழ் படிச்சா இரண்டு இடத்தலேயும் நன்னா இருக்கலாம்'' என்று பளிச்சென்று பதில் சொன்னான் சிறுவன் சாமிநாதன். அவர் தமிழ் படித்ததால்தான் இன்று தமிழே நன்றாக இருக்கிறது. அவர்தான் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்.

எல்லோரும் தமிழ் படியுங்கள் என்பது என் செய்தி அல்ல. உகந்ததைத் தேர்ந்தெடுத்து உறுதியாகப் படிப்பவர்கள் உருப்படுகிறார்கள்... உயர்கிறார்கள் என்பதே என் செய்தி. குறிப்பிட்ட படிப்பு உயர்வானது என்றால் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அதில் ஆர்வம் ஏற்படுத்துங்கள்... அக்கறை உண்டாக்குங்கள். அதைப் படிக்கும் முடிவைப் பெற்றோர்களே திணிக்காதீர்கள். மாணவனே அந்த முடிவை எடுக்கும்படி உணர்வூட்டுங்கள்.

நான் பள்ளியில் படித்த கதை ஒன்று. மென்ஷியால் என்ற ஒரு மேல்நாட்டுச் சிறுவனைப் பற்றியது. அவன் தந்தையை இழந்தவன். தாயோ கடினமான நெசவுத் தொழில் மூலம் துணி நெய்து, விற்றுப் பொருள் ஈட்டித் தன் மகனைப் படிக்க வைத்தாள். ஆனால் மென்ஷியாலுக்குப் படிப்பில் நாட்டம் இல்லை. ஊர் சுற்றிக் கொண்டிருந்தான். இனி பள்ளிக்கூடம் போகக் கூடாது என்று முடிவெடுத்து வீடு திரும்பி வந்தான்.

அவனது தாய் விலை உயர்ந்த துணியை நெய்து கொண்டிருந்தாள். அழகான அந்தத் துணியை ஆசையாகப் பார்த்தபடி ஓடிவந்து தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ‘‘அம்மா... எனக்குப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கவில்லை... நானும் உன்னுடன் இருந்து இந்த அழகான துணி நெய்ய உதவுகிறேன்’’ என்றான்.

அடுத்த நிமிடம் கோபத்துடன் ஆவேசமாகத் தாய் அந்த விலை உயர்ந்த துணியைக் கிழித்து எறிந்தாள். மகன் பதறிப்போய், ‘‘என்னம்மா இப்படிச் செய்துவிட்டாய்... விலை உயர்ந்த துணியாயிற்றே...’’ என்றான்.

‘‘விலை மதிப்பில்லாத கல்வியை நீ இழக்கிறாய்... எதிர்காலத்தைப் பாழாக்குகிறாய்! அதைவிடவா இது பெரிய அழிவு!’’ என்கிறாள் அம்மா. தாயைக் கட்டிக்கொண்டு அழுத மகன் பள்ளிக்கூடம் போக ஒப்புக் கொண்டான். உருவாக்குவதுதான் பெற்றோர்கள் வேலை. உருக்கி ஊற்றுவது பெற்றோர்கள் வேலை அல்ல..!

விரும்பி, படிக்க வேண்டிய கல்வியைத் தேர்ந்தெடுத்துப் படிப்பவர்கள் உயர்வது திண்ணம். உதாரணம் டாக்டர் உ.வே.சா. அப்படி இன்றைய இளைஞனும் இருக்கப் பழகினால் வெற்றி நிச்சயம்!

## 11. நம்பர் ஒன்னா? நம்பர் டூவா?

உலகத்திலேயே மிகமிக அதிர்ஷ்டசாலி யார்? எல்லா வசதி வாய்ப்புகளும் பெற்று எந்தவிதக் கவலையும் சிக்கலும் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழக் கூடிய வாய்ப்பு ஒருவருக்கு உண்டா? உண்டு என்றால் அவர் யார்?

இந்தக் கேள்விக்குப் பதில் என்ன தெரியுமா? அமெரிக்காவின் துணை ஜனாதிபதி. அவர்தான் சகல வசதி வாய்ப்புகளுடன் எந்தச் சிக்கலும் இல்லாமல் வாழும் வாய்ப்பு உடையவர். அவரைப் பற்றி பிரசித்தி பெற்ற ஜோக் ஒன்று உண்டு.

காலைத் தூக்கம் கலைந்ததும் படுக்கையில் இருந்து எழாமலேயே, ‘ஜனாதிபதி நன்றாக இருக்கிறாரா?’ என்று கேட்டு, ‘ஆம்’ என்று பதில் வந்தால், மறுபடியும் போர்வையைப் போர்த்திக்கொண்டு தூங்கப் போய்விடலாம்.

அவருக்கு என்று அமெரிக்காவில் எந்தப் பொறுப்பும் எந்த வேலையும் கிடையாது. ஆனால் ஜனாதிபதிக்கு நிகரான வாழ்க்கை வசதிகள் உண்டு.

ஜனாதிபதி இறந்தால் மட்டுமே அவரது இயக்கம் ஆரம்பம் ஆகும்! சகல வசதி வாய்ப்புடன் எந்தவித வேலைப் பளுவும் இல்லாத இந்த உதவி - துணை என்கிற பதவிகளைச் சிலர் விரும்புவார்கள். காரணம், முதலாவதாக இருப்பதில் பெருமை இருக்கிற அளவு பொறுப்பும் பாரமும் துன்பமும் விமர்சனமும் உண்டு. ஆனால் நம்பர் 2 ஆக இருப்பதில் சுகமும் போகமும் மட்டுமே உண்டு.

ஆனால் இந்த நம்பர் 2-ல் திருப்தி அடைவது வாழ்க்கையே அல்ல. போராட்டங்கள் நிறைந்த நம்பர் ஒன்னாக இருக்கவே ஆசைப்படுங்கள்.

ஆனந்த் தியேட்டர் அதிபர் அமரர் உமாபதி அவர்களைப் பற்றிய சுவையான செய்தி ஒன்று உண்டு.

எந்த விழாவுக்குப் போனாலும் முதல் வரிசையில் இடம் இருந்தால்தான் அமருவார். இரண்டாவது வரிசையில் இருக்க அவருக்குப் பிடிக்காது என்று சிலம்பொலி செல்லப்பன் ஒருமுறை சொன்னார்கள். எனக்கும் இந்த இயல்பு உண்டு.

எல்லோருக்கும் முதல் வரிசையில் இடம் கிடைக்குமா? எல்லோரும் நம்பர் ஒன் ஆக முடியுமா என்று தத்துவ வினாக்கள் எழுப்ப வேண்டாம்! அந்த விவாத நேரத்தைக்கூட வீணாக்காமல் நம்பர் ஒன் ஆவதற்கு முயலுங்கள்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின் சீனியாரிட்டிபடிப் பார்த்தால் கலைஞர் தி.மு.க.வின் தலைவராகவும் முதல்வராகவும் ஆகியிருக்க முடியாது. அமரர் எம்.ஜி.ஆர். கூடக் கலைஞரை முதல் இடத்தில் ஒப்புக்கொண்டார்.

அமரர் எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின் இன்றைய தமிழக முதல்வரும் சீனியாரிட்டிகளைப் புறக்கணித்து நம்பர் ஒன் என்று தன்னை நிரூபித்தார். அவர் நம்பர் 2 ஆக இருக்க விரும்பியதே இல்லை!

நம்பர் டூ பாதுகாப்பானது... ஆனால் விரும்பத்தக்கது அல்ல.

ஆபத்துகளை, விமர்சனங்களை எதிர்கொள்ளும் மனிதர்களே எப்போதும் நம்பர் ஒன் என்ற முதலிடம் பெறுகிறார்கள்.

கஷ்ட காலத்தில் ஒரு குழுவைக் கட்டுக்குலையாமல் கொண்டு செலுத்தும் துணிவுடையவர்கள் பிறவித் தலைவர்கள். அவர்களிடம் இருந்து அந்தப் பண்பை நாம் படித்தாக வேண்டும்.

சைவ சமயத்தில் இறைவனைக் குறித்துப் பாடிய நாயன்மார்கள் பாடலை நம்பியாண்டார் நம்பி என்பவர் வரிசைப்படுத்தி முறைப்படுத்தினார். காலத்தால் பிந்திய- வயதில் சின்னவரான ஞானசம்பந்தர் பாடல்களைத்தான் முதல் திருமுறை என்று அறிவித்தார். சைவ சமயத் தலைவர்களை வரிசைப்படுத்தும்போது முதலில் ஞானசம்பந்தர் என்றே வரிசைப்படுத்துவார்கள்.

ஏன்?

சைவ சமயத்துக்குப் பிற சமயங்களால் துன்பம் நேர்ந்தபோது அஞ்சாமல் தலைமை ஏற்று நின்ற தமிழ் முதல்வர் சம்பந்தர். அது மட்டுமா? பாண்டிய நாட்டில் திருநீறு வைத்தாலே தீட்டு என்று அரசருக்கு அஞ்சி மக்கள் திருநீறு வைக்காதபோது நெற்றி நிறைய நீறு பூசி, திருநீற்றுப் பதிகம் பாடி, மன்னருக்கே திருநீறு கொடுத்த தமிழ்த் தலைவன் ஞானசம்பந்தன்.

எனவே நம்பர் ஒன் என்பது அவரைத் தேடி வந்தது. அவரைக் கொல்லப் பல முயற்சிகள் நடந்தன. பல ஆபத்துகளை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது என்றாலும் அவர் எதிர்கொண்டார்.

நம்பர் 2-ல் சௌகரியங்கள் அதிகம். நம்பர் ஒன்னில் சங்கடங்கள் அதிகம். என்றாலும் நம்பர் 1 தான் உங்கள் லட்சியமாக இருக்க வேண்டும்.

நம்பர் ஒன் ஆக வேண்டும் என்றால் தகுதி, உழைப்பு, தியாகம், தலைமைப் பண்புடன் ஆக வேண்டுமே ஒழிய தவறான பாதைக்குத் தாவக் கூடாது.

ஒரு சில சைவ மடங்களில்கூட அசைவ வேலைகள் செய்து தலைமையைப் பெற ஆசைப்படுகிறார்கள். அதுவல்ல சரியான வழி...

ஞானசம்பந்தர் மாதிரி அஞ்சாமை, பொறுப்புணர்வு, தன்னம்பிக்கை, விடாமுயற்சியுடன் நம்பர் ஒன் ஆக வேண்டும்.

மகாபாரதத்தில் வியாசர் ஓர் அருமையான விளக்கம் சொல்லுகிறார்...

‘‘எவன் பெரியவன் என்ற கேள்விக்கு அவர் சொல்லும் பதில் ஆச்சரியமானது. நான்கு வர்ணங்களில், அந்தணரில் அறிவு அதிகம் உடையவனே பெரியவன். அரசரில் பலம் அதிகம் உடையவனே பெரியவன். வணிகரில் பணம் அதிகம் வைத்திருப்பவனே பெரியவன். நாலாம் வர்ணத்தில் மட்டுமே வயது மூத்தவன் பெரியவன்.

காலம் மாறிவிட்டது. வர்ணாச்ரமம் வடிவம் மாறிவிட்டது... என்றாலும் வியாசரின் அணுகுமுறை ஆழ்ந்த அறிவு, மாற முடியாது.

உங்கள் ஆசிரியரைவிட நீங்கள் அதிகம் படித்தால் நீங்கள் நம்பர் ஒன். உங்கள் மேல் அதிகாரியைவிட உங்கள் பலம் பெருகிவிட்டால் நீங்கள் நம்பர் ஒன். உங்களைச் சுற்றி இருப்பவரைவிட உங்கள் பண பலம் பெருகிவிட்டால் நீங்கள் நம்பர் ஒன்.

வயது மூத்தவர்களை மரியாதையுடன் நடத்தினால் அப்போதும் நீங்கள் நம்பர் ஒன்.

சௌகர்யம் கருதி நம்பர் டூ ஆகவேண்டாம். சங்கடம் என்றாலும் நம்பர் ஒன்தான் நமது லட்சியம்.

இந்த லட்சியம் இருந்தால் வெற்றி நிச்சயம்!

## 12. நாம் எந்தக் கட்சி?

**வா**ழ்க்கையில் வெற்றி பெறும் கலையை முழுக்க முழுக்க இன்னொருவர் கற்றுத் தந்துவிட முடியாது. நாமாகத்தான் கற்க வேண்டும். உள்வாங்க வேண்டும். பத்து மாணவர்களுக்கு ஆசிரியர் ஒரே மாதிரித்தான் பாடம் நடத்துவார். அதிகமாக உள்வாங்கும் திறன் உடையவன் முதல் மதிப்பெண் பெறுகிறான். மழை சமமாகப் பெய்தாலும் களிமண் நீரை உள்ளே விடாது. மணல் முழுக்க உள்ளே உறிஞ்சும். செம்மண்ணும் மணலும் கலந்த பூமி அதிகம் உள்வாங்கிக் கொஞ்சம் வெளியே நிறுத்தும். தாவரங்கள் செம்மண் பூமியில் தளதளவென்று வளருகின்றன.

சுயமாக முன்னுக்கு வந்த கலைஞர்கள், வணிகர்கள், தொழிலதிபர்களைப் பார்த்து, ‘‘நீங்கள் முன்னுக்கு வந்த டெக்னிக்கைச் சொல்லிக் கொடுங்கள்’’ என்றால் அவர்கள் செய்ய மாட்டார்கள். அவர்களைச் சுயநலவாதி, கர்வி, தான் மட்டும் முன்னேற ஆசை என்று உலகம் வாரி வைகிறது. சொல்லித் தரக்கூடாது என்ற எண்ணம் அல்ல. இது சொல்லித் தரமுடியாதது என்பது ஏன் பலருக்குப் புரிவதில்லை? பரபரப்பில்லாமல் சிந்தித்தால் இந்த உண்மை உங்களுக்குப் புரியவரும்.

நடிப்புக் கல்லூரியில் நடிப்பைப் படிப்பாக முடித்த எவரும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை விஞ்சியது இல்லை. என்ன புரிகிறது? ஒன்றைச் சொல்லிக் கொடுப்பதைவிடக் கற்றுக் கொள்வதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது. சிவாஜி கணேசன் கல்லூரியில் நடிப்பைக் கற்கவில்லை. ஆனால் உலகம் முழுவதிலும் இருந்து நடிப்பைக் கற்றுக் கொண்டார். சொல்லிக் கொடுப்பதில் வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் கற்றுக் கொள்வதில் வேறுபாடு இருக்க முடியும். தனித்தன்மை சுடர்விட முடியும். இதனைப் புரிந்து கொள்ளாமல் சிலர், புகழ்பெற்றவர்கள் வெற்றி ரகசியங்களை மறைத்து வைப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இது பிழை.

இன்னொரு செய்தி. புகழ் பெற்ற நகைச்சுவை நடிகரின் வீட்டைத் தேடிப்போய் ஒருவர் தம்மை முன்னேற்றி விடும்படிக் கேட்டிருக்கிறார். நடிகர் மவுனமாகவே இருந்ததும், ‘‘நான் கண்டிப்பா பெரிய ஆளா வருவேன். நீங்க சில டெக்னிக் கத்துக் குடுத்து வாய்ப்பும் வாங்கிக் குடுத்தா நான் நிச்சயம் பெரிய நடிகனா ஆக முடியும்... மத்தவங்களை வளர்க்கணும்னு உங்களுக்குக் கடமை இருக்கு’’ என்று பாடம் நடத்தியிருக்கிறார்.

‘‘இதோபார்... இப்படி எந்த இடத்திலும் போய் நான் நிற்காததால்தான் பெரிய நடிகனாக இருக்கிறேன்’’ என்று கூறிவிட்டு, படார் என்று கதவைச் சாத்திக்கொண்டு போய்விட்டார். போனவர் அப்செட். நடிகரை மண்டைக் கனம் பிடித்தவர் என்று வசை பாடுகிறார். உண்மை அது அல்ல. நிறையக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் எதையும் சொல்லித் தர முடியாது. பிறரைக் குற்றம் சாட்ட வேண்டாம். நமது அக்கறையை அதிகப்படுத்த வேண்டும்.

‘சமைத்துப்பார்’ என்கிற புத்தகத்தைப் படித்துச் செய்த சமையலைவிட அருமையாகச் சமைக்கிற அம்மணிகள் ஆயிரம் ஆயிரம் இருக்கிறார்கள்.

அவர்கள் குழம்பு கொதிக்கும் போதே, ‘உப்பு கம்மி... புளி அதிகம்’ என்று ரிப்போர்ட் கொடுப்பார்கள். இது அனுபவம் மட்டுமல்ல... பழக்கம் மட்டும் காரணம் அல்ல. மனம் விழித்த நிலை. விவரிக்க முடியாத சக்தியான மனம் பூரணமாக விழித்திருந்தால் நுட்பமான பல கலைகளைக் கற்றுக் கொள்ளும்.

தூக்கத்தில் இருந்து உடல் விழித்தால் போதாது. மனதும் விழிக்க வேண்டும். வீட்டு ஜன்னலை விரியத் திறந்தால் போதாது. மூளையின் சாளரங்களை மூச்சுக் காற்றால் திறக்க வேண்டும். அப்போதுதான் நிறைய நிறைய உள்வாங்க முடியும். ‘ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது’ என்ற பொன் மொழி கோடி கோடி பெறும். சொல்லிக் கொடுக்கப்பட்ட செய்திகளை மட்டும் நம்பி ஒருவர் அறிவாளி ஆகிவிட முடியாது.

ஹெலன் கெல்லர் என்ற பெண்மணி கண்ணில்லாதவர். கண்ணில்லாத போதும் கல்வி கற்பது எப்படி என்று அவர் ஆசிரியர் ஆனி சல்லிவன் கற்றுக் கொடுத்தார். ஆனால் ஆசிரியர் கற்றுக் கொடுக்காத ஆற்றலை ஹெலன் கெல்லர் சுயமாகப் பெற்றார். அதுதான் அவரை உலகின் ஆச்சரியப் பொருளாக்கியது.

விழிப்புலன் இல்லாத அவர் தொட்டுத் தொட்டு ஒவ்வொரு பொருளையும் உணர்ந்து பெயர் குறிக்கும் வித்தையை அவரது ஆசிரியர் கற்றுக் கொடுத்தார். ஹெலன் கெல்லர் ஒரு படி மேலே போய் ஒரு பொருளைத் தொட்டுவிட்டு அதன் நிறம் இன்னது என்று சொல்லத் தொடங்கினார். இது ஆசிரியர் சொல்லித் தராதது. விழிப்படைந்த மனம் அவர் விரல் நுனியில் பூரணமாய் நின்றதால் கண்களின் வேலையைக் கைகளே செய்தன. பள்ளி, கல்லூரிகளில் படித்துவிட்டால் படிப்பே முடிந்துவிட்டதாகப் பலர் கருதுகிறார்கள். கல்வி நிறுவனங்கள் எதையும் பூரணமாகக் கற்றுத் தர முடியாது. வேண்டுமானால் எப்படிக் கற்க வேண்டும் என்கிற தொடக்கத்தைச் சொல்லித் தரலாம். ‘கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த படிப்பும் எத்தனை நாள் வரும்?’ என்ற கிராமத்துக் கவிதையை உணருங்கள். உயர்வது நிச்சயம்.

ஆசார்ய ரஜனீஷ் இதை விளக்க ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு மகாராஜா மகன் மிக மக்காய் இருந்தான். பவர் உள்ள பல குடும்பங்களில் ‘மக்கு மகன்’ பிரச்சினை எப்போதும் உண்டு. அவனுக்கு ஆட்சியைக் கொடுக்க மக்கள் விரும்பவில்லை. மூத்தவர் சபை எதிர்த்தது. ‘என்ன செய்யலாம்’ என்று அரசர்

கவலைப்பட்டார். வெளிநாட்டில் திறமையான கலாசாலையில் மகனைச் சேர்த்துவிட்டால் அவர்கள் எப்படியும் அறிவாளி ஆக்கிவிடுவார்கள் என்று மகாராஜா முடிவு செய்தார். அங்கு பல துறைகள் இருந்தன. உயர்தரமான அந்தக் கலாசாலையில் ஐந்து ஆண்டுகள் தங்கிப் படித்துவிட்டு இளவரசன் திரும்பிவந்தான்.

அவனது நடை, உடை, பாவனைகள் மாறியிருந்தன. பளிச்சென்று உடையணியப் பழகியிருந்தான். அழகாக நடப்பது, கைகுலுக்குவது, மரியாதையாய்ப் பேசுவது என்று நிறைய மாற்றங்கள். மகாராஜவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. முதியோர் சபையில் மகனை நிறுத்தி அவர்கள் அனுமதியுடன், அறிவாளியாக்கப்பட்ட மகனை அரசனாக்க நினைத்தார். பலரும் அவனை அறிவாளி என்றே ஒப்புக் கொண்டனர். பல்கலைக் கழகத்தின் சாதனையைப் பாராட்டினர்.

ஒரு கிழவர் மட்டும் இளவரசனைச் சோதிக்க நினைத்தார். ‘‘என்ன படித்தாய்?’’ என்றார். ‘‘நிறைய நிறைய... சோதிடம் கூட முறையாகக் கற்றுத் தந்தார்கள். நீங்கள் சோதிடத்தில் கேள்வி கேட்டால்கூடச் சொல்வேன்’’ என்றான். கிழவர் மோதிரத்தை உள்ளங்கையில் வைத்து மூடிக் கொண்டு, ‘‘இது என்ன?’’ என்றார். இளவரசன் யோசித்தான். ஒரு காகிதத்தை எடுத்து ஏதோ கணக்குப் போட்டான். அப்படி இப்படி தலையை ஆட்டிக் கொண்டான். ‘‘உங்கள் கையில் உள்ளது வட்டமானது. ஒளியுடையது’’ என்று விடை சொன்னான். கிழவருக்கு உள்ளூர சந்தோஷம். இருந்தாலும், ‘‘அடையாளங்களைச் சொல்லுகிறாயே ஒழிய அது இன்ன தென்று சொல்லக்கூடாதா?’’ என்றார். ‘‘அது எங்கள் பாடத் திட்டத்தில் இல்லை’’ என்றான் இளவரசன். ‘‘யூகித்துச் சொல்’’ என்றார் கிழவர். உடனே இளவரசன் ‘‘பாடத் திட்டத்தில் இல்லையென்றாலும் என் பொது அறிவை வைத்துச் சொல்லிவிடுவேன்... அது ஒரு வண்டிச் சக்கரம்’’ என்றான்.

மடப்பயல்... சர்வகலாசாலை சொல்லிக் கொடுத்ததைச் சரியாகச் சொல்லிவிட்டான். ஆனால் வண்டிச்சக்கரத்தை எவனும் உள்ளங்கையில் ஒளித்து வைக்க முடியாது என்ற சின்ன விஷயம்கூட அந்த மடையனுக்குத் தெரியவில்லை.

YOU CAN EDUCATE FOOLS; BUT YOU CAN NOT MAKE THEM WISE என்பது சத்தியம். முட்டாளைப் படிப்பாளியாக்க முடியும். ஆனால் அறிவாளியாக்க

முடியாது. அதனால்தான் கீதையில், ‘‘புத்திமான்களுக்குள் நான் புத்தி’’ என்கிறான் கண்ணன். புத்தியில்லாத புத்திமான்கள் அநேகம் பேர். ‘செவன்த் சென்ஸ்’ பெறப் பலர் தியானம் செய்கிறார்கள். ‘காமன் சென்ஸ்’ இல்லாவிட்டால் இவர்களை என்ன செய்ய..? படிக்காத மேதைகளும் உண்டு; படித்த முட்டாள்களும் உண்டு. நாம் எந்தக் கட்சி..? கண்டுபிடித்தால் வெற்றி நிச்சயம்.

## 13. இல்லாத தளை; பொல்லாத சிறை!

**அ**ண்மையில் பெரிய தொழில் நிறுவனம் ஒன்றில் முழுநாள் பயிற்சிப் பட்டறை நடத்த நேர்ந்தது. நான் ஒருவனே அனைவரையும் கொண்டு செலுத்துவது சிரமம் என்பதால் தொழில்துறை நிர்வாக இயலில் திறன்மிகு நண்பர் ரவி என்பவரிடம் ஒரு மணி நேரம் வகுப்பை ஒப்படைத்தேன். அவர் வகுப்பைக் கையாண்ட விதம், சொன்ன செய்திகள் மிக நன்றாகவே இருந்தன. அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

மனிதர்கள் எந்த விஷயத்தையும் புதிய கோணத்தில் பார்த்தால், சிந்தித்தால் முன்னுக்கு வரலாம். ஆனால் உழுத சாலில் உழுவது மாதிரி, திரும்பத் திரும்பப் பழைய பாணியில் சிந்திக்கிறார்கள்... யோசிக்கிறார்கள். ஷாம்பூ என்பது 1980-களில் பணக்காரர்கள் பயன்படுத்தும் பொருளாக இருந்தது. என்ன காரணம்? அதன் விலை. அதை ஒரு பிளாஸ்டிக் பையில் அடைத்து ஒரு ரூபாய்க்கு விற்க நினைத்தாரே... அவர் மகா புத்திசாலி. புதிய சந்தையைத் தனக்கு உண்டு பண்ணிக் கொண்டார்.

வாட்ச் எனப்படும் மணிக்கூடு இப்போது பத்துக்கும் இருபதுக்கும் விற்கிறது. அதன் ஆரம்பக் காலங்களில் நகைக் கடைகளில் விற்கப்பட்ட விலை உயர்ந்த ஆபரணம் அது. மத்தியதர வர்க்கத்துக்கு எட்டாத பணக்கார அணிகலனாக இருந்த வாட்சை ஏழைகளுக்கு எட்டும் பொருளாக்க எடுத்த முயற்சியில் முதலில் கிடைத்தது மரண அடி. டைமெக்ஸ் நிறுவனம் முதலில் விலை குறைந்த வாட்ச்சுகளை அறிமுகப்படுத்தியதும் தமது கடைகளில் அந்தக் குறைந்த விலைப் பொருள்களை விற்க நகைக் கடைகள் மறுத்தன. டைமெக்ஸ் நிறுவனம் சோர்ந்து போகவில்லை. எங்கே வைத்து விற்றார்கள் தெரியுமா? மருந்துக் கடைகளில். மத்தியதர மக்கள் வந்துபோகும் மருந்துக்கடைகள் மூலம்

விற்பனையைத் தொடங்கிப் புதிய வரலாறும் பெரும் சந்தையும் பெற்றது அந்த நிறுவனம்.

ஐஸ்கிரீம் விற்பனையில் கோன் ஐஸ் பெரும் விற்பனையாகிறது. என்ன காரணம்? உருகும் நிலை உள்ள ஐஸ்கிரீமை வைத்துச் சாப்பிட எப்படியும் ஒரு பாத்திரம் கண்டிப்பாக வேண்டும். அது பிளாஸ்டிக் அல்லது பேப்பரில் இருக்கும். அதையே தின்னுகிற பிஸ்கெட்டில் செய்தால்..? எவ்வளவு அருமையான எண்ணப் பாய்ச்சல் அது. தொழில் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் இத்தகைய எண்ணப் பாய்ச்சல் அவசியம்.

ஜி.டி. நாயுடுவுக்கு இப்படிப்பட்ட பாய்ச்சல் அதிகம். என் நண்பர் ஒருவர்... மணி என்று பெயர். அவரும் வித்யாச வித்யாசமாகச் சிந்திப்பார். வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் ஒரு நாள் காலையில் சீக்கிரம் எழுவதைப் பற்றி வற்புறுத்திக் கொண்டிருந்தார். புகழ் பெற்ற ஆங்கிலப் பொன்மொழியான, ‘காலை முதலில் எழும் பறவைக்கு ஏகப்பட்ட புழுக்கள் கிடைக்கும். தாமதமாக எழும் பறவைக்கு எதுவும் மிஞ்சாது’ என்பதைச் சொன்னார். நண்பர் மணி எழுந்து, ‘‘ஸார்... அப்படியானால் காலை முதலிலேயே எழுந்திருந்து வெளியே போகும் புழுக்கள் கண்டிப்பாகச் செத்துப் போகுமே! அதனால் நாம் பறவையாக இருந்தால் முதலில் எழுந்திருக்க வேண்டும். புழுவாக இருந்தால் தாமதமாக எழுந்திருக்க வேண்டும்... சரியா?’’ என்றார். ஆசிரியர் புழுப்போலச் சுருண்டு விட்டார். எண்ணப் பாய்ச்சல் ஜிவ்வென்று உங்களை மேலே தூக்கும். தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

பயிலரங்கில் நண்பர் ரவி சொன்ன இன்னொரு அருமையான செய்தி. கரும்பலகையில் ரோமன் எழுத்துகள் V, VI என்று குறித்துக் கொண்டே, ‘‘இது என்ன என்ன?’’ என்று கேட்டார். எல்லோரும் ஐந்து, ஆறு என்று சரியாகச் சொன்னார்கள். திடீர் என IX என்று எழுதிவிட்டு, இது என்ன? என்றார். உடனே ஒன்பது என்றார்கள். ‘‘இதோடு ஒரே ஒரு கோடு சேர்க்கலாம். ஆனால் அழிக்கக்கூடாது. இந்த ஒன்பதை யாராவது ஆறாக மாற்ற முடியுமா?’’ என்றார். பலரும் தத்தளித்தார்கள். பிறகு அவரே சாக்பீஸ் எடுத்து S என்று எழுதினார். ‘‘இப்போது படியுங்கள் SIX, அதாவது ஆறு’’ என்றார். உடனே ஒருவர் எழுந்து, ‘‘நீங்கள் ஒரு கோடு என்றீர்கள். பிறகு ‘எஸ்’ போட்டால் எப்படி?’’ என்றார்.

ந என்பதும் ஒரு கோடுதான். நான் நேர்கோடு என்று சொல்லவில்லை. நீங்களாக அல்லவா நேர்கோடு என்று எல்லை வகுத்துக் கொண்டீர்கள். மேலும் IX என்பதை எண்ணாக மட்டுமே எலலை வகுத்துப் படித்தீர்கள். அதை 'ஐ', 'எக்ஸ்' என்ற எழுத்தாக ஏன் பார்க்கத் தோன்றவில்லை? ஆங்கிலத்தில் இப்படி யோசிப்பதை 'லாட்டரல் திங்கிங்' (Lateral Thinking) என்கிறார்கள்'' என்றார். உண்மை. இல்லாத எல்லைகளை நம் மனம் தானாக வகுத்துக்கொண்டு சிறைப்பட்டு முன்னேற முடியாமல் திணறுகிறது; குழம்புகிறது. பல சமயங்களில் நமக்குத் தடைகளே இல்லாதபோதுகூடத் தடைகள் இருப்பதான பிரமையில் நாம் இருக்கிறோம்.

உலகப்போரின் போது ஒரு குற்றவாளியை நீண்டகாலம் இருட்டுச் சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். பிறகு ஒருசமயம் விடுதலை செய்து வெளியே அழைத்தபோது அவன் வெளியேற மறுத்துவிட்டான். விடுதலையை விரும்பவில்லை அவன். வற்புறுத்தி, ''வெளியே வா'' என்றபோது, ''கதவுகளை நீங்கள் திறக்கவில்லையே'' என்றான். ''ஆரம்பத்தில்தான் உன் கதவுகளைப் பூட்டியிருந்தோம். சில காலமாக உன் கதவுகளைப் பூட்டுவதே இல்லை. மனத்தளவில் நீ அடிமைப்பட்டுச் சிறைப்பட்டிருந்தாய்'' என்றான் ஜெயில் அதிகாரி.

மகாபாரதத்தில் ஒரு இடம். சூதாடி, பாண்டவர் அடிமையான பிறகு சபைக்கு இழுத்துவரப்பட்ட பாஞ்சாலி துகில் உரியப்பட்டாள். ஆனால் கண்ணன் காத்தான். பாஞ்சாலி கோபத்தில், ''துரியோதனனைக் கொன்று, துச்சாதனனைக் கொன்று ரத்தம் பூசி என் குழல் முடிப்பேன்'' என்று சபதம் செய்தாள். நடுங்கிப் போன திருதராஷ்டிரன் அவளைச் சமாதானப்படுத்த, ''வரங்கள் கேளம்மா... தருகிறேன்'' என்றான். ''பாண்டவர்கள் ஐந்து பேரும் அடிமைகள் அல்ல என்று விடுவிக்க வேண்டும்'' என்றாள். ''தந்தேன்'' என்ற திருதராஷ்டிரன், ''நீ விடுதலை பெற வேண்டும் என்ற வரம் கேட்கவில்லையே... ஏன்'' என்றான்.

''நான் அடிமை அல்லவே... என்னை அடிமையாக்கினால்தானே விடுதலை என்ற பேச்சே பிறக்கும்?'' என்றாள் பாஞ்சாலி. தருமன் தன்னை அடிமை என்று வைத்து ஆடினாலும் தான் அடிமை அல்ல என்றே அவள் உணர்கிறாள். அவளுக்கு இருந்த அறிவு இன்று பல பாஞ்சாலிகளுக்கு இல்லையே... இல்லாத சிறைக்குள் எத்தனை அடிமைகள்! நம் எண்ணங்களின் குறுக்கமே நமக்குச்

சிறையாகலாமா? சுதந்திரமாகச் சிந்தியுங்கள். எண்ணப் பாய்ச்சலில் அண்டவெளியில் பாய்ந்து பழகுங்கள்.

எதற்கும் நாம் அடிமையில்லை என்று உணருங்கள். வெற்றி நிச்சயம்.

## 14. கேள்விகளுக்குப் பதிலா? பதிலுக்குக் கேள்வியா?

**கே**ள்வி கேட்டால் சிலருக்குக் கோபம் வரும். ‘‘ஏன் இப்படித் தாறுமாறாகக் கேள்வி கேட்கிறீர்கள்? ஏடாகூடமாகப் பேசாதீர்கள்’’ என்று எரிந்துவிழுவார்கள். நமது பள்ளிக் கூடங்களில்கூட மாணவர்கள் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவதில்லை.

கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படியே தயாரிக்கப்படுகிறார்கள். ஆசிரியர் பாடம் நடத்திய பிறகு கேள்விகளையும் அவரே தருகிறார். பதிலையும் அவரே கொடுக்கிறார். கேள்வியும் நானே, பதிலும் நானே என்கிற இந்தக் கூத்துக்கு ‘நோட்ஸ்’ என்று பெயர்.

அதை அச்சிட்டு விற்று ஆசிரியரே அவசியம் இல்லை என்று அவமானப்படுத்தவும் ஒரு கூட்டம் தயாராக இருக்கிறது. கேள்வியும் நானே, பதிலும் நானே என்ற கேலிக்கூத்தில் ஒரு முட்டாள் மாணவன்கூட அறிவாளி மாதிரி தேர்வு பெறுகிறான். இந்த வெற்றி வெற்றியே அல்ல. கல்வித் திட்டத்தின் ஓட்டை. மூட்டை மூட்டையாய் மூடர்களை உருவாக்கும் கல்விமுறை இது.

பாடங்களைப் புரிந்து கொண்டால், மாணவன் கேள்வி கேட்கத் தோன்றினால், அன்றைக்குத்தான் உண்மையான அறிவு அவனுக்கு ஆரம்பம் ஆகும். கேள்விகள் அறிவுலகச் சாவிகள், அதைத் தடுப்பவர்கள் பாவிகள். ஒரு சமயச் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தது.

குசேலர் கதையை உபன்யாசகர் அழுது அழுது சொல்லிக் கொண்டிருந்தார். ‘‘இருபத்தேழு நட்சத்திரமாக இருபத்தேழு குழந்தைகள். ‘அம்மா... சாப்பாடுன்னா என்னம்மா?’ என்று தாயைக் குழந்தைகள் கேட்டன. அந்தத் தாய் என்ன பண்ணுவாள். ஒண்ணு ரெண்டு பெத்தவங்களே அல்லாடறோம்.

இருபத்தியேழு பிள்ளைகள். அந்தக் குசேலர் என்ன பாடுபடுவார்?'' என்று சமயச் சொற்பொழிவாளர் கதையளந்து கொண்டிருந்தார்.

பளிச்சென்று ஒரு பத்து வயதுப் பையன் எழுந்தான். ''இருபத்தேழு குழந்தைகள்னா முதல் பையனுக்கு இருபத்தேழு வயசாவது இருக்கணுமே சார்... அவன் வேலைக்குப் போயிருந்தா கஷ்டம் இருக்காதே'' என்றான். உபன்யாசகர் குசேலரைவிடப் பரிதாபமாக விழித்தார். சபையில் இருந்த பெரியவர்கள் (?), ''அதிகப் பிரசங்கி, உட்கார்'' என்று அவனை அடக்கினர். ''ஒரே பிரசவத்தில் நாலைந்து பிறந்ததா?'' என்று குட்டிப் பயல் மூர்க்கமாய்க் கேட்டான். நான் கேள்வி கேட்ட அவனைத்தான் மதிக்கிறேன். உளறுவாய் உபன்யாசகரை வெறுக்கிறேன்.

ஏன்? எப்படி? எதனால்? எவ்வாறு? என்ற விதம்விதமான கேள்விகள்... வகைவகையான சாவிகள். கேள்விகளுக்குப் பதில் சொல்லும் பொறுமையோ, திறமையோ பெரியவர்களுக்கு இல்லாமல் போனதுதான் முன்னேற்றத்துக்கான முட்டுக்கட்டை. பெரியவர்கள் வைத்திருக்கும் ஒரே பதில், ''நாங்கள்ளாம் பெரியவங்க சொன்னால் நம்பினோம். இப்படியா கேள்வி கேட்டோம்?'' என்கிறார்கள். இது பதில் அல்ல. மழுப்பல். தொடர்ந்து முட்டாள் பரம்பரையைத் தோற்றுவிக்கும் முயற்சி.

மரத்திலிருந்து பழம் ஏன் கீழே விழுகிறது என்று ஒருவன் கேட்டதால்தான் புவியீர்ப்புச் சக்தி என்ற உண்மை கண்டறியப்பட்டது. பறவைகள் மட்டும் பறக்கின்றனவே... மனிதன் ஏன் பறக்க முடியவில்லை என்ற கேள்விதான் விமானத்தை விளைவித்தது. உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் ஒரு கேள்வியை வைத்திருப்பவனே விஞ்ஞானியாய் விளைந்தான். மெய்ஞானிகள் மட்டும் என்ன? உபநிடதங்கள் கேள்வி - பதில் பாணியில் இருப்பது எதனால்? கேள்விகளே சாவியாய் விஞ்ஞானியும், கேள்விகளே வேள்வியாய் மெய்ஞானியும் வாழ்ந்திருக்கிறார்கள். மறக்க வேண்டாம்.

'நான் யார்?' என்ற கடுமையான கேள்விதான் வெங்கட்ரமணனைப் பகவான் ரமணராக்கியது. ''நான் யார்? என் உள்ளம் யார்? ஞானங்கள் ஆர்?'' என்ற கேள்விதான் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரை மலரவைத்தது.

தான் என்ன சொன்னாலும் அப்படியே கேட்டுவிட்டுப் போகும் ஆட்டு மந்தைகளைத்தான் தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதைவிடக் கொடுமை,

சிந்திக்கத் தெரியாத ஜென்மங்களைத்தான் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஆக்குகிறார்கள். கேள்வி கேட்கும் மாணவர்களை ஆசிரியர்களுக்கு அறவே பிடிப்பதில்லை. மடத்தனமாக மண்டையை மண்டையை ஆட்டும் மடையர்களைத்தான் மதகுருமார்களுக்கு ரொம்பவும் பிடிக்கிறது.

''மீன் தண்ணீரில் வாழும்'' என்று பாடம் நடத்தும் ஆசிரியர் உடனே கேள்வி எப்படி வரும் என்பதைச் சொல்லிவிடுகிறார். 'மீன் எதிலே வாழும்?' என்ற கேள்வியை எழுதிப் போடுகிறார். மாணவர்கள் 'தண்ணீரில்' என்று விடை எழுதும்படித் தயாரிக்கப்படுகிறார்கள்.

'அட கடவுளே... இதுவா கல்வி? மீன் ஏன் தண்ணீரிலே வாழுகிறது? தண்ணீரில் எவை எவை வாழும்? தரையில் ஏன் மீனால் வாழ முடியாது?' இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் மாணவனுள் தோன்ற முடியாதபடி தோன்ற வேண்டிய கேள்வியை ஆசிரியர் தயாரித்து அளிப்பது சரஸ்வதியைச் செருப்பால் அடிப்பதற்குச் சமம்.

மனிதனுக்குள் கேள்விகள் தோன்றாதபடி ஒருவர் தடுப்பது தெருநாயைப் பிடித்து இனவிருத்தியை ஒடுக்க ஆண்மை நீக்கம் செய்யும் மாநகராட்சி வேலைக்குச் சமம். சிந்தியுங்கள். சிந்திக்கச் சொல்லுங்கள். சிந்திக்கச் செய்யுங்கள். கேள்வியையும் ஆசிரியரே கொடுத்தால் விடையை நோக்கிப் பாயும் வேகம்தான் மாணவனிடம் வரமுடியும். அரை அங்குலம் கூட அறிவை நோக்கி நகரமாட்டான். மாறாக, 'மீன் ஏன் தண்ணீரில் மட்டுமே வாழ்கிறது? ஏன் தரையில் வாழ்வதில்லை?' என்று அவன் யோசித்தால், தரையில் வாழும் உயிர்களுக்கு நுரையீரல் அவசியம் என்ற பொறி தட்டும்.

இந்த நாட்டில் தேர்வுகளில் வெற்றி பெற எவனுக்கும் அறிவே தேவையில்லை. முந்தைய பத்தாண்டுகளின் கேள்வித்தாள்களே போதும். அதற்கான பதில் தயாரித்துக் கொண்டால் எந்த மடையனும் இந்த நாட்டில் பட்டம் வாங்க முடியும். முதல் வகுப்பு முட்டாளாக முடி சூடிக் கொள்ள முடியும்.

இப்போது சொல்லுகிறேன். கேள்விகளுக்குப் பதில் தருவது கல்வி ஆகாது. கேள்வி கேட்கும்போதுதான் கல்வி ஆரம்பமாகிறது. கேள்விகளைத் தயாரித்து, அதற்கான பதிலையும் தயாரித்து அதை எழுதும்படி மாணவர்களையும் தயாரிப்பவன் ஆசிரியனே அல்ல. பதில்களைக் கேள்வி கேட்டு அதற்கான பதிலையும் தயாரிக்கும்படி மாணவனைத் தயாரிப்பவனே உண்மையான

நல்லாசிரியன். ஒன்றிரண்டு பேர் அப்படி இருக்கிறார்கள். அவர்களை நூறுநூறு முறை நான் வணங்க விரும்புகிறேன்.

ஒரு சின்னக் கதை.

எதிர் எதிராக இரண்டு புத்த மடாலயங்கள். இரண்டு குருமார்கள் பத்துப் பத்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்தக் குருமார்களின் மடம் மட்டும் எதிர் எதிராக இல்லை; மனமும் எதிர் எதிராகவே இருந்தது. அதனால் தங்கள் மாணவர்களை எதிர் மடாலய மாணவர்களுடன் பேசக்கூடாது என்று கட்டளை இட்டிருந்தனர். தடுக்கத் தடுக்க ஆசைகள் அதிகமாகும்தானே? ஒரு பத்து வயது மாணவன் எதிர் மடத்தின் ஏழு வயது மாணவனை ஒருநாள் கடைவீதியில் சந்தித்தான்.

பேசும் ஆசையில், ‘‘எங்கே போகிறாய்?’’ என்று சாதாரணமாகக் கேட்டான். அவனோ, ‘‘காற்று என்னை எங்கே கொண்டு போகிறதோ அங்கு போகிறேன்’’ என்று தன் லகுவான மனோநிலையைக் கவிதையாக வெளிப்படுத்தினான். மேலே என்ன பேசுவது என்று புரியவில்லை.

தனது ஆசிரியரிடம் வந்து நடந்ததைச் சொல்லி, ‘‘இப்படிப் பேச நீங்கள் கற்றுத் தரவில்லையே’’ என்றான். சுருக்கெனக் கோபப்பட்ட ஆசிரியர், ‘‘அந்த வாத்தியார் ஒரு அதிகப்பிரசங்கி. அவர் மாணவன் அப்படித்தான் இருப்பான். இதற்குத்தான் அவனோடே பேசாதே என்றேன்’’ என்று சீறினார். பிறகு, ‘‘மடையா... காற்று என்னை எங்கே கொண்டு போகிறதோ அங்கே போகிறேன் என்று அவன் சொன்னால், காற்று இல்லையென்றால் என்ன செய்வாய் என்று நீ கேட்டிருக்க வேண்டாமா?’’ என்று பதில் தயாரித்துக் கொடுத்தார். ‘‘ஆஹா... நாளை கேட்கிறேன்’’ என்றான் மாணவன்.

மறுநாள், ‘‘எங்கே போகிறாய்..?’’ என்று ஆரம்பித்ததும், ‘‘என் கால்கள் என்னை எங்கே கொண்டு போகிறதோ அங்கே போகிறேன்’’ என்றான். பயல் முகம் வாடிவிட்டது. ஆசிரியர் தயாரித்துக் கொடுத்த பதில் பயன்படாமல் போய்விட்டது. மறுபடியும் ஆசிரியரிடம் ஓடினான்.

‘‘மடையா... கால்கள் இல்லையென்றால் எங்கே போவாய்... என்று கேட்கக் கூடாதா?’’ என்று மறுபடியும் தயாரித்தார். ஆனால் மறுநாளோ, ‘‘எங்கே

போகிறாய்?'' என்று கேட்டதும் எதிர்மடாலய மாணவன், ''காய்கறி வாங்க'' என்று எதிர்பாராத பதிலைச் சொல்லி வீழ்த்தினான்.

எதற்கும் தயாராகவே இருக்கும் எதிர்மடாலய மாணவனை அவ்வப்போது தயாரிக்கப்பட்ட மாணவனால் வெல்ல முடியவில்லை. வாழ்க்கை ஒரு வித்தியாசமான பரிட்சை. இங்கே கேள்வி, பதில் இரண்டையும் தயாரித்துத் தந்துவிட முடியாது. எங்கும் எப்போதும் எதற்கும் தயாராய் இருங்கள். வெற்றி நிச்சயம்.

## 15. சாவது பெரிதல்ல... வாழ்வதே பெரிது!

**அ**ண்மையில் எனக்கொரு இன்ப அதிர்ச்சி. என் மதிப்பிற்குரிய தென்கச்சி கோ. சுவாமிநாதன் என் அலுவலகம் வந்திருந்தார். மகிழ்ச்சியில் நிரம்பி வழிந்தேன். சிரிக்கச் சிரிக்கப் பேசி எனக்குச் சிறகு முளைக்க வைத்தார். உரையாடல் பல பக்கம் சுற்றிச் சுற்றித் தமிழக இளைஞர்களைப் பற்றி வந்தது. அவர் சொன்ன செய்தியில் உறைந்து போனேன்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே அதிக தற்கொலைகள் நிகழும் இடம் எது என்று கேட்டவர் - தமிழகம் என்று 'இன்று ஒரு தகவலை' வானொலி இல்லாமலேயே வாயொலி மூலம் வழங்கினார். அரசியல் தலைவர்கள் மரணம், கைது, கொலை, பதவியிழப்பு என்று எது நடந்தாலும் தன்னை மாய்த்துக் கொள்வதில் தமிழகம் தலைமை தாங்குகிறது என்றார். துக்கப்பட வேண்டிய, வெட்கப்பட வேண்டிய விஷயம் இது என்று துடித்துப் போனேன்.

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டபோது தற்கொலை செய்து கொண்டவர்கள் பதினாறு பேர் என்றும் அதில் பதினான்கு பேர் தமிழ்நாடு, ஒருவர் ஒரிசா, மற்றவர் மலேசியா என்றும் சொன்னார். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், ஒரிசாவிலும் மலேசியாவிலும் தற்கொலை செய்து கொண்டவர்கள் அந்தப் பகுதியினர் அல்லர்; அவர்களும் தமிழ்நாட்டிலிருந்து போனவர்கள்... சிறந்த சிந்தனையாளரும் மனோன்மணியம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான டாக்டர் க.ப. அறவாணன் இதுபற்றி மிகுந்த அக்கறையுடன் ஓர் ஆய்வு மேற்கொண்டார் என்றும் புலப்படுத்தினார். அவரது

ஆய்வில் தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் அதிகத் தற்கொலைகள் என்று கண்டறியப்பட்டது.

இன்னொரு செய்தி... தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் தமிழ்நாட்டிலேயே அதிக சினிமாக் கொட்டகைகள் உள்ளன. தென்னார்க்காடு மாவட்டத்தில் தற்கொலை செய்கிறவர்கள் அதிகம், சினிமாக் கொட்டகைகள் அதிகம் என்கிற இரண்டையும் இணைத்து யோசிப்பதா, வேண்டாமா என்பதை உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

கலைஞர் கைதானபோது நிகழ்ந்த தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள் எண்ணிக்கையில் இன்னும் அதிகம். தமிழகத்து அரசியலுக்குச் சம்பந்தமே இல்லாத என்.டி. ராமாராவின் பதவிக் கவிழ்ப்பு நிகழ்ந்தபோது அவரது ஆந்திரத்தில் ஒருவரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் ஒருவர் தற்கொலை செய்துள்ளார். இது அதிர்ச்சியாக இல்லையா? தமிழன் வாழ்ந்து சாதிப்பதைவிடச் சாகத் தயாராக இருப்பது பெருமைப்பட வேண்டிய விஷயமா? அவமானப்பட வேண்டிய விஷயமா? நமது தலைவர்கள் தங்கள் தொண்டர்களைப் போராடி வெற்றி பெறும் வீரர்களாக உருவாக்கி இருக்கிறார்களா? அல்லது சாவதே வீரம் என்று மூளைச் சலவை செய்துவிட்டார்களா? அல்லது வேறு பல காரணங்களால் மரணத்தின் விளிம்பில் நிற்கும் தமிழ் இளைஞன் புகழ் பெறும் ஒரு காரணத்துக்காகக் காத்திருந்து சாகிறானா? யோசியுங்கள்... யோசியுங்கள்.

வேறு சமயத்தைச் சார்ந்த ஒரு சமயச் சொற்பொழிவாளரும் நானும் அடிக்கடிச் சந்தித்து நிறைய கருத்துகள் பரிமாறிக் கொள்வோம். அவர் சொன்ன செய்தி இன்னும் கவனிக்க வேண்டியது. தமது மதம் சொல்லும் கண்டிப்பான ஒழுக்க நெறிகளின்படிச் சரியாக வாழ முன்வாருங்கள் என்று அழைப்பு விடுத்தால் இளைஞர்கள் முன்வர மறுக்கிறார்கள். ஆனால் உணர்ச்சியைத் தூண்டுகிற சமயவாதிகள், 'நமது மதத்துக்காகச் சாக யார் தயார்?' என்று வெறியூட்டினால், பல இளைஞர்கள் நான், நீ என்று முன்வருகிறார்கள் என்று வருத்தப்பட்டார். வாழ்வதற்கு மதமா? சாவதற்கு மதமா என்று யோசியுங்கள்... யோசியுங்கள்.

ஜாதித் தலைவர்கள், சமயவாதிகள், சினிமாக்காரர்கள், அரசியல்வாதிகள் தற்கொலையைத் தூண்டுகிறார்கள். தன்பொருட்டுத் தீக்குளித்தோருக்கு, நாவறுத்தோருக்கு, தற்கொலை செய்ய முயன்றவருக்கு, அவர்களின்

பரம்பரைக்குப் பணம், பதவி, பட்டம் தருவதன் மூலம் தற்கொலை ஊக்குவிப்புத் திட்டத்துக்குத் தலைமை ஏற்கிறோம் என்று உணரமாட்டார்களா? அடுத்த தலைமுறையை அறுத்தெறியும் எந்தத் தலைமையையும் இனி ஆதரிக்கக் கூடாது என்று தீர்மானியுங்கள். நாடு உருப்படும்.

தற்கொலை என்பது வீரமா? கோழைத்தனமா என்ற தத்துவ விவாதம் காலம்காலமாக நடக்கிறது. உளவியல் நிபுணர்கள் மூட்டை மூட்டையாகக் காரணங்களை முன் வைக்கிறார்கள். இவை எதுவும் எனக்குத் தேவையில்லை. நாமாகப் பிறக்கவில்லை; எனவே நாமாகச் சாகக் கூடாது. இதுதான் என் பார்வை. எப்படியும் உயிர் வாழ வேண்டும் என்பதுதான் உயிர்க்குலத்துக்கு முன் உள்ள ஒரே கொள்கை. ஒவ்வொரு பிரச்சினைக்கும் சாவுதான் தீர்வு என்றால், ஒரு நாளைக்குள் எத்தனை முறை சாவது? எத்தனை முறை பிறப்பது?

மரண தண்டனை பெற்றவனுக்குக்கூட முதல் நாள் ஹார்ட் அட்டாக் வந்தால் காப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கே இருக்கிறது. ஒற்றை உயிர் - அதை அர்த்தமற்ற விஷயங்களுக்குத் தமிழ்நாட்டு இளைஞர்கள் அழிப்பது அறிவுடைமையா?

தற்கொலை முடிவுக்கு வருகிறவர்கள் பற்றிய ஆய்வில் தெரிய வந்த அதிர்ச்சியான செய்தி - இவர்கள் அதிகம் திரைப்படம் பார்க்கிறவர்கள். சினிமாவை வாழ்க்கை என்று ஏமாந்த பாவிகள். வாழ்க்கையையும் சினிமா மாதிரியே நடத்துகிறார்கள். தற்கொலைகூட அவர்களைப் பொறுத்தவரை முடிவு அல்ல... ரசிகர்களைக் கலக்கும் ஒரு காட்சி போலவே தோன்றுகிறது. அடப்பாவிகளா... காட்சி முடிந்து ரசிகன் கைதட்டியதும் நடிகன் எழுந்து வருவது போல வர முடியாது என்பது இவர்களுக்குத் தோன்றுவதே இல்லை!

ஒரு வேடிக்கைக் கதை. ஆனால் எவ்வளவு ஆழமானது தெரியுமா? அரசர் ஒரு கைதிக்கு மரண தண்டனை விதித்தார். அவன் மரண தண்டனையை ரத்து செய்யும்படி வேண்டினான். அரசரும் கருணையில், ‘‘நீ ஏதாவது அதிசயம் செய்தால் பிழைக்கலாம்’’ என்றார். ‘‘அரசே! உங்கள் பட்டத்துக் குதிரையை ஆகாசத்தில் பறக்கவைக்க என்னால் முடியும். ஒரு வருடம் அதற்குப் பயிற்சி கொடுக்க அனுமதிக்க வேண்டும்’’ என்றான். மன்னரும் அனுமதித்தார். ஆனந்தமாக உண்டு மகிழ்ந்து பொழுதைக் கழித்தான் அவன். ‘‘ஒரு வருடம்

கழித்து இது நடக்காது. நீ சாவாயே...'' என்று நண்பர்கள் கேட்டபோது, ''ஒரு வருடத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். நான் இயல்பாகவே சாகலாம். தண்டனை கொடுத்த ராஜா மனம் மாறலாம். அல்லது அவரது ஆட்சி மாறலாம். ஏன் அவரேகூடச் சாகலாம்... குதிரைகூடச் சாகலாம். அடுத்த குதிரைக்கு நான் time கேட்கலாம்..!'' என்றபடிக் குதித்துக் கொண்டு ஓடினான் அந்தக் கைதி.

எப்படியாவது மரணத்தை ஒத்திப்போட மருந்தும் மருத்துவரும் போராடுகிறபோது, அர்த்தமற்ற அரசியலுக்கும் மதத்துக்கும் ஜாதிக்கும் தமிழ் இளைஞன் சாகலாமா? தமிழ் இளைஞனே மரணத்தைக் கொல்... சாவைச் சாவடி! வாழப் பழகு. போராடு! போராடு! உயரப் பார்! துயரங்களைத் தூக்கி எறி.

வெற்றியை நோக்கிப் பயணப்படு... வெற்றி நிச்சயம்!

## 16. சாய்வதற்கு ஒரு தோள்... அவசியமா?

**இ**ன்றைக்கு எல்லோருக்கும் உள்ள ஓர் எதிர்பார்ப்பு என்ன தெரியுமா? சாய்ந்துகொள்ள ஒரு தோள்! ஆம்... தன்னைத் தாங்கிப் பிடிக்க ஒருவர் இருந்தால் நல்லது என்றே பலரும் ஆசைப்படுகிறார்கள். இது ஒருவகை மனநோய். மன ஊனம்.

உண்மையில் உடல் ஊனமுற்ற பலர்கூட இந்த எதிர்பார்ப்பிலிருந்து விலகிச் சுயமாக இயங்கவே விரும்புகிறார்கள். ஆனால் கையும் காலும் வலுவாக இருந்தாலும், மனது பலவீனம் அடைந்த சிலர் யாரையாவது சார்ந்து வாழவே விரும்புகிறார்கள்.

இந்தப் பலவீனத்தைத்தான் சிறுசிறு ஜோதிடர்கள், சின்னச் சின்ன சாமியார்கள் வசமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மூளையை அடகு வைத்துவிட்டு முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பிறர் வசம் விட்டவர்கள் வாழ்வில் மிகப் பெரிய நிலையை ஒருபோதும் எய்த முடியாது.

புத்தர், உலகை உலுக்கிய மனிதருள் ஒருவர். அவர் யாரைக் கேட்டுத் துறவு

பூண்டார்? சகல உயிர்களுக்கும் ஆறுதல் அளிக்கும் கருணாமூர்த்தி அவர். ஆனால் அவர் ஆறுதலுக்காகச் சாய்ந்து கொள்ள ஒரு தோள் கேட்கவில்லை.
கோயிலில் உள்ள சாமிகளுக்குப் பேரும் புகழும் எதனால் தெரியுமா? பெருவாரியான மனிதர்களின் புலம்பலை, பிலாக்கணத்தை மறுப்புச் சொல்லாமல் கேட்டுக் கொள்வதுதான். எதிர்த்துப் பேசாமல், எவன் என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டே இருப்பதுதான் கடவுளின் ஸ்பெஷாலிட்டி. அதனால்தான் அவருக்கு இவ்வளவு பாப்புலாரிட்டி. அதாவது பலரது எதிர்பார்ப்பான சாய்ந்து கொள்ள ஒரு தோள் என்கிற ஆசையே கோயில்களின் எண்ணிக்கையைக் கூட்டிவிட்டது.

எப்போதும் சிலர் தங்களின் உறவுக்காரர்களில் ஒரு சிலர் பெயர் சொல்லி, ''அவர் என்னைக் கைதூக்கிவிட்டிருக்கலாம்... ஆனால் மனுஷர்..... செய்யமாட்டார்'' என்று திட்டுவார்கள்.

என் நண்பர் ஒருவர் உண்டு. எப்போதும் யாராவது இன்னொரு நண்பர் பெயர் சொல்லி, ''அவனுக்கு இப்பதான் போனஸ் வந்துருக்கு. எனக்கு ஐயாயிரம்தான் தேவை... கொடுக்கலாம். மனசே கிடையாது'' என்பார். எப்போதும் யாருக்கு என்ன கிடைத்தது என்று கணக்கு வைத்திருப்பார். தான் சம்பாதித்து யாருக்காவது ஏதாவது செய்ய வேண்டும் என்கிற எண்ணமே அவருக்கு வந்ததில்லை. ஆனால் பிறரிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார். இத்தகைய மன ஊனங்கள் மாறவேண்டியவை.

இதற்கு நேர்மாறாக இருந்தவர்கள் உண்டு. மகாகவி பாரதி கடையத்தில் வாழ்ந்தபோது அவர் தங்கியிருந்த வீட்டுக்குடையவர் பத்தாறு வேட்டி அணியக் கொடுத்தார். இடுப்பு வேட்டி -பஞ்சகச்சம் கட்டக்கூடியது பத்து முழம், மேல் துண்டு - அங்கவஸ்திரம் ஆறு முழம். புது வேட்டி, துண்டோடு தெருவில் இறங்கிய பாரதி அங்கே தெருவில் குளிரில் நடுங்கிய ஏழையைப் பார்த்ததும் இடுப்பு வேட்டியைக் கழற்றி ஏழைக்குக் கொடுத்துவிட்டு மேல்துண்டை இடுப்புக்கு அணிந்துகொண்டு வீடு திரும்பினார்.

கொடுக்கும்போது மேல்துண்டைக் கொடுத்தால் போதாதா என்று யாரோ கேட்டதற்கு, ''அதெப்படி... அவன் வெளியே இருக்கிறான், குளிராதோ...

வீட்டுக்கு உள்ளே இருக்கிற எனக்கு இது போதாதா?'' என்றார் வள்ளல் மகாகவி பாரதி.

அவரா ஏழை? கவியரசர் அல்லவா? பிறர் தோளில் சாயும்படி வாழ்க்கை அவரை நிர்பந்தித்தது. ஆனால் பலரையும் தன் தோளில் சாய்ந்து கொள்ளச் சொல்லும் வாக்கை அவர் மனம் பெற்றிருந்தது.

வாழ்வில் புகழ் பெற்ற, மிக்குயர்ந்த பெருமக்கள் வரலாறுகளை ஊன்றிக் கவனியுங்கள். வெற்றியாளர்களின் விசேஷ குணம் இது. தோள் கொடுத்துத் தாங்கத் தயார்; சாயத் தோள் வேண்டியதில்லை என்பதே அவர்கள் அறிவிப்பு. ஏசுபிரான் அப்படித்தானே உலகோரைத் தம் நிழலில் இளைப்பாற அழைப்பு விடுத்தார்.

ஓர் ஏழை இளைஞன் நெடுநாள்கள் ஆசைப்பட்டு விலையுயர்ந்த ஒரு ஜோடிக் காலணிகள் வாங்கியிருந்தான். ஓடும் ரயிலில் அட்டைப் பெட்டியைத் திறந்து அவற்றின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது எதிர்பாராத விதமாக ஜோடியில் ஒன்று ஜன்னல் வழியாகத் தவறி வெளியே விழுந்தது. ஒரு விநாடி அவன் முகத்தில் வருத்தம் தோன்றியது. அடுத்த விநாடியே மற்றொன்றையும் பெருமிதத்துடன் வெளியே வீசினான். உடன் இருந்தவர்கள், ''என்ன தம்பி இப்படிச் செய்துவிட்டீர்கள்?'' என்றனர்.

''ஐயா... காலணியில் ஒன்றை மட்டும் நான் வைத்திருந்தால் எனக்கு எவ்விதப் பயனும் இல்லை. ரயில் தண்டவாளம் அருகே மற்றொன்றை யாராவது கண்டால் அவர்களுக்கும் பயன் இல்லை. மற்றொன்றை வீசிவிட்டால் எடுக்கிறவராவது சந்தோஷப்படட்டும் என்றுதான் வீசினேன்'' என்றான்.

தன் துயரத்தை இறக்கிவைக்கத் தோள் தேடும் பலவீனம் அவனிடம் இல்லை. பிறர் துயரம் தீர்க்கும் பெருந்தன்மைப் பலம் அவனிடம் இருந்தது. அதனால்தான் ஊர் பேர் தெரியாத அந்த இளைஞனைப் பற்றி லட்சக்கணக்கானோர் படிக்கும் இந்தப் பத்திரிகையில் இன்று நான் எழுதுகிறேன்.

எப்போதும் ஏதாவது ஒரு துக்கத்தை, துயரத்தை மூட்டைகட்டி வைத்துக்கொண்டு யாராவது அகப்படமாட்டார்களா, அவர்கள் மேல் இறக்கி வைக்கலாம் என்கிற சுயபச்சாதாப நிலையில் இருந்து வெளியேறுங்கள்.

ஊன்றுகோலுக்கு ஏங்காதீர்கள். உங்களுக்கு ஊனம் இல்லை என்று உணருங்கள். பிறரால் நான் கைதூக்கிவிடப்பட வேண்டியவன் என்ற எண்ணமே ஒரு கெட்ட வார்த்தை. பலரை உயர்த்தும் பலம் நமக்குள் இருக்கிறது என்று தயவுசெய்து உணருங்கள்.

சென்னையில் முன்னொரு முறை ஒரு குப்பத்தில் குடிசைகள் தீப்பற்றிப் பேரழிவு நேர்ந்தது. அப்போது ஒரு பெண்மணி எரிகிற தன் வீட்டிலிருந்து பொருள்களை மீட்காமல் பூட்டியிருந்த அடுத்த வீட்டை உடைத்து நிறைய பொருள்களைக் காப்பாற்றினார்.

''உனக்கென்ன பைத்தியமா?'' என்று கேட்டபோது, ''அவர்கள் வீட்டில் அடுத்த வாரம் திருமணம். அதற்காக நிறைய விலை உயர்ந்த பொருள்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். என் பொருள் போனால் கொஞ்சம்தான் கஷ்டம். ஆனால் அவர்கள் குடிசை எரிந்தால் ஏகப்பட்ட கஷ்டம்... திருமணம்கூட நின்று போகும். அதனால்தான் அவற்றை மீட்டேன்'' என்றார்.

அவரது தீரம் வெற்றிக்கான விதை!
நடமாட முடியாமல் சக்கர நாற்காலியில் நகரும் பெரியவர் ஒருவர் உடல் ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளைக் களைய தமிழ்நாட்டில் ஒரு சங்கம் நடத்துகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? திருமணமே செய்து கொள்ளாத வித்யாகர் ஆதரவற்ற அனைவரையும் ஆதரிக்கும் குடும்பஸ்தனாக 'உதவும் கரங்கள்' நடத்துகிறார் தெரியுமல்லவா?
ஒரு குழந்தைகூடப் பெறாத தெரஸா எல்லோருக்குமே மதர் தெரஸா என்பது ஞாபகம் இருக்கிறதா?

சாய்வதற்குத் தோள் தேடுகிறவர்கள் சாய்ந்தே போகிறார்கள்! இருக்கும்போதே இறந்து விடுகிறார்கள்.

கம்பீரமாக இமயமலை போல் இருப்பவர்கள் காலம் கடந்தும் வாழுகிறார்கள். இமயமலை போல இதய உறுதி கொள்ளுங்கள். சாய்வதற்கு ஒரு தோள் தேடாதீர்கள். வெற்றி நிச்சயம்!

## 17. புறக்கணிப்பைப் புறக்கணியுங்கள்

‘‘**சா**ர்... நான் ஒரு கவிதை எழுதியிருக்கிறேன்...’’ தயக்கம் இழைந்த மகிழ்ச்சியுடன் நோட்டுப் புத்தகத்தில் இருந்து தாறுமாறாகக் கிழிக்கப்பட்ட காகிதத்தைத் தன் ஆசிரியரிடம் நீட்டினான் அந்தச் சிறுவன். கவிதையையே படிக்காமல் காகிதத்தைப் பறித்துக் கசக்கி எறிந்துவிட்டுத் தலையிலே ஒரு குட்டு வைத்தார் ஆசிரியர்.

‘‘நாலு வார்த்தை உருப்படியா எழுத வக்கில்ல... கவிதை எழுதறானாம் கவிதை. உருப்படற வழியப் பார்...’’ என்று எரிந்துவிழுந்தார் ஆசிரியர்(!). அதன் பிறகு வாழ்நாள் முழுவதும் அந்தப் பையன் கவிதை எழுதவே இல்லை.

பல நூறு பள்ளிக்கூடங்கள் மகாகவிகளின் மயானங்கள். சுய சிந்தனையாளர்களின் சுடுகாடுகள். எத்தனையோ எதிர்கால எழுச்சியாளர்களின் எலும்புக் கூடுகள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் புதைக்கப்பட்டுள்ளன.

அதுசரி! அந்தப் பையன் அதன் பிறகு எழுந்து நின்று எதிர்த்து வென்று ஏன் எழுதிக் குவிக்கவில்லை? அவன் சந்தித்த முதல் புறக்கணிப்பு. முதல் புறக்கணிப்பைத் தாங்கி ஜெயிக்க அபாரமான தன்னம்பிக்கை வேண்டும். அது அவனிடம் இல்லை.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு கலைஞன் இருக்கிறான். ஆனால் முதல் புறக்கணிப்பில் அவன் செத்துப் போகிறான். காதலிக்க நினைக்கிறான். அவன் காதலிக்க நினைத்தவள் புறக்கணிக்கிறாள். கரைந்து போகிறான் அல்லது கலைந்து போகிறான். நெருப்பிலிருந்து எழுகிற ஃபீனிக்ஸ் பட்சி மாதிரி மீண்டும் புறப்படத் தெரிவதில்லை.

வேலை தேடும் இளைஞன் எல்.ஐ.சி. ஏஜென்ஸி எடுப்பான். ஆம்வே விற்பனையாளன் ஆவான். மல்டிலெவல் மார்க்கெட்டிங் என்று முதல் நாள் கழுத்தில் டை, கையில் பை என்று காதல் ரோஜா மாதிரிப் புறப்படுவான். ஆனால் வாடிக்கையாளர்களின் அலட்சியம், அவமதிப்பு, அக்கறையின்மை தாக்கியதும் வாடிப் போவான்... வதங்கிச் சாவான். முன்னேறத் துடிக்கும்

எண்ணம் உண்டு. முயற்சியும் உண்டு. என்றாலும் ஆயிரம் பேர் புறப்பட்டால் ஐந்து பேர்தான் வெற்றி பெறுகிறார்கள். ஏன்? ஏன்? எங்கே அவன் தடுத்து நிறுத்தப்பட்டான்? முதல் புறக்கணிப்பு.

நூற்றுக்குத் தொண்ணூறு பேர் முதல் புறக்கணிப்பிலேயே முனை முறிந்து போவார்கள். 'இருவர்' என்ற திரைப்படம் ஒன்று... மணிரத்னம் அவர்களின் மணியான படம். கிட்டத்தட்ட அமரர் எம்.ஜி.ஆர்., டாக்டர் கலைஞர் இருவரையும் மனத்தில் வைத்து எடுத்த படம். வாழ்வின் ஆரம்பக் கட்டங்களில் வாய்ப்புக்காக எம்.ஜி.ஆர். பட்ட அவமானங்கள், வேதனைகள் படம் பிடிக்கப்பட்டுள்ளன. பல நூறு புறக்கணிப்புகளை ஜீரணித்தே எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவராக உருவானார்.

நடிப்புக்கே இலக்கணம் வகுத்த பல்கலைக்கழகம் அமரர் சிவாஜி. ஆனால் கேமரா முன் மேக்கப் டெஸ்ட் எடுத்தபோது பிரபலமான ஒருவர் சொன்ன வார்த்தைஃ ''குதிரை மூஞ்சி மாதிரி இருக்கு... இதுல எப்படி நடிப்பு வரும்?''

சாதாரணமான கணேசன் சாதனையாளர் நடிகர் திலகம் ஆனது எப்படி? திரையுலகம் தந்தது புறக்கணிப்பு. அதை வென்றது சிவாஜியின் அர்ப்பணிப்பு. உங்களுக்கும் இந்த உரம் இருக்கிறதா? உருப்பட முடியும்... உயர முடியும். கலை உலகில் மட்டும்தான் இந்தக் கொடுமை என்பதில்லை. அறிவுலகிலும் இதே கதைதான்.

உலகத்தைப் பற்றிய புதிய உண்மைகளைக் கண்டறிந்தவர் கலிலியோ. கத்தோலிக்கத் திருச்சபை அவரைக் கண்டித்தது... மத விரோதி என்று அறிவித்தது... மன்னிப்புக் கேட்கச் சொன்னது. ஆனால் அப்படி நடந்ததற்காக இப்போதுள்ள போப்பாண்டவர் மன்னிப்புக் கேட்டார். அது மட்டுமா, கலிலியோ பற்றிய திருச்சபை அறிவிப்பைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். இந்தப் பண்புக்காக இப்போதுள்ள போப்பாண்டவரை நிச்சயம் வாழ்த்த வேண்டும். அது வேறு விஷயம்.

கலிலியோவின் கண்டுபிடிப்பு... கண்டது புறக்கணிப்பு... ஆனால் வென்றது அர்ப்பணிப்பு. முதல் புறக்கணிப்பில் முறிந்துவிட வேண்டாம். மூச்சைப் பிடித்துக்கொண்டு மேலே வா. உனக்கொரு உன்னதமான எதிர்காலம்

காத்திருக்கிறது.

இப்போது ஒரு ஆச்சரியமான உண்மை சொல்லுகிறேன். முன்னேற்றப் பாதையில் நூறு பேர் பயணப்பட்டால் முதல் புறக்கணிப்பிலேயே தொண்ணூறு பேர் நின்றுவிடுகிறார்கள். மீதம் பத்துப் பேர்தான் பயணத்தைத் தொடர்கிறார்கள். ஆனால் முதல் புறக்கணிப்பை முறியடித்ததாலேயே தொண்ணூறு சதவீதம் வெற்றி வந்துவிட்டது. மீதம் பத்து சதவீதப் பயணம்தான் பாக்கி இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டவர்கள் வெற்றி பெறுகிறார்கள். இந்த 90 சதவீதம், 10 சதவீதம் என்கிற வெற்றி, தோல்விக் கணக்கை விளங்கிக் கொள்ளுங்கள். பெரிய மனிதர்கள் எல்லோருமே இதைக் கடந்தவர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள்.

திருக்குறளைச் சங்கப் புலவர்கள் புறக்கணித்தார்கள் என்று ஒரு கதை உண்டு தெரியுமா? திருக்குறளையே தமிழ்ப் புலவர்கள் ஏற்க மறுத்தார்கள். உலகின் தலைசிறந்த அறிவாளித் தமிழன் வள்ளுவனே புறக்கணிப்பைக் கண்டவன். வென்றவன். அவனது நூலை மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் விட, சங்கப் பலகை அதனை ஏந்தி வந்து குறள் அருமை கூறியது என்றொரு கதை உண்டு.

திருக்குறள் அருமை தண்ணீருக்குத் தெரிந்தது. தமிழ் படித்தவனுக்குத் தெரியவில்லை! எல்லாக் காலத்திலும் இதேதான் கதை. ஒவ்வொரு திருவள்ளுவனும் முதல் புறக்கணிப்பை வென்றால்தான் முடி சூட முடியும்.

கம்பன் கவிதையை அரங்கேற்ற முடியாதபடித் தில்லை அந்தணர் புறக்கணித்தனர் என்றும் ஒரு கதை உண்டு. எல்லோரும் சேர்ந்திருக்கும் அவையில்தான் கவிதையை அரங்கேற்ற வேண்டும். ஆனால் கம்பன் கவிதைக்காக ஒரு நாளை ஒதுக்கி ஒன்றாகச் சேராது அவர்கள் புலமையைப் புறக்கணித்தனர். ஒரு நாள் தீட்சிதர் மகனை நாகம் தீண்டி இறந்தபோது அந்தணர் அனைவரும் அந்த வீட்டில் சேர்ந்திருந்தனர் என்றும் கம்பன் நாகபாசப் படலம் என்ற பகுதியைப் படிக்க, விஷம் தீண்டிய சிறுவன் விஷம் நீங்கி எழுந்தான் என்றும் வரலாறு உண்டு. புறக்கணிப்பை வென்றே கம்பன் கவிஞன் ஆனான்.

தில்லை அந்தணர்கள் மட்டுமல்ல, திருவரங்கத்து வைணவரும் கம்பனைப்

புறக்கணித்ததற்கு, ‘‘என்னைக் குற்றம் கண்டு என் நாவைப் பழிப்பினும் நல்லோரன்றே மற்றை நாவலரே’’ என்ற சடகோபர் அந்தாதியே சான்று.

இவ்வளவு ஏன்? மகாகவி பாரதியைத் தமிழ் உலகம் முதலில் புறக்கணித்தது. தமிழ் உலகம் தலை வணங்கி ஏற்ற பின்னும்கூடத் திராவிட இயக்கங்கள் புறக்கணித்தன. ஆனால் பின்னாளில் மகாகவியை மறுதலித்தமை நிகழ்ந்திருக்கக் கூடாத ஒன்று... தாங்கள் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் பேசிய பேச்சுகளைப் பாரதி விழாக்களில் நான் கேட்டிருக்கிறேன். அவர் கைப்பட எழுதிய எழுத்தைப் பாரதி நினைவு இல்லத்திலும் பார்த்திருக்கிறேன். புறக்கணிப்பைப் புறக்கணித்தே பாரதி ஜெயித்தார்.

புறக்கணிப்பைப் புறக்கணியுங்கள்... முதல் புறக்கணிப்பின் முதுகெலும்பை முறியுங்கள். வெற்றி நிச்சயம் !

## 18. நிஜத்தை நேசி....பொய்யைப் புதை!

பிறர் தன்னைப் புகழ வேண்டுமென்ற எதிர்பார்ப்பு தவறே அல்ல. ஆனால் வலுக்கட்டாயமாகப் புகழ வைப்பது ஓர் ஆக்கிரமிப்பு. புகழ் இருப்பதுபோலத் தோற்றம் ஏற்படுத்துவது அக்கிரமம். அது உண்மையான வெற்றியாகாது. இன்று வெற்றி பெறாமலேயே தங்களை வெற்றியாளர்களாகக் காட்டிக் கொள்ளப் பலர் விரும்புகிறார்கள். நட்பே! உனக்கு அப்படி ஓர் எண்ணம் வேண்டாம்.

நிஜமான புகழ், துணையோடு துய்த்த தூய கலவி. செயற்கைப் புகழ், வள்ளுவர் உவமை சொன்னது போல, பிணத்துடன் நடத்திய உடலுறவு. அசிங்கம். அருவருப்பு. பலர் கூச்சமில்லாமல் பாராட்டுக்கும் புகழுக்கும் ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். மாலைகள் சூட மலர் பறித்துத் தருகிறார்கள். சுவரொட்டி ஒட்டக் கூழ் காய்ச்சுகிறார்கள். ஒரு விஷயம். புகழுக்கான தகுதி தனக்கு உள்ளது எனப் புரிந்து வைத்திருப்பது தலைமைப்பண்பு. ஆனால் புகழைப் பிறரிடமிருந்து ஜப்தி செய்வது அநாவசியம்.

விளக்குகிறேன்.

பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தமது உரைகளை உதவியாளருக்கு டிக்டேட் செய்கையில் சில இடங்களில் ‘கைத் தட்டல்’ என்று குறிக்கச் சொல்லுவார். தன் வெற்றியைப் பற்றிய தீர்க்கமான தீர்மானம் அது. கைத்தட்டல் என்று குறித்துக் கொள்ளும்போது ஆரம்பத்தில் அவரது உதவியாளர் திகைப்படைந்தார். ஆனால் சர்ச்சிலின் கணிப்பு ஒருபோதும் பொய்யாவதில்லை என்பதைக் கண்டு பின்னர் அவர் வியப்படைந்தார். புகழத் தக்கவன் என்ற இந்தக் கணிப்பு தவறில்லை. ஆனால் கைத்தட்ட வேண்டிய இடத்தில் கைத்தட்ட ஆள் செட்அப் செய்திருந்தால் அசிங்கம்...அநாகரீகம். அப்படி ஜெயிக்காதீர்கள்.

தகுதி இருந்தும் செயற்கைப் புகழ் தேடுவது தவறு. தகுதியே இல்லாமல் வெற்றியாளனைப் போல் காட்டிக் கொள்வது தவறல்ல. போக்கிரித்தனம். அது ஆபத்தான அணுகுமுறையும் கூட.

புதுப் பணக்காரர்கள் நாலு காசுகளை வீசி எறிந்தால் புகழ்ந்து தள்ளத் தமிழ்ப்பேச்சாளர்கள் சிலர் தலையைச் சொறிந்துகொண்டு முன் வருகிறார்கள். இது கறுப்புப் புகழ். கள்ளத் தொடர்பு. கண்டிக்கத் தக்கது.

மீண்டும் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். பாராட்டுக்கும் புகழுக்கும் தான் தகுதி உடையவன் என்ற தெளிவு, உங்களை உயர்த்தும். ஆனால் அதற்கான ஏற்பாடு உங்களைத் தாழ்த்தும். புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் மார்க் ட்வெயின் வாழ்க்கையில் அப்படி ஒரு சுவையான நிகழ்ச்சி.

அவருக்குப் பிரெஞ்சு தெரியாது. அந்தக் காலத்தில் பிரெஞ்சு என்பது ஒவ்வொரு ஆங்கிலக் கலைஞனுக்கும் சின்ன வீடு மாதிரி.

மார்க் ட்வெயினின் எழுத்துகளைப் பாராட்டி பாரீசில் ஒரு மிகப்பெரிய விழா நடந்தது. விழா நடந்த அதே பல்கலைக் கழகத்தில்தான் மார்க் ட்வெயினின் மகன் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பிரெஞ்சு மொழி நன்கு தெரியும்.

மகனை அழைத்து ‘‘எனக்குப் பிரெஞ்சு தெரியாது. பிரான்ஸ் மக்கள் மொழிப்பற்று மிக்கவர்கள். எனவே பேசுகிற எல்லோரும் பிரெஞ்சில்தான் பேசுவார்கள். நான் ஒரு முட்டாளைப் போல அங்கே இருக்க வேண்டியிருக்கும். ஆனால் எனக்குப் பிரெஞ்சு தெரியாது என்பது

அவர்களுக்குத் தெரியக்கூடாது. எனவே நீ என் பக்கத்திலேயே இரு. எனக்குச் சைகை காட்டு. நீ சிரித்தால் நானும் சிரிப்பேன். முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டால் நானும் அப்படியே. சமாளித்துவிடலாம்.''என்றார் மார்க் ட்வெயின்.

ஆனால் விழா நடந்தபோது தர்மசங்கடம் ஒன்று நேர்ந்துவிட்டது. விழாவில் பேசியவர் மார்க் ட்வெயினை ஓஹோ என்று புகழ்ந்தபோது சபையே கைத் தட்டியது. மகனும் கைத்தட்டினான். அவனைப் பார்த்த மார்க் ட்வெயின் தன்னைப் புகழுகிறார்கள் என்று தெரியாமலேயே கை தட்டினார். சபை இதைப் பார்த்து சிரித்தது. இந்தச் சங்கடம் அடிக்கடி அரங்கேறியது. மகன் நெளிய ஆரம்பித்தான். பலர் இந்தக் கூத்தைப் பார்த்துச் சிரிக்கும்போது மகனாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. மகன் சிரிக்கும்போதெல்லாம் ஒப்பந்தப்படியே மார்க் ட்வெயினும் சிரித்தார். மக்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். மகனுக்கு அவமானத்தால் வியர்த்துக் கொட்டியது.

அறைக்குள் திரும்பியதும் தந்தையிடம் கோபமாக ''என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? உங்களை 'ஆஹா, ஓஹோ' என்று புகழும்போது நான் கைத்தட்டாமல் இருக்க முடியுமா? நீங்கள் கைத் தட்டினால் அசிங்கம் இல்லையா? உங்களைப் பெரிய மகான் என்று ஒருவர் பாராட்டினார். நீங்கள் கையை உயர்த்திப் பிரமாதமாகக் கைத்தட்டுகிறீர்கள். என் சக மாணவர்கள் என்னை எப்படிக் கேலியாகப் பார்த்தார்கள் தெரியுமா? என்று சீறினான் மகன். அமைதியாக மார்க் ட்வெயின் சொன்னார். ''வருத்தப்படாதே...என் வாழ்க்கையில் இப்போதுதான் முதல் முதலாக நான் உண்மையாக நடந்திருக்கிறேன். நான் செய்ய விரும்பியதை இன்றுதான் செய்திருக்கிறேன். மேடைகளில் என்னைப் புகழும்போது பிறர் கைத் தட்டுகையில் நானும் கைத்தட்ட விரும்பியதுண்டு. ஆனால் மொழி புரிந்ததால் தட்டியதே இல்லை. முதல் முதலாக மொழி புரியாததால் தவறாக ஓர் உண்மை அரங்கேறிவிட்டது'' என்றார்.

ஓர் முக்கியமான உண்மை -தான் புகழத்தக்கவன் என்கிற தீர்மானம் பிறர் புகழும்போது ஏற்படவில்லை. எழுதும்போதே தனக்கு ஏற்பட்டது என்று புகழின் நுட்பமான ரகசியத்தை மார்க்ட்வெயின் புரியவைத்தார்.

அண்மையில் ஒரு கொடிய நிகழ்ச்சி. அண்மையில் என்னிடம் ஒருவர் தமது புத்தகத்தைப் பாராட்டி முன்னுரை தரும்படிக் கேட்டுக் கொண்டார். நான்

விரும்பிய புத்தகங்களைப் படிக்கவே எனக்கு நேரம் கிடைக்காதபோது இதைப் படிக்கும் சுமை என் மீது திணிக்கப்பட்டது. எனக்கு விருப்பம் இல்லை. எனக்கு நேரம் இல்லை என மறுத்தேன். அவரோ ''படிக்கவே வேண்டாம்...சும்மா பாராட்டி ஒரு முன்னுரை கொடுங்களேன்'' என்றார். அநியாயமில்லாயா இது.

நாதஸ்வர மேதை திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை அவர்களைப் பற்றி ஒரு செய்தி உண்டு. அவருக்கு ஜனாதிபதி விருது கிடைத்தபோது அவரை ஒரு நிருபர் பேட்டி கண்டார். ''நீங்கள் பெற்ற பாராட்டுகளிலேயே உயர்வானது இதுதானே'' என்றார். கொஞ்சம் யோசித்துவிட்டு ராஜரத்தினம் பிள்ளை சொன்னாராம். ''ஒரு கல்யாணத்திலே நான் நாகசுரம் வாசித்தபோது நரிக்குறவர் ஒருவர் வெளிச்சத்துக்கு கியாஸ் லைட் தாங்கிக் கொண்டு வந்தார். தோடி ராகம் வாசிக்கும்போது நான் ஒரு பிருகா அடிச்சேன். சந்தோஷத்தில் அந்த மனுஷர் கியாஸ்லைட்டைத் தூக்கிப் போட்டுப் பிடிச்சு 'ஆஹா' அப்படீன்னார். அதுதான் எனக்குக் கிடைச்ச பாராட்டுகளிலேயே உசத்தி'' என்றார். ''இந்த ஜனாதிபதி விருது'' என்று நிருபர் இழுத்தவுடன்...''ஜனாதிபதி என்ன என் வாசிப்பைக் கேட்டுட்டா கொடுத்தார். எவனோ கொடுக்கச் சொன்னான்...எடுத்துக் கொடுத்தார். அவ்வளவுதான்'' என்று ஒரு போடுபோட்டார்.

நிஜமான புகழ்...நிஜமான புகழ்...வெற்றியின் வேர். பொய்யான புகழ்...பொய்யான புகழ்....தோல்வியின் தாய். புரிந்தவருக்கு வெற்றி நிச்சயம்.

## 19. வைராக்கியம் இருக்கிறதா? வெற்றி நிச்சயம்!

**வெ**ற்றி நிச்சயம். யாருக்கு? திறமை, உழைப்பு, வைராக்கியம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, பொறுமை, தலைமைப் பண்புகள் இவை யாவும் உடையவருக்கு வெற்றி நிச்சயம். கடந்த ஐம்பது அத்தியாயங்களில் இதைத்தான் விதவிதமான வார்த்தைகளில், வெவ்வேறு மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து, வேறு வேறு வகையில் சொல்லிக் கொண்டிருந்தேன். எல்லோரும் திறமை உடையவர்கள். ஆனால் ஒரே விஷயத்தில் அல்ல... வெவ்வேறு விஷயங்களில்.

எல்லோரும் எல்லா விஷயங்களிலும் சமமான திறமை உடையவர்கள் என்பது காதில் பூ சுற்றுகிற வேலை. ஆனால் ஒவ்வொரு விஷயத்தில் ஒவ்வொருவர் திறமைசாலியாக இருப்போம். இது சரியான அணுகுமுறை. எனவே தமது திறமையை அடையாளம் கண்டவர்கள், திறமையை வளர்க்க வேண்டிய வழிமுறை கண்டவர்கள், வெற்றிக்கான சங்கல்பம் செய்தவர்கள் வெற்றியின் முதல் படி ஏறுகிறார்கள். கடும் உழைப்புதான் வெற்றியின் இரண்டாம் படி. குறிக்கோளை நிறைவேற்ற உழைக்காமல் முடியாது நட்பே.

நன்கு புரிந்துகொள். விளையாட்டிலும் சரி, படிப்பிலும் சரி, தொழிலிலும் சரி வெற்றி பெற்றவர்கள் ஒரு நொடியில் மேலே வரவில்லை. நெடுங்காலக் கடின உழைப்பே அவர்கள் வெற்றி ரகசியம். இதை அதிர்ஷ்டம் என்று சில தோல்வியாளர்கள் சொல்லுவார்கள். தவறு.

இப்போதெல்லாம் திருப்பதி போய் வருவது மிகச் சுலபம். மக்கள் நடமாட்டம் இல்லாத மலைக்காடாக இருந்தபோது அனந்தவாழ்வான் என்ற பக்தன் திருமலையில் பெருமாள் புஷ்ப கைங்கர்யத்திற்குத் திருமலையில் தோட்டம் போட்டார். தண்ணீருக்காகக் குளம் வெட்டினார். மண்ணைத் தோண்டுவது அவர் வேலை. மண்ணை அள்ளிக் கொண்டுபோய்க் கொட்டுவது அவர் மனைவி வேலை. அவர் மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. ஆனாலும் உழைத்தார். இந்த வைராக்கியத் திடம், திண்மை இருந்தால்... நட்பே... வெற்றி நிச்சயம்.

ஐயோ, இது பழங்கதை என்கிறீர்களா? அக்டோபர் 14, 2002 சென்னை ‘தினமணி’ படித்தீர்களா? ஒரிஸாவில் குண்டுபரசி என்கிற கிராமத்தில் தண்ணீர்ப் பஞ்சம். குடிக்கக்கூட நீரின்றி நெடுந்தொலைவு போய்த் தண்ணீர் கொண்டுவர வேண்டும் என்கிறபோது விவசாயம் எப்படிச் சாத்தியம்? ஆனால் துர்வாலநாயக் என்ற ஏழை - ஒற்றை மனிதர் குளம் வெட்டி மழைநீரைச் சேமிக்கச் சொல்லி மக்களிடம் மன்றாடினார். பயன் இல்லை. இருபத்தைந்து ஆண்டுகளாக அந்த ஒற்றை மனிதர் தனியே மண் வெட்டி, தானே அதைக் கொட்டி இறுதியில் ஒரு குளம் வெட்டிவிட்டார். மழைநீர் நிரம்பியதால் ஆண்டு முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் அங்கே இல்லை.

உச்சகட்டச் செய்தி இனிமேல்தான் சொல்லப் போகிறேன். அந்த நண்பருக்குப் பார்வை கிடையாது. நட்பே... உனக்கு இந்த வைராக்கியம் இருக்கிறதா..?

உனக்கு வெற்றி நிச்சயம். விடாமுயற்சி... வெற்றியின் அடுத்த படி. இந்தியாவின் பட்ஜெட்டைவிடப் பன்மடங்கு பெரிய பட்ஜெட் போடும் அமெரிக்கத் தனியார் நிறுவனம் ஃபோர்டு நிறுவனம். ஆனால் ஹென்றி ஃபோர்டை அதிர்ஷ்டம் மேலேற்றவில்லை. காரணம், அவர் ஐந்து முறை திவாலானவர்.

அவர் சொன்ன தாரக மந்திரம் என்ன தெரியுமா?

''வெற்றியில் இருந்து கற்றுக்கொள்வதைவிடத் தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.''

நட்பே... நீ தோல்வியில் இருந்து என்ன கற்றுக்கொண்டாய்? இப்போதுள்ள வி.ஜி.பி. கோல்டன் பீச், எம்.ஜி.எம்., கிஷ்கிந்தா, பிளாக் தண்டர் இவற்றுக்கெல்லாம் பாட்டி வீடு அமெரிக்காவில் உள்ள டிஸ்னிலேண்ட். ஆனால் அதை உருவாக்கும் முயற்சியில் வால்ட் டிஸ்னி சொத்து சுகம் இழந்து பல முறை தெருவுக்கு வந்தார், தெரியுமா?

நட்பே... உன் மேல்துணிகூட அழுக்கடையாமல் மேலே வர நீ நினைக்கலாமா? உலகப் புகழ்பெற்ற ஹோண்டா நிறுவனத்தின் நிறுவனர் ஆரம்பத்தில் டயோட்டா கார்பரேஷனுக்குச் சிறிய பொருள்கள் வழங்கும் சிறு வணிகர். அவரது வித்தியாச வித்தியாசமான யோசனைகளுக்காகப் பலராலும் கேலி செய்யப்பட்டுப் பழிக்கப்பட்டவர். அவர் உருவாக்கிய தொழிற்சாலை இயற்கைச் சீற்றங்களால் பலமுறை சிதைக்கப்பட்டது; சின்னாபின்னமாக்கப்பட்டது. அவரது விடாமுயற்சியால் மீண்டும் மீண்டும் அது படைக்கப்பட்டது. இந்தத் தோல்வியைத் தின்னும் வெற்றிப் பசி உனக்கு இருக்கிறதா...

நட்பே... உண்மையைச் சொல். உன்னால் எத்தனை எத்தனைத் தோல்விகளைத் தின்ன முடிந்தது? வெளியூர் விஷயங்களை விடு. 90 -களில் முடிந்த கதை என்று சொல்லப்பட்ட டி.வி.எஸ். மோட்டார் கம்பெனியை இன்று ஆயிரம் கோடிக்கு மேல் வரவு - செலவுடைய நிறுவனமாக்கி ஜெயித்த கதை எழுதும் வேணு சீனிவாசனை உனக்குத் தெரியுமா?

நட்பே... உனக்குத் தெரியும் என்றால் இந்த நாடு உருப்படும். உனக்கும் வெற்றி நிச்சயம். விடாமுயற்சிக்கு அடுத்த வெற்றிப் படி தன்னம்பிக்கை. 'கடவுள்' என்ற வார்த்தைக்கு அடுத்தபடியாகத் தப்புத்தப்பாக எல்லோராலும்

அர்த்தம் செய்யப்பட்ட அடுத்த வார்த்தை தன்னம்பிக்கை. திறமை உள்ளவர்கள் தன் திறமை மீது வைக்கும் நம்பிக்கைதான் தன்னம்பிக்கை. ஆனால் திறமையே இல்லாமல் தன் மீது நம்பிக்கை வைத்தால் அது அசட்டுத்தனம்.

35 ஆண்டுகளுக்குப் பிறகு என் பள்ளித் தோழர் ஒருவரை அண்மையில் சந்தித்தேன். எவ்வளவு காலமானாலும் வளர்வதில்லை என்ற பிடிவாதம் அவருக்கு. பள்ளிக் காலத்தில் பார்த்த அதே அசட்டுக் காமெடித்தனம். முட்டாள்தனமான பேச்சு. ஆனால் தன்னைப் பற்றி அப்படி ஒரு உயர்ந்த அபிப்ராயம். இந்தக் குழப்பமற்ற தெளிவு உனக்கு உண்டா?

நட்பே இன்னும் ஒன்று. தன்னம்பிக்கை வேறு... தலைக்கனம் வேறு. பாண்ட்ஸ் டப்பாவில் சுண்ணாம்புத் தூளை அடைத்து விற்கும் பிளாட்பார வியாபாரி போலத் தன்னம்பிக்கை Brand -ல் தலைக்கனத்தை விற்பவர்கள் உண்டு. இதற்கு நேர்மாறான இன்னொரு கோணம். தன்னம்பிக்கையைத் தகர்த்து எறிய அதைத் தலைக்கனம் என்று முத்திரை குத்துவார்கள். கலங்காதே... கலையாதே... கம்பீரமாக நில். குமரிக் கரையில் திருவள்ளுவர் நிற்பது போல் உயர்ந்து நில்.

அவர்களது விமர்சனம் எப்படிப்பட்டது தெரியுமா? கட்டிளங்காளை, கன்னியை மணந்து அழகான பிள்ளை பெற்றுத் தோளில் சுமந்து போவதைப் பார்த்து, ‘‘காமுகன் கன்னியைக் கற்பழித்து... ஒரு பாவத்தைச் சுமந்து போகிறான்’’ என்று பேடிகள் பேசுவது போல... அந்த ஆண்மையற்றவர்களை அலட்சியம் செய்தால் அது தலைக்கனம் அல்ல, நட்பே... அது தன்னம்பிக்கை. இந்தத் தன்னம்பிக்கையோடு பொறுமை, தலைமைப் பண்புகள்... இப்படிப் படிப்படியாக நடந்தால் வெற்றி நிச்சயம்,

நட்பே... வெற்றி நிச்சயம். பணம் சம்பாதிப்பது மட்டும் வெற்றி பெறுதல் என்று நினைத்துவிட வேண்டாம். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவன்கூடக் காசு வைத்திருக்கிறான். வேசிகள்கூட ஏ.சி.யில் இருக்கிறார்கள். பணத்துக்கு அப்பாலும் வெற்றி கணக்கிடப்படும். நேர்மை, சுயமரியாதை, கௌரவம் இவையெல்லாம்கூட வெற்றி - தோல்வியின் நிர்ணயப் புள்ளிகள். அதற்காக நேர்மையாக இருக்கிறவன் ஏழ்மையில் இருக்க வேண்டும் என்கிற அர்த்தமற்ற வெற்றி ஒரு வெற்றியே அல்ல. பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப் பின் அவர் மனைவி ரேஷன் கடையில் இரண்டு பைகளில்

கோதுமை வாங்கிக்கொண்டு தூக்க முடியாமல், நடக்க முடியாமல் சிரமப்பட்டார்... ‘‘ஆஹா என்ன நேர்மை!’’ என்று செய்தி படித்தபோது நான் மகிழவில்லை.

ஒரு நேர்மையான மனிதனுக்கு எவ்வளவு கீழான இடத்தை இந்த இந்தியச் சமூகம் கொடுக்கிறது என்று சமூகத்தின் மீது எனக்குக் கோபம் வருகிறது. உங்கள் யாருக்கும் அப்படிக் கோபம் வரவில்லையா? ஏழ்மையிலும் நேர்மை என்பது பாராட்டுக்குரியது. ஆனால் நேர்மைக்குப் பரிசே ஏழ்மை என்றால் சமூகம் தவறான பாதையில் போகிறது என்று பொருள். அதை நாம் மாற்றியே தீரவேண்டும். திறமை, சீர்மை, நேர்மை இவை மட்டும் இன்றிச் செல்வம், சிறப்பு, புகழ் இவையும் சேர்த்துப் பெறுவதே சரியான வெற்றி.

இது என் பார்வை. வெற்றி என்பது எப்போதும் subjective. அது சுயம் சார்ந்தது. பிறரால் தீர்மானிக்கப்படுவது அல்ல. வெற்றிப் படிகளை விவரித்தேன். கற்றுக் கொள்வதும் கால் வைப்பதும் இனி உங்கள் விருப்பம். விரிவாகச் சொன்னதைச் சுருக்கமாகச் சொல் என்கிறீர்களா? சொல்கிறேன்.

திருக்குறளில் ஊக்கம் உடைமை, மடிஇன்மை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை, வினைத்திட்பம் இந்த அதிகாரங்களைத் தமிழன் சரியாக விளங்கிக் கொண்டிருந்தால் உலகத்தின் அதிகாரம் இந்நேரம் தமிழன் கையில் இருந்திருக்கும். ஆனால் தமிழ் மட்டுமே படித்தவர்கள் திருவள்ளுவரைப் புலவராகவே காட்டிக் குறள் படித்தவனைக் கையாலாகாதவன் ஆக்கிவிட்டார்கள். தமிழையும் படித்த நான் அவரைத் தலைவராகக் காட்டுகிறேன். புலவராவதைவிடத் தலைவராவதே தமிழன் முன்னுள்ள தலையாய பணி.

திருவள்ளுவரைப் புரிந்துகொண்டால் நட்பே நீயும் தலைவராகலாம். எல்லா வகையிலும் உன்னைத் தகுதிப் படுத்து... ஈடுபடு... போராடு... வெற்றி கொள். புகழோ, இகழோ இறைவனிடம் ஒப்படைத்துவிட்டுப் புன்னகையோடு புறப்படு. வெற்றி நிச்சயம்.

இந்தத் தொடர் முடிவடைவதாக நான் கருதவில்லை. காரணம், ஆரம்பம், முடிவு என்றெல்லாம் உண்மையில் எதுவும் இல்லை. எல்லாம் சுழற்சியே... இயக்கமே. கடல் ஆவியாவதும் மேகமாவதும் மழையாவதும் நதியாவதும் மீண்டும் கடல் ஆவதும் எப்படி நிற்பதில்லையோ அப்படியே கருத்துகள்

கட்டுரைகள் ஆவதும் கதையாவதும் காகிதமாவதும் மீண்டும் கருத்துகள் ஆவதும் நிற்பதே இல்லை. மீண்டும் எங்கெங்கோ, எப்படி எப்படியோ, யார் யாராகவோ சந்திக்கப் போகிறோம்.

வணக்கம். வாழ்த்துகள். வெற்றி நிச்சயம்!

## 20. சின்ன தொடக்கம் பெரிய சாதனை!

பெரிய பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்று பெரிய பெரிய கனவு காண்கிற சிலர் எதையுமே தொடங்கமாட்டார்கள். ‘ஏன்?’ என்று கேட்டால், ‘எல்லாம் ஒரே நேரத்தில் கூடிவர வேண்டும். சின்ன அளவில் எதையும் நான் செய்ய முடியாது... ஆரம்பமே பிரமாண்டமாக இருக்க வேண்டும்’ என்று கதை அளப்பார்கள்.

பிரமாண்டமான ஆலமரம் எதுவுமே பிரமாண்டமாகவே தோன்றியதில்லை. மீன் முட்டை போன்ற விதையும், விதையில் விழித்த தாவரக் கோடும்தான் தழைத்துப் பருத்துப் பெருத்துப் பிரமாண்டம் என்கிற நிலையை எட்டியது. தாய் வயிற்றில் விழுந்த ஒற்றைப் புள்ளிதான் பிள்ளையாய் விளைந்தது. தரையில் விழுந்து, வாலிபமாய் வளர்ந்தது. பெரிய பிள்ளைகளாய் யாரும் பிறப்பதே இல்லை.

ஆடு தாண்டும் அகலத்தில் பிறந்த சின்னக் காவிரிதான் ஆனை தாண்ட முடியாத அகண்ட காவிரியாக அகலப்பட்டது. பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் சின்னச் சின்னத் தொடக்கங்களால்தான் ஏற்பட்டன என்பதைப் புரிந்துகொண்டு தொடங்குங்கள்... வளருங்கள்... பெரிதாகவே பிறக்க வேண்டும் என்ற பேதைத்தனமான பிடிவாதத்தை விடுங்கள்.

உடுத்து மாற்றத் துணி இல்லாமல் உட்கார்ந்திருந்த ஐந்து சன்னியாசிகளின் சங்கல்பம்தான் இன்று உலகெங்கும் விரிந்து கிடக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் தெரியுமா? தட்சிணேஸ்வரத்தில் கங்கைக் கரையோரத்தில் மிகச் சின்ன அளவில் தொடங்கப்பட்டதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம். இன்று அப்படியா? ராமகிருஷ்ணர் மீது வைத்த திடமான பக்தியும் விவேகானந்தர் பலமும் சேர்ந்து

கோடி கோடிப் பக்தர்களையும் கோடி கோடிச் சொத்துகளையும் உடைய அறநிறுவனம் ஆகிவிட்டது அது!

ஐயா... அது பழங்கதை என்றால், புதுக்கதை சொல்லுகிறேன். சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் சோத்துப்பாக்கம் தாண்டியதும் ஒரு தகரக் கொட்டகை இருந்தது. ஒரு புற்று மண்டபம் இருந்தது. நாலைந்து பேர் உட்கார்ந்து ஏதோ குறி கேட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று அந்த இடம் அப்படியா இருக்கிறது? மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மிகப் பெரிய தூய மருத்துவமனை, மாபெரும் பல்கலைக்கழகத்துக்கான ஏற்பாடு... சிறிய விமான நிலையத்துக்கான எதிர்பார்ப்பு என்று விரிந்துகொண்டே போகிறது மேல்மருவத்தூர்.

தகரக் கொட்டகையும் புற்று மண்டபமும் விதை. விமான நிலையமும் பல்கலைக் கழகமும் விருட்சம்! சின்னச் சின்ன விதைகளிலிருந்து பெரிய பெரிய விருட்சங்கள். பெரிய பெரிய பள்ளிக்கூடங்கள், பல்கலைக் கழகங்கள் நாலைந்து மாணவர்களுடன், ஒற்றை ஆசிரியருடன், கூரைக் கொட்டகைகளில் உண்டாயின என்ற செய்தி நம்ப முடிகிறதா?

இப்போது பல்வேறு தொழில்களில் பாதம் பதித்துப் பல கோடி மூலதனங்கள் என்று பட்டியல் இடுகிற ஸ்ரீராம் சீட்டு நிறுவனம் தொடக்கத்தில் இருபது வாடிக்கையாளர்களுடன் சில ஆயிரம் மூலதனத்தில் தொடங்கப்பட்டது என்கிறார்கள்...

ஆச்சரியமாக இல்லையா? தாஜ்மஹால் ஒரே நாளில் கட்டப்பட்டதா? தஞ்சைப் பெரிய கோயில் ஒரே நாளில் உருவாக்கப்பட்டதா? கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எல்லாப் பெரிய விஷயங்களும் உருவாகின்றன. அடி அடியாகத்தான் கவிதைகள் பிறக்கின்றன. வரி வரியாகத்தான் கட்டுரைகள் பிறக்கின்றன.

மந்திரத்தில் மாங்காய் மாதிரி எந்தக் காப்பியமும் கண நேரத்தில் பிறந்ததில்லை. ‘உலகெல்லாம்’ என்ற ஒற்றை வரியிலிருந்துதான் ‘பெரிய புராணம்’ பிறந்தது. எனவே பெரிய பெரிய முடிவுகளை எதிர்பார்த்திருந்தாலும் சின்னச் சின்னத் தொடக்கங்கள்தான் அவற்றின் ஆரம்பம் என்று அறிந்து கொள்ளுங்கள். ஆரம்பியுங்கள். ஒரே நாளில் எவனையும் தலைவனாக உலகம் உருவாக்குவதில்லை.

ஏதோ பெரிதாகச் சாதிக்கப் போகிறேன் என்று பிறரையும் ஏமாற்றித் தன்னையும் ஏமாற்றும் கோமாளித்தனம் வேண்டாம். ஒரு கோடி ரூபாய் லாட்டரியில் தனக்கே விழும்; அதன் பிறகு உலகமே தன்னை மதிக்கும் என்று ஒருவர் பெருமையடித்துக் கொண்டார். அது சரி... ஆனால் ஒரு ரூபாய் கொடுத்து ஒரு டிக்கெட் வாங்கும் வேலையைக்கூட அவர் செய்யவே இல்லை! எதையுமே தொடங்காமல் ஏதாவது பெறுவது எப்படிச் சாத்தியம்?

உங்கள் ஊர் உருப்பட வேண்டுமா? நாலைந்து பேர் இதுபற்றிப் பேசிப் பேசி மாய்ந்து போகிறீர்களா? நாம் என்ன செய்ய முடியும் என்று அங்கலாய்த்துக் கொள்ளுகிறீர்களா? இந்தப் பெட்டைப் புலம்பலை (பாரதி பாஷையில்) உடனே நிறுத்துங்கள். உங்கள் ஊரை மாற்றியமைக்க நீங்கள் நாலைந்து பேர் போதும். கட்சி, சாதி, மதம் கடந்து நீங்கள் சின்ன அளவில் ஒன்று சேர்ந்தால், ஒரு சங்கம் அமைத்தால் நாளை இந்த நாடே மாறும். உருப்படியாக ஏதாவது செய்யுங்கள். நல்லதைத் தொடங்குங்கள். வெற்றி நிச்சயம்.

ஏமாளித்தனமாக எவனுக்காவது ரசிகனாகி எடுபிடியாகச் செத்துத் தொலைக்க வேண்டாம். அது தற்கொலைக்குச் சமம். நீங்கள் உயர, உங்களைச் சுற்றி உள்ள சமூகம் உயர ஏதாவது செய்யுங்கள். 'நாளைக்கு அதைச் செய்யப் போகிறேன், இதைச் செய்யப் போகிறேன்' என்று ஜம்பம் பேசாமல் இன்றைக்கே எது முடியுமோ அதைத் தொடங்குங்கள்.

பெரிய பெரிய கட்சிகள்கூடச் சின்னச் சின்ன அறைகளில்தான் தொடங்கப்பட்டன. பெரிய பெரிய புரட்சிகள்கூடச் சின்னச் சின்னச் சண்டைகளில் இருந்தே பிறந்தன. ஏழே ஸ்வரங்களில் இருந்துதான் எல்லா ராகங்களும் ஜனித்தன.

இன்றைய இசை மேதைகளின் புகழ், பணம், கார், பங்களா, விருதுகள் எல்லாமே ஏழு ஸ்வரங்களைப் பிடித்ததால் - சரியாகப் பிடித்ததால் - கிடைத்தவை. மறக்க வேண்டாம். சின்னச் சின்னக் கூட்டங்களில் பத்துப் பேருக்கும் பதினைந்து பேருக்கும் பேசிய கிருபானந்தவாரிதான் பிற்காலத்தில் வாரியார் சுவாமிகள் ஆனார். பத்தாயிரம் பேர் மத்தியில் சிரமம் இல்லாமல் பேசும் வாய்ப்புப் பெற்றார்.

படித்தவர் பலர் இருக்கும் சபைகளில்கூட 'தேசிய கீதம்'... என்று அறிவித்ததும் ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள். தேசிய கீதமா, தெரியாது! யார்

தொடங்குவது என்பதுதான் பிரச்சினை. தேசிய கீதத்துக்கே 'ஸ்டார்ட்டிங் ட்ரபிள்'! யாராவது 'ஜனகண...' என்றால், எல்லாரும் சேர்ந்து கொள்ளுகிறார்கள்.

தொடக்கம்தான் பிரச்சினை. நண்பர்களே, எது செய்ய நினைத்தாலும் உடனே தொடங்குங்கள். வெற்றி நிச்சயம்.

## 21. சவாலே சமாளி!!!

**ந**மது வெற்றி தோல்வியை நமது மனோபாவங்கள்தான் நிர்ணயிக்கின்றன. ஒரு சவால் - பிரச்சினை நம் எதிரில் நிற்கும்போது நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நம் வெற்றி தோல்வி அமைகிறது.

பிரச்சினைகளை, சவால்களை இரண்டு வகைகளாக மட்டுமே எதிர்கொள்ள முடியும். எப்படி? ஒன்று Fight மற்றொன்று Flight. அதாவது எதிர்ப்பது ஒரு வகை! எகிறிக் குதித்துத் தப்பி ஓடுவது மறுவகை. நீங்கள் எந்த வகை? யோசித்தது உண்டா? வாழ்க்கையே ஒரு சவால். அதைச் சந்திப்பது எப்படி? சொல்கிறேன்.

மனித குலம் காடுகளில்தான் தன் வாழ்க்கையைத் தொடங்கியது. ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்த்துப் போராடியே மனித இனம் தன்னைத் தக்க வைத்துக் கொண்டது. கொடிய விலங்குகள், மலைப் பாம்புகள், விஷ ஜந்துகள் என்று மரணம் மனிதனை விழுங்கப் பார்த்தது. எதிர்த்துப் போராடுவதன் மூலமே மனிதன் ஜெயித்துக் காட்டினான். மழை, இடி, வெள்ளம், பூகம்பம் என்று இயற்கையும் மனிதனை எதிர்த்து எப்போதும் யுத்தம் நடத்துகிறது.

இந்தச் சவால்களைச் சந்தித்து, முறியடிப்பது மூலமே நாம் ஜீவிக்கிறோம்.

எனவே எகிறிக் குதித்து ஓடும் கோழைத்தனத்தைவிட எதிர்த்துப் போராடும் துணிவும், தெளிவுமே நம்மை வாழ வைக்கிறது. அதற்காக, அசட்டுத்தனமாக எல்லாவற்றையும் எதிர்த்துப் போராடும் மூர்க்கத்தனம் கூடாது. ஆனால் வாழ்வின் சவால்களைச் சம்மதத்துடன் ஏற்கும் கம்பீரம் நமக்கு வேண்டும். எழுபது எண்பது வயதுவரை உயிர் வாழ்ந்தால் கூடச் சிலர்

முப்பது நாற்பது வயதிலேயே செத்துப் போனவர்கள்! எப்படி! சவால்களை எதிர்கொள்ள மறுக்கும் அந்தக் கணமே மனிதன் செத்துவிட்டதாக அர்த்தம்.

இதையே பெர்னார்ட்ஷா, ‘‘சில மனிதர்களை இறப்பதற்கும், புதைப்பதற்கும் மத்தியில் முப்பது நாற்பது வருடங்கள் கடந்து விடுகின்றன’’ என்று கேலி செய்கிறார். வாழ்விலிருந்து விலகி ஓடும் மனிதர்களைவிட, எதிர்த்து நின்று போராடும் மனிதர்கள்தான் உன்னதமான இடம் பெறுகிறார்கள்.

அடிமை இந்தியாவில் அடிமைத்தனத்தை நிராகரித்து, எதிர்த்து நின்ற மகாத்மா காந்தியைத்தான் ஐந்நூறு ரூபாய் நோட்டில் அச்சடித்துக் கொண்டாடுகிறோம். கோழைகளை அல்ல. வெள்ளையரை விரட்ட கப்பலையும் விமானத்தையும் கையாண்ட வ.உ.சியையும் நேதாஜியையும் சிலை வைத்துச் சிறப்பிக்கிறோம். எனவே வாழ்க்கையின் சவால்களைச் சந்திக்கத் தயார் ஆகுங்கள். வெற்றி நிச்சயம்.

சினிமாப் படங்களில் எப்போது கை தட்டுகிறார்கள்? கொடுமைப்படுத்தும் கூட்டத்தை ஆக்ரோஷமாகக் கதாநாயகன் அல்லது நாயகி எதிர்த்துப் பேசும்போது, வீராவேசமாகப் போரிடும்போது கொட்டகையில் விசிலும் கைதட்டலும் வருகிறதே... என்ன அர்த்தம்? கைதட்டல் என்பது மக்கள் அங்கீகாரத்தின் அடையாளம். வெற்றி மகுடத்தின் அறிவிப்பு. சவாலைக் கண்டு அஞ்சியோடும் கோழைகளைச் சமூகம் கண்டு கொள்வதில்லை. ஆனால் சவால்களைத் துணிச்சலுடன் சந்திக்கும் நபரைச் சமூகம் கைதட்டிப் பாராட்டுகிறது. சவால்கள் உறுதியுடன் சந்திக்கப்படும் ஒவ்வொரு கணமும் மக்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை அளிக்கிறது.

பிரச்சினைகளில் இருந்து அருச்சுனன் தப்பியோட நினைக்கும்போதுதான் பகவத்கீதையே பிறந்தது. அவனை அப்படித் தப்பியோட கிருஷ்ணன் அனுமதிக்கவில்லை. சவாலை எதிர்கொள்ளும்படி அறிவுறுத்துகிறான். ஒன்று புரிந்து கொள்ளுங்கள். சந்திக்கப்பட வேண்டிய சவால்களை அடையாளம் காண்பதும், அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ளத் தீர்மானிப்பதும் வெற்றிப் பாதையின் பாதி தூரம்... ஜெயித்தல் என்பது மீதி தூரமே!

பண்ணையார் ஒருவர் ஏழை விவசாயிக்கு நிறையக் கடன் கொடுத்தார். அவரது உள்நோக்கம் கொடுமையானது. அந்தக் கிழட்டுப் பண்ணையாருக்கு விவசாயியின் அழகான இளம்பெண் மீது ஒரு கண். எப்படியாவது அவளைத்

திருமணம் செய்துகொள்ள சூழ்ச்சி செய்தார். ஒரு நாள், ''கடனை எல்லாம் திருப்பிக் கொடு, அல்லது பெண்ணைத் திருமணம் செய்து கொடு'' என்று நச்சரித்தார். விவசாயி மகள் தீவிரமாக எதிர்த்தாள்; மறுத்தாள். ரொம்பவும் நல்லவர் போல் பண்ணையார் நடித்தார். ''மாரியம்மன் கோவிலில் இப்பவே திருவுளச் சீட்டு குலுக்கிப் போட்டு எடுப்போம். அந்தப் பெண்ணே எடுக்கட்டும். கல்யாணம் செய்துகொள்... என்று சீட்டில் வந்தால் திருமணம் நடக்கும்'' என்று உறுமிவிட்டுத் தன் கையில் இருந்த இரண்டு சீட்டுகளையும் குலுக்கிக் காட்டினார். விவசாயி மகள் அசரவில்லை, கொஞ்சம் யோசித்தாள். பண்ணையாரின் வஞ்சனை புரிந்துவிட்டது. திருவுளச்சீட்டு எழுதிப்போடும்போது இரண்டிலுமே திருமணம் செய்துகொள் என்று எழுதியே பண்ணையார் போடப் போகிறார். அழுது ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. பண்ணையாரைக் காட்டிக் கொடுக்காமல் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்தாள். மாரியம்மன் கோவிலில் ஊரே கூடி இருந்தது. சீட்டைக் குலுக்கிப் பண்ணையார் போட்டதும் ஒரு சீட்டை எடுத்து டபக்கென்று வாயில் போட்டு மென்று தின்றாள் விவசாயி மகள். ''அடடா அந்தச் சீட்டில் என்ன எழுதி இருந்தது என்று எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று ஊர்ப் பஞ்சாயத்துக் கேட்டது. ''இதிலென்ன கஷ்டம்? அந்த இன்னொரு சீட்டை எடுத்துப் பாருங்கள். நான் எடுத்த சீட்டு அதற்கு எதிரானது. அவ்வளவுதானே!'' என்றாள் அந்தப் புத்திசாலிப் பெண். பண்ணையாருக்கு அசடு வழிந்தது. இன்னொரு சீட்டும் ''திருமணம் செய்து கொள்'' என்று வந்ததால் முதல் சீட்டு எதிர்மறை என்று ஊர் முடிவு செய்தது. சவாலைச் சந்திப்பது என்று முடிவு செய்து விட்டால் எப்படிச் சந்திப்பது என்கிற வழிமுறை நிறைய தோன்றும்.

இந்தத் தீரர்களுக்கு வெற்றிநிச்சயம்!

## 22. இளைஞர்களிடம் இல்லாத 'மை' !

இன்றைய இளைய தலைமுறையிடம் இருக்கிற உன்னதமான 'மை' திறமை. இல்லாத 'மை' பொறுமை. காத்திருப்பது என்பதும் ஒரு கலைதான். நம்முடைய Turn வரும் வரை பொறுமையாக இருப்பது என்பது அவசியம். அதற்கு நம் மீது நமக்கு ஆளுமை வேண்டும்.

ஆறு மாதம் விளையும் அரிசியை மூன்று மாதத்தில் விளைய வைத்தது விஞ்ஞானம். ஆறு வருஷத்தில் காய்க்கும் தென்னையை மூன்று வருஷத்தில் காய்க்க வைத்தது விவசாயம். விளைவு..... இந்தக் குறுவைப் பயிர்களையும் அவசர கால விவசாய விளைவுகளையும் உண்ணும் இளைய தலைமுறை அலாதியான அவசரத்தில் இருக்கிறது. படபடப்பு... பரபரப்பு... பதற்றம்... அவசரம்... ஆத்திரம்... இவை எதையுமே சாதிக்கப் போவதில்லை. கொழுத்த மீன் வரும் வரை காத்திருக்கும் 'கொக்கொக்க' என்ற குறள் இளைய தலைமுறைக்கு அவசியம் புரிய வேண்டும்.

பஸ்ஸுக்கோ, ரயிலுக்கோ, சாப்பிடவோ, திருமணத்திற்கோ எதற்குமே காத்திருக்கத் தயாராக இல்லை.. அவசரப்பட்டால் முதுமையும் முந்தி வரும். மரணமும் விரைவில் வரும். அவசரப்படாத, நிதானம் பல ஆபத்துகளில் இருந்து உங்களைப் பாதுகாக்கும். படபடக்காமல் பிரச்னைகளைக் கையாண்டால் புதிய பிரச்னைகள் தவிர்க்கப்படும். இது பழைய தலைமுறையிடமிருந்து புதிய தலைமுறை படிக்க வேண்டிய கட்டாயப் பாடம்!

இந்திய விடுதலைப் போராட்டம் உச்சகட்டமாக இருந்த காலம் அது. இந்திய விடுதலை வீரர்களையும், தலைவர்களையும் துல்லியமாக ஆங்கில அரசு வேவு பார்த்துக் கொண்டிருந்த காலம் அது. பால கங்காதரத் திலகர் அப்போது விடுதலைப் போரின் பெருந் தளபதி. ஆறு மாத காலமாக அவர் வீட்டில் சமையல் வேலை பார்த்துக் கொண்டிருந்த சமையல்காரர் தாம் வேலையில் இருந்து நிற்க விரும்புவதாக அறிவித்தார். திலகர் 'ஏன்?' என்றார். ''நீங்கள் தரும் சம்பளம் ஆறு ரூபாய்..... அது போதவில்லை'' என்றார். ''அது சரி... சமைப்பதற்கு நான் தரும் சம்பளம் ஆறு ரூபாய்... ஆனால் என் நடவடிக்கைகளை வேவு பார்ப்பதற்கு உனக்கு பிரிட்டிஷ் சர்க்கார் தரும் சம்பளம் இருபத்தி நாலு ரூபாய்... ஆக முப்பது ரூபாய் சம்பாதிக்கிறாய். அப்படி இருந்துமா உனக்குச் சம்பளம் போதவில்லை!'' என்று இடி இடி என்று சிரித்தார் திலகர். உண்மையில் அந்தச் சமையல்காரர் பிரிட்டிஷ் அரசு அனுப்பிய ஒற்றர். ஆறு மாதத்திற்கு முன்பே இது திலகருக்குத் தெரியும். ஆனால் தெரிந்ததாகத் திலகர் காட்டிக் கொள்ளவே இல்லை. பிரிட்டிஷ் அரசு அந்த ஒற்றரை நம்பி ஏமாந்து போனது. அவர் ஒற்றர் என்பதால் திலகர் ஜாக்கிரதையாக இருந்தார். இந்த நிதானம் - பழைய தலைமுறையின் பாராட்டத்தக்க பண்பு. இது இன்றைக்கு இருக்கிறதா?

அளவுக்கு மீறிய பொறுமையை நான் வற்புறுத்தவில்லை. பத்து வயதிலேயே நாற்பது வயதுக்குரிய நாற்காலிகளை அடைய நினைப்பதும், பதினைந்து வயதிலேயே இருபத்தைந்து வயதுக்குரிய கட்டில்களைப் பகிர்ந்து கொள்வதும், முப்பது வயதிலேயே அறுபது வயதுக்குரிய முதுமையில் தளர்வதும் சகிக்கும்படியாக இல்லை. இந்த அவசரம் இளமைக்கு அவசியமா?

பஞ்ச தந்திரக் கதைகளிலே அருமையான கதை ஒன்று உண்டு. ஒரு குட்டிக் குரங்கு படாத பாடுபட்டு ஒரு தோட்டம் போட்டது. செடிகள் வளர்ந்து மரமாகிப் பூத்துக் குலுங்கி காய்கனிகள் கொட்டும். ஆசை ஆசையாய் அள்ளித் தின்னலாம் என்று கணக்குப் போட்டது. என்ன கொடுமை! எதுவுமே முளைக்கவில்லை. ஆசை நிராசையானது. அது ஒரு நாள் சீனியர் குரங்கிடம் போய் ஆலோசனை கேட்டது. ‘‘எதுவுமே முளைக்கவில்லை’’ என்று ஒப்பாரி வைத்தது. சமாதானப்படுத்திய சீனியர் குரங்கு ‘‘விதை போட்டா தண்ணி ஊத்தணும். நீ தண்ணி ஊத்தியிருக்க மாட்டே’’ என்றது. ‘‘ஆங்... ஒரு விதைக்கு எட்டு பக்கெட் தண்ணி தினம் தினம் காலையும் மாலையும் ஊற்றுவேன்’’ என்று குட்டிக் குரங்கு குற்றச்சாட்டை மறுத்தது.

‘‘அடடா... எட்டு பக்கெட் தண்ணி விட்டா விதை என்னாகும்... அழுகிப் போயிருக்கும்... அதான் முளைக்கல’’ என்று தீர்ப்பு வழங்கியது சீனியர். குட்டிக் குரங்கோ... ‘‘ஒரு விதை கூட அழுகல’’ என்று உறுதியாக உறுமியது. ‘‘அதெப்படி உனக்குத் தெரியும்’’ என்றது சீனியர். ‘‘நான் தான் விதை முளைச்சிருச்சான்னு தினம் எடுத்து எடுத்துப் பாக்கறனே’’ என்றது குட்டிக் குரங்கு.

தினம் தினம் விதையை எடுத்து எடுத்துப் பார்த்தால் எப்படி முளைக்கும்? அது அதற்கு என்று ஒரு காலம் இருக்கிறது. அந்தக் காலம் வரை காத்திருக்க வேண்டியது அவர் அவர் கடமை. அதற்குத் தேவை பொறுமை. ‘‘பொறுத்தது போதும் பொங்கி எழு’’ என்கிற குட்டித் தலைவர்கள் வெட்டிப் பேச்சை நம்பி, பொங்கிக் கொண்டே இருந்தால் வளர முடியுமா? திறமையோடு கூடப் பொறுமையும் கலந்தால் இளைய தலைமுறைக்கு வெற்றி நிச்சயம்.

## 23. யார் சொன்னாலும் கேளுங்கள்!

பிறரது விமர்சனங்களால் பாதிக்கப்படாதீர்கள்; ஒரு பாதுகாப்பு வளையம் போட்டுக் கொள்ளுங்கள் என்று ஒருமுறை சொன்னேன். அதற்காக யார் எது சொன்னாலும் கேட்க வேண்டாம் என்பது பொருள் அல்ல. ‘எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்...’ என்று வள்ளுவர் எழுதினார்.

அப்படியானால் யார் யார் சொன்னாலும் கேளுங்கள் என்றுதானே பொருள். கேட்க வேண்டும். தரமான யோசனைகளைத் தள்ளக் கூடாது... கொள்ள வேண்டும். காதுகளை அடைத்துக் கொள்வதோ... அல்லது எல்லாமே எனக்குத் தெரியும் என்று மண்ணை அள்ளித் தலை மேலே போட்டுக் கொள்வதோ கூடாது! கூடவே கூடாது.

உங்கள் கண்ணும் காதும் திறந்திருந்தால், கருத்தும் இதயமும் திறந்திருந்தால், எங்கிருந்தோ கேட்கும் யோசனைகள் எவ்வளவு பயன் தரும் என்பது புரியும்.

பலமுறை தேர்தலில் தோல்வியைத் தழுவிய ஆப்ரஹாம் லிங்கன் ஜனாதிபதியாக முதல் முறை வெற்றி பெற்றார். நன்றி தெரிவிப்புக் கூட்டத்தில் ஒரு சிற்றூரில் பேசும்போது அந்த ஊரில் உள்ள ஒரு சிறுமியின் பெயரைச் சொல்லி மேடைக்கு அழைத்தார். தான் இந்த முறை பெற்ற வெற்றிக்குக் காரணம் அந்தச் சிறுமி என்று புகழ்ந்தார்.

அப்படி அந்தச் சிறுமி லிங்கனுக்கு என்ன உதவி செய்தாள், வெற்றி பெற...

ஆப்ரஹாம் லிங்கன் ஒல்லியான உடல்வாகு உடையவர். அவர் கன்னங்கள் ஒட்டிப்போய் முகத்தில் பள்ளமாக இருந்தன. அம்மைத் தழும்பு வேறு... அப்போது அவர் தாடி வளர்க்கவும் இல்லை. முகம் விகாரமாக இருந்தது. இதை உற்றுக் கவனித்த சிறுமி அவருக்கு ஓர் ஆலோசனை எழுதி இருந்தாள். ‘‘தாடி வளர்த்துக் கொண்டால் உங்கள் முகம் அழகாக, கம்பீரமாக இருக்கும். இப்போதுள்ள உங்கள் முகத்தைப் பெண்கள் விரும்புவதில்லை’’ என்ற உண்மையை அவள் வெளிப்படுத்தி இருந்தாள்.

அவளது கடிதத்தைக் குப்பைக் கூடையில் லிங்கனின் தேர்தல் பொறுப்பாளர்கள் போடும் சமயத்தில் அங்கு வந்த லிங்கன் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தார். அந்தச் சிறுமியின் யோசனையை ஏற்றுத் தாடி வளர்த்தார். கம்பீரமாக,

களையாகக் காட்சியளித்து ஜெயித்தார். அதற்காக அந்தச் சிறுமியைத் தேடி நன்றி தெரிவித்தார் லிங்கன்.

நமது பெரிய பெரிய சிக்கல்களுக்குப் பெரிய பெரிய நிறுவனங்கள், பெரிய பெரிய மருத்துவமனைகள், பெரிய மனிதர்கள்தான் யோசனை சொல்ல வேண்டும் என்பதில்லை. எங்கிருந்தோ வரும் எளிய யோசனைகள் பெரிய வெற்றிகளை விளைவிக்கும்.

ஒரு பற்பசை கம்பெனியில் விற்பனையை அதிகரிப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நிர்வாகவியல், பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்த மார்க்கெட்டிங் மன்னர்கள் பலர் வந்திருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனை சொன்னார்கள். விளம்பரத்தைக் கூட்டுவது... இலவச இணைப்பு தருவது... பரிசுக் கூப்பன் வைப்பது... போட்டிகள் நடத்துவது என்று அதிகச் செலவாகும் யோசனைகளை அள்ளிவிட்டனர். நிர்வாகம் அவற்றை ஏற்கத் தயாராக இல்லை. அப்போது அங்கு பணிநிமித்தம் நின்ற கடைநிலை ஊழியர் ஒருவர் ஒரு சின்ன யோசனை சொன்னார். பற்பசை வெளிவரும் டியூபின் வாயைச் சிறிது அகலப்படுத்தலாம் என்றார்.

சுற்றி இருந்தவர்கள் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

இதென்ன மடத்தனம்... இதெப்படி விற்பனையைக் கூட்டும் என்று கேலி பேசினர். ஆனால் அவர் சொன்ன யோசனையை நிர்வாகம் ஏற்றது... அது அபாரமான பலன் அளித்தது.

எப்படி?

வாய் பெரிதான பிறகு வழக்கம்போல் உபயோகப்படுத்தும் வாடிக்கையாளர் வழக்கம்போல் பின்பக்கம் அழுத்தும்போது கூடுதலான பசை வெளியேறியது! முப்பது நாள்கள் ஒரே பேஸ்ட் ட்யூபைப் பயன்படுத்தி வந்தவர்களுக்கு இருபத்து ஐந்து நாள்களில் பசை தீர்ந்து போனது... கூடுதலாக வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது... விற்பனை கூடிவிட்டது.

சின்னச் சின்ன யோசனைகளை அலட்சியப்படுத்தாமல் முடிவெடுத்தால் வெற்றி நிச்சயம்.

இன்னொரு சுவையான நிகழ்ச்சி...

அமெரிக்காவின் பிரபலமான ஹோட்டல் ஒன்றில் எல்லாம் சிறப்பாக இருந்தன. ஆனால் பல மாடி கொண்ட கட்டடத்தில் மேலே போய்வரும் லிஃப்ட் வெகு மெதுவாக இயங்கியது பலருக்குப் பிடிக்கவில்லை. வெளியே லிஃப்டுக்குக் காத்திருப்பவர்கள் கோபம் அடைந்தார்கள். உள்ளே, மெதுவாக மேலே போகும்போது உள்ளிருப்பவர்கள் எரிச்சல் அடைந்தார்கள். புகார் புத்தகத்தில் அதே குறை திரும்பத் திரும்ப எழுதப்பட்டது. லிஃப்டை மாற்றினால் ஹோட்டலுக்குப் பல லட்சம் செலவாகும். விரைவுபடுத்த வாய்ப்பே இல்லை. பல முறை ஆலோசனைக் கூட்டம் நடத்தியும் பலனே இல்லை.

முடிவில் ஒரு சாதாரண ஹோட்டல் ஊழியர் லிஃப்டின் உள்ளேயும் வெளியேயும் முகம் பார்க்கும் பெரிய கண்ணாடிகளைப் பொருத்தச் சொன்னார். உள்ளிருக்கும் நபர்கள் தங்கள் முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்க்கும் ஜோரில் லிஃப்டின் தாமதத்தை மறந்தனர். வெளியே இருப்பவர்கள் காத்திருக்கும் நேரத்தில் தங்கள் தோற்றத்தைச் சரிசெய்து கொள்வதில் செலவழித்தனர்.

புகார் புத்தகம் தப்பித்தது! உங்கள் காதும் கருத்தும் கூர்மையாக இருந்தால் வெற்றி நிச்சயம்.

## 24. அந்தக்காலம் வரும்

அரசாங்கமும் கல்லூரிகள், பள்ளிகள் நடத்துகிறது. தனியார் நிர்வாகத்திலும் கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன. இரண்டிலும் ஓர் அநீதி நடக்கிறது. தனியார் நிர்வாகத்தில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் குறைந்த சம்பளம் பெறுகிறார்கள். நிறைந்த வேலை பார்க்கிறார்கள். அரசாங்க நிர்வாகத்தில் குறைந்த வேலை பார்க்கிறார்கள். நிறைந்த சம்பளம் வாங்குகிறார்கள். விதிவிலக்கும் உண்டு.

கடினமான வேலை பார்த்துக் குறைந்த கூலி வாங்கும் இளைஞனுக்கு ஓர் உள்ளக் குமுறல் இருக்கும். ஆத்திரம் இருக்கும். அவனுக்கு ஓர் ஆறுதல் சொல்கிறேன். கொஞ்சம் பொறு... கொஞ்சம் பொறு... ஜெயிக்கலாம்! உலகில்

உழைப்புக்கும் ஊதியத்துக்கும் ஜோடிப் பொருத்தம் எப்போதும் இருப்பதே இல்லை! தொழில் தொடங்கினாலும், வியாபாரம் செய்தாலும், வேலைக்குப் போனாலும் பணம் வருவதில் வேறுபாடு இருந்துகொண்டே இருக்கும். எடுத்த எடுப்பிலேயே உடனேயே உழைப்புக்கு ஏற்ற ஊதியமோ, லாபமோ ஒருபோதும் கிடைக்காது. வாழ்க்கையைத் தொடங்கும்போது நாம் எதிர்பார்க்கும் ஊதியம் கிடைக்கவில்லையே என்று சலிப்பும் வேதனையும் அடைவதோ, வேலையை விட்டுவிடுவதோ, அடிக்கடித் தொழிலை மாற்றுவதோ அறிவுடைமை ஆகாது. காலம் வரும்... கொஞ்சம் பொறு. காலம் வரும் என்று ஜோதிடர் பாணியில் நான் கூறவில்லை. காலம் எப்படி வரும் என்று ஆதாரபூர்வமாக விளக்குகிறேன்.

ஒவ்வொரு தொழிலிலும் மூன்று காலகட்டங்கள் - பிரிவுகள் உள்ளன. கவனமாக அதனை உணருங்கள். முதல் காலம்ஃ உழைப்புக்குத் துளியும் பொருந்தாத மிகக் குறைவான ஊதியம் பெறுதல்.

இரண்டாம் காலம்ஃ அளவான உழைப்பு. அளவான சம்பளம். உழைப்பும் ஊதியமும் சமமாக இருத்தல்.

மூன்றாம் காலம்ஃ மிகக் குறைந்த உழைப்பு; பல மடங்கு ஊதியம்.

இந்த மூன்றையும் கூட்டிக்கழித்துச் சராசரியாகப் பார்த்தால் வாழ்க்கையின் வரவும் செலவும் சரியாகவே இருக்கும். ஆனால் அந்தக் காலம் வரப் பொறுமை வேண்டும். நெடுந்தொலைவு நோக்கும் தீர்க்கதரிசனம் வேண்டும்.

இதை ஓர் இளைஞனுக்கு நான் விளக்கிக்கொண்டிருந்தபோது அவசரமாக அவன், ‘‘முதல் காலம் தாண்டுவதற்குள் இறந்துபோய்விட்டால்’’ என்று குறுக்கிட்டான். ‘‘இவ்வளவு எதிர்மறைச் சிந்தனை (Negative thought) உள்ள நீ உலகிற்கு அவசியம் இல்லை என்று உலகம் தீர்மானித்தது என்று அர்த்தம்’’ என்றேன்.

இன்று கோடிகோடியாக ஜவுளி வியாபாரம் செய்யும் தமிழகத்தின் பிரமாண்டமான ஜவுளி மாளிகை அதிபர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். ஒரு காலத்தில் அவர்கள் ஜவுளியை மூட்டை கட்டித் தலைமேல் சுமந்துகொண்டு போய் ஊர் ஊராக விற்றவர்கள். உழைப்பிற்கும்

ஊதியத்திற்கும் ஏணி வைத்தால்கூட எட்டாத வேறுபாட்டை உணர்ந்தவர்கள். இப்போதோ அதன் மாறுபாட்டை அனுபவிப்பவர்கள்.

ஒரு காலத்தில் கல்லும் மண்ணும் சுமந்த கட்டடக் கலைஞர் ஒருவர் ஓடி ஓடி முப்பதும் நாற்பதும் சம்பாதித்தார். இன்று உட்கார்ந்த இடத்தில் கோடி கோடியாகச் சம்பாதிக்கும் ரயில்வே காண்ட்ராக்டர் அவர். வாழ்க்கையில் மூன்று கட்டக் கொள்கையில் இருந்து யாரும் தப்ப முடியாது.

வாழ்க்கையின் தொடக்கத்தில் உழைப்பிற்கும் ஊதியத்திற்கும் பொருத்தம் இராது. முடிவில் ஊதியத்திற்கும் உழைப்பிற்கும் பொருத்தம் இராது. இதைப் புரிந்துகொண்டால் உங்களுக்கு வருத்தம் வராது. மாதச் சம்பளக்காரர்களுக்கு இந்தக் கோட்பாடு ஓரளவே பொருந்தும். வியாபாரம், தொழில் புரிவோர்க்கு, கலைஞர்களுக்கு இந்தக் கோட்பாடு வெகுவாகப் பொருந்தும். எண்ணெய்ச் சட்டியில் ஜாங்கிரியும் அடுப்புக்கு எதிரே தானுமாய் வெந்துகனிந்த ஓர் உழைப்பாளியின் கடின வெற்றிதான் இன்று பிரபலமான ஓர் இனிப்பு நிறுவனம் - சர்க்கரை சாம்ராஜ்யம்.

ஹோட்டலில் டேபிள் கிளீன் செய்பவர், முதல் ஹோட்டல் தொடங்குவது கஷ்டம். தொடங்கிய பின் அடுத்து அடுத்துக் கிளைகள் தொடங்குவது சுலபம். இது சென்னையிலேயே நடந்திருக்கிறது. உலகின் செயின் ஹோட்டல்கள் இப்படித்தான் வளர்ந்தன.

ஒரு முதலாளியிடம் நீங்கள் வேலை பார்க்க நேர்ந்தால் உங்கள் உழைப்புக்குத் தகுந்த கூலி முதலில் கிடைக்கவில்லையே என்று வருந்த வேண்டாம். முதலாளியைத் திட்ட வேண்டாம். நீங்கள் எதிர்பார்க்கும் சம்பளத்திற்கும் முதலாளி தரும் சம்பளத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கணக்கிடுங்கள்; அந்தத் தொகையை ஒரு தொழில் கற்றுக்கொள்ள உதவியாக இருந்த முதலாளிக்கு நீங்கள் தரும் சம்பளமாக (Tuition fees) மகிழ்ச்சியுடன் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். வாழ்க்கை முன்னேற்றத்தின் இந்த மூன்று காலகட்டத்தையும் புரிந்துகொண்டால் வெற்றி நிச்சயம்

## 25. ஜாலியாகக் கஷ்டப்படுங்கள்!

**ந**ண்பரின் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் மகன் பி.காம். படித்துக் கொண்டிருக்கும் மாணவன்தான். ‘‘மேலே என்ன படிக்கப் போகிறாய்? சிஏ. படிக்கும் எண்ணம் உண்டா?’’ என்றேன். ‘இல்லை’ என்று ஒரு வரி பதிலை உதிர்த்துவிட்டு ரிமோட் கண்ட்ரோலை எடுத்து டி.வி.யில் சேனல் விளையாட்டைத் துவக்கிவிட்டான். நான் விடுவதாக இல்லை. ‘‘ஏன்... சி.ஏ. படிக்கலாமே... என்ன கஷ்டம்?’’ என்றேன். ‘‘சி.ஏ. பாஸ் பண்ணனும்னா நிறைய நேரம் படிக்கணுமாம். பதினெட்டு மணி நேரம் படிக்கணும்னு ஒரு ஆடிட்டர் சொன்னாரு. நான் ஆடிட்டேன். பதினெட்டு மணி நேரம் யார் படிக்கிறது? போரு... ரொம்ப கஷ்டம்’’ என்றான். படிக்கும் வயதில் படிக்கக் கஷ்டப்படுபவர்கள் பிற்காலத்தில் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள் என்பதை அவனுக்குப் புரியவைக்க நான் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

இன்னொரு மாணவர் கதை.

அவர் வீட்டில் இருந்து 1 கி.மீ. தொலைவில் ஒரு கல்லூரி. அதற்காக மோட்டார்பைக் வாங்கிக் கொடுத்துள்ளார் அசட்டு அப்பா. ஆனால் மாணவர் மோட்டார் பைக்கில் கிண்டி ஸ்டேஷனுக்கு வருவார். அங்கிருந்து மின்சார ரயிலில் ஏறி மாம்பலம் வருவார். அங்கு தி. நகர் பஸ் டெர்மினஸில் தன் பெண் நண்பியுடன் பஸ்ஸில் அமர்ந்து கலகலப்பாய்க் கலந்துரையாடியபடி கிண்டி தாண்டி வந்து கல்லூரியில் இறங்குவார். மாலை மறுபடியும் அதேபோல் தி. நகரில் அவரைப் பாதுகாப்பாக விட்டுவிட்டு ரயில் பிடித்து கிண்டி வந்து பைக்குடன் வீடு திரும்ப மணி ஏழரை ஆகிவிடும். காதல் சரிதான். அதற்காகக் காலத்தைத் தொலைக்கிறார். நிகழ்காலத்தை மட்டுமல்ல, தன் எதிர்காலத்தையும் தொலைக்கிறார். இது இந்தியாவின் போதாத காலம். இது நியாயமா? கஷ்டப்பட வேண்டிய இளம் பருவத்தில் ஜாலியாக இருக்கவே அவர் ஆசைப்படுகிறார்.

ஆசை ஆசையாய்த் தன் மகளை வளர்த்த அம்மா ஒருத்திக்குத் திடீர் என்று பி.பி., சர்க்கரை... எல்லாக் கஷ்டமும். காரணம் என்ன தெரியுமா? ரொம்ப சிறிது. மகளை எப்படியாவது எம்.பி.பி.எஸ். படிக்க வைக்க வேண்டும் என்பது அன்னையின் ஆசை. மகளோ சிரமப்பட்டு யார் படிப்பது என்ற ஒரே காரணத்துக்காக மறுத்துவிட்டாள். தாயின் கனவு அறுந்தது. பி.பி. பிறந்தது. படிக்க வேண்டிய காலத்தில் படிப்பதற்குக் கஷ்டப்பட்டால் எதிர்காலம் என்னவாகும்? யோசிக்க வேண்டாமா?

ஈரோட்டில் சி.கே.கே. அறக்கட்டளை என்கிற தரமான இலக்கிய அமைப்பு நடத்திய விழாவில் நண்பர் லேனா தமிழ்வாணன் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார். காசு கொடுத்து அவர் வாங்கிய புத்தகத்தில் ஒரு வரிக்கு - அந்தப் புத்தகத்தின் விலை முழுவதும் கொடுக்கலாம் என்றார். அது என்ன வரி? 'கஷ்டப்படாமல் இருக்கக் கஷ்டப்படுங்கள்' என்பதே.

ஆம். வாழ்க்கையில் பலவிதமான கஷ்டங்கள் பிற்காலத்தில் படாமல் இருக்க இளமையில் கொஞ்சம் கஷ்டப்பட்டால் என்ன?

அது மட்டுமல்ல. இனம் புரியாத எதிர்பாராத கஷ்டங்கள் வராமல் இருக்கத் திட்டமிட்ட கஷ்டங்கள் படலாமே. காலை நான்கு மணிக்கே எழுவது கஷ்டம். ஆனால் பிற்காலத்தில் படுக்க இடம் இல்லாமல், குடியிருக்க வீடு இல்லாமல் கஷ்டப்படாமல் இருக்கப் படுக்கையை விட்டு நான்கு மணிக்கே எழலாமே. உடலில் முதுகுவலி, மூட்டுவலி என்று திணறாமல் இருக்க உடற்பயிற்சி என்ற ஒழுங்கான கஷ்டம் படலாமே. பட்டினி அல்லது கடை உணவு என்கிற பெருங்கஷ்டம் ஏற்படாமல் இருக்கச் சமையல் என்கிற கஷ்டம் படலாமே. ஒழுங்கற்ற எதிர்பாராத கஷ்டத்தைத் தவிர்க்க, திட்டமிட்ட கஷ்டங்கள் படுவது அவசியம்.

எனவே கஷ்டப்படாமல் இருக்கக் கஷ்டப்படுங்கள் என்ற வாக்கியம் ஒரு வாழ்க்கைச் சூத்திரம்.

பிள்ளைப் பேறுகூட ஒரு கஷ்டம்தான். தாய் அதைப் படாமல் இருந்தால் நாம் வந்தே இருக்க முடியாது. ஆனால் இளைய தலமுறை ஜாலியாக இருக்க விரும்புகிறது. கஷ்டமே இருக்கக் கூடாது என்று கனவு காணுகிறது.

ஆப்ரஹாம் லிங்கன் சின்ன வயதில் கஷ்டப்பட்டார். ஜனாதிபதியாக உயர்ந்து நின்றார். வயலில் கஷ்டப்பட உழவன் தயாராக இல்லை என்றால் எவனுக்காவது சோறு கிடைக்குமா?

'நீ சேற்றில் கால்வைப்பதால்தான் நாங்கள் சோற்றில் கை வைக்கிறோம்' என்று உழவனுக்குப் புதுக்கவிஞன் நன்றி கூறுகிறான். உழவு என்ற சொல்லே சிரமத்தைப் புலப்படுத்தும் சொல்தான்.

பள்ளிக்கு நடக்க, புத்தகம் திறக்க, பாடம் படிக்க, துணிமணிகளை அடுக்க, அம்மா அப்பாவுக்கு உதவியாக உழைக்க இளம்பிள்ளைகள் மறுதலிக்கிறார்கள். இது சோம்பல். மனநோய். நாளைய பெரும் துயருக்கான வித்து. சோக கீதத்தின் பல்லவி. வெற்றியாளனை விளக்கிய தமிழ்மறை, 'மெய்வருத்தம் பாரார், கண்துஞ்சார்' என்று உழைப்பைத்தான் உயர்த்திப் பேசியது. இன்று கொஞ்சமாகக் கஷ்டப்படாதவர்கள் நாளை நிறையவே கஷ்டப்படப் போகிறார்கள் என்று எச்சரிக்கிறேன்.

சின்ன வண்டு ஒன்று கூட்டில் இருந்து வெளியேறும் போது அவஸ்தையுடன்தான் பயணத்தை ஆரம்பிக்கிறது. இதை மாணவருக்கு உணர்த்த ஆசிரியர் ஒரு வழி செய்தார். கூட்டில் இருந்து அது வெளியேறும் துயரத்தைப் பார்க்கட்டும் என்று மாணவர் மத்தியில் விட்டுவிட்டு வெளியே போனார். அது கூட்டில் இருந்து வரும் வேதனையைக் கண்ட மாணவன் அதற்கு உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு அது வெளியேறும் ஓட்டையைப் பெரிதுபடுத்தினான். அது சுலபமாக வெளி வந்துவிட்டது. மாணவன் மகிழ்ந்தான். ஆனால் வண்டு மகிழவில்லை.

வெளியே வந்தும் அதனால் பறக்க முடியவில்லை. ஏன்..? அதன் சிறகுகளை அசைக்கக்கூட முடியவில்லை. செய்தி அறிந்த ஆசிரியர் காரணம் கண்டுபிடித்தார். கூட்டில் இருந்து சிறிய துளைவழி வெளியேறச் சிரமப்படும்போதுதான் அது தன் சிறகுகளை அசைத்து அசைத்துப் பழகுகிறது. அதற்கு வாய்ப்பே இல்லாததால் இறகுகளை அசைக்க அதற்குத் தெரியவே இல்லை.

சிரமங்கள்தான் நம்மைப் பலப்படுத்துகின்றன. கஷ்டங்கள்தான் நம்மை வலுப்படுத்துகின்றன. துயரங்கள்தான் நம்மை உருவாக்குகின்றன. எதிர்பாராத சிரமங்களைத் தவிர்க்க எதிர்பார்க்கும் சிரமங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

## 26. தயக்கமா? மயக்கமா?

சிலர் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவார்கள். சிலர் தேர்ந்தெடுத்த சிலருடன் மட்டும் பழகுவார்கள். அறிமுகப்படுத்தாமல் பிறருடன் எப்படிப் பேசுவது என்று சிலர் வெகுவாகத் தயங்குவார்கள். அதிகமாக எல்லை மீறிப்

பழகி அவமானத்தை அள்ளிக் கொண்டு வருபவர்களும் உண்டு. தன் வயதுக்கொத்த சமவயதுக்காரர்களிடம் மட்டுமே சிலர் பழகுவார்கள். தம்மைவிட வயதானவர்களுடன் பழக நேர்ந்தால் சிலர் கிண்டலடிப்பார்கள். அல்லது உம்மென்று இருந்து கழுத்தை அறுப்பார்கள். சிலரது இயல்பு தம்மைவிடச் சின்னப் பையன்களிடம் மட்டுமே பழகுவார்கள்...

இவர்களில் யார் செய்வது சரி? யார் செய்வது தவறு?

முதல் விஷயம்... பழகுங்கள். தயக்கம் இன்றிப் பிறருடன் இன்முகத்துடன் பேசிப் பழகுங்கள். விமானத்தில், ரயிலில், பேருந்தில் பக்கம் பக்கமாகப் பயணம் செய்யும்போது மணிக்கணக்காக ஊமைகள் போலவே பயணிப்பவர்கள் சிலர் உண்டு. மேலை நாட்டவர்கள் விமானப் பயணங்களில் அருகில் உட்காரும்போதே ஹலோ... அல்லது ஹாய்... அல்லது குட்மார்னிங் சொல்லி இன்முகத்துடன் புன்னகை புரிவார்கள். ‘மேற்கொண்டு பேசுவது உன் விரும்பம்’ என்று பந்தை நம் பக்கத்தில் தள்ளிவிடுவார்கள்.

ஒரு முறை சிங்கப்பூர் பயணத்தின் போது எழுத்தாளர் சுஜாதா அவர்கள் மகன் என் அடுத்த இருக்கையில் இருந்தார். பளிச்சென்று அறிமுகப்படுத்திக் கொண்டு இயல்பாக, அறிவுபூர்வமாகப் பேசிக் கொண்டு வந்தார். தயக்கம் இன்றிப் பழகும் அவர் ஒரு வெற்றியாளர் என்று தீர்மானித்தேன்.

தேவையற்ற தயக்கம், கேட்பதா... வேண்டாமா என்ற குழப்பம், இவை முன்னேற்றத்தின் எதிரிகள். மற்றவரும் மனிதர்தான்... அளவாக, அறிவாகப் பேசினால் யாரும் வெறுக்கமாட்டார்கள். மனதிற்குள் இரண்டு மூன்று முறை பேசிப் பார்த்துக் கொண்டு பேசுங்கள்... தவறில்லை.

இராமனால் தூது அனுப்பப்பட்ட அனுமன் சீதையிடம் பேசும்முன் எப்படிப் பேசுவது என்று ஒத்திகை பார்த்துக் கொண்டதாக வால்மீகி எழுதுகிறார். எதிர்த் தரப்பில் இருப்பவர் பயந்துவிடக் கூடாது. வெறுப்படைந்துவிடலாகாது. சந்தேகப்பட்டுவிட்டால் சகலமும் கெட்டுவிடும். எனவே சொல்லின் செல்வனாகிய அனுமனே ஒத்திகை பார்க்கிறான் என்றால் நாம் ஒத்திகை பார்த்துக் கொண்டு பேசலாமே!

தீர்க்கமாக, தீர்மானமாக, தெளிவாகப் பேசுகிறவர்கள், பழகுகிறவர்கள் அபரிமிதமான வெற்றி அடைவது நிச்சயம். எனவே வேண்டாத தயக்கத்தை

விட்டொழியுங்கள். ஒரு முறை சுவாமி ராமதீர்த்தர் லண்டன் பயணம் செய்கிறார். கப்பல் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்தார். ஐரோப்பியர் ஒருவரும் அதே நேரத்தில் மேல் தளத்திற்கு வந்தார். சுவாமி ராமதீர்த்தர் புன்னகை புரிந்து வரவேற்றுத் தம்மை அறிமுகம் செய்து கொண்டார். பேச்சு வளர்ந்தது.

லண்டனில் சுவாமி ராமதீர்த்தர் எங்கே தங்கப் போகிறார் என்று அறிய ஐரோப்பியர் விரும்பினார். ''நண்பர் வீட்டில்'' என்றார் ராமதீர்த்தர். ''அந்த நண்பரின் முகவரி தெரியுமா?'' என்றார் ஐரோப்பியர். ''தெரியாது'' என்றார் ராமதீர்த்தர். ''அந்த ஏரியா - இடமாவது தெரியுமா?'' என்றார் ஐரோப்பியர். ''தெரியாது'' என்றார் சுவாமி. ''லண்டனில் நீங்கள் தங்கப்போகும் நண்பரின் வீட்டு முகவரி இன்றி நண்பரை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்? அது சுலபமல்லவே'' என்றார் ஐரோப்பியர். ''அவரைக் கண்டுபிடிப்பது கடினமே அல்ல... ஏன் என்றால் ஏற்கெனவே அவரை நான் கண்டுபிடித்துவிட்டேன்... இதோ என் எதிரில் நிற்கும் நீங்கள்தான் அந்த நண்பர்'' என்றார்.

ஐரோப்பியர் திகைத்து, ''நானா... நான் எப்படி உங்கள் நண்பராக முடியும்?'' என்று இழுத்தார். சுவாமி ராம்தீர்த்தரோ, ''நண்பரே... நீங்களும் மனிதன். நானும் மனிதன். நாம் நண்பராவதற்கு இதைவிட என்ன தகுதிகள் வேண்டும்'' என்றார். ஐரோப்பியர் கைகுலுக்கித் தழுவிக் கொண்டு தன் வீட்டில் தங்க அழைத்தார். சுவாமியும் தங்கினார். தயக்கம் இன்றிக் கூச்சம் இன்றிப் பழகுவது வெற்றிக்கான வித்து.

இன்னொரு முக்கிய விஷயம். நம்மைவிட வயதில் சிறியவர்களுடன் பழிகினால் மனசு இளமையாக, உற்சாகமாக இருக்கும். அதுவும் அவசியம். ஷீரடி சாயிபாபா சின்னப் பையன்களுடன் கோலி ஆடுவார் தெரியுமா? மனம் சந்தோஷமாக இருக்க இதுவே சரியான வழி. நம்மைவிடப் பெரியவர்களுடன் பழகினால் அறிவு வேகமாக விருத்தியாகும் தெரியுமா? பல புத்தகங்கள் படித்த அனுபவம், வெற்றி ரகசியம் முதியவர்களுடன் பழகினால் கிடைக்கும்... தெரியுமா? எழுத்தாளர் அகிலன், மூத்த திரு. கி.வா.ஜ.வுடன் பழகினார். அமரர் மீ.ப. சோமு அமரர் ராஜாஜியுடன் பழகினார். முன்னேற விரும்புகிறவர்கள் மூத்தவருடன் பழக வேண்டும். நான் என்னைவிட முதுமையான டாக்டர் ஔவை நடராஜனுடனும், அமரர் கி.வா.ஜ.

அவர்களுடனும், அமரர் குன்றக்குடி அடிகளாருடனும் தயங்காது பழகினேன். இவை என் வெற்றியின் ரகசியம்.

நம்மைவிடச் சிறியவர்களுடன் பழகினால் மனது இளமையாகும். பெரியவர்களுடன் பழகினால் அறிவு விருத்தியாகும். சமமானவர்களுடன் பழகினால் மகிழ்ச்சி அதிகமாகும்.

பழகுங்கள்... பழகுங்கள்... பழகுங்கள்... தயக்கம் இன்றிப் பழகுங்கள்.